# ஓ.ஹென்றி சிறுகதைகள்

(பகுதி 1)

ஓ.ஹென்றி

# ஏ.ஏ.ஹெச்.கே.கோரி சிறுகதைகள்

ஏ.ஏ.ஹெச்.கே.கோரி

நிலா புக்ஸ்

முகவரி

Nilacharal Ltd
18 Collingwood Road
Crawley
RH10 7WG
UK
E-mail: team@nilacharal.com

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | ஏ.ஏ.ஹெச்.கே.கோரி சிறுகதைகள் (பகுதி 1) |
| ஆசிரியர் | : | ஏ.ஏ.ஹெச்.கே.கோரி |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பகம் | : | நிலாச்சாரல் லிமிடட் |
| காப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பாசிரியர் | : | நிலா |
| பதிப்பு எண் | : | 1.0W |
| காலம் | : | டிசம்பர் 2012 |
| Wrapper design | : | Fairy |


**“உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழ் சமுதாயத்திற்குத் தமிழ் இலக்கியங்களைப் படிக்க வாய்ப்பளிப்பதும், வளரும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதும், வருங்கால சந்ததிகளுக்குத் தமிழ் இலக்கியப் பொக்கிஷங்களை பாதுகாத்துத் தருவதுமே 'நிலா புக்ஸ்'-ன் இலட்சியம்”**


**Nilacharal Ltd**
**18 Collingwood Road**
**Crawley**
**RH10 7WG**
**UK**
**E-mail: team@nilacharal.com**

**TERMS OF USE:**

- You may not sell, exchange, distribute or otherwise transfer this book in any form what so ever.
- You may make one (1) printed copy of this book for your personal use. You may not sell, exchange, distribute or otherwise transfer this copy to any other person for any reason.
- You may make one (1) electronic copy each of this book for archival purposes. Except for the single (1) permitted print copy and the single (1) archival copy, you may not make any other copies of this book in whole or in part in any form.

*******

**உபயோக நிபந்தனைகள்**

- நீங்கள் இந்த நூலை எந்த வடிவத்திலும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு எந்த விதத்தில் கைம்மாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்த நூலின் ஒரு (1) பிரதியை உங்கள் சொந்த உபயோகத்துக்கு அச்சிட்டுக் கொள்ளலாம். அந்த அச்சுப்பிரதியை எந்த ஒரு நபருக்கும் எக்காரணம் கொண்டும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு விதத்தில் கைமாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்நூலின் ஒரு (1) மின் பிரதியை ஆவணத்திற்காக உருவாக்கிக் கொள்ளலாம். ஒரே ஒரு (1) அனுமதிக்கப்பட்ட அச்சுப் பிரதியையும் ஒரே ஒரு (1) ஆவணப் பிரதியையும் தவிர இந்நூலின் முழுதையுமோ அல்லது பாகத்தையோ எவ்விதத்திலும் வேறு பிரதிகள் எதுவும் எடுக்கக்கூடாது.

*******

ஃபெயில் காலம் ........ 1
அரசியல் வியாதிகள் ........ 6
அவனுக்கென்ன தூங்கிவிட்டான்! ........ 12
அழகான இந்தியா ........ 14
அன்புள்ள அம்மா ........ 19
அன்னையர் பூமி ........ 23
உயரத்தில் ஒருவன் ........ 24
உறவுதான் ராகம் ........ 26
என்னைப்போல் ஒருத்தி ........ 31
கார் வித்த காசு ........ 32
காவலர் தினம் ........ 42
சிவாஜியும் பத்மினியும் ........ 47
சின்ன அணுகுண்டு ஒண்ணு ........ 53
தம்பி எனக்கு மூத்தவன் ........ 57
துச்சாதினி ........ 59
நாலுக்கும் காலம் வந்தால் நடக்கும் ........ 63
பட்டினப் பரவசம் ........ 68
பல்லாங்குழி ........ 74
பாதுகாப்பு ........ 78
பின்னிரவு ........ 80
புனிதப் பயணம் ........ 83
பொங்கல் ரிலீஸ் ........ 88
மாதா ........ 96
யாழ் இனிது! யார் சொன்னது? ........ 102
வளைக்காதே, ஒடிஞ்சி போகும் ........ 104
வீடு பேறு ........ 110
ஸ்வீட் சர்வாதிகாரி ........ 113

“பெரியப்பா மெட்ராஸ்க்கு நாளக்யாம்மாப் போறாவ?” என்று தயங்கித் தயங்கிக் கேட்ட செல்லம்மாவைக் கூர்மையாய்ப் பார்த்தாள் அம்மா.

“என்ன, பெரியப்பா போறாவளான்னு மொள்ளமாக் கேக்க? நீயுந்தானட்டி அவியக் கூடப் போற! ராத்திரி ஏழு மணிக்கி ரயிலாம். வீராவரத்ல போய் ரயிலேறணும். நாலு மணிக்கெல்லாம் பெரியப்பா வந்துருவாவ. அப்ப அளுதுட்டு நிக்யாத. உடுப்பெல்லாம் எடுத்து வச்சிட்டியா?”

செல்லம்மாவுக்கு இப்போதே அழுகை வரப் பார்த்தது. கடந்த ஒரு வாரமாய், நாள் தவறாமல் அம்மா இவளிடம் சொல்லிக் கொண்டிருக்கிற சமாச்சாரம் தான். ஆனாலும் அதை முழுமையாய்க் கிரகித்துக் கொள்ள இவளுடைய மனசு முரண்டு பிடித்துக் கொண்டிருக்கிறது. முன்னே பின்னே தெரியாத மெட்ராஸில் போய், முன்னே பின்னே தெரியாத ஒரு வீட்டிலே எடுபிடி வேலை செய்யப் போக வேண்டுமாம்.

திருநவேலிக்கார நாடாக்கமார் மெட்ராஸில் போட்டிருக்கிற பலசரக்குக் கடை ஒன்றில் வேலை பார்க்கிற பெரியப்பாவுக்கு, அந்தக் கடையில் சரக்கு வாங்குகிற ஒரு வசதியான வீட்டில், வீட்டு வேலைக்கு பன்னிரண்டு பதிமூணு வயசுப் புள்ள ஒண்ணு வேணும். வீட்டோட இருக்கணும் என்று தெரிய வந்ததும், அவருக்கு செல்லம்மாவின் ஞாபகம் வர, தாலியறுத்த தம்பி பொஞ்சாதிக்குக் கடுதாசி போட்டு அவர், வீட்டு வேலைக்கு செல்லம்மாவை ஏற்பாடு செய்து விட்டார்.

“உடுப்பு ஒண்ணும் எடுத்து வக்யலம்மா...” என்று மெல்ல முணுமுணுத்தாள்.

“வக்யாட்டிப் பரவாயில்ல, வெள்ளன எந்திரிச்சி எடுத்து வச்சிக்கலாம். இப்பப் படுத்து ஒறங்கு” என்று அம்மா தம்பிக்குப் பக்கத்தில் படுத்துக் கொண்டாள்.

படுத்துக் கொண்ட பிறகு, “ஒனக்குப் பாய எடுத்துக் குடுக்காமப் படுத்துட்டேம் பார்” என்று எழும்பக் கையூன்றிய அம்மாவிடம், “நானே எடுத்துக்கிருதேம்மா” என்றாள் செல்லம்மா.

“ஒனக்கு எட்டாதேட்டி?”

“இஸ்டூல் போட்டு ஏறி எடுத்துக்கிருதேம்மா.”

ஸ்டூல் போட்டு ஏறி, பரணிலிருந்து பாயை உருவினபோது, பாயை முந்திக் கொண்டு ஒரு அட்டை வந்து விழுந்தது. ஒரு மரக்கைப்பிடியில் பொருத்தப்பட்ட அட்டை. குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்போம் என்கிற வாசகம் ரெண்டு பக்கமும் எழுதப்பட்ட அட்டை.

இந்த அட்டையை உயர்த்திப் பிடித்துக் கொண்டுதான் போன வருஷம் செல்லம்மா பள்ளிக்கூடப் பிள்ளைகளோடு ஊர்வலம் போனாள். மேரி ஆடன் ஸ்கூலிலிருந்து கிளம்பி, வடக்கு பஜார், தெக்கு பஜார் வழியாய், வ.உ.சி. மைதானத்தை ஊர்வலம் போய்ச் சேர்ந்த பின்னால் அங்கே பெரிய பொதுக்கூட்டம். மந்திரிமாரெல்லாம் பேசினார்கள்.

பாயை விரித்துப் போட்டு விட்டுச் செல்லம்மா, அந்த அட்டையைக் குனிந்து எடுத்தாள். ரெண்டாய்க் கிழித்தாள். அட்டையைத் தாங்கியிருந்த கம்பையும் ரெண்டாய் முறித்து அடுப்புக்குப் பக்கத்தில் போட்டாள். அம்மாவுக்கு அடுப்பெரிக்கப் பிரயோஜனப்படும்.

போர்வையை மடித்துத் தலைக்கு வைத்துக் கொண்டு பாயில் படுத்த செல்லம்மாவுக்கு உறக்கம் வரவில்லை. அழுகை தான் வந்தது. நாளைக்குப் பிரிந்து போகப் போகிற அம்மாவையும் தம்பியையும் ஏக்கத்தோடு பார்த்தாள்.

அப்பா உயிரோடிருந்திருந்தால் இவள் இப்படி வீட்டு வேலைக்குப் போக நேர்ந்திருக்காது. மகளின் மேலே ரொம்பப் பிரியமாயிருந்த அப்பா. அப்பாவுக்குப் பகல் ஷிஃப்ட் இருக்கிற நாட்களில் இவளை சைக்கிளில் உட்கார்த்திக் கொண்டு பள்ளிக் கூடத்தில் இறக்கி விட்டுவிட்டுத் தான் தச்சநல்லூருக்கு சைக்கிளை மிதிப்பார்.

ராத்திரி அப்பா வீட்டுக்கு வருவதற்கு ஒம்போது ஒம்போதரை ஆகிவிடும். தச்சநல்லூர் மில்லில் அப்பாவுக்கு வேலை ரொம்ப. சில ராத்திரிகளில் ரொம்பக் களைப்பாய் வருவார். அப்படிக் களைத்து வருகிற ராத்திரிகளில் “ஒடம்பு அடிச்சிப் போட்டாப்ல இருக்கு கடக்கிப் போய் மருந்து சாப்ட்டுட்டு வந்துருதேம் புள்ள” என்று அம்மாவிடம் சொல்லிட்டு, அம்மாவின் வித்யாசமான பார்வையைப் பொருட்படுத்தாமல் வெளியே போய்விடுவார். பிறகு ராத்திரி எத்தனை மணிக்குத் திரும்பி வருகிறாரோ தெரியாது. அதற்கு முந்தி செல்லம்மா தூங்கிவிட்டிருப்பாள்.

அப்படியும், காலையில் அவளை அப்பாதான் எழுப்பி விடுவார். ஒரேயொரு நாள் தான் அப்பா அவளை எழுப்பவில்லை. பிறகு தான் தெரிந்தது, ராத்திரி அப்பா வீடு திரும்பவே இல்லை என்று.

“மருந்து” சாப்பிடப்போன இடத்தில் தகறாரு வந்து, கைகலப்பாகி, நாலஞ்சு பேர் அப்பாவை அடித்துப் போட்டு விட்டுப் போய் விட்டார்கள் என்று. அதன் பிறகு இவளை எழுப்பிவிடுவதற்கும் சைக்கிளில் பள்ளிக்கூடத்துக்குக் கூட்டிக் கொண்டு போவதற்கும் அப்பா இல்லாமற் போனார்.

“இந்தப் பளக்கம் வேணாம் வேணாம்னு தலையால அடிச்சிக்கிட்டேன். அவிய கேக்கல. சரி, நாப்பூரா வேல செஞ்சு ஒஞ்சி போய் வாற மனுசன், தாகந்தீர கொஞ்சம் குடிச்சிட்டுப் போவட்டுமேன்னு நானும் பெறவு வுட்டுட்டேன். இப்படியாவும்னு தெரியாதே ஆத்தா! மவராசன் எங்க மூணு பேத்தயும் இப்படி அனாதியா வுட்டுட்டுப் போய்ச் சேந்துட்டாவளேம்மா” என்று வீட்டுக்கு வருகிற உறவுக்காரர் களிடம் சொல்லி அம்மா புலம்புகிறபோது செல்லம்மாவுக்கும் அப்பாவை நினைத்து அழுகை வரும். அப்பா செத்துப் போன பின்னால் தான் அம்மாவே வீட்டு வேலைக்குப் போக அவசியமேற்பட்டது.

பொழுது விடிந்ததிலிருந்து, விளக்கு வைக்கும் வேளை வரை நாலு வீடுகளில் மாறி மாறி உழைத்து அம்மா சீக்காளியாய்ப் போனாள். அவளால் முடியவில்லை. நாலு வீடு இப்போது ஒரேயொரு வீடாய்ப் போனது. அந்த ஒரு வீட்டில் கூட, பாவம் பார்த்துத்தான் அவளை இன்னும் வேலைக்கு வைத்திருக்கிறார்கள்.

மெட்ராஸ் பார்க்க வேண்டுமென்கிற ஆசை செல்லம்மாவுக்குக் கனகாலமாய் உண்டு. பெரியப்பா பாளையங்கோட்டைக்கு வருகிறபோது, “பெரியப்பா, நீங்க மெட்ராஸ்க்குப் போறப்ப நானும் வாறேன் பெரியப்பா” என்று சொல்லியிருக்கிறாள். ஆனால் பெரியப்பாவோடு மெட்ராஸ்க்கு இந்த மாதிரி போக நேரும் என்று நினைத்திருக்கவில்லை.

காலையில், கனத்த நெஞ்சோடும், கண்ணீரோடும் உடுப்புகளை எடுத்துப் பைக்குள்ளே திணித்தாள். பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பின தம்பியைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்தாள். சாயங்காலம் இவள் கிளம்புகிற நேரம் அவன் பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பி வந்திருக்க மாட்டான்.

பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பி வந்து அவன், அம்மா வேலை செய்கிற துலுக்க வீட்டில் வெராண்டாவில் உட்கார்ந்து வீட்டுப்பாடம் எழுதிக் கொண்டிருக்க வேண்டியது, அம்மா ஸ்டேஷனிலிருந்து திரும்பி வந்து அவனைக் கூட்டிக் கொள்ள வேண்டியது என்று ஏற்பாடு.

சொன்ன மாதிரியே நாலு மணிக்குப் பெரியப்பா ஆஜராகி விட்டார். தாயும் மகளும் பெரியப்பாவோடு திருநவேலி ஜங்ஷன் போவதற்கு மூணாம் நம்பர் டவுன் பஸ்ஸில் ஏறினார்கள். பெண்கள் ஸீட்டில் அம்மாவோடு உட்கார்ந்த செல்லம்மாவுக்கு, அம்மாவை யாரோ மாதிரி இருந்தது.

மகளுடைய அந்நியமாதல் அம்மாவுக்கு உணர்த்தப்பட்டிருக்க வேண்டும். அவள் பக்கவாட்டில் கையைச் செலுத்தி மகளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள். அம்மாவை ஏறிட்டுப் பார்த்த செல்லம்மா, தன்னுடையதைப் போலவே அம்மாவின் கண்களும் பனித்திருப்பதைப் பார்த்து, பாசத்தோடு அம்மாவோடு ஒட்டிக் கொண்டாள்.

‘‘அம்மா’’ என்று மெல்லக் குரல் கொடுத்தாள்.

‘‘என்ன செல்லம்மா?’’ என்று அவள் முகத்தை நிமிர்த்தினாள் அம்மா.

‘‘அம்மா, நா மெட்ராஸ்க்குப் போகலம்மா. நா பள்ளிக் கோடத்துக்குப் போய்ப் படிக்கேம்மா.’’

‘‘நீதான் பெயிலாய்ட்டியேட்டி செல்லம்மா.’’

‘‘இனிமே பெயிலாக மாட்டேம்மா.’’

‘‘தம்பி நல்லாப் படிக்காம்லா. அவனப் பெரிய படிப்புப் படிக்க வக்யணும்ன்ட்டி. அம்மாக்கு ஒடம்புக்கு முடியல. மருந்து சாப்புடுதேன், ஒரு வருசத்ல சீக்கெல்லாம் போயிரும். நீ ஒரேயொரு வருசம் மெட்ராஸ்ல போய் இரி. அம்மாக்கு ஒடம்பு சரியானவொடன நீ திரும்பி வந்துரலாம்.’’

‘‘என்ன இங்ஙனயே பாளையங்கோட்டயில ஒரு வூட்ல சேத்து வுடேம்மா.’’

‘‘இங்ஙன என்னட்டி சம்பளம் குடுப்பாவ, மிஞ்சிப் போனா ஒனக்கு முன்னூறு ரூவா குடுப்பாவ. மெட்ராஸ்ல ரெண்டாயிரம் ரூவாயில்லட்டி! அந்த வூட்ல ஒரு ஒண்ற வயசுக் கொளந்த இருக்காம். நீ அதப்பாத்துக்கணுமாம். பெறவு, வூடு பெருக்கச் சொல்லுவாவ. பாத்தரம் களுவச் சொல்லுவாவ. நம்ம வூட்ல செய்யலியா நீ, அதத்தான மெட்ராஸ்ல போய்ச் செய்யப் போற! ஒண்ணும் வருத்தப்பட்டுக்கிராத செல்லம்மா.’’

வருத்தத்தையன்றி வேறு உணர்ச்சிகள் செல்லம்மாவிடம் இல்லை. மகளை அணைத்தபடியே அம்மா அறிவுரைகள் வழங்கினாள்.

‘‘ஒனக்குன்னு ஒரு தட்டு, தம்ளர் எல்லாம் தருவாவ, அதுலயே நீ சாப்டுக்க, தண்ணி குடிச்சிக்க. அவிய ஏனங்கள நீ பொளங் காதட்டி. அது அவியளுக்குப் புடிக்காது. நாக்காலில்லல்லாம் ஒக்காராத. கீள தரையிலதான் ஒக்காரணும். என்ன?’’

‘‘ஆட்டும்மா, டி.வி.யெல்லாம் பாக்க வுடுவாகளாம்மா?’’

‘‘அவியப் பாக்கும் போது நீயும் கீள ஒக்காந்து பாரு. அதுக்கென்ன, நீ கண்ண மூடிக்கட்டின்னா சொல்லப் போறவ? ஆனா, டி.விப் பொட்டியயெல்லாம் நீ தொடப்படாதுட்டி. பெரியவுக போட்டாவன்னா நல்ல புள்ளயாக் கீள ஒக்காந்துப் பாக்கணும், என்ன?’’

‘‘லீவுல்லாம் கெடயாதாம்மா?’’ என்று செல்லம்மா பாவமாய்க் கேட்டதற்கு,

‘‘பள்ளிக்கோடமாட்டி அது, லீவு வுடதுக்கு! கேக்கதப் பாறேன்!’’ என்று அம்மா சிரிக்கப் பார்த்தாள். ஆனால் உதடுகள் சிரிக்க மறுத்தன.

ஜங்ஷனில் மூணு பேரும் இறங்கிக் கொண்டு ஸ்டேஷனுக்குள் பிரவேசித்தார்கள். தாயைப் பிரியும் வேளை நெருங்கி விட்டது என்பது செல்லம்மாவின் சோகத்தை அதிகப்படுத்தியது.

அம்மாவின் கையை இறுகப் பற்றிக் கொண்டு, ‘‘தம்பியும் நீயும் என்னப் பார்க்க மெட்ராஸ்க்கு வருவீகளாம்மா?’’ என்று தாயின் முகத்தைத் தவிப்போடு பார்த்தாள்.

‘‘மெட்ராஸ்க்குப் பேய்ட்டு வாறதுக்கு ஆளுக்கு ஐநூறு ரூவாய்க்கிட்ட ஆயிருமேட்டி’’ என்று சமாளித்தாள் அம்மா.

‘‘பெரியப்பா அப்பப்ப வந்து ஒன்னியப் பாத்துக்குவாக. என்னமும் வேணும்னா நீ பெரியப்பாட்ட கேட்டு வேங்கிக்க, என்ன? ஒரேயொரு வருசந்தானட்டி செல்லம்மா, சொடக்குப் போடதுக்குள்ள வருசம் விர்ர்ன்னு ஓடிரும்.’’

‘‘பொறவு, நா பாளையங்கோட்டக்கித் திரும்பி வந்துரு வேனாம்மா?’’

‘‘ஆமா செல்லம்.’’

‘‘நா திரும்பி வந்த பெறவு என்ன இஸ்கூல்ல போடுவியாம்மா?’’

‘‘கட்டாயம் போடுவேன். நீ மெட்ராஸ்ல போயி, நல்ல்ல புள்ளன்னு பேர் வேங்கிட்டு வரணும்ட்டி செல்லம்.’’

‘‘ஆட்டும்மா’’ என்று தாயிடம் விடை பெற்றுக் கொண்டாள் செல்லம்மா. பிறகு, சட்டென்று ஏதோ நினைவு வந்தவளாய் அம்மாவைப் பார்க்கத் திரும்பினாள்.

‘‘அம்மா, யூனிஃபாம் ரெண்டும் கிளிஞ்சி போச்சும்மா, புதுசா தக்யணும்.’’

‘‘நீதான் சம்மாரிக்கப் போறியே செல்லம்மா, புதுசு புதுசா தச்சிருவோம்’’ என்று அவளுடைய தலையை வருடி அம்மா வழியனுப்பி வைத்தாள்.

ரயிலின் வால்ப் பகுதியிலிருந்த பெண்கள் பெட்டியில் அவளை ஏற்றி விட்டுப் பெரியப்பா, ரெண்டு பெட்டிகளுக்கு முந்தியிருந்த அன்ரிஸர்வ்டு கோச்சில் ஏறிக் கொண்டார்.

ரயில் கிளம்புவதற்குப் பச்சைக் கொடி காட்டப்பட்டதும், ப்ளாட்ஃபாமிலிருந்த அம்மா, பெண்கள் பெட்டியின் ஜன்னலை நெருங்கி, உள்ளேயிருந்த மகளைப் பார்த்து ‘‘வழியில எங்ஙனயும் எறங்கப்படாதுட்டி’’ என்று எச்சரித்தாள்.

‘‘விடியக்காலம் மெட்ராஸ்ல வண்டி நின்னப் பெறவு பெரியப்பா வந்து கூப்புடுவாவ, அப்பத்தேன் எறங்கணும் என்ன?’’

சரியென்று தலையசைத்தாள் செல்லம்மா. ரயில் நகரத் தொடங்கியதும் வேகமாய் ஜன்னலை நெருங்கி வந்தாள் செல்லம்மா.

ஜன்னல் கம்பியைப் பற்றிக் கொண்டு, கொஞ்சங் கொஞ்சமாய் விலகிப் போய்க் கொண்டிருந்த அம்மாவின் உருவத்தைக் கண்ணீரின் ஊடே பார்த்துக் கூவினாள்.

“அம்மா அம்மா, இனிமே நா பெயிலாகவே மாட்டேம்மா.”

(ஸண்டே இண்டியன், 28 ஜனவரி – 3 ஃபிப்ரவரி )
(இலையுதிர் காலம்)

மசூதிக்குப் போகிற வழியில் ப்ளாட்ஃபாம் ஓரத்தில் அந்த அற்புதமான ஓவியத்தைப் பார்த்தேன்.

சரஸ்வதி.
வெள்ளைத்தாமரைப் பூவில் வீற்றிருக்கிற சரஸ்வதி,
வீணை மீட்டிக் கொண்டிருக்கிற சரஸ்வதி.
வசீகர முகம் ஒளிரும் சரஸ்வதி.

கூட்டத்தோடு கூட்டமாய் நின்று அந்த ஓவியத்தை ரசித்தேன்.

**வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்**
**வீணை செய்யும் ஒலியிலிருப்பாள்**
என்று முன்னொரு காலத்தில் பள்ளிக்கூடத்தில் படித்த பாடல் ஞாபகத்துக்கு வந்தது.

இந்த அற்புதமான ஓவியத்தை வரைந்த ஓவியக்கலைஞன் ப்ளாட்ஃபாமில் பின்புறச் சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்தான்.
தரைமட்டத்திலிருந்து கொஞ்சமே கொஞ்சம் உயர்ந்திருந்த நாலு சக்கரத் தள்ளுவண்டி.
துணைக்கு ஒரு தெரு நாய்.
பார்வையாளர்கள் சில்லறையைப் போட்டுவிட்டுப் போவதற்கான வசூல்க் குவளையன்று.

இளம்பிள்ளை வாதத்தால் சூம்பிப்போன கால்களோடு தள்ளுவண்டியில் உட்கார்ந்திருந்த அவனுடைய கால்களில் உயிரில்லை, ஆனால் கைகளில் என்னவொரு கலை!

மசூதியிலிருந்து அசர் தொழுகைக்கான அழைப்பு, ஒலிபெருக்கியில் மிதந்து வந்த பின்னால்தான் அந்த இடத்தை விட்டு நகர மனசு வந்தது.

அவனுடைய குவளையில் ஒரு அஞ்சு ரூபாய் நாணயத்தைப் போட்டுவிட்டு மசூதிக்கு நடந்தேன்.

அடுத்த நாள் சாயங்காலம், அந்த ஓவியன் அதே இடத்தில் இருப்பானா என்கிற சந்தேகத்தோடே வந்தேன்.
இருந்தான்.

**இப்போது லஷ்மியின் ஓவியம்.**
**'வரலக்ஷ்மி வருவாயம்மா**
**திருமாலின் தேவி கடைக்கண் பாரம்மா'**
என்று காலையில் ரேடியோவில் கேட்ட சுசீலாப் பாடலை என் வாய் முணுமுணுத்தது,

"என்ன பாய் சாமி, இந்துப் பாட்டப் பாடறீங்க" என்ற குரலுக்குப் பார்வையைத் திருப்பினேன்.

ஓவியன்.

போலியோ ஓவியன்.

என்னுடைய லுங்கியையும் தாடியையும் தொப்பியையும் பார்த்து என்னை இனங்கண்டு கொண்டு பாய் சாமி என்று பெயர் வைத்துவிட்டது ரசிக்கும் படித்தான் இருந்தது, அவனுடைய ஓவியத்தைப் போலவே.

பேச்சுக் கொடுத்தேன்.

‘‘ஏம்ப்பா, தொப்பியும் தாடியும் வச்சிருந்தா இந்துக் கடவுள் படத்துல இருக்கிற கலைய ரசிக்கக்கூடாதா?’’

‘‘ஐயையோ, அழகா, தாராளமா ரசிக்கலாம் சாமி. ஒங்களப் போல போலித்தனம் இல்லாத ஆளுங்களத்தான் எனக்கு ரொம்பப் புடிக்கும் சாமி.’’

‘‘டெய்லி இங்க தான் படம் வரைவியா?’’

‘‘இங்கயிருந்து ஜனங்க வெரட்டி விடற வரக்யும் இங்கதான் கெடப்பேன் சாமி.’’

‘‘ஒன்ன யார்ப்பா வெரட்டிவிடப் போறாங்க. பார் ஒனக்கு எத்தன ரசிகர்கள் இருக்காங்கன்னு.’’

‘‘வெரட்டறதுன்னா அடிச்சி வெரட்டறதுதானா சாமி? ஜனங்களுக்கு அலுப்புத்தட்டிப் போயி வசூல் கொறஞ்சி போச்சின்னா, என்ன வெரட்டி விட்ட மாதிரிதான்.’’

‘‘கையில இருக்கிற மாதிரி, நாக்குலயும் ஒனக்கு விஷயம் இருக்கு.’’

‘‘ஐயையோ, நாக்குல விஷமா?’’

‘‘விஷமில்லப்பா, விஷயம். நல்லாவே பேசற. நீ படம் வரையற அழக நா பாக்கணுமே.’’

‘‘ஓ. பாக்கலாமே, நாளக்கி வாங்க. ஒரு மூணு மணி போல வாங்க, பாக்கலாம்.’’

அடுத்த நாள் ரெண்டே முக்காலுக்கே ஸ்பாட்டுக்கு வந்து விட்டேன்.

எனக்காவே காத்திருந்த மாதிரி, என் முகத்தைப் பார்த் ததும் சந்தோஷமாய் அவன் படம் வரைய ஆரம்பித்தான்.

வர்ணங்கள் அவனுடைய விரல் நுனியில் உயிர் பெறும் அற்புதத்தைப் பார்த்துப் பிரமித்து நின்றேன்.

ஒரு மணி நேர உழைப்பில் உயிர் பெற்றது முருகக் கடவுளின் அழகான ஓவியம். பால் வடியும் முகத்துடன் பாலமுருகன்.

**.'...திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால், முருகா**
**திருத்தணி மலை மீது எதிரொலிக்கும்...'**

அதன்பிறகு, தினமும் மூணு மணிக்கு முன்பாகவே போலியோ ஓவியனுக்கு முன்னால் ஆஜராகிவிடுவதும், அவன் வரைந்து முடிக்கும் வரைக்கும் பார்த்துக் கொண்டேயிருப்பதும், பிறகு அவனோடு கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருப்பதும் வாடிக்கையாகி விட்டது.

ஒரு நாள் திருப்பதி வெங்கடாஜலபதி.

ஒரு நாள் விநாயகர்.
ஒரு நாள் தில்லை நடராஜர்.
ஒரு நாள் பரமசிவன் பார்வதி – ட்டு இன் ஒன்.

இப்படியாய்ப் போய்க் கொண்டிருக்க, ஒரு நாள் ஈஸா நபியின் (ஏசுநாதர்) படத்தைத் தத்ரூபமாய் வரைந்தான்.
அடுத்த நாள், ஈஸாநபியின் அன்னை, பீபி மர்யம் (கன்னி மேரி).

மத நல்லிணக்கத்துக்கு உதாரணமாயிருக்கியேப்பா நீ என்று நான் ஸர்ட்டிஃபிகேட் கொடுத்ததுக்கு அவன் சொல்லுவான்:

“இந்த நாட்டுல பிறந்து வாழ்ந்துட்டிருக்கிற ஒவ்வொரு உண்மையான மனுஷன் ஒடம்புலயும் மத நல்லிணக்க ரத்தந்தான் ஓடுது பாய் சாமி. நீங்க இந்துப் பாட்ட முணுமுணுக்கறீங்க. சாமிப் படங்கள ரசிக்கிறீங்க. நீங்க ஒரு உண்மையான இந்தியன். நெறைய பேர் உள்ளுக்குள்ள ஒங்களப் போலத்தான் இருக்காங்க. இந்த அரசியல்வாதிங்கதான் தங்களோட சுயநலத்துக்காக குட்டயக் கொழப்பி மீன் பிடிக்கிறாங்க. இந்த அரசியல்வாதிங்க திருந்தணும், இல்லாட்டி ஒழியணும். அப்பத்தான் நாடு உருப்படும்.”

“ரொம்ப அனுபவப்பட்டவன் மாதிரி பேசறியேப்பா.”

“அடிபட்டவன் சாமி. இப்பப் பாருங்க இந்தத் தொகுதியில இடைத் தேர்தல் வந்துருச்சு, சுவரெல்லாம் தேர்தல் வாசகம், கலர்க் கலராப் போஸ்டர். வாக்குறுதிகள், வசவுகள், சவால்கள், சவுடால்கள்...”

“நீயும் அடுக்கு மொழி தான் பேசற, அரசியல்வாதி மாதிரி.”

“அரசியல்வாதியோட என்ன ஒப்பிட்டுப் பேசாதீங்க சாமி. அது எனக்கு அடியோட புடிக்காது.”

“சரியப்பா பேசல, ஆமா, ஒன்னோட ஃப்ரண்ட், அந்த நாய எங்க காணல?”

“எங்கயாவது ஜோலியாப் போயிருக்கும்.”

“ஜோலி என்ன மண்ணாங்கட்டி ஜோலி, எங்கயாவது தெருப்பொறுக்கப் போயிருக்கும். தெரு நாய் தான!”

“தப்புசாமி. அது, நா பொற போட்டாத்தான் திங்கும். இந்த மனுஷங்கள விட அது நன்றியுள்ள பிராணி சாமி. அது தெரு நாய் இல்ல. நாந்தான் இப்பத் தெரு நாய். ஆனாலும் பரவாயில்ல, இந்த வாழ்க்க எனக்குப் புடிச்சித்தான் இருக்கு. துரோகிகளையும் திருட்டுப் பசங்களையும் நம்பியிருந்த என்னோட பழைய வாழ்க்கைய விட, நாயையும் ஒங்களப் போல ஒண்ணுரெண்டு நல்லவங்களையும் சார்ந்திருக்கிற இந்த பிளாட்பார வாழ்க்க எவ்வளவோ மேல்.”

“அதென்னப்பா ஒன்னோட பழைய வாழ்க்க?”

“அதெல்லாம் இப்ப என்னத்துக்கு சாமி, வுடுங்க. பாய் சாமி, நீங்க எனக்கு ஒரு உதவி பண்ணணுமே.”

“செய்யறேம்ப்பா, சொல்லு.”

“பாய் சாமி, நா இந்துக் கடவுள் படமெல்லாம் வரஞ்சிட்டேன். கிறிஸ்தவக் கடவுள் படமும் வரஞ்சிட்டேன். ஒங்க அல்லா படம் மட்டும் மாதிரிக்கிக் கெடக்யவேயில்ல. எனக்கு அல்லா படம் ஒண்ணு கொண்டு வந்து தர்றீங்களா சாமி.”

“அல்லா படம் கெடக்யாதுப்பா. அல்லாவுக்கு உருவம் கெடையாது. ஒண்ணு செய்யறேன். எங்க மக்கா மதினா மசூதிப் படம் வேணா கொணாந்து தாறேன். அதப் பாத்து நீ வரை.”

மக்கா மதினா படத்தைக் காலையில் கொண்டு தருவதாய் வாக்களித்து விட்டு அங்கிருந்து அகன்றேன்.
ராத்திரி இஷாத் தொழுகை தொழுதுவிட்டு வீட்டுக்குப் போனால் திருச்சியிலிருந்து எஸ்ட்டிடி. தில்லை நகரில் ஒரு கம்பெனிக்கு சரக்குக் கொடுத்த வகைக்கு ரொம்ப நாள் பேமெண்ட் பாக்கி. காலையில் ஒன்பது மணிக்கு வந்தால் பார்ட்டியை மடக்கிச் செக்கைக் கறந்து விடலாம் என்று தகவல் வந்தது.

ராத்திரியோடு ராத்திரியாய் ராக்ஃபோர்ட்டைப் பிடித்துக் கிளம்பினால், செக்கை வாங்கிக் கொண்டு பஸ் பிடித்து நாளை ராத்திரிக்குள் மெட்ராஸ் வந்து சேர்ந்து விடலாம்.

“திருச்சிக்குப் போய் வந்த பின்னால் மக்கா மதீனா படத்தைக் கொண்டு வந்து தருகிறேனப்பா” என்று போகிறபோக்கில் நம்ம ஓவியனைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் போக வேண்டும்.

ஆட்டோவில் எழும்பூருக்குப் போகிற வழியில் அவனுடைய இடத்தில் நிறுத்தி இறங்கினேன். ஒரு ஓரமாய் அவன் முடங்கிப் படுத்திருந்தான். பக்கத்தில் படுத்திருந்த அவனுடைய நாய் என்னைப் பார்த்ததும் எழுந்து வாலை ஆட்டிது. பிறகு தன் எஜமானுடைய முகத்தை நக்கி அவனை எழுப்பியது.

“பாய் சாமி, என்ன இன்னேரத்துல” என்று எழுந்தான்.

நான் என்னுடைய விஷயத்தைச் சொல்ல, அவன் அவனுடைய விஷயத்தைச் சொன்னான்:

“சாயங்காலம் இருட்டற நேரத்துல, கரை வேஷ்டிக் கோஷ்டியண்ணு வந்துச்சு சாமி. நாங்க சொல்ற எடத்துல வந்து எங்க தலைவரோட படத்த வரஞ்சிக் குடுத்துட்டுப் போடா, ஐநூறு ரூவா தர்றோம்னாங்க. அந்த கோஷ்டி போன கொஞ்ச நேரத்துல இன்னொரு கோஷ்டி வந்துச்சு, எங்க தலைவியோட படத்த வரஞ்சிக் குடுத்துட்டுப் போடா, ஆயிரம் ரூவா தர்றோம்னாங்க. சாமி படம் வரையற கையினால சாத்தான்கள வரைய மாட்டேன் போங்கடான்னு திட்டி அனுப்பிச்சிட்டேன். ஒரு கோஷ்டி போயிருச்சி. இன்னொரு கோஷ்டி நாளக்கித் திரும்பவும் வர்றோம் யோசிச்சு வைய்யின்னு மெரட்டிட்டுப் போயிருக்கு. இந்த மாதிரி எத்தன கோஷ்டிங்களப் பாத்தாச்சு. இவனுங்க மெரட்டலுக் கெல்லாம் அடி பணியிற ஆள் நா இல்ல. சரி நீங்க கௌம்புங்க சாமி, நாளக்கிப் பாப்போம்.”

அடுத்த நாள் காலையில் திருச்சி. மதியம் வரைக்கும் தாமதித்தால், செக்குக்கு பதிலாய்ப் பணமாகவே தந்து விடுவதாய்ப் பார்ட்டி சொன்னதால் பணத்தைப் பெற்றுக் கொண்டு தாமதமாய்த்தான் திருச்சியில் பஸ் பிடிக்க முடிந்தது. மெட்ராஸ் வந்து சேர்வதற்கு ராத்திரி மணி பத்தரையாகிவிட்டது. வீட்டுக்குப் போகுமுன்னால், ஓவியனைப் பார்த்துவிட்டுப் போக வேண்டுமென்று தோன்றியது. நேற்று ஒரு கோஷ்டி மிரட்டிவிட்டுப் போனதாய்ச் சொன்னானே!”

ஓவியனுடைய இருப்பிடத்தை அடைந்தபோது ஓர் அதிர்ச்சி. ஓவியன் ப்ளாட்ஃபாமில் அலங்கோலமாய்க் கிடந்தான். அவனுடைய நாய் அவன் முகத்தை நக்கிக் கொண்டு நின்றிருந்தது. கலர்ச் சாக்ப்பீஸ்கள் சிதறிக்கிடந்தன. வர்ணக் கலவைகள் கொட்டிக் கிடந்தன.

நடந்திருப்பது என்னவென்று புரிந்தது.

நேற்று வந்து மிரட்டிவிட்டுப் போன கோஷ்டி இன்றைக்கு வந்து அவனைப் புரட்டியெடுத்துவிட்டுப் போயிருக்கிறது.

அவன் வரைந்திருந்த கிருஷ்ண பரமாத்மாவின் ஓவியம் சோடியம் வெயிலில் தகதகத்துக் கொண்டிருந்தது.

‘புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே, எங்கள்
புருஷோத்தமன் புகழ் பாடுங்களே’
என்று பாடியிருப்பேன், சுமூகமான சூழ்நிலையாயிருந்திருந்தால்.

கோயம்பேட்டிலிருந்து நான் வந்த ஆட்டோவிலேயே, டிரைவரின் உதவியுடன் அந்த ஓவியனைத் தூக்கிப் போட்டுக் கொண்டு போய் ஒரு தனியார் மருத்துவ மனையில் சேர்த்தேன். திருச்சியில் கிடைத்த பணம் உபயோகமாயிருந்தது.

ஆட்டோவின் பின்னாலேயே ஓடி வந்த நாய், நர்ஸிங் ஹோம் வாசலில் தவங்கிடந்தது. சிகிச்சைக்குப் பிறகு கண் விழித்த ஓவியன், தான் படுத்துக்கிடக்கிற மேட்டுக்குடி சூழ்நிலையை நாலாபுறமும் பார்த்துவிட்டு நன்றிப் பெருக்கோடு என்னைப் பார்த்துக் கரங்கூப்பினான்.

பிறகு, நடந்த கதையைச் சொன்னான்.

நான் நினைத்தது சரிதான். அந்தக் கறை வேஷ்டிக் கோஷ்டிகளிலொன்று வந்து மிரட்டிப் பார்த்திருக்கிறது.
பணிய மறுத்த இவனைப் புரட்டிப் புரட்டி அடித்திருக்கிறது.

“என்னோட நாய் மட்டும் இல்லன்னா என்னக் கொலையே பண்ணிப் போட்டுட்டுப் போயிருப்பானுங்க சாமி” என்று நன்றியோடு நாயை நினைவு கூர்ந்தான்.

நான் கேட்டேன். “அவங்கதான் ஐநூறு ஆயிரம்னு தர்றாங்கள்ளப்பா, அவங்க கேக்கற படத்த வரஞ்சிக் குடுத்துர்றது தான. அப்படியே நீ தொழில் விருத்தி பண்ணி ஆயிர ஆயிரமா சம்பாதிக்கலாமே! ப்ளாட்ஃபாம்ல உண்டியல் குலுக்கி நீ எந்தக் காலத்துல அவ்வளவு சம்பாதிக்கப் போற! “

ஓவியனுக்குக் கோபம் வந்துவிட்டது.

“சாமி, நா போலியோ மனுஷன்தான், போலி மனுஷனில்ல, காசுக்காகக் கட்சி மார்ற ஜாதியில்ல. கடவுள வரஞ்ச கையால கண்டவங்களயும் வரையமாட்டேன். நா சொன்னா சொன்னதுதான்.”

“அதென்னப்பா அரசியல்வாதிங்க மேல அப்படியரு கோபம் ஒனக்கு? என்று அவனை நான் சாந்தப் படுத்தினேன்.”

“அரசியல்வாதிகள் எல்லாருமே அயோக்கியங்க இல்லப்பா. நாம தப்புத் தண்டாவுக்குப் போகாம அரசியல்ல சம்பாத்யம் பண்ண முடிஞ்சா அதுல தப்பே இல்ல.”

சுவாரஸ்யமே இல்லாமல் ஓவியன் என்னைப் பார்த்தபடி இருந்தான். அவனை சுவாரஸ்யப்படுத்துவதற்காகவும் உற்சாகப் படுத்துவதற்காகவும் எனக்குத் தெரிந்த விசேஷமான ஒரு விஷயத்தை அவனோடு பகிர்ந்து கொள்ள முற்பட்டேன்:

“ஒனக்கு பேப்பர், பத்திரிகையெல்லாம் வாசிக்கிற வழக்கம் உண்டா? நீ என்னத்தப் படிச்சிருக்கப்போற. இப்ப நா சொல்லப் போற விஷயத்தக் கேளு, ஒனக்கு சந்தோஷமாயிருக்கும், தெம்பாயிருக்கும். அஞ்சாறு வருஷத்துக்கு முந்தி நடந்த சங்கதி. ஒரு கிராமத்தான், ஒன்னயப் போலவே போலியோ விக்ட்டிம். சூம்பிப்போன கால். ஆனா அவனோட மனசு சூம்பிப்போகல. தன்னம்பிக்கையாலயும் விடாமுயற்சியினாலயும் கொஞ்சங்கொஞ்சமா முன்னேறினான். முன்னேறி, பஞ்சாயத்துத் தலைவரா ஆனான் அவன். அந்த கிராமத்துக்கே அவன் தலைவனப்பா! எல்லாப் பேப்பர்லயும் அவனோட ஃபோட்டோ வந்தது. எல்லாப் பத்திரிகையிலயும் அவனோட பேட்டி வந்தது. தமிழ்நாடு பூரா அவனப்பத்தித்தான் பேச்சு. அரசியல்வாதிகள புத்திசாலித்தனமா பயன்படுத்திக்கிட்டு அவன் முன்னுக்கு வந்துட்டான். நீயும் கொஞ்சம் காம்ப்ரமைஸ் பண்ணிக்கிட்டு ஒன்னத் தேடிவர்ற அரசியல்வாதிகளப் புத்திசாலித்தனமா பயன்படுத்திக்கிட்டேன்னா, நீயும் முன்னுக்கு வந்துரலாம், அந்த ஆளப் போலவே.”

ஒரு பெருமூச்சோடு அவன் என்னைப் பார்த்தான்.

பிறகு சொன்னான் :
“பாய் சாமி, நாந்தான் சாமி அந்த ஆள்.”

நன்றி : கல்கி, 16.05.2004
(ஓவியன்)

## அவனுக்கென்ன தூங்கிவிட்டான்!

குறுகலான அந்தத் தெருவுக்குள், பாதித் தெருவை ஆக்கிரமித்துக் கொண்டு, நீள வசத்திலும் குறுக்கு வசத்திலும் காலிக் குடங்கள் அணிவகுத்திருந்தன. அத்தனைக் குடங்களுக்கும் ஈர்ப்பு மையமாய், நீர் வற்றிப்போன ஒரு கார்ப்பரேஷன் குழாய். அந்தக் குழாயிலிருந்து ஏதாவது ஈரம் கசிகிறதா என்று ஜாடை மாடையாய் நோட்டம் விட்டவாறு பல ஜோடி வியர்த்த விழிகள்.

ஆரவாரமில்லாமலிருந்த அந்தத் தெருவில் பரபரப்பைக் கிளப்பிக் கொண்டு ஒரு சைக்கிள் அந்தப் பிரதேசத்தில் பிரவேசித்தது. சைக்கிள்காரப் பையன், பேப்பர் விற்கிறவன் தலைப்புச் செய்தியைக் கூவுகிற மாதிரி உரத்த குரலில் ஒலிபெருக்கிக் கொண்டு வந்தான்.

“அக்கா, நம்ம தெரு சின்னராசு லாரி ஏறி செத்துப் போய்ட்டான்... பெரீம்மா, தண்ணி லாரி ஏறி சின்னராசு செத்துப்போய்ட்டான்.... கடக்காரச் செட்டியாரே, ஒங்கட்ட பீடி வாங்குவானே அந்தச் சின்னராசு. அண்ணா ஆர்ச் சிக்னல்ல பாடி கெடக்கு. செல்லம்மக்கா, ஒங்க சொந்தக்காரப் பய சின்னராசு தான். சைக்கிள் நசுங்கி ரோட்லயே கெடக்கு.”

சில விநாடிகளில் தெருவே காலியாகிவிட்டது, காலிக்குடங்களை அனாதரவாய் விட்டு விட்டு. செல்லம்மாவும் போனாள்.

செத்துப்போன சின்னராசு தனக்கு என்ன உறவு என்று மனக்கணக்குப் போட்டபடியே கும்பலோடு கும்பலாய் நடந்தாள். இவளுடைய பெரியம்மாவோட மூத்த மகளைக் கட்டிக் குடுத்த வீட்டில், அந்த மாமனாருடைய தம்பியுடைய சம்பந்தியுடைய.... வேண்டாம் ரொம்ப தூரமாய்ப் போய்க் கொண்டிருக்கிறது. குழாயடியில் நிற்கிறபோது ரெண்டு மூணு முறை இவளைப் பார்த்துப் பல்லைக் காட்டியவன் என்பது மட்டும் நினைவுக்கு வந்தது.

விபத்து நடந்த இடத்தில் கூட்டம் ஏறிக் கொண்டேயிருந்தது. சின்னராசுவின் உடல் ஒரு துணியால் முழுமையாய்ப் போர்த்தப்பட்டுக் கிடந்தது. உடலின் தலைமாட்டில் தண்ணீர் டாங்க்கரின் ஒரு சக்கரம். பக்கத்திலேயே உருக்குலைந்து போன சைக்கிள் ஒன்று.

செத்துப்போனவனின் அம்மாவும் அக்காமாரும் தலையிலும் நெஞ்சிலும் அறைந்து கொண்டு அழுதார்கள். அந்தத் தெருக்கார ஆண்கள் சிலர், பிணத்தைத் தரச் சொல்லிப் போலீஸ் அதிகாரிகளோடு வாதிட்டுக் கொண்டிருக்க, சின்னராசுவை உரிமை கொண்டாடிக் கொண்டு வந்த கட்சித் தொண்டர்கள் சாலை மறியலில் ஈடுபட்டார்கள்.

போர்வை போர்த்திய உடல், நசுங்கிப்போன சைக்கிள், கொலைகாரத் தண்ணி லாரி எல்லாவற்றையும் செல்லம்மா மாறி மாறிப் பார்த்தாள். அந்த ராட்சச லாரியில் அவளுடைய கண்கள் நிலைகுத்தி நின்றன. கும்பலுக்குள் புகுந்து தண்ணி லாரியை சமீபித்தாள்.

மீசையில்லாத போலீஸ்காரர் ஒருவர் லாரிக்குப் பக்கத்தில் நின்றிருந்தார். போலீஸ் என்றால் செல்லம்மாவுக்குக் கொஞ்சம் கிலிதான் என்றாலும், இந்தப் போலீஸ்காரருடைய அபூர்வமான மீசையில்லாத தோற்றம் ஒரு தோழமையைத் தோற்றுவித்தது.

அந்தப் போலீஸ்காரரை இன்னும் சமீபித்து, ‘ஏட்டையா’ என்று மெல்ல அழைத்தாள். அவர் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, அழைத்தவள் இவள் தான் என்றறிந்து ‘என்னயாம்மா கூப்ட்ட’ என்றார்.

“யார்ம்மா நீ, செத்துப் போனவனத் தெரியுமா ஒனக்கு?”

“ஆமா ஏட்டையா, எங்களுக்கு சொந்தந்தான்.”

“பாடியப் பாத்தியா? பாத்துட்டன்னா கௌம்பி வீடு போய்ச் சேரு.”

“ஏட்டையா ஒங்கட்ட ஒரு சமாசாரம் கேக்கணும்.”

“அது சரி, கத பேசற நேரமாம்மா இது? ஏட்டையான்னு டபக்னு எனக்கு ப்ரமோசன் குடுத்துட்ட. ஒன்னத் திட்டவும் முடியாது. இன்னா சமாசாரம் சொல்லு.”

“இந்த ராலி டைவரும் கிளினரும் எங்க ஏட்டையா?”

“எஸ்க்கேப் ஆய்ட்டானுவ. விட்டுர்வமா? நைட்டுக்குள்ள தூக்கிப் போட்டுட்டு வந்துர மாட்டோம்! சரி நீ எடத்தக் காலி பண்ணு.”

“சமாசாரத்த இன்னும் நா கேக்கவே இல்லியே ஏட்டையா?”

“இன்னா கேக்கப் போற? பாடிய எப்ப தருவாங்கன்னு கேப்ப. அதெல்லாம் போஸ்ட் மார்ட்டம் முடிஞ்சி நைட்லதான் குடுப்பாங்க. போதுமா? சரி கௌம்பு.”

“அதில்ல ஏட்டையா. வேற ஒரு மேட்டர்.”

“இன்னாமா ரோதனையாப் போச்சு. ஏ.ஸி. வர்ற நேரம். சட்டு புட்னு சொல்லு இன்னா மேட்டர்?”

“ஏட்டையா, இந்தத் தண்ணி ராலில ரெண்டே ரெண்டு கொடம் தண்ணி புச்சிக்கலாமா ஏட்டையா?”

(கல்கி, “விபத்து”, 25.06.2006)

இருபதாம் நூற்றாண்டு ஓர் இனிமையான காலம்.அதிலும் கி.பி.1955–லிருந்து ஒரு பதினஞ்சு வருஷம் இனிமையின் உச்சக்கட்டம், என்னுடைய கல்விப் பருவம். பாளையங்கோட்டை கான்வென்ட், ஜான்ஸ் உயர்நிலைப் பள்ளி, சேவியர் கல்லூரி எல்லாவற்றையும் நான் கலக்கிக் கொண்டிருந்த காலக்கட்டம்.

அப்போது தண்ணீர்ப் பஞ்சம் இல்லை. அசோக் டாக்கிஸீக்குப் பின்னால் ஓடிக் கொண்டிருந்த வாய்க்கால் படித்துறை மண்டபத்தின் மேலேறி விடலைப் பையன்கள் யானைக்கிடங்கு என்கிற ஆழமான பகுதியில் விறால் (டைவ்) அடித்து சாகசம் பண்ணுவதைப் பரவசத்தோடு நான் பார்த்திருந்த நாட்கள் பல. வாய்க்காலில் வெள்ளம் வருகிற காலத்தில், மதகு திறந்து குளத்துக்குள் தண்ணீர்ப் பாயும்.

வாய்க்காலுக்கும் குளத்துக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பில் ரெண்டே ரெண்டு கட்டிடங்கள். ஒண்ணு எசக்கியம்மன் கோவில். அதையடுத்து, பத்து கிரவுண்ட் தோட்டத்துக்குள்ளே நன்னாவின் வீடு.ஊரில் நன்னாவைத் தெரியாதவர்களே இல்லை. சப் மாஜிஸ்ட்ரேட் சாய்பு என்றால் எல்லாருக்கும் தெரியும். குளத்தங்கரையிலிருந்ததால், டாங்க் வ்யூ என்று வீட்டுக்குப் பெயர் இருந்தது.

‘டாங்க் வ்யூ, பாளையங்கோட்டை’ என்று விலாசமெழுதினால் சென்னை மாகாணத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் கடிதங்கள் வந்து சேர்ந்துவிடும்.அம்மா பிறந்து வளர்ந்த வீடு. தொடர்ந்து அடுத்த தலைமுறை – நானும் என் சகோதரிகளும்.

பாளையங்கோட்டை சாராட்டக்கர் காலேஜின் முதல் முஸ்லிம் மாணவி என்கிற பெருமை அம்மாவுக்கு உண்டு.

இக்னேஷியஸ் கான்வென்ட்டில் நான் ஒண்ணாங் க்ளாசும், அக்கா ரெண்டும் படித்துக் கொண்டிருந்த சின்னப் பிராயத்தில், பள்ளிக்கூடம் இல்லாத சனி ஞாயிறு களில் என்னையும் அக்காவையும் ரெண்டு கைகளிலும் பற்றிக் கொண்டு நீளமாய் வாக்கிங் போவார் நன்னா.

கால்கள் கடுக்கிற வரைக்கும் நடப்போம்.
காந்திமதி ஸ்கூல் வரைக்கும் நடப்போம்.

காந்திமதி ஸ்கூல் தான் ஊருக்குக் கிழக்கு எல்லை. அதையடுத்து ஒரே முள்ளுக்காடுதான்.ஹைகிரவுண்ட் ஆஸ்பத்திரி, மெடிக்கல் காலேஜ் எல்லாம் அப்போது கிடையாது. அக்காவுக்கும் எனக்கும் கால் ரொம்ப வலித்ததென்றால், வாக்கிங்கிலிருந்து திரும்பி வருகிறபோது டவுன் பஸ்ஸில் கூட்டிக்கொண்டு வருவார் நன்னா.

பின்னால் உள்ள செங்குத்தான பீப்பாய்க் குழாயில் நிலக்கரி அள்ளிப்போட்டு, அனலில் ஓடுகிற டி.எம்.பி.எஸ். பஸ்.

பிற்காலத்தில் பிரம்மாண்டமான ஹைகிரவுண்ட் ஆஸ்பத்திரி கட்டப்பட்டது. தொடர்ந்து திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி வந்தது. மருத்துவக் கல்லூரி வந்த பிறகு நம்ம தங்கச்சிமார் ரெண்டுபேர் அங்கே படித்து டாக்டரானார்கள்.

நன்னாவுக்குக் காது மந்தம். நாலடி நீள ரப்பர்க்குழாய் தான் அவருடைய ஹியரிங் எய்டு. குழாயின் ஒரு முனையைத் தன்னுடைய காதில் பொருத்திக் கொள்வார். மறுமுனையிலிருக்கும் புனல் போன்ற அமைப்பில் நாம் கத்திப் பேசினால், அவருக்கு ஓரளவுக்குக் கேட்கும். இப்படியரு தகவல் தொடர்புக் குறைபாடு இருந்தாலும், நன்னாவுக்குச் சிநேகிதர்களுக்குக் குறைச்சலே இல்லை.

கிராம முன்சீப் தாத்தா, நாயுடுத் தாத்தா, தென்காசி முதலாளி இவர்களில் ஒருவராவது அநேகமாய் தினமும் ஆஜராகி விடுவார்கள்.நாட்டு மருத்துவரான செங்கோட்டை ஹக்கீம் ரெண்டு மாசத்துக்கொருதரம் வந்து ஒரு வாரம் டேரா போட்டு விடுவார்.

‘‘கொக்குக் கொத்தி மீனும் பிழைக்குமோ
கோழிக்குஞ்சும் பிறாந்தும் இணங்குமோ
நாயும் மொசலும் நடுவழி தங்குமோ’’

என்று எனக்கும் அக்காவுக்கும் பாட்டுச் சொல்லிக் கொடுப்பார்.

வாய்க்காலைக் கடந்து எசக்கியம்மன் கோவிலுக்கும், டாங்க் வ்யூவுக்கும் வருவதற்குப் பாலம் ஒன்று உண்டு. மனிதர்களும் மாட்டு வண்டிகளும் பாலத்தில் வரலாம். யானைகள் வரமுடியாது. ஆகையால், பொட்டல்புதூர் யானை வருகிற போது வாய்க்காலுக்குள்ளே இறங்கித்தான் வர முடியும். அசோக் டாக்கீஸின் பின்புறத்தில், வாய்க்காலில் ஆழம் குறைந்த பகுதியில் இறங்கி, யானை எங்கள் தோட்டத்துக்குப் பக்கத்தில் கரை ஏறும்.

பொட்டல்புதூர் யானை விடுமுறை நாட்களில் தான் வரும். பாகனுக்கு உதவியாளன், யானையின் தும்பிக்கையைப் பிடித்து அந்தத் துவாரங்களுக்குள்ளே ஒரு செம்புத் தண்ணீரை ஊற்றுவான். அந்தத் தண்ணீரை எங்கள் மேலெல்லாம் யானை ஷவர் போல ஸ்ப்ரே செய்யும்.

யானையின் மேலே நான் ஏற்றப்படுவேன். அதன் கழுத்து மீது ஒரு அஞ்சு நிமிஷ ஆரோகணம். பாகனுக்கு ஓரணாவோ ரெண்டணாவோ கொடுப்பார்கள் நன்னி. இது சும்மா கொசுறுதான். முக்கியமான ஐட்டம் தென்னையோலைகள்.

தோட்டத்துத் தென்னைமரங்களிலிருந்து உதவியாளன் வெட்டிப்போடுகிற பசுமையான ஓலைகளைத் தும்பிக்கையில் வாரிச்சுருட்டிக்கொண்டு யானை வாய்க்காலில் இறங்கிப் போகும். வாய்க்காலில் இறங்குமுன், கவனமாய்க் கணிசமான அளவு லத்தி போட்டுவிட்டு போகும். வாய்க்காலுக்குக் குளிக்க வந்த சின்னப் பையன்களெல்லாம் ஆரவாரத்துடன் ஒருத்தனை யொருத்தன் இடித்துக் கொண்டு அந்த லத்திகளை ஏறி மிதித்துத் துவம்சம் செய்வார்கள்.யானை லத்தியை மிதித்தால் காலில் முள்ளுக் குத்தவே குத்தாதாம்.

தென்னை மரங்களைத் தவிர, தோட்டத்தில் பனை மரங்கள் நிறைய உண்டு. பனங்குருத்து, நொங்கு, பதனி, பனங்கிழங்கு, மஞ்சள் மஞ்சளாய்ச் சாறு ததும்புகிற பனம்பழங்கள், தகன் என்கிற பனைவேரில் விளைகிற பண்டம், எல்லாம் வாரி வழங்குகிற பனைமரங்கள்.

அப்புறம், மாதுளை, சீத்தாப்பழம், அரை நெல்லிக்காய், புளிய மரம் எல்லாம் உண்டு. அபூர்வமான நார்த்தங்காய் மரங்கள் இரெண்டு இருந்தன. நன்னியுடைய நார்த்தங்காய் ஊறுகாயை நினைத்தால் இப்போதும் கூட வாயில் உமிழ்நீர் சுரக்கிறது. நார்த்தங்காய் பழுத்தால் சாத்துக்குடி மாதிரி இருக்கும்.

ராத்திரியில், மொட்டை மாடியில் படுத்துக் கிடக்கையில், அசோக் டாக்கீஸ் சினிமாப் பாடல்கள் தெளிவாய்க் கேட்கும்.

‘‘காதல் காதல் காதல்

காதல் போயின் காதல் போயின்
சாதல் சாதல் சாதல்''

என்று இடைவேளையில் போடுகிற பாட்டு இன்னும் தெளிவாய்க் கேட்கும். அந்தப் பாட்டைத்தான் தினம் தினம் போடுவார் கண்டி மாமா.அசோக் டாக்கீஸ் ஆப்பரேட்டர் கண்டி மாமா, நம்ம நாயுடுத் தாத்தாவுடைய மகன்.

நாயுடுத் தாத்தா, நன்னாவுடைய சிநேகிதர் மட்டுமல்ல., எங்களுக்குக் குடும்ப டாக்டர் அவர்தான். எனக்கு எனிமா கொடுப்பதற்காகப் பிரம்மாண்டமான ஸிரிஞ்சை முதுகுக்குப் பின்னால் மறைத்துக் கொண்டு அவர் என்னை நெருங்க, விபரீதத்தை மோப்பம் பிடித்த நான், அலறிக் கொண்டு ஓட்டமெடுத்ததை அம்மா நினைவு கூர்ந்து சிரித்தார்கள். என்னுடைய நிக்காஹ் அன்று.

சின்ன மாமாவுக்குக் கல்யாணமான பின்னால், புத்தம் புதிய மாமியோடு அவர் லீவுக்கு வருகிற சந்தர்ப்பங்களில் மொட்டை மாடியில் பாட்டுக் கச்சேரி நடக்கும்.

''எளியோரைத் தாழ்த்தி வலியோரை வாழ்த்தும்
உலகே உன் செயல்தான் மாறாதா''

என்று மாமியும் நானும் பாடுவோம்.மாமி பாலசரஸ்வதி, நான் டி.எம்.எஸ்.

எங்கள் வீட்டுக்கு எதிரேயிருந்த எசக்கியம்மன் கோவில் எப்போதும் வெறிச்சோடித்தான் கிடக்கும். தினமும் ஒரு பூசாரி வந்து அரை மணி நேரம் பூஜை நடத்திவிட்டுக் கோவிலைப் பூட்டிக் கொண்டு போய் விடுவார். வாய்க்காலுக்கு வருகிறவர்கள், குளித்து விட்டுக் கோவிலுக்கு வெளியே நின்று கும்பிட்டு விட்டுப் போவார்கள்.ஒருநாள் குளிக்க வந்த நபரின் மணிப்பர்ஸை அபேஸ் செய்ய முயன்று தோற்ற 'திருடன்' ஒருவன் பிடிபட்டு, தர்ம அடிகளுக்குப் பின்னால், கோவிலின் முன்னால் தோப்புக்கரணம் போட வைக்கப்பட்டான். தோப்புக்கரணம் போடுகிறபோது, ரெண்டு முட்டிடு களும் மாறிமாறித் தரையில் பதியவேண்டுமென்று உத்தரவு. கால் முட்டிடுக்கள் ரெண்டிலும் ரத்தங்கசிய அந்தத் திருடன் தோப்புக்கரணம் போட்டதைப் பார்க்க ரொம்பப் பாவமாயிருந்தது.

வருஷத்துக்கொரு தடவை கோவிலில் கொடை வருகிறபோது பெரிய கொண்டாட்டமாயிருக்கும். பக்கத்துக் கிராமங்களிலிருந்தெல்லாம் கோடியணிந்த பக்தர்கள் கூட்டங்கூட்டமாய் வருவார்கள், . தாரை தப்பட்டை முழங்க.

ஒரு மூணு நாள், ஒரே கோலாகலந்தான். பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழியும்.

எங்கள் வீட்டின் விசாலமான வெராண்டாவிலும், தோட்டம் முழுக்கவும் பக்தர்கள் வியாபித்திருப்பார்கள்.

ரெண்டாம் இரவு அட்டகாசமாய் வில்லுப்பாட்டு நடக்கும்.தையத்தோம் தையத் தையத் ததுங்கின என்று பானையில் அடித்துப் பாடுகிறதைக் கேட்க ரொம்ப சுகமாயிருக்கும். ராத்திரி தூக்கமே வராது.பிள்ளைகள் எல்லாரும் கோயிலே பழியென்று கிடப்போம்.

நடுநிசியில் கிடா வெட்டுகிறபோது மட்டும்,, நாங்கள் பயந்து விடுவோம் என்று வீட்டுக்குக் கூட்டிப் போய்விடுவார்கள் நன்னி.

கோவிலிலிருந்து பிரசாதம் வரும். சும்மா சொல்லக் கூடாது, நாலஞ்சி பேர் வயிறு நிறைய சாப்பிடுகிற அளவு வரும். அந்த வாசமே ஒரு தூக்குத் தூக்கும்.

'

''கோவில்லயிருந்து வந்தத நாம சாப்புடலாமா அம்மா''' என்கிற அக்காவின் சந்தேகத்துக்கு அம்மாவின் பதில் :

‘‘சாப்புட்டா என்ன? பிஸ்மில்லா சொல்லிட்டு சாப்புடு.’’

அப்புறம் என்ன, ஏறி மேய்ந்து விடுவோம்.

‘‘கோவில்லயிருந்து நம்மளுக்கு ஏன் நன்னி சோறு குடுத்து வுடறாங்க?’’

‘‘நாம கோவிலுக்குக் கரண்டு தாரோம்லா, அதான் அவுக நமக்கு சாப்பாடு குடுத்து வுடுதாக.’’

ஆமாம். அந்த மூணு நாளும் எசக்கியம்மன் கோவிலுக்கு மின்சார விநியோகம். இந்த சாய்பு வீட்டிலிருந்து தான்!

அந்த வசந்தகாலமெல்லாம் காலாவதியாகிக் கனகாலமாச்சு. நன்னா காலமாகித், தொடர்ந்து நன்னியும் போய்ச் சேர்ந்து கால் நூற்றாண்டு ஓடிப்போய் விட்டது. பாகப்பிரிவினையில், வீடு மாமாவுக்குப் போய்ச் சேர்ந்தது.பாழடைந்து போன வீட்டைப் புதுப்பித்து அதில் குடியிருக்க மாமாவுக்கு நாட்டமில்லை. வாய்க்கால், குளம் எல்லாம் வற்றிப் போன பிறகு, அந்த இடத்துக்கு மதிப்பில்லாமல் போனது. வீடு, தோட்டம் மொத்தத்தையும் அநாதை நிலையத்துக்கு அடிமாட்டு விலைக்குக் கொடுத்து விட்டார் மாமா. படிப்பெல்லாம் முடிந்து, கல்யாணம், பிள்ளைக் குட்டிகள், பிஸினஸ் என்று சென்னைக்குக் குடிபெயர்ந்த பின்னால், அந்தப் புராதன வீடு மட்டுமல்ல, பாளையங் கோட்டை என்கிற ஊருடனேயே தொடர்பு அடியோடு அற்றுப் போய்விட்டது.

வீடு இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டிருக்கக்கூடும். அந்த இடத்தில் புதிதாய் ஒரு கட்டிடம் முளைத்திருக்கக் கூடும்.

எப்படியானாலும், பாளையங்கோட்டைக்கு ஒரு தரம் போய்வர வேண்டும், நான் வாழ்ந்த, படித்த ஊர் இப்போது எப்படியிருக்கிறதென்று பார்க்க வேண்டும். அந்த வீடு இப்போது இருந்தாலும் இல்லாவிட்டாலும் அந்த நிலத்தையாவது போய்ப் பார்த்து வர வேண்டும் என வருஷக்கணக்காய் வளர்ந்து வந்த பேராவலுக்குக் கடைசியாய் ஒரு வடிகால் கொடுத்தே விட்டேன்.

நெல்லை எக்ஸ்ப்ரஸ்ஸில் கிளம்பி திருநல்வேலி ஜங்ஷனில் போய் இறங்கியே விட்டேன்.ஒரு லாட்ஜில் ரூம் போட்டு இளைப்பாறி விட்டு, சாயங் காலமாய் ஒரு ஆட்டோ பிடித்துக் கொண்டு பாளையங் கோட்டைக்குப் போனால், அந்தப் பிரதான சாலையே மாறிப்போன மாதிரி இருக்கிறது. புதிய கட்டிடங்கள், கல்யாண மண்டபங்கள், ஹோட்டேல்கள், பைப்பாஸ் ரோடுகள்....

பாளை பஸ் ஸ்டாண்ட் வழியாய் சேவியர்ஸ் காலேஜுக்குப் போகிற வழியில், சரோஜினி பார்க் கேட்பாரற்றுக் கிடக்கிறது. பெயர்ப்பலகையைக் கூடக் காணவில்லை. சேவியர் கல்லூரிக்கும் ஜான்ஸ் கல்லூரிக்கும் பொதுச் சொத்தான மரியாக் கான்ட்டீன் காணாமல் போய்விட்டது.

சமாதானபுரம் வழியாய் வடக்கு பஜாரையடைந்து, சங்கரம் பிள்ளைக் கடையில் பார்வையைப் பதிக்கிறேன். சங்கரம் பிள்ளை இருக்கிறாரோ போய்விட்டாரோ. கல்லூரிக் காலத்தில், ஓசியிலேயே எல்லாப் பத்திரிகைகளையும் புரட்டிப்பார்க்க என்னை அனுமதித்த சங்கரம் பிள்ளை.

அசோக் டக்கீஸ் சாலையில் இறங்குகிறபோது, ‘அசோக் டாக்கீஸெல்லாம் மூடியாச்சு’ என்கிறார் டிரைவர்.ஆட்டோ இடது புறம் வெட்டி, வாய்க்கால் பாலத்தின் விளிம்பில் வந்து நிற்கிறது.

‘‘பாலத்து மேல வண்டி போகாது சார், இங்ஙனயே எறங்கிக்கிருங்க.’’

இறங்கிக் கொண்டு, பாலத்தில் பாதங்களைப் பதிக்கிறேன்.யானைக்கு மட்டுமே அந்நியமாயிருந்த பாலத்தில், ரெண்டு கால் ஜீவராசிகள் நடப்பதற்கே இப்போது ப்ரயத்தனப்பட வேண்டியிருக்கிறது. வாய்க்காலில் தண்ணீர் சுத்தமாய் இல்லை.

அசுத்தமான தண்ணீர்கூட இல்லை. எல்லாம் காய்ந்து கிடக்கிறது. ஆனாலும் ஜன நடமாட்டம் கணிசமாய் இருக்கிறது. காரணம் கோவிலை நெருங்கின பிறகுதான் புரிகிறது.

அட, கோவிலில் இப்போது கொடை சீஸன்!

கோவிலைத் தாண்டி, டாங்க் வ்யூவை நோக்கிப் பார்வையைச் செலுத்துகிறேன். அங்கே வீடு என்று எதுவும் இல்லை. வேறே புதிய கட்டிடமும் இல்ட்லலை. தோட்டம் வெறும் பொட்டலாய்க் கிடக்கிறது. பொட்டலின் தெற்கு எல்லையில் ஓர் ஓலைக்குடிசை. குடிசை வாசலில் தலையில் தொப்பியணிந்த நபர்கள் சிலர் தென்படுகிறார்கள்.

முஸ்லிம்கள் தொழுகை நடத்துகிற இடமாயிருக்குமோ இது?

ஒரு மினி மசூதி?

அப்படியிருந்தால், அங்கே மரிப் தொழுகை தொழுது கொள்ளலாம். பொழுது இருட்டிக் கொண்டு வருகிறது.

நான் வசித்த வீடும், விளையாடின தோட்டமும் காணாமல் போய்விட்ட மனவலியோடு இருண்டு கொண்டு வருகிற இந்த சாயங்காலச் சூழ்நிலை ஒத்துப் போகிறது.

குடிசையை நெருங்குகிறேன்.

அஸ்லாமு அலைக்கும் என்று வாழ்த்து வருகிறது.

பதில் வாழ்த்துச் சொல்லும்போது மரிப் தொழுகைக்கான பாங்கு அழைப்பு ஆரம்பிக்கிறது.

"'லைட் போடலிங்களா'?" என்று நான் கேட்டதற்கு, "'இந்தா ஒரு நிமிஷத்துல லைட் வந்துரும் பாய்'" என்று பதில் வருகிறது.

"நம்மப் பள்ளிவாசலுக்கு இன்னும் கரன்ட் வரலிங்க, ஹரிக்கேன் லைட்தான். ஆனா இப்ப மூணு நாளக்கிப் பள்ளிவாசல்ல ஜோரா லைட் எரியும்."

சொன்னவரை நான் புதிராய்ப் பார்த்துக் கொண்டி ருக்கும்போதே, மசூதி வளாகத்தில் தற்காலிக ட்யூப் லைட்கள் நாலு உயிர் பெற்று ஒளிர்கின்றன.தொடர்ந்து அந்த நண்பர் புதிரை விடுவிக்கிறார்.

"கோவில்ல ஒரு மூணு நாளக்கி விசேஷம்ங்க பாய். மூணு நாளக்கி அங்க ஜெனரேட்டர் ஓடும். அதனால நம்மப் பள்ளிவாசலுக்கும் மூணு நாளக்கிக் கரன்ட் வரும், கோவிலிருந்து."

நன்றி : தினமலர் வாரமலர், 13.11.2004

(ஈஸ்வர அல்லா தேரே நாம்)

“எனக்கு அம்மாவப் பாக்கணும் அண்ணே” என்று கோரிக்கை வைத்த தங்கையை சமாதானப் படுத்தினேன்.

“அது முடியாதேம்மா. கபர்ஸ்தானுக்குள்ள பெண்கள அலவ் பண்ண மாட்டாங்களாம். அம்மா ஞாபகம் வர்றப்ப ஃபோட்டோவ எடுத்துப் பாத்துக்க.”

தங்கை சமாதானமடையவில்லை. “ஃபோட்டோவப் பாக்கறது சரியண்ணே, ஆனா நம்ம அம்மா படுத்துக் கெடக்கிற எடத்த நா பாக்க வேண்டாமா!” என்றாள், கண்களில் ஈரம் மின்ன. “ப்ளிஸ்ண்ணே பள்ளிவாசல்ல கேட்டுப் பாருங்கண்ணே.”

அம்மா காலமாகி இருபத்திரெண்டு நாள்கள் ஓடிப்போய்விட்டன. அழகான அம்மா. எவ்வளவுதான் கலவரப்படுத்தினாலும் பிள்ளைகளைக் கடிந்து ஒரு வார்த்தை வாயில் வராத பாசமிக்க அம்மா. முன்கோபக்காரரான அப்பாவின் சர்வாதிகாரத்தைக் காலமெல்லாம் தாக்குப் பிடித்த அம்மா. மூணு வருஷம் முன்பு வரை, அம்மாவைக் கட்டிக் கொண்டு, அம்மாவின் மேல் ஒரு காலைத் தூக்கிப் போட்டுக் கொண்டு மட்டுமே உறங்கத் தெரிந்த தங்கச்சி, கதிகலங்கிப் போனாள் அம்மாவின் மறைவால்.

அம்மாவின் மண்ணறையைப் போய்ப் பார்க்க வேண்டும், அங்கே போய் அம்மாவுக்காக ப்ரார்த்திக்க வேண்டும் என்கிற இவளுடைய நியாயமான ஆசை நிறைவேற முடியாமல் மண்ணறைத் தோட்டத்தில் தடையுத்தரவு இருந்தது.

முத்தவல்லிதான் மசூதியின் நிர்வாகத் தலைவர். அம்மாவுக்கு மரணச் சான்றிதழ் அவர்தான் வழங்க வேண்டும். அதற்காக அவரிடம் போனபோது, “நாளக்கித் தாறேனே தம்பி” என்றார்.

“வேற ஒன்னுமில்லியே தம்பி?”
“வேற விஷயம் ஒண்ணு இருக்கு மௌலானா.”
“சொல்லுங்க தம்பி.”
“என்னோட ஸிஸ்டர், அம்மா மேல உயிராயிருந்தா. “
“பொட்ட புள்ளைக அப்படித்தானே இருக்கணும் தம்பி? மேல சொல்லுங்க.”
“அம்மா இப்ப இல்ல. அம்மாவப் பாக்கணும்னு ஸிஸ்டர் ஆசப்படறா.”
“அதாவது...”
“அம்மாவோட கபர்ல வச்சு துஆ ஓதணும் அந்த கபர ஒரு வாட்டியாச்சும் பாத்து அம்மாவுக்கு சலாம் சொல்லணும்னு ரொம்ப ஆசையா இருக்கா.”
“தங்கச்சி ஆசப்படறது ஞாயந்தான் தம்பி, ஆனா பெண்கள் கபரஸ்தானுக்குள்ள வர்றதுக்கு அனுமதியில்லியே தம்பி.”
“நீங்க தலைவர். நீங்க நெனச்சா அனுமதி குடுக்கலாம் மௌலானா.”
“அப்படியில்ல தம்பி. இஸ்லாத்துலயே இதுக்கு அனுமதியில்ல.”

“அப்படியிருக்கும்னு எனக்குத் தோணல மௌலானா. ஒரு தாய் படுத்துகிடக்கிற எடத்தக் கடேசி கடேசியா ஒரேயொரு தடவ அந்தத் தாயோட கொழந்த பாக்க ஆசப்படும்போது, அவ பொண்ணாப் பொறந்துட்ட ஒரேயொரு பாவத்துக்காக அல்லா அந்த நியாயமான ஆசக்கித் தடை போடுவான், பாசத்துக்கு வேலி கட்டுவான்னு என்னால நம்ப முடியல மௌலானா.”

‘‘ஆனா, அதுதான் சட்டம் தம்பி. உயிரோடயிருக்கிற எந்தப் பொண்ணும் கபரஸ்தான் எல்லைக்குள்ள ப்ரவேசிக்கக் கூடாதுங்கறதுதான் சட்டம்.’’

‘‘அப்ப எந்தங்கச்சி எங்கம்மாவப் பாக்கணும்னா அவளும் செத்து மய்யத்தான பின்னாலதான் இந்த கபரஸ்தானுக்குள்ள ப்ரவேசிச்சி அம்மாவப் பாக்க முடியும்ங்கறீங்க.’’ என்னுடைய குரல் வேகங்கூடி தழுதழுத்தது, முத்தவல்லிக்கு ஒரு பின்னடைவை ஏற்படுத்தியது.

தாடியைக் கோதியபடி அவர், ‘‘தம்பி நீங்க உணர்ச்சி வசப்படறீங்க’’ என்றார் மெதுவாய். ‘‘ஒங்க வாதத்துலயிருக்கிற நியாயம், ஒங்க தங்கச்சி ஆசையில இருக்கிற பாசம் எல்லாம் எனக்குப் புரியுது. ஆனா சட்டத்த மீறி நா எப்படி ஒங்களுக்கு அனுசரணையாப் போறதுன்னுதான் எனக்குப் புரியல.’’

முத்தவல்லி கொஞ்சம் கீழே இறங்கி வருவதைப் போல் தோன்றிய சந்தர்ப்பத்தை நான் சாதகமாய்ப் பயன்படுத்திக் கொண்டேன். ‘‘நம்மோட மனசாட்சிக்கி விரோதமா நாம ஏதும் பண்ணப் போறதில்ல மௌலானா. நாம என்ன, ஹராமான காரியமா பண்ணப் போறோம்? அல்லாவுடைய சட்டங்கள் மனிதாபி மானத்துக்கு முரணானதா இருக்கவே முடியாது மௌலானா.’’

‘‘யோசிப்போம் தம்பி. நீங்களும் யோசிங்க’’ என்று முத்தாய்ப்பு வைத்தார் முத்தவல்லி.

இந்த உரையாடலைத் தங்கச்சியிடம் விவரித்த போது, ‘‘நீங்களும் யோசிங்க’’ என்கிற கடைசி வாக்கியம் அவளுக்கு ஒரு நம்பிக்கையைத் தந்த மாதிரியிருந்தது. உடனடியாய் ஆக்ஷனில் இறங்கினாள். கோடம்பாக்கத்தில் ஒரு பியூட்டி பார்லருக்குப் போய் வருவதாய்க் கிளம்பினாள்.

இங்கே அண்ணா நகரில் ஆயிரத்தெட்டு பியூட்டி பார்லர்கள் இருக்க, கோடம்பாக்கம் ஏன் என்றதற்கு, அதுல ஒரு விஷயமிருக்கு என்று கண் சிமிட்டி விட்டுப் போனாள். போனவள், திரும்பி வந்தபோது, தலைமுடி ஆண்மாதிரி க்ராப் வெட்டப்பட்டிருந்தது. இதென்ன அலங்கோலம் என்று நான் ஆச்சர்யப்பட்டுக் கொண்டிருக்கையில், கைப்பையிலிருந்து ஒரு ஒட்டு மீசையை எடுத்துக் காட்டி, மேலும் ஆச்சர்யப்படுத்தினாள்.

‘‘கோடம்பாக்கத்ல சினிமா காஸ்ட்யூம்ஸ் எல்லாம் வாடகக்கி விடற கடையில வாங்கினேன் அண்ணே. ஒங்க லுங்கியையும் ஷர்ட்டையும் குடுங்க போட்டுக்கறேன். தலையில குல்லா வச்சுக்கறேன். இந்த மீசையையும் எக்ஸ்ட்ரா ஃபிட்டிங்கா ஒட்டிக்கிறேன். நாளக்கிக் காலைல வீட்ல ஸுபுஹ் தொழுதுட்டு நாம ரெண்டு பேரும் கபரஸ்தானுக்குப் போறோம். அம்மாவப் பாத்துட்டு வர்றோம். விடிஞ்சும் விடியாமலும் இருக்கற நேரம், யாருக்கும் வித்யாசம் தெரியாது.’’

எனக்குள் லேசாய்க் கிலி. ஆசை வெட்கமறியாது என்பார்கள். ஆசை ஆபத்தையும் அறியாது என்று உணர்ந்தேன். நியாயமான ஆரோக்யமான ஆசைதான், ஆனாலும், பிடிபட்டுவிட்டால்?

‘‘இது ரிஸ்க் இல்லியா தங்கச்சி! விஷயம் வெளியே தெரிஞ்சி போச்சுன்னா என்ன நடக்கும்னு என்னால கற்பன பண்ணவே முடியலியேம்மா.’’

‘‘அநாவசியக் கற்பன எதுக்குண்ணே. நீங்க கவலையேப் படாதீங்க. அல்லாவும் அம்மாவும் நம்மளக் கைவிட மாட்டாங்க.’’ தங்கையுடைய உறுதி எனக்கு ஒரு புதுத் தெம்பையளித்தது.

அடுத்த நாள் சாயங்காலம், அம்மாவுடைய மரணச் சான்றிதழைப் பெறுவதற்காக மசூதிக்குப் போனேன்.

மசூதிக்கும் மண்ணறைத் தோட்டத்துக்குமிடையே இருந்த தணிவான சுவரின் மேலாய் அம்மாவின் மண்ணறை இருக்கும் திசையில் பார்வையைச் செலுத்தி விட்டுப் பின் முத்த வல்லியின் அறையை நோக்கி நடந்தேன்.

“காலைல கபரஸ்தானுக்கு வந்திருந்த மாதிரியிருந்தது தம்பி?” என்ற முத்தவல்லியின் முதல்க் கேள்வியே கொஞ்சம் சங்கடப்படுத்தியது.

“அ...ஆமா” என்று தடுமாறினேன்.

“கூட யாரோ வந்திருந்த மாதிரியிருந்தது?” என்கிற அடுத்த கேள்வி இன்னும் சங்கடம்.

இந்தக் கேள்வியை எப்படி சமாளிப்பது என்று திணறிக் கொண்டிருந்த வேளையில் டெலிஃபோன் மணி ஒலித்து என்னுடைய திணறலைத் திசை திருப்பியது. முத்தவல்லி ஃபோனில் பேசி முடித்த போது அந்தக் கேள்வி காலாவதியாய்ப் போயிருந்தது.

மேஜையில் குனிந்து, டெத் ஸர்ட்டிஃபிகேட்டில் கையெழுத்திட்டுக் கொண்டே முத்தவல்லி, “தம்பி என்ன தொழில் செஞ்சிட்டிருக்கீக?” என்று அடுத்த சங்கடத்தை அவிழ்த்து விட்டார்.

சங்கடம்தான். நான் ஈடுபட்டிருக்கிற தொழிலை, தீவிர முஸ்லிமான இவரிடம் எப்படிச் சொல்வது? சரி, அதற்காகப் பொய் சொல்லவா முடியும்!

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சொன்னேன். “நா சினிமாவுல இருக்கேன் மௌலானா.”

“சினிமாவுல நடிக்கவா செய்றீக?”

“இல்ல மௌலானா, சினிமாவுல பாட்டெழுதறேன்.”

“இதச் சொல்றதுக்கு ஏன் தம்பி இவ்வளவு யோசிக்கிறீக! நல்லா எழுதுங்க. கா.மு. ஷெரீஃப்னு ஒரு கவிஞர் இருந்தாரே, அவர மாதிரி நீங்களும் ஓஹோன்னு வாங்க.”

நான் நினைத்ததற்கு மாறாய், உற்சாக வார்த்தைகள் சொல்லி என்னைப் பரவசப்படுத்தியவர், அடுத்து, “நம்ம மகனும் சினிமா லைன்லதான் இருக்கான்” என்று ஓர் ஆச்சர்யத்தை அரங்கேற்றினார்.

“கோடம்பாக்கத்ல ஒரு கட வச்சிருக்கான். சினிமாக் காரங்களுக்கு உடுப்பு சப்ளை பண்ற கட. உடுப்பு மட்டுமில்ல, ஒட்டு முடி, ஒட்டுதாடி, ஒட்டு மீசை எல்லாம் வச்சிருக்கான்.”

அந்த “ஒட்டு மீசை”யில் ஓர் அழுத்தந் தந்து, என் விழிகளை ஊடுருவி, விசேஷமான ஒரு புன்னகையை என்மேல் பிரயோகித்தார். எனக்கு என்னமோ புரிந்த மாதிரியிருந்தது. தொடர்ந்து, அம்மாவின் மரணச் சான்றிதழ்க் காகிதத்தை என்னை நோக்கி நீட்டியபடி, “ஒங்கத் தங்கச்சிக்கு நா சலாம் சொன்னேண்டு சொல்லுங்க” என்று சிரித்தார்.

எனக்கு முழுமையாய்ப் புரிந்த மாதிரியிருந்தது. சான்றிதழைப் பெற்றுக் கொண்டு அவருடைய கரங்களைப் பற்றினேன். “நன்றி மௌலானா. ரொம்ப நன்றி” என்று கண்கள் பனிக்கச் சிரித்தேன்.

“எதுக்குத் தம்பி நன்றி?” என்றார்.

“எல்லாத்துக்கும்தான்” என்றேன்.

(நன்றி : பாக்யா, ஏப்ரல் 18–24,2008, மற்றும், இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் இஸ்லாமியச் சிறுகதைகள் தொகுதி)

நவம்பர் பதினஞ்சு. நம்ம ஆளுடைய பிறந்த நாள்.

காலையில் ரெண்டு பேரும் கோவிலுக்குப் புறப்பட்டோம். ட்ராஃபிக் நெரிசலில் பைக் மெல்ல ஊர்ந்து கொண்டிருந்த போது, ''என்னங்க கொஞ்சம் நில்லுங்க, நில்லுங்க'' என்று பின்னாலிருந்து என் தோளை உலுக்கினாள்.

''இந்த நோட்டீஸைப் பாருங்களேன்'' என்று பக்கத்துச் சுவரில் ஒட்டப்பட்டிருந்த ஒரு மினி போஸ்டரைக் காட்டினாள்.

'தயவு செய்து இதைக் கிழிக்காதீர்கள்' என்கிற கோரிக்கையுடன், மகேஷ் என்கிற அஞ்சு வயசுச் சிறுவன் காணாமற் போன அறிவிப்பு அச்சிடப்பட்டிருந்தது.

கிட்டத்தட்ட ஆறு மாசமாய் சென்னை நகரின் சுவர்களிலும் தண்ணி டாங்க்கர்களின் பின்னாலும் இதே போஸ்டரைப் பலமுறை பார்த்திருக்கிறேன் என்கிற விஷயத்தை இவளிடம் சொன்னபோது, ''என்னங்க இவ்வளவு அலட்சியமாச் சொல்றீங்க?'' என்று பதறினாள்.

''அப்பறம் நா என்னம்மா செஞ்சிருக்கணுங்கற? பையனைக் கடத்திட்டுப் போனது யார்னு துப்பறியச் சொல்றியா? அது போலீஸோட வேலை. நாம என்னம்மா செய்ய முடியும்?''

''நம்மால எது முடியுமோ அதச் செய்ய முயற்சி செய்யலாம்ல? எத்தனையோ தடவ இந்த நோட்டீஸப் பாத்ததாச் சொல்றீங்களே, ஒரு தடவையாவது இந்த ஃபோன் நம்பர நோட் பண்ணீங்களா?''

சுருக்கென்றது.

'ஆமா, நோட் பண்ணியிருக்கலாம்ல?' என்கிற உரத்த சிந்தனையோடு, மகேஷ் என்கிற பெயரையும், ஃபோன் நம்பரையும் குறித்துக் கொண்டேன். ஃபோட்டோவிலிருந்த முகத்தை மனசில் பதித்துக் கொண்டேன்.

''அஞ்சு வயசுக் கொழந்தைங்க. பாவம் எங்க இருக்கானோ என்ன கஷ்டப்படறானோ, அவனப் பெத்தவங்க என்ன வேதனையில இருக்காங்களோ?'' என்று வழி நெடுக அங்கலாய்த்துக் கொண்டே வந்தாள்.

கோவிலில், ''யாரு பேருக்கு அர்ச்சன பண்ணனும் சாமி?'' என்று அர்ச்சகர் கேட்டதற்கு, இவளுடைய பெயரை நான் முன்மொழியும் முன், என்னை முந்திக் கொண்டு இவள் குரல் கொடுத்தாள்:

''மகேஷ்''.

(ஆனந்த விகடன், 15.08.2004)

## உயரத்தில் ஒருவன்

தன்னுடைய தங்கைக்கு இஞ்ஜினியரிங் காலேஜில் ஸீட் கிடைத்து விட்டால், ரெண்டு பிச்சைக்காரர்களுக்கு சாப்பாடு போடுவதாய் நம்ம வீட்டுக்காரி வேண்டிக் கொண்டாளாம்.

ரெண்டு சாப்பாடு பாக்கெட்டோடு பைக்கில் நான் அவென்யூ அவென்யூவாய் அண்ணாநகரில் அலைந்த போது என் மச்சினிக்கு ஸீட் கிடைக்காமலேயே இருந்திருக்கலாமே என்று தோன்றியது.

இந்தியா திடீரென்று பணக்கார நாடாகி விட்டது மாதிரி இருந்தது. பிச்சைக்காரன் ஒருவனுமே கண்ணில் படவில்லை. அரைமணி நேரம் சுற்றிய பிறகு, பேப்பர் பொறுக்குகிறவன் ஒருவன் கண்ணில் பட்டான். ஒரு பொட்டலத்துக்கு ஆள் மாட்டிக் கொண்டான்.

குனிந்து பேப்பர் பொறுக்கிக் கொண்டிருந்தவனின் பக்கத்தில் போய் பைக்கை நிறுத்தினேன். நிமிர்ந்து என்னைப் பார்த்தான். ஒரு பாக்கெட்டை எடுத்து நீட்டினேன். கையிலிருந்த கோணியைக் கீழே போட்டு விட்டு கண்கள் விரிய ரெண்டே எட்டில் என்னை சமீபித்துப் பொட்டலத்தைப் பெற்றுக் கொண்டு கை கூப்பினான்.

அங்கிருந்து கிளம்பி அடுத்த பசித்தவனைத் தேடிப் புறப்பட்டேன். இன்னொரு இருபது நிமிஷம் அலைந்த பின்னால் இன்னொரு பேப்பர் பொறுக்குகிறவன் கண்ணில் இடறினான்.

அப்பாடா வேலை முடிந்தது. அவனருகில் போய் பைக்கை ஓரங்கட்டினேன்.

நான் போய் நின்றதும் அவன் தலை நிமிர்ந்து பார்க்க வேண்டாமோ?

பார்க்கவில்லை.

குனிந்த நிலையில் ரொம்ப பிஸியாய்க் குப்பையைத் தரம் பிரித்துக் கொண்டிருந்தான்.

ரெண்டு நிமிஷம் அவன் தலை நிமிரக் காத்திருந்து பொறுமையிழந்து, இந்தாப்பா என்று அழைத்தேன்.

என் குரலுக்குப் பார்வையைத் திருப்பினான். பார்ஸலை எடுத்து நீட்டினேன். அவன் அலட்டிக் கொள்ளவேயில்லை.

பிரித்த குப்பையில் தரமானதை எடுத்து கோணியில் போட்டுக் கொண்டு எழுந்தான்.

என்னிடம் வந்தான். “நா.. பிச்சக்காரன் இல்ல சாமி.”

சொல்லிவிட்டு கோணியைத் தோளில் போட்டுக் கொண்டு நடந்தான்.

சில விநாடிகளில் ஸ்தம்பித்து நின்றேன்.

பிறகு, அவன் போன திசையில் கை கூப்பினேன்.

(ஆனந்த விகடன், 05.09.2004)

ஏழரை மணிக்குத் துயிலெழுந்து, இன்றைக்குச் செய்ய வேண்டிய காரியங்களுக்கு மனசுக்குள்ளே பட்டியல் போட்டுக் கொண்டிருந்த போது பெட்காபியோடு அறைக்குள் நுழைந்தாள். பட்டியலின் முதல் ஐட்டத்தை அவளிடம் சொன்னேன்.

“இந்தாம்மா, சீக்கிரம் டிபன் ரெடி பண்ணிட்டு நீயும் ரெடியாகு. குட்டிப்பயல எழுப்பிவிடு.”

“என்ன சமாசாரம், மாணிங் ஷோவுக்குப் போறீங்களா? எனக்கு வீட்ல வேலயிருக்கு. நா வரல. ஒங்க மகனக் கூட்டிக்கிட்டு நீங்க போய்ட்டு வாங்க.”

“மாணிங் ஷோவுமில்ல மண்ணாங்கட்டியுமில்ல. எங்க போறோம்னு நா சொன்னா சந்தோஷத்ல நீ திக்குமுக்காடிப் போவ.”

“சொல்லுங்களேன் திக்கு முக்காடறேன்னு பாப்போம்.”

சொன்னேன்.

“ஹை!” என்கிற ஒரே எழுத்தில் தன்னுடைய புளகாங்கிதத்தை வெளிப்படுத்தினாள். பிறகு விறுவிறுவென்று வேலைகள் நடந்தன. டிபன் ரெடி பண்ணி, தான் ரெடியாகி, பையனை எழுப்பிக் குளிக்க வைத்து, முந்திரிப் பருப்பு போட்ட ஸ்பெஷல் உப்புமா வையும் முட்டைப் பொரியலையும் லஞ்ச் பாக்ஸில் பேக் பண்ணிக் கொண்டு முக்கால் மணி நேரத்தில் ரெடியாகி விட்டாள்.

பிறகு, காரில் போகிற போது தான் என்னிடம் பேச அவளுக்கு நேரங் கிடைத்தது. “ராத்திரி கனவு கினவு ஏதுங் கண்டீங்களா?”

“பகல் கனவுதான் நாங் காணறது. எதுக்குக் கேக்கற?

“அத்தயப் பாக்கப் போவோம் போவோம்னு பல தடவ நா சொல்லியும் நீங்க கேக்கல. பாட்டியப் பாக்கணும்னு இவன் எத்தனையோ தடவ அழுதும் நீங்க மனசிறங்கல இன்னிக்கி திடீர்னு காலைல எந்திரிச்சவுடன அம்மாவப் பாக்கப் போறோம்னு ஒரு குண்டத் தூக்கிப் போட்டீங்களே...”

“திடீர் எல்லாம் ஒண்ணுமில்லை, நேத்தே முடிவு பண்ணி வச்சிர்ந்தேன். ஒனக்கும் இவனுக்கும் ஒரு ஸர்ப்ரைஸ் குடுப்போம்னுதான் நேத்து சொல்லல.”

“ஒம்போது மாசங்கழிச்சி இப்பத்தான் ஞானோதயம் வந்துச்சாக்கும்?”

“ஒம்போது மாசங்கழிச்சி இன்னிக்குத் தானே மதர்ஸ் டே வந்திருக்கு! அதோட, இன்னிக்கி ஸண்டே வேறயா, போனாப் போகுது அம்மாவப் போய்ப் பாத்துருவோம்னு நேத்து முடிவு பண்ணினேன். வெறுங்கையோட போனா நீ திட்டுவன்னு மெனக்கெட்டு நேத்து ஆபிஸ்லருந்து வர்ற வழியில டி நகர் போய் அம்மாவுக்கு ஒரு பொடவ....”

“பிரேக் பிரேக் பிரேக். பிரேக் போடுங்க. ஸடன் பிரேக்.” என்னுடைய வாக்கியத்தை நான் முடிக்கு முன்னால், காரை ஓரங்கட்டி பிரேக் போட வைத்தாள்.

பிறகு, நான் எதிர்பார்த்த மாதிரியே, ‘‘எங்க, அந்தப் பொடவையக் காட்டுங்க’’ என்றாள். பிறகு, நான் எதிர்பார்த்த மாதிரியே, ‘‘ஐயே, நல்லாவேயில்ல, பொடவை செலக்ட் பண்ண ஒங்களுக்கு என்னங்க தெரியும், என்னக் கூட்டிட்டுப் போயிருக்கலாந்தானே’’ என்று வருத்தப்பட்டாள்.

பிறகு, நான் எதிர்பார்க்காத மாதிரி, ‘‘வண்டியட் டி நகர்க்குத் திருப்புங்க’’ என்று ஆணையிட்டாள். ‘‘அந்தக் கடக்கிப் போங்க. பொடவயச் சேய்ஞ்ஜ் பண்ணிரு வோம். ஒரு நூறு எரநூறு கூட இருந்தாலும் பரவாயில்ல, பொடவ பாக்க லட்சணமாயிருக்க வேண்டாமா?’’

‘‘இன்னிக்கி ஸண்டே, டி நகரெல்லாம் லீவு.’’

‘‘பொய் சொல்லாதீங்க.’’

‘‘ஒன்ட்ட ஏன் பொய் சொல்லப் போறேன் டார்லிங், நெஜம்மாவே இன்னிக்கி ஸண்டேதான்.’’

‘‘அது எனக்குத் தெரியாதாக்கும்? ஜோக்கா அடிக்கிறீங்க. ஸண்டேயும் இப்ப கடைங்க தொறந்திருக்கு.’’

‘‘இல்லம்மா, நா பொடவை வாங்கின கடயில கேட்டேனே. ஸண்டே லீவுன்னு சொன்னாங்க.’’

ஒருமாதிரி இவளை சரிக்கட்டிக் காரைக் கிளப்பினேன்.

அம்மாவுக்குப் புடவையெடுக்க இவளைக் கூட்டிக் கொண்டு போக எனக்கென்ன பைத்தியமா! இது நல்லாயில்ல, அது சரியில்லயென்று கழிப்பாள். கொஞ்சம் காஸ்ட்லியா யெடுப்போமே என்பாள். ஒரு புடவை போறாது என்பாள். அத்தைக்கு அது வாங்குவோம் இது வாங்குவோம் என்று அனத்துவாள். ரெண்டு மணி நேரத்தை விரயமாக்கிவிட்டு ஒரு ரெண்டாயிரம் ரூபாய்க்கு வெட்டிச் செலவு வைத்திருப்பாள். தப்பித்தேன்!

மாமியார் மேலே அநியாயத்துக்குப் பிரியம் இவளுக்கு. மேலோட்டமாய்ப் பார்த்தால் அது ஞாயம்தான்.ஒன்பது வருஷங்களுக்கு முன்னால், பிறந்த வீட்டைப் பகைத்துக் கொண்டு கட்டின புடவையோடு என்னை நம்பி ஓடி வந்தவளுக்கு அடைக்கலந் தந்து, மருமகளென்று இன்ஸ்ட்டன்ட் அங்கீகாரம் வழங்கி, உச்சி மோந்து, உடைகள் தந்து, அப்பாவை வழிக்குக் கொண்டு வந்து, அன்பை அள்ளிக் கொட்டிய அத்தையில்லையா!

அதனால்தான், அம்மாவை முதியோர் இல்லத்தில் சேர்த்து விட நான் முடிவெடுத்திருப்பதைச் சொன்னவுடன் ஆடிப் போய்விட்டாள். அடம் பிடித்தாள். என்னை அறம் பாடினாள். அத்தையைக் கட்டிக் கொண்டு அழுதாள். அத்தை போன பின்னால் மகனைக் கட்டிக்கொண்டு அழுதாள்.

ஒரு வாரம் ஸ்ட்ரைக், சமையலறையில் பந்த்.

சரவணபவன் வசந்தபவன், அஞ்சப்பர் அரசப்பர், காரைக்கடி பரமக்குடி என்று வகை வகையான மெனுவை வாய்க்கு ருசியாய்ச் சாப்பிட எனக்கொரு அரிய சந்தர்ப்பம் கிட்டியது! அப்பா ஒரு பொன்முட்டை போட்டுக்கொண்டிருந்த வாத்து. பத்தாயிரம் பென்ஷன் வந்து கொண்டிருந்தது.போன வருஷம் அப்பா செத்துப் போன பின்னால், பென்ஷன் கட்.

அப்பா போன பின்னால் அம்மாவுக்குப் பாதி பென்ஷன் வருமென்றார்கள். ஏற்பாடு செய்தேன்.அம்மா ஒரு நிரந்தர நோயாளி. மருந்துக்கும் மருத்துவர்களுக்கும் சராசரியாய் மாசம் நாலாயிரம் ரூபாய். அப்பாவின் பென்ஷன் வந்து கொண்டிருந்த வரை அம்மாவின் மருத்துவச்

சுமை பெரிசாய்த் தெரியவில்லை. அப்பா போன பின்னால், அம்மாவைத் தூக்கிச் சுமப்பது ஒரு கேள்விக்குறியாகிப் போனது.

மருத்துவச் செலவுகள் ஒருபுறம் இருக்க, இந்த விஸ்வாசமுள்ள மருமகள், மாமியாரைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவது அபத்தமாயும் இயற்கைக்கு முரணாயும் இருந்தது. மாமியாருக்கு டெய்லி ஸூப் என்ன, பழவகைகள் என்ன, பூஸ்ட் போண்வீட்டா என்ன, காளான் காப்ஸ்யூல்ஸ் என்ன, ஒரே அராஜகம்தான்.

ஐயா, இது நமக்குத் தாங்காது என்று உணரத் தலைப்பட்டேன். அண்ணாநகரில் வாங்கிய ஃப்ளாட்டுக்கு ஹவுஸிங் லோன் கட்டவே முழி பிதுங்கிக் கொண்டிருக்கும்போது அம்மாவுக்கான ஆடம்பரச் செலவுகள் அநாவசியம் என்கிற பேருண்மை புரிந்தது.

முதியோர் இல்லத்தில் குடிவைக்க முடிவெடுத்திருப்பதை இலைமறைவு காய்மறைவாய் அம்மாவின் காதில் போட்ட போது, அதிலுள்ள யதார்த்தத்தை அம்மா புரிந்து கொண்டு, என் முடிவுக்கு அமோகமாய் ஆதரவு தெரிவித்தார்கள். இதோ இவளுடைய மரமண்டைக்குத்தான் யதார்த்தம் புரியவில்லை.

வீட்டை விட்டுக் கிளம்புகிற அன்று, அம்மா அமைதி காத்ததை நினைக்கிற போது இப்போது கூட எனக்கு உடம்பெல்லாம் சிலிர்க்கிறது. மாமியாளைக் கட்டிக்கொண்டு இவள் ஒப்பாரி வைத்த போது கூட அம்மா நிதானம் தவறவில்லை. அம்மாவின் வார்த்தைகள் மருமகளைத் தேற்றுவதாகவே அமைந்திருந்தன. பேரனுக்கு முத்தங் கொடுத்து விடைபெற்ற போது மட்டும் ரெண்டு சொட்டுக் கண்ணீர். பேரக்குழந்தைகளைக் குறித்து எல்லாத் தாத்தா பாட்டிகளுக்கும் இயற்கையாயிருக்கிற பாசவுணர்ச்சி. அம்மா அம்மாதான்.

மகன் என்ன செய்தாலும் நியாயமாய்த்தான் செய்வான் என்று உணர்ந்திருக்கிற உன்னதமான அம்மா.அம்மாவுக்கு பாத்தியப்பட்ட அப்பாவுடைய பாதி பென்ஷனை நான் டச் பண்ணவேயில்லை என்கிற சங்கதி லோகத்தில் எத்தனை பேருக்குத் தெரியும்!

இந்தப் பரந்த மனசையெல்லாம் தண்டோராப் போட்டு விளம்பரப்படுத்துகிற ஈனப் பிறவியா நான்! அந்தத் தொகை அப்படியே முதியோர் இல்லத்தில் வரவு வைக்கப்பட்டு அம்மாவுக்கான செலவுகளுக்கு ஈடு செய்யப்பட ஏற்பாடு செய்தாகிவிட்டது.

பிள்ளைக்குத் தன்மேல் இருக்கிற பாசம் அம்மாவுக்குப் புரியும். அம்மாவுக்குப் புரிந்தால் போதும்.இந்த ஒன்பது மாத இடைவெளியில் ஒருவேளை என்னுடைய பாசம் அம்மாவுக்கு மறந்து போக ஆரம்பித்திருந்தால், நினைவுகளைப் புதுப்பித்துக் கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பமாய் இந்த மதர்ஸ் டே வந்தது. என்னைப் பற்றி நானே உயர்வாய்ச் சொல்லிக் கொள்ளக் கூடாது, ஆனாலும் இந்த உண்மையை உலகுக்கு உணர்த்தித் தானாக வேண்டும்; முதியோர் இல்லங்களில் பெற்றவர்களை சேர்த்துவிட்டதோடு அவர்களைக் கை கழுவிவிட்டு, பீடை தொலைந்தது என்று அந்தப் பக்கமே எட்டிப் பார்க்காத பிள்ளைகள் வாழுகிற கலிகாலத்தில், அன்னையர் தினத்தை நினைவு கூர்ந்து, ஒரு புதுப்புடவையோடும், மனைவி குழந்தையோடும் அக்கறையாய் அம்மாவைப் பார்க்க நேரம் ஒதுக்கியிருக்கிற என்னுடைய பாசமும் பண்பாடும் விசேஷமானதுதானே!

முதியோர் இல்லத்தில், எதிர்பாராத வேளையில் மகனையும் மருமகளையும் பேரனையும் பார்த்த அம்மாவுக்கு ஆச்சர்யமும் ஆனந்தமும். அவர்களுடைய புதிய, முதிய தோழிகளுக்கெல்லாம் எங்களை அறிமுகம் செய்து வைத்து சந்தோஷப்பட்டார்கள். அம்மாவின் மிக நெருங்கிய தோழி இவளைத் தன்னோடு சேர்த்து இறுக்கிக் கொண்டாள்.

“ஒங்க அத்தக்கி எப்பவும் ஒன்னப் பத்தித் தாம்மா பேச்சு. வார்த்தக்கி வார்த்த எம்மருமக எம்மருமக எம்மருமக தான். இப்படியொரு மருமக அமஞ்சதுக்கு நா ரொம்ப குடுத்து வச்சிருக்கணும்பாங்க. இப்ப நா சொல்றேன். இப்படியொரு மாமியார் அமஞ்சதுக்கு நீ தாம்மா குடுத்து வச்சிருக்கணும், என்ன சொல்ற!”

அம்மா தன் மருமகளை உயர்த்திப் பேசியிருக்கலாம்தான். அதோடு, பாசமிக்க மகனான என்னைப் பற்றியும் அம்மா உயர்வாய்ப் பேசியிருப்பார்கள்தான். அதையும் வெளியே சொல்வதுதானே ஜனநாயகம்!

இந்தப் பொம்பளை இருட்டடிப்புச் செய்து விட்டாள். வினயம் பிடிச்ச கிழவி! எப்படியிருக்கீங்க அத்தேயென்று இவள் அழுது வடிந்ததற்கு, ரொம்ப சந்தோஷமா இருக்கேம்மா, என்னப் பத்தின கவலையே ஒனக்கு வேண்டாம் என்று இவளுடைய கண்ணீரைத் துடைத்து விட்டார்கள் அம்மா.

போகிற போது முன் ஸீட்டில் என் பக்கத்தில் இருந்தவள், என்ன காரணத்தாலோ திரும்பி வருகிறபோது பின் ஸீட்டில் இருந்து கொண்டாள், தன் மகனோடு. பின்புறமிருந்து என்னுடைய கழுத்தருகில் நெருங்கி மெல்ல ஒரு விண்ணப்பத்தை வைத்தாள்.

“என்னங்க, அத்தையத் திரும்ப வீட்டுக்குக் கூட்டிக்கலாங்க.”

“அம்மா தான் அங்க சந்தோஷமா இருக்கறதாச் சொன்னாங்களே.”

“இங்க நா சந்தோஷமா இல்லியேங்க.”

“ஒன்னோட சுயநலத்துக்காக அம்மாவோட சந்தோஷத்தக் கெடுக்கணுங்கறியா!”

என்னுடைய லாஜிக்கால் அடிவாங்கிப் பின்வாங்கினாள். பிறகு காருக்குள்ளே நிசப்தம். நீளமான நிசப்தத்தை ஓரங்கட்டி ஒலித்தது சன்னமாய் ஒரு சின்னக் குரல். நம்ம குட்டிப் பயல்.

“மம்மி, இன்னிக்கி மதர்ஸ் டேயா மம்மி?”

“ஆமாண்டா கண்ணா, ஒங்க டாடி சொல்லித்தான் எனக்கே தெரியும்.”

“டாடி அவங்க மம்மிக்கி கிஃப்ட் குடுத்த மாதிரி, எங்க மம்மிக்கி நா ஒரு கிஃப்ட் குடுக்க வேண்டாமா மம்மி?”

“நீ தாண்டா ராஜா எனக்குப் பெரீய்ய கிஃப்ட். எப்பவும் நீ மம்மி மம்மின்னுட்டு எனக்குப் பக்கத்திலேயே இருக்கணும்டா ராஜா. நீ பெரியவனானப்பறம் இந்த மம்மிய மறந்துரக்கூடாது ராஜா. மதர்ஸ் டேக்கின்னு காத்திருந்து ஒங்க டாடி அவங்க மம்மியப் பாக்கப் போன மாதிரி நீ என்னப் பாக்க ஒரு ஓல்ட் ஏஜ் ஹோம்க்கு வரக் கூடாதுடா கண்ணா. கடைசி வரைக்கும் என்ன வச்சுக் காப்பாத்துவியாடா கண்ணா.”

மகனைக் கட்டிக் கொண்டு இவள் வசனம் பேசியபடி விசும்புவது கண்ணாடியில் தெரிகிறது.

“கடேசி வரக்யும் ஒங்கள வச்சுக் காப்பாத்துவேன் மம்மி. ஓல்ட் ஏஜ் ஹோம்ல ஒங்கள நா சேக்கவே மாட்டேன் மம்மி” என்று இந்தப் பெரிய மனுஷன் பதில் வசனம் பேசுகிறான். உடனே அம்மா, பிள்ளையின் கன்னங்களில் முத்தழை பொழிகிறாள்.என்ன அசிங்கமாய் ஒரு டிராமா போடுகிறாள்! மறைமுகமாய் என்னை வில்லனாய்ச் சித்தரித்து ஒரு டிராமா! தேவையற்ற ஒரு ஹரனை நீளமாய் ஒலித்து என்னுடைய அதிருப்தியை வெளிப்படுத்தினேன்.

கொஞ்ச நேரங்கழித்துத் திரும்பவும் கேட்கிறது பொடிப்பயலின் குரல். ‘‘மதர்ஸ் டே மாதிரி ஃபாதர்ஸ் டேயும் இருக்கா மம்மி?’’

‘‘இருக்கும், ஏன் கேக்கறே?’’

‘‘நா பெரியவனானப்பறம் மம்மி, ஃபாதர்ஸ் டே அன்னிக்கி, புது டிரஸ்ஸும் ஒரு வாக்கிங் ஸ்டிக்கும் வாங்கிக்கிட்டு, ஓல்ட் ஏஜ் ஹோம்க்குப் போவேன், டாடியப் பாக்க.’’

திடீரென்று ஸ்ட்டீரிங் கழண்டு கொண்ட மாதிரி வண்டி தடுமாறியது. வாக்கிங் ஸ்டிக்கின் தடிமனான பூணைக் கொண்டு, உச்சி மண்டையில் இடியிறங்கின மாதிரி ஓங்கி ஓர் அடி.

ஒரு கணம் கண்கள் இருண்டு, பின் சகஜ நிலைக்கு வந்தன. மூளையில் ஒரு மின்னல் வெட்டி மறையவும், எதிரே சிக்னலில், யூ டர்னுக்கான பச்சைக் கொக்கி பளிச்சிடவும் சரியாயிருந்தது.வண்டியை ஒரு வெட்டு வெட்டி வலப்புறம் ஒதுக்கி தடாலடியாய் ஓர் யூ டர்ண் அடித்தேன்.

பின் ஸீட்டில் ஒரு பரபரப்பு. ‘‘என்னங்க வண்டி வந்த வழியே திரும்ப போற மாதிரி இருக்கு?’’ என்றவளின் குரலில் ஒரு குறுகுறுப்பு.

‘‘ஆமா’’ என்கிறேன் நான்.

‘‘எங்க?’’ என்கிறாள் இவள்.

‘‘அம்மாவப் பாக்க.’’

‘‘அதான் பாத்தாச்சே?’’

‘‘பக்கத்துல வச்சுப் பாத்துட்டே இருக்க.’’

‘‘நெஜம்மாவா!’’ என்று பின்னாலிருந்து என் கழுத்தைக் கட்டி, எட்டி என் பிடறியில் தன் அதரங்களைப் பதிக்கிறாள் இவள்.

பிறகு என்னை விடுவிக்காமலேயே கழுத்தைத் திருப்பித் தன் மகனை நோக்கிக் கூவுகிறாள். ‘‘கண்ணா, பாட்டிய வீட்டுக்குக் கூட்டிட்டுப் போகப் போறோம்டா கண்ணா, பாட்டி இனிமே நம்ம கூடவே இருக்கப் போறாங்க!’’

‘‘ஹை’’ என்று ஒரு எவ்வு எவ்வி நம்ம பொடிப்பயல் முன் ஸீட்டுக்குத் தாவுகிறான். எட்டி, ஸ்ட்டீரியங்கைப் பற்றி, நீளமாய் ஒரு ஹரன் ஒலித்து, தன்னுடைய குதூகலத்தை வெளிப்படுத்துகிறான்.

‘‘டாடி, இனிமே நோ மதர்ஸ்டே, நோ ஃபாதர்ஸ் டே!’’

இடது கையால் என் மகனை இழுத்து என்னோடு இணைத்துக் கொள்கிறேன்.

ஜெரோம்.

பாளையங்கோட்டை லயோலா கான்வென்ட்டில் நாலாங்ளாஸ் படித்த போது என்னுடைய ஆஸ்தான சிநேகிதன். ஹோம் ஒர்க் செய்யாமல் பெஞ்ச் மேலே ஏறி நின்ற போது எனக்கு கம்பெனி கொடுத்தவன்!

எத்தனை வருஷமாச்சு இவனைப் பார்த்து! பள்ளிக் கூட நாட்களுக்குப் பிறகு இப்போதுதான் பார்க்கிறேன் இவனை. மனைவியோடு வந்திருக்கிறான், என்னைப் போலவே.

நான் அடையாளங் கண்டு கொண்டேன். அதேபோல இவன் என்னை அடையாளங் கண்டு கொள்கிறானா என்று வேடிக்கை பார்க்க வேண்டும் என்கிற குறுகுறுப்போடு அவனை சமீபித்த போது, அவனுடைய பான்ட் பாக்கெட்டிலிருந்து எட்டிப் பார்த்த ஸ்டெதாஸ்கோப்பைப் பார்த்துப் பின்வாங்கினேன்.

ஜெரோம் இப்போது ஒரு டாக்டர். நான்? சாமான்யமான ஒரு க்ளார்க்.

வேண்டாம். இந்தப் பரிதாபமான க்ளார்க் மூஞ்சியை அந்த டாக்டரிடம் காட்ட வேண்டாம்.
குட் பய் நண்பனே.

அந்தக் காம்ப்ளக்ஸிலிருந்து வெளியேறுகிற போது இவள் விலாவில் இடித்தாள். "அந்த டாக்டரோட போனாளே அவளப் பாத்தீங்களா?"

டாக்டரையே பார்க்காமல் நான் ஜகா வாங்கிக் கொண்டிருக்கிற போது, உடன் போகிறவளை நான் ஏன் பார்க்கப் போகிறேன்!

"அவர் சம்சாரமாயிருக்கும், அதுக்கென்ன இப்ப?" என்று ஒப்புக்குச் சொல்லி வைத்தேன்.

"அவ என்னோட க்ளாஸ்மேட்டுங்க" என்றாள் இவள்.

"நா காலேஜ் ஃபஸ்ட். அவ பாவம் ஃபெயிலாய்ட்டா. இன்ஃபீரியாரிட்டி காம்ப்ளக்ஸ் இன்னும் அவளுக்குப் போகவே போகல பாருங்க. என்னைப் பாத்தும் பாக்காத மாதிரி போறா. இத்தனை வருஷங்கழிச்சிப் பாக்கறோம், ஒரு ஹலோ சொல்ல மாட்டாளா? என்ன மோசமான ஒலகங்க இது!"

(நன்றி : ஆனந்த விகடன், "அவன் அவள் அவர்கள்", 03.10.2004)

கார்த்தால கண்ணு முழிக்கறச்ச மணி பதினொண்ணரை. பதினொண்ணரை கார்த்தால சேர்த்தியா மதியத்துல சேர்த்தியா?

அஞ்சரை மணிக்கி எழுந்துண்டு, மெரினாவுல ஒரு டிரைவ் போய் வந்து எக்ஸஸ்ஸைஸ் பண்ணிக் குளிச்சிட்டு அந்த நாளை ஸ்டார்ட் பண்ணி, நைட் பத்துப் பதினொண்ணு வரைக்கும் பம்பரமாய் சுத்திண்டிருந்த காலமெல்லாம் மலையேறிடுத்து.

கார்த்தால ஒம்போதிலயிருந்து நைட் ஒம்போது வரைக்கும் நம்மக் கடையிலதான் வாசம். நடுவுல நடுவுல வேற ஆக்ட்டிவிட்டீஸ். வியாபாரிகள் சங்கத்துல தீவிர உறுப்பினர். ரோட்டரி க்ளப் செக்ரட்ரி. ஃபில்ம் ஸென்சார் போர்டுல மெம்பர். ஹிண்டு லெட்டர்ஸ் ட்டு எடிட்டர்ஸ்ல நறுக் நறுக்னு வாரத்துக்கு ரெண்டு லெட்டர். அதைவிட முக்கியம், மாசத்துக்கொரு தமிழ்ப்பத்திரிகைல மாசத்துக்கொரு சிறுகதை.

புனைப்பெயர்— பீபிஜான்.

இதென்ன சாமி பீபிஜான்? சம்மந்தமேயில்லாம இருக்கே! அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் அநியாயமா முடிச்சுப் போடறேளே சாமீன்னு கேட்பேள். தெரியும். போகப் போக நீங்களே தெரிஞ்சிப்பேள்.

மேலே வாசியுங்கோ.

எப்படீன்னா இத்தனை பிஸியா இருந்துண்டு ராத்திரியும் ஃப்ரஷ்ஷா, ஆக்ட்டிவ்வா இருக்கேள்னு சரஸ்வதியே சமயத்துல ஆச்சர்யப்பட்டுப் போவா. ஆக்டிவ்வான்னு உச்சரிக்க அவளுக்கு வெக்கம் வேற வந்துரும். ஆவொ ஆச்சர்யப்பட்டது ஒக்கே. வேற யார் யார் ஆச்சர்யப் பட்டாளோ, எவா, எவா திருஷ்டி போட்டாளோ, பதினைஞ்சு வருஷ பிஸினஸ் அஞ்சே மாசத்துல அஸ்தமிச்சுடுத்து.

பிராமணாளுக்கு எதுக்குங்காணும் பிஸினஸ், இதெல்லாம் நாடார்ஸ், செட்டியார் கம்யூனிட்டிக்குத் தானே சரியா வரும்னுட்டு இப்ப ஒரு காமென்ட். இதெல்லாம் நா நல்லா இருக்கச்ச இவா சொல்லலை. சொல்லவும் மாட்டா. இவாள்ளாம் பூனை மெலிஞ்சுடுத்துன்னா கொண்டாட்டம் போடற எலிகள்.

அஞ்சு வருஷத்துக்கு முந்தி செங்கல் செங்கலாய்ப் பாத்துக் கட்டின வீடு. அதைப் பாங்க்ல வச்சு வாங்கின கடனுக்கு வட்டி ஏறிண்டே போறது. வாரத்துக்கொரு வாட்டி அந்த லேடி மானேஜர் ஃபோன் பண்றா. எப்படியோ சமாளிச்சிண்டிருக்கேன்.

போன வாரம் போன் பண்றச்ச சித்த வருத்தப்பட்டுப் பேசினா. ‘‘சார், ஸென்ட்ரல் ஆபீஸ்லருந்து ப்ரஷர் குடுக்கறா. இன்ட்ரஸ்ட் மட்டுமாவது அப்பப்ப ஸெட்டில் பண்ணிண் டிருந்தேள்னா, என் பொஸிஷன் ஸேபாயிருக்கும்.’’

‘‘அது கரெக்ட்தான் மேடம், என் பொஸிஷன் இன்னும் ஸேபாகலியே, என்ன பண்ணச் சொல்றேள்! ச்சப்பர் பாட்கேன்னுட்டு ஒரு ப்ரோக்ராம் ஸோனி டிவில வக்கிறா பாத்திருக்கேளா? கூரையப் பிச்சுண்டு கொட்டுன்னு அர்த்தம். அது மாதிரிக் கூரையப் பொத்துண்டு எதாச்சும் கரன்ஸிக் கட்டு எம் மடியில வந்து விழுந்தாத்தான் உண்டு. அதுக்குத்தான் பகவானை வேண்டிண்டுருக்கேன்.’’

‘‘என்னோட சங்கடம் புரியாம தமாஷ் பண்றேள். சார் நீங்க தப்பா நினைக்கலைன்னா நா ஒரு ஸஜஷன் சொல்லட்டுமா?.’’

‘‘சம்மந்தமில்லாதவாள்ளாம் சொல்றா. நீங்க ரைட் இருக்கறவா சொன்னா என்ன. சொல்லுங்கோ.’’

‘‘வந்து... ஒங்கக் காரை இன்னும் வச்சிண்டிருக்கேளா, வித்துட்டேளா?’’

‘‘எதுக்குக் கேக்கறேள்?’’

‘‘இல்ல... நீங்க இப்ப ஸிங்கிள் மேன். ஒங்களுக்கு கார் அதிகம் தேவைப்படாது. அதை டிஸ்ப்போஸ் பண்ணிட் டேள்னா இந்த இன்ட்ரஸ்ட்டை அடைச்சுரலாம்.’’

‘‘ஓஹோ...’’

‘‘என்ன சார், தப்பா எடுத்துண்டுட்டேளா?’’

‘‘நோ, நோ, ஒரு க்ரிட்டிக்கல் பொஸிஷன்ல இருந்துண்டு இவ்வளவு டீஸன்ட்டா ஒரு டிஃபால்ட்டர்ட்ட நீங்க பேசறதே பெரிய விஷயம். நேக்கு இது தோணவே யில்லை பார்த்தேளா! கன்ஸிடர் பண்றேன் மேடம். நீங்களும், ஒங்க க்ளையன்ட் யாராச்சும் ஸெகண்ட் ஹாண்ட் மாருதி வாங்கற ஐடியால இருக்கான்னு தெரிஞ்சா சொல்லுங்கோ.’’

நேக்கு ஒண்ணும் இது தோணாம இல்லை. பிஸினஸ் போயிடுத்து. வீடு கிட்டத்தட்ட போன மாதிரிதான். ஸெல் ஃபோன் பேச்சு மூச்சில்லாத ஒரு மூலையில கெடக்கறது. நோ மோர் இன் ஸென்சார் போர்டு. பந்தாவாப் பாக்கெட்ல வச்சுண்டு அலஞ்ச அமெரிக்கன் எக்ஸ்ப்ரஸ் க்ரெடிட் கார்டை ஸரண்டர் பண்ணச் சொல்லி நோட்டீஸ் வந்து அவமானப் பட்டாயிடுத்து.
மிஞ்சியிருக்கிறது ரோட்டரி க்ளப்பும் இந்தக் காரும்தான். ரெண்டும் ஒன்னோட ஒண்ணு கனக்ஷன் உள்ளது. ரோட்டரி மீட்டிங்குக்குக் கார்ல போய் எறங்கினாத்தான் மதிப்பா இருக்கும்!

சரஸ்வதி ஒருநாள் ஒரு கம்ப்ளய்ன்ட்டோட வந்தா. ‘‘பிஸினஸ் லாஸ் ஆகி ஒங்க ஹஸ்பண்ட் கடைய க்ளோஸ் பண்ணிட்டாராமேன்னு ரோட்டரி ஆன்ஸ் நைட்ல லேடீஸெல்லாம் கேக்கறா. அவாளையெல்லாம் ஃபேஸ் பண்றதுக்கே நேக்கு ரொம்ப சங்கடமாயிருக்குன்னா. நேத்திக்கிக்கூட ரொட்டேரியன் விஸ்வநாதனோட மிஸஸ் ஃபோன் பண்ணி துக்கம் விசாரிக்கிறா. மெட்ராஸ்ல இருக்கவே நேக்குப் பிடிக்கலைன்னா. நா நம்ம உமாட்ட போயிடறேனே.’’

‘‘எங்க, அமெரிக்காவுக்கா! அமிஞ்சிக்கரைக்கிப் போற மாதிரி சர்வசாதாரணமாச் சொல்றாய்?’’

‘‘கஷ்டமொண்ணும் இல்லைன்னா, கலெக்ட் கால் போட்டு ஏற்கனவே உமாட்ட பேசிட்டேன். ஸ்பான்ஸர்ஷிப், டிக்கட் எல்லாம் அனுப்பறேன்னிருக்கா. நாம இங்கே யு.எஸ். எம்பஸில போய் விஸா எடுக்கணும்.’’

யு எஸ் விஸா! அதுக்கு என்ன ஒரு ரஷ்!

அதிகாலை நாலரை மணிக்குப்போய் காத்துண்டிருந்து டோக்கன் வாங்கி க்யூல கால்கடுக்க நின்னுட்டிருந்து அல்லோகோலப்பட்டு, போலீஸ்காரன்கிட்ட திட்டு வாங்கி, ஸெக்யூரிட்டிச் செக்ல அவஸ்தைப்பட்டு, இவாள்ளாம் அமெரிக்காவுக்குப் போய்த்தான் ஆகணுமான்னு தோணித்து. கூடவே, இந்த ஷார்ட் ஸ்டோரி ரைட்டருக்கு ஒரு கவிதையும் தோணித்து.

எந்தப் பத்திரிகைக்கும் அனுப்பலை. சும்மா ஒரு ஆத்ம திருப்திக்கு எழுதி வச்சிண்டேன். இப்பத்தான் ரிலீஸ் பண்றேன். நன்னா வந்திருக்கான்னு சொல்லுங்கோ.

அதிகாலையில் ஆவின் க்யூ
அதன் பிறகுக் கார்ப்பரேஷன் டாங்க்கரின் பின்னால்
வால்போலக் குடங்களின் அணிவகுப்பு
எட்டு மணி பஸ்டாப்பில்
கும்பல் கும்பலாய்க் கலர்க் கலராய் க்யூ
பத்து மணி ஷோவுக்கு ஒன்பதுக்கே த்யேட்டரில்
வயிற்றுப் பசியற்றவரின் வர்க்க பேதமில்லா க்யூ
சர்க்கரைக்கும் மண்ணெண்ணைக்கும்
ரேஷன் கடையில்
வறுமைக்கோடு மாதிரி நீளமாய் ஒரு க்யூ
பட்ஜெட்டுக்கு முந்தின நாள்
பெட்ரோல் பங்க் நிரம்பி வழிய
திமிறிக் கொண்டொரு வாகன க்யூ
இத்தனையும் போதாதென்று
வெயிலிலும் மழையிலும் அதிகாலைப் பனியிலும்
புடவை சுரிதாரிலும் ஜீன்ஸ் பான்ட் ஷர்ட்டிலும்
அண்ணா மேம்பால அடிவாரத்தில்
அநியாயத்துக்கு ஒரு க்யூ
அமெரிக்கா போவதற்கு

கார் போயிடுத்துன்னா தொட்டுக்கோ தொடச்சிக்கோன்னு இருக்கற ரோட்டரி க்ளப் டச்சும் விட்டுப் போயிடும். என்னோட கடேசி ஸ்டேட்டஸ் ஸிம்பல் ரெண்டும் கழண்டுண்டுரும்.

தாடையைத் தடவித்தடவிப் பாத்து மொழு மொழுன்னு டெய்லி ஷேவ் பண்ணிண்ட காலமெல்லாம் காலாவதியாகிப் போய். இப்பல்லாம் சனிக்கிழமை ரோட்டரி மீட்டிங்குக்குக் கிளம்பறச்ச ஒரு ஷேவ், நடுவுல செவ்வாயோ, புதனோ ஒரு ஷேவ்னு ஆயிடுத்து.

இன்னிக்கி மன்டே, ஷேவிங் டே இல்லை. ஆனாலும், ஒரு விசேஷமான நாள்ங்கறதால பண்ணிக்கலாம். விசேஷம்னா, சந்தோஷமான விசேஷம் இல்லை. சோகமான விசேஷம்.

இந்தக் கார் என்னை விட்டுப் பிரியப் போற நாள்.

பாங்க்ல அந்த லேடி மானேஜர் படா சுறுசுறுப்பு. கார் வாங்கற க்ளையன்ட் இருந்தாச் சொல்லுங்கோன்னு சொல்லி நா வாயைக்கூட சரியா மூடலை. அடுத்த நாளே, மஞ்சுளா மேடம் அனுப்பிச்சாங்கோன்னுட்டு மெக்கானிக் சகிதமா ஒரு கார் புரோக்கர் ஆஜர். எம்பத்தேழு மாடல், ஸெகண்ட் ஓனர், நாப்பத்தஞ்சு ரூவாக்கித்தான் சார் போகும்னான்.

இந்தக் கார் ஸ்டீரியோவே பத்தாயிரம் பெறுமேடா அம்பி. பதினாலாயிரம் குடுத்து (அமெரிக்கன் எக்ஸ்ப்ரஸ் கார்டுல!) போன வருஷந்தான் வாங்கினதுன்னு சொல்லிக் கன்வின்ஸ் பண்ணி, ஒரு வழியா அம்பதுக்கு ஏறி வந்தான். இந்த ஸ்டீரியோவைக் கார்ல ஃபிக்ஸ் பண்ணப் பறந்தான். நேக்குத் தெரிஞ்சது மெட்ராஸ் ரேடியோல ரெண்டு எஃப் எம் சானல் இருக்குன்னுட்டு.

அதுல ஒரு சானல் இருபத்தினாலு மணி நேரமும் பாடிண்டே இருக்கும்னுட்டு. மிட்நைட் ஒரு மணிக்கும் மூணு மணிக்கும் அதுல நேக்குப் புடிச்ச பழைய சினிமாப் பாட்டாப் போடுவான்னுட்டு.

கார்த்தால மெரினாவுக்கு டிரைவ் போய்ட்டுத் திரும்பி வரச்ச ஆறரை ட்டு ஏழு என்றும் இனியவைன்னுட்டு சசீலா டி.எம்.எஸ். பாட்டாய்ப் போடுவா. ஆஹா அதைக் கேட்டுண்டே காரோட்டறது தனி சொகம்!

இப்ப, கடையை க்ளோஸ் பண்ணி, சரஸ்வதியும் அமெரிக்கா போனப்புறம், தூக்கம் வராத ராத்திரிகள்ள கராஜத் தொறந்து காருக்குள்ளாற உக்கார்ந்துண்டு மிட்நைட் ஸாங்ஸ் கேட்டுண்டே கவலைகளை சித்த நேரம் மறந்திருந்த என்னோட ராவுகள் நிறைய.

மணி ரெண்டு. நாலு மணிக்கு புரோக்கர் பார்ட்டியக் கூட்டிண்டு வருவான்.

லேட்டா எழுந்துக்கறதுல ஒரு சவுகரியம் உண்டு. டிஃபன் செலவு மிச்சம். ஸ்ட்ரெய்ட்டா லஞ்சுக்குப் போயிடலா மில்லியோ. இன்னிக்கி லஞ்ச்சும் கட். சாப்பிடப் பிடிக்கலை.

இதே போல சாப்பிடப் பிடிக்காத ஒரு சந்தர்ப்பம் ரெண்டு வருஷத்துக்கு முந்தி வந்தது ஞாபகத்துக்கு வர்றது.

அது, உமாட்டயிருந்து, அமெரிக்காலேர்ந்து அந்த முக்கியமான லெட்டர் வந்த தினம். நமஸ்காரம், உபயக்ஷேமம், பல்லவி அனுபல்லவி சம்பரதாய மெல்லாம் முடிஞ்சு, சரணத்துக்கு வந்தா, ஒரு பிரேக்கிங் ந்யூஸ்...

... இப்ப நான் எழுதப் போற விஷயத்தை வாசிச்சு, அப்பா, அம்மா, ப்ளீஸ் ஷாக் ஆயிடாதேங்கோ. ஸஸ்பென்ஸ் வைக்காம நேரா விஷயத்துக்கு வந்துடறேன். அப்பா, அம்மா, நான் கல்யாணம் பண்ணின்டேன். உடனே நான் ஒரு வெள்ளை அமெரிக்கனையோ, கறுப்பு அமெரிக்கனையோ கட்டிண்டேன்னு நினைச்சுண்டுடாதேங்கோ. இவர் இந்தியர்தான். ஷ்யாம். என்னோட ரிஸர்ச் பண்ணிண்டிருக்கிறவர். அப்பா அம்மா இல்லை. சித்தப்பா ஒருத்தர் கல்கத்தால இருக்காராம். பெரிய ஜீனியஸ்ப்பா இவர். சொந்த டாலன்ட்ல ஸ்காலர்ஷிப் வாங்கி ஸ்டேட்ஸ்க்கு வந்தவர். நேக்கு அவர் பெங்காலி கத்துத்தறார். நான் அவருக்கு தமிழ் கத்துத்தறேன். அஃப்கோர்ஸ் இப்ப நாங்க இங்கிலீஷ்லதான் பேசிக்கிறோம். அவர் என்ன காஸ்ட்னு நான் கேட்டுக்கலை. அது அவசியம்னும் தோணலை. நாங்க ரெண்டு பேருமே இண்டியன்ஸ். அது போறுமில்லையோ அப்பா? அப்பா, உங்களை நேக்குத் தெரியும். நீங்க இதைப்பத்தி அலட்டிக்க மாட்டேள். அம்மாதான் இதைப்பத்தி அப்ஸெட் ஆயிருப்பா. எனக்காக அம்மாவை நீங்க சமாதானப் படுத்துங்கோ அப்பா...

சொல்லிக்காமப் பண்ணிண்டாளேங்கற வருத்தம் லேசா இருந்தாலும், உமா சொன்ன மாதிரியே நா ஒண்ணும் அலட்டிக்கலை. இருந்தாலும், என்னமோ ஆத்தோட இருந்த பொண்ணு திடீர்னு போய்ட்ட மாதிரி ஒரு டெம்ப்பரரி தவிப்பு. அதான் அன்னிக்கி சாப்பிடப் பிடிக்கலை. சரஸ்வதி அன்னிக்கி சமையலே செய்யலைங்கறது வேற விஷயம்!

நார்மலானப்புறம் சரஸ்வதி என் காது படச் சொன்னா, “நீங்க செஞ்ச வேலையத்தான உங்க பொண்ணும் செய்வா.”

“என்ன சொல்றாய், நாம ஒண்ணும் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிரலியே?”

“அந்த இழவை நா செய்யலை. நீங்க செஞ்சேளோல்லியோ? ஒங்க பீபி ஜானோட?”

சுண்டி விட்டுட்டாள். மனசுல அடி மட்டத்துல படிஞ்சிருந்த ஞாபகங்களையெல்லாம் சுண்டி விட்டுட்டாள்.

“சரஸ்வதி ப்ளீஸ். அதையெல்லாம் ஞாபகப்படுத்தி என்னை ஹிம்சிக்கிறதுல நோக்கு என்ன லாபம். நாந்தான் ஃபஸ்ட் நைட்லயே எல்லாத்தையும் கன்ஃபஸ் பண்ணிட்டேனோல்லியோ?”

“நீங்களாக் கன்ஃபஸ் பண்ணப் போய்த்தான், அவொ பேரையே புனைப்பெயரா வச்சிக்க உங்களுக்கு நா பர்மிஷன் குடுத்தேனாக்கும்.”

“நீ பர்மிஷன் குடுக்கலைன்னாலும் நா அவொ பேர்லதான் எழுதிண்டிருந்திருப்பேன்.”

“எழுதுவேள் எழுதுவேள். நீங்க அப்படிச் செஞ்சிருந்தா நா எப்பவோ எங்க பொறந்தாத்துக்குப் போயிருப்பேன். உமா நமக்குப் பொறந்தேயிருக்க மாட்டா தெரியுமோ?”

“அதை விடேன் சரஸ்வதி, என்னத்துக்கு இப்பப் பழைய பஞ்சாங்கத்தப் போட்டுப் பொரட்டிண்டுருக்க?”

“சரின்னா, பொரட்டலை. பட் ஒன் லாஸ்ட் க்வெஸ்ச்சன் ப்ளீஸ். போயும் போயும் ஒரு முஸ்லிம் பொண்ணையா நீங்க லவ் பண்ணேள்? ஒங்க பர்ஸனாலிட்டிக்கி ஒரு நல்ல ஐயங்கார்ப் பொண்ணு கெடைக்கலியா சார்?”

சரஸ்வதி, நோக்கு என்னடி தெரியும் லவ்வைப் பத்தி.

ஜாதி மதம் பாஷை எல்லாம் பார்த்தா காதல் வரும்!

முஸ்லிம் பொண்ணுதான் கெடைச்சாளான்னு கேக்கறாய்.

பொண்ணா அவொ?

அப்ஸரஸ்!

சிகப்புன்னா சிகப்பு அப்படியரு சிகப்பு.

இந்த உர்து ஸ்பீக்கிங் முஸ்லிம் பொண்ணுங்களே பொதுவா செக்கச் செவேல்னுதான் இருப்பா தெரியுமோ? அதுலயும் என்னோட பீபிஜான் ஒரு ஸ்பெஷல் க்வாலிட்டியாக்கும்!

அவளோட ஒரு கண் பார்வைக்கி அவனவன் ஏங்கிண்டிருக்க, இந்த சாமான்ய சீனிவாசன்ட்ட என்னத்தக் கண்டு அவொ என்னைப் பார்த்து அந்தச் சிரிப்பு சிரிச்சா?

அவொ பேர் நேக்கும், என் பேர் அவளுக்கும் தெரியாத ஆரம்ப காலத்துல, நெரிசலான பஸ்ஸுக்குள்ள, கண்டம் விட்டுக் கண்டம் பாயற ஏவுகணை மாதிரி பல தடைகளையும் தாண்டி என்னமாப் பார்வைகளைப் பரிமாறிண்டோம்!

அறிமுகம் ஆனப்புறம், ஜோடியா ஒரு சிவாஜி படம் போனோமே. என்ன படம் அது? ராமன் எத்தனை ராமனடி.

அந்த த்யேட்டர் இருட்டுல கூட. அந்த ஆபத்தான நெருக்கத்துல கூட ஒருத்தரையருத்தர் தொட்டுப் பார்த்துக்கணும்னு தோணலை பார். அதாண்டி சரஸ்வதி எங்கக் காதலோட ஸ்பெஷாலிட்டி.

....என்னவோ நடந்தது நடப்பு

அது ஏதோ நினைவிலும் இருக்கு....

என்னோட கன்ஃபஷன்ஸ்ல இதையெல்லாம் ஒன்ட்ட சொல்லலை சரஸ்வதி. சொல்ல முடியுமோ, சொன்னாத்தான் நோக்குப் புரியுமோ!

ஏதோ நோக்கு விஸ்வாசமாயிருக்கணும்னு தோணித்து. நா விசுவாசமா இருக்கறதா உன்னை நம்ப வைக்கணும்னும் தோணித்து.

கன்ஃபஸ் பண்ணினேன். கன்ஃபஷனுக்கும் ஒரு லிமிட் இருகோல்லியோ!

ஒரு நாள் ராத்திரி பெட்ரூம்ல சம்மந்தா சம்மந்தமில்லாம ஒரு குபீர்ச் சிரிப்பு.

அப்படி என்ன சிரிப்பு சரஸ்வதீன்னு கேட்டதுக்கு அவொ சொல்லுவா, ‘‘ஒன்னுமில்லைன்னா, முஸ்லிம்கள்ள ஆண்பிள்ளைக்கு ஸர்க்கம்ஸிஷன்னுட்டு ஒண்ணு பண்ணுவாளாமே, நீங்க அவளைக் கட்டிண்டு முஸ்லிமாயிருந்தேள்ன்னா ஒங்களுக்கும் அதைப் பண்ணி விட்டிருப்பாளோல்லியோ அதை நெனைச்சேன், சிரிப்பு வந்துடுத்து.’’

அதுக்கும் நா ரெடியாத்தானிருந்தேன்னு சரஸ்வதி கிட்ட சொல்லலை. அந்த தேவதையை நேக்கு சொந்தமாக்கிக்க நா எதுக்கும் ரெடியாயிருந்தேன். ஆனா எங்கேயோ வழுக்கிடுத்து.

எங்கே? எப்படி?

வேணாம் அதைக் கிளறினா வேதனைதான்.

பகவானே, எத்தனை வருஷமாயிடுத்து!

இப்ப எங்கேயிருப்பா? எப்படியிருப்பா?

அவளோட ஞாபகங்கள் அப்பப்ப தலைதூக்கறச்ச மனசுல ஒரு கனமான சுகம். அல்லது ஒரு சுகமான கனம். மத்தபடி அவளைப் பாப்போம்ங்கற நம்பிக்கையெல்லாம் நேக்கு இல்லை.

ஆனா, அவொ நினைச்சிருந்தா என்னை ரீச் பண்ணிண்டிருக்கலாம். அவொ பேர்ல கதையெழுதறவன் நான் தானான்று செக் பண்றது அவளுக்கொண்ணும் சிரமமில்லை. அவொ ட்ரை பண்ணியிருந்தா என்னை ட்ரேஸ் பண்ணியிருக்கலாம்.

ஏன் பண்ணலை? பரவாயில்லை. எங்கேயிருந்தாலும் நன்னாயிருக்கணும்.

மணி மூணு அம்பத்தஞ்சு. ஆர்ஸி புக்கெல்லாம் எடுத்து ரெடியா வச்சுண்டா டைம் ஸேவ் ஆகும்.

வால் க்ளாக் நாலு அடிக்கிறது.

அதோட பஸ்ஸரும் அடிக்கிறது.

கதவைத் தொறந்து பார்த்தா, அந்த புரோக்கரும், கூட ஒரு மீசைக்கார ஆளும். பார்ட்டி.

“மிஸ்டர் ஸ்ரீநிவாசன், ஐ'ம் லெஃப்டினன்ட் கர்னல் ஹரி. உங்கக் காரைக் கடத்திட்டுப் போக வந்திருக்கேன்.” விசாலமான மலையாள மீசைக்குள்ளார ஒரு ராணுவச் சிரிப்பு.

“கரெக்ட்டா நாலு மணிக்கி வந்துட்டீங்க.”

“மிலிட்டரி பங்ச்சுவாலிட்டி.” திரும்பவும் சிரிப்பு.

ரொம்ப சிக்கனமா சம்பரதாயமெல்லாம் நடந்து முடியறது. கரன்ஸியும் கார் சாவியும் கை மாற்றது. அம்பதா யிரத்துக்கும் ஒரே ஐநூறு ரூபாக் கட்டு. ஸ்டீரியோ ஸ்விட்ச் எதுன்னு கேக்கறார். குனிஞ்சு ஸ்விட்ச்சைக் காட்டற சாக்கில யாரும் பாக்க முடியாத மறைவில கார் ஸ்டீரிங்ல உதட்டை வச்சு ஆழமா ஒரு முத்தங் குடுக்கறேன்.

எட்டு வருஷமா நா மட்டுமே உட்காந்த டிரைவர் ஸீட்ல இதோ இன்னொருத்தர் உரிமையோட உக்கார்றார். ஸ்டார்ட் செய்றார், கியர் ச்சேஞ்ச் பண்றார், என்னைப் பார்த்துக் கையசைக்கிறார்.

கார் போயிடுத்து.

சித்த நேரம் அந்த டைரக்ஷனையே பாத்துண்டு நிக்கிறேன்.

அப்புறம் உள்ளார வந்து கவர்லயிருந்து அந்த ஐநூறு ரூபாக் கட்டையெடுத்துப் பாக்கறேன். திரும்பவும் கவர்ல போட்டு ட்யூப் கம் வச்சுக் கவரை ஒட்டறேன். கார்த்தால முதல் வேலையா பாங்குக்குப் போய் இந்தக் கவரைக்குடுத்து மிஸஸ் மஞ்சுளாவைக் குளிரப் பண்ணனும்.

இதென்ன திரும்பவும் பஸ்ஸர் அடிக்கிறது!

வண்டி ஏதும் மக்கர் பண்ணிருச்சா, ஆள் திரும்பி வந்துட்டானா!

கதவைத் திறந்தா, எதிர்க்க புரோக்கரோ, பார்ட்டியோ இல்லை.

ஒரு பொண்ணு.
காலேஜ் பொண்ணுங்கற மாதிரியான பொண்ணு.
சிகப்பா, சாந்தமா துப்பட்டாவாலத் தலையக் கவர் பண்ணிண்டு.
நெத்தியில பொட்டு இல்லை.
முஸ்லிம் பொண்ணு?
மனசுக்குள்ள ஒரு குறுகுறுப்பு ஷேப் எடுக்கறது.

“யெஸ்?”

“மிஸ்டர் ஸ்ரீநிவாசன்?”

“யெஸ்?”

இந்த ரெண்டாவது எஸ்ஸை நா உச்சரிச்சவொடனே, பூப்பூத்தது மாதிரி இந்தப் பொண்ணு முகத்துல சந்தோஷம்.

“அங்க்கிள் நா உள்ள வரலாமா?”

“யூ ஆர் மோஸ்ட் வெல்கம்.”

எதிர்த்த எதிர்த்த ஸோஃபால உட்கார்றோம்.

“அங்க்கிள், என் பேர் யாஸ்மின்.”

“முஸ்லிம் பேர். குறுகுறுப்பு கூடிண்டே போறது.”

“என்னை ஒங்களுக்குத் தெரியாது அங்க்கிள். ஆனா எங்க அம்மாவை ஒங்களுக்கு நல்லாவே தெரியும்.”

பரீக்ஷை ரிஸல்ட்டைப் பேப்பர்ல பாக்கப்போற ஸ்டூடன்ட் மாதிரி மனசு டிரம்ஸ் அடிக்கிறது.
அந்தப் படபடப்பை ஒதுக்கி ஓவர்டேக் பண்ணிண்டு உதடு முணுமுணுக்கிறது:

“பீபி ஜான்?”

“நீங்க கண்டு புடிச்சிருவீங்கன்னு தெரியும் அங்க்கிள்! அம்மா சொன்னது கரெக்ட்!”
உணர்ச்சிங்க ஜலரூபத்துல கண்ணு ரெண்டுலயும் ரெடியா நிக்கிறது.
எட்டி, அவொ கை ரெண்டையும் புடிச்சிக்கறேன்.

“பீபி ஜான்ஸ் டாட்டர்? என்னால நம்பவே முடியலம்மா!”

“கண்ணத் தொடச்சிக்கிங்க அங்க்கிள். நீங்க இப்படித்தான் ரியாக்ட் பண்ணுவீங்கன்னு அப்படியே அம்மா சொன்னாங்க. வீட்ல வேற யாருமே இல்லியா அங்க்கிள்?”

“இல்லம்மா, ஒய்ஃப் டாட்டர்ட்ட போயிருக்கா, அமெரிக்காவுக்கு. சரி அத விடு. அம்மா எங்க இருக்காங்க, எப்படியிருக்காங்க, சொல்லு, சொல்லு.”

“ஏதோ இருக்காங்க அங்க்கிள், நாங்க பெங்களூர்ல இருக்கோம்.”

“தமிழ் நல்லா பேசிறியே?”

“கன்டோன்மென்ட் ஏரியா தமிழ்தானே அங்க்கிள்? ஆனா தமிழ் எனக்குப் பேச மட்டுந்தான் வரும். எழுத்துக் கூட்டிக் கூட்டிக் கொஞ்சம் படிப்பேன். நீங்க கூட உர்து பேசுவீங்கன்னு அம்மா சொன்னாங்க?”

“ஒங்கம்மா சொல்லிக் குடுத்ததுதான். எத்தனை வருஷமாச்சு! அது ஒரு காலம்! இப்ப டச் விட்டுப் போச்சு. அது சரி, என்னைப் பத்தி ஒங்கம்மா வேற என்னம்மா சொன்னாங்க?”

“எனக்கு எல்லாமே தெரியும் அங்க்கிள். எங்கம்மாவுக்கு நா ஒன்லி டாட்டர் மட்டுமில்ல, ஃப்ரண்டுங்கூட. அதுவும், அப்பா செத்துப் போனதுக்கப்புறம் நாங்க ரொம்ப க்ளோஸ்.”

“அடடே, அப்பா இல்லியாம்மா இப்ப!”

“அஞ்சு வருஷம் ஆச்சி அங்க்கிள். வயசாச்சில்ல. எங்கம்மா அப்பாவுக்கு ஸெகண்ட் ஒய்ஃப் தெரியுமா? நாங்கூட ரொம்ப லேட்டாத்தான் பொறந்தேனாம். அம்மாவோட சோகக்கதையைச் சொன்னா நீங்க ரொம்ப வருத்தப்படுவீங்க அங்க்கிள். அது வேணாம். ஒங்களை எப்படிக் கண்டுப்பிடிச்சேன்னு சொல்லவா?”

“ஷூட் பி இன்ட்ரஸ்ட்டிங். சொல்லு சொல்லு.”

“அம்மா, ஷெல்ஃப்ல பழைய தமிழ்ப் பத்திரிகை யெல்லாம் நிறைய அடுக்கி வச்சிருப்பாங்க. எனக்குத்தான் தமிழ் படிக்கத் தெரியாதே. ஸோ, அதப்பத்திக் கண்டுக்கல. ஒரு நாள் அம்மா அதுல ஒரு மாகஸீனை எடுத்துப் பிரிச்சுப் பாத்துட்டிருக்காங்க, கன்னங்கள்ள கண்ணீர் வழியுது. எனக்கு ஒண்ணும் புரியல, என்னை அம்மா பாக்கல. நா பின்னாடி போய் படக்குன்னு அந்தப் புஸ்தகத்தப் புடுங்கிட்டேன். ரெண்டு கையினாலயும் மொகத்த மூடிகிட்டு அம்மா தேம்பித் தேம்பி அழுறாங்க. அந்தப் புஸ்தகத்துல அம்மா பேர் ப்ரின்ட் ஆயிருக்கிற மாதிரியிருக்கு. எழுத்துக் கூட்டி வாசிச்சிப் பாத்தா, பீபி ஜான். அப்புறந்தான் அம்மா ஒங்க கதையச் சொன்னாங்க.”

“சொன்னாங்களா?”

“சொன்னாங்க அங்க்கிள். ஒங்க ரெண்டு பேர் கதயையும் சொன்னாங்க. எங்க காலேஜ்லயிருந்து மெட்ராஸ் தூர்தர்ஷன்ல ஒரு ப்ரோக்ராம் தர்றோம் அங்க்கிள். அந்த ஷூட்டிங்க்காக நாங்க ஆறு கேர்ள்ஸ் வந்தோம். ரிக்கார்டிங் ஓவர். காலைல ஒரு பத்திரிகை ஆஃபீஸ்க்கு ஃபோன் பண்ணி ஒங்க அட்ரஸை வாங்கினேன். ஈவ்னிங் நேரா வந்துட்டேன். அங்க்கிள், நீங்க எப்ப பெங்களூர் வர்றீங்க? ஒங்களப் பாத்தா அம்மா எவ்ளவு சந்தோஷப் படுவாங்க!”

“ஒங்கம்மாவப் பாக்க எனக்கு மட்டும் ஆசை இல்லியாம்மா! அது என்னோட டியூட்டி கூட. இப்ப எனக்கு டைம் சரியில்லம்மா. நா நொடிஞ்சி போய் ஒடுங்கிப்போய் உக்காந்திருக்கேன். கூடிய சீக்கிரம் பகவான் அருளால எல்லாம் சரியாயிரும். சரியானதும் ஒன்னையும் ஒங்கம்மாவையும் பாக்க வருவேன். கட்டாயம் வருவேன். இன்ஷா அல்லா.”

“அப்ப நா கௌம்பட்டா அங்க்கிள்?”

“தனியாப் போயிருவியாம்மா?”

“தனியாத்தானே வந்தேன் அங்க்கிள்?”

“நம்ம கார் இருந்திருந்தா ஒன்னை டிராப் பண்ணி யிருந்திருப்பேன். இப்ப அரை மணி நேரந்தான் ஆகுது கார் கையை விட்டுப் போய். அட, அதுகூட ஒரு நல்லதுக்குத் தான் போல. யாஸ்மின், இந்தக் கவரை அம்மாட்ட குடு.”

“என்ன அங்க்கிள் இது?”

“வாழ்க்கையில ஒங்கம்மா எவ்வளவோ கஷ்டப்பட்டிருக்காங்க, ஒங்கம்மாவுக்காக நா ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போடலை. அதை ஓரளவுக்குக் காம்ப்பன்ஸேட் பண்ற மாதிரி இது ஒரு சின்ன கிஃப்ட். பிரிச்சுப்பாக்காம பத்திரமாக் கொண்டு போ.”

“ஓக்கே அங்க்கிள், நா வறேன்.”

அவொ போறா.

என்னோட செகண்ட் டாட்டர் போறா.
நா பார்த்துண்டே நிக்கிறேன்.

என்னோட பீபி ஜானுக்கு இன்னிக்கி ஒரு சின்ன ஹெல்ப் பண்ண முடிஞ்ச திருப்தியோட அவொ போறதைப் பார்த்துண்டே நிக்கிறேன்.

சரி, பாங்க்ல இன்ட்ரஸ்ட் கட்றதுக்குன்னு காரை டிஸ்ப்போஸ் பண்ணி இந்தப் பணத்தை ஏற்பாடு பண்ணினேன். இப்ப இன்ட்ரஸ்ட் கட்ட என்ன பண்றது?

கட்டலாம், சித்த லேட்டாக் கட்டலாம்.
முழுசா இல்லாட்டியும் ஒரு சின்ன அமௌன்ட் டாச்சும் கட்டலாம்.
இந்தக் கதைக்கி ஒரு ப்ரைஸ் கிடைச்சுடுத்துன்னா பேஷாக் கட்டலாம்.

நன்றி : ஆனந்த விகடன், 28.04.2002 (காரும் காதலியும்)

தொப்பையில்லாத போலீஸ்காரரைக் கூட நீங்கள் பார்த்திருக்கலாம், மீசையில்லாதப் போலீசைப் பார்த்திருக்கிறீர்களா?

நான் பார்த்தேன்!

கோடம்பாக்கம் மேம்பாலத்தின் தொடக்கத்தில், சாலையோரமாய் நின்றிருந்த அந்தப் போலீஸ்காரரிடம் இன்னொரு விசேஷம், அவருக்குத் தொப்பை கூட இல்லை!

சிகப்பாய், பளபள முகத்தோடு வாட்டசாட்டமாய் சினிமா ஹீரோ மாதிரி & அதாவது, ஹிந்தி ஹீரோ மாதிரியான தோற்றத்திலிருந்த வித்யாசமான அந்தப் போலீஸ்காரர் கன்னாபின்னாவென்று என் கவனத்தை ஈர்த்தார். க்ளோஸ் அப்பில் அவரைப் பார்க்க வேண்டும், ரெண்டு வார்த்தை அவரோடு பேச வேண்டுமென்று ஆசை எழுந்தது.

பாலத்துக்குப் பக்கவாட்டுச் சந்தில் பாதுகாப்பாய் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு, மெல்ல அவரைச் சமீபித்தேன். உரையாடலை எப்படி ஆரம்பிப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, போலீஸ்காரர் என் பக்கம் திரும்பினார். மேலும் கீழும் என்னைப் பார்த்துவிட்டு, ''சார், இங்க நிக்கக் கூடாது. நடந்துக்கிட்டே இருங்க. ஸி எம் வர்ற நேரம்'' என்றார்.

ஆரம்பமே சரியில்லை. சரி, அதற்காக மனந்தளர்ந்து விடுவதா? ''எத்தன மணிக்கி சார் வர்றாங்க ஸி எம்?'' என்றேன்.

உன் கேள்விக்கு பதில் சொல்ல நான் கடமைப்பட்டவனில்லை என்பது போலத் திரும்பவும் என்னை ஒரு பார்வை பார்த்தார். பிறகு பார்வையைத் திருப்பிக் கொண்டார்.பலப் பல விநாடிகள் கடந்த பின்னாலும் நான் நகராமல் நின்று கொண்டிருக்க, திரும்பவும் அவர் பார்வையை என்மேல் ஓடவிட்டார்.

''ஸி எம் பத்து மணிக்கி வருவாங்க சார், இன்னும் ஒரு அவர் இருக்கு. அது வரைக்கும் நீங்க இங்கேயே நின்னுட்டிருக்கப் போறீங்களா சார்?''

''நீங்க தனியா நிக்கறீங்க, நா கம்ப்பெனி குடுக்கறேனே சார்'' வேறயொரு மாமூல் போலீஸ்காரராயிருந்தால் என்னுடைய இந்த விதண்டாவாதத்துக்கு எரிச்சலடைந்திருப்பார்.

ஆனால் இவர் ஒரு விசேஷமான போலீஸ்காரர் என்று நான் உணர்ந்ததால், இவரிடம் உரிமை எடுத்துக் கொள்ளலாம் என்று என் அந்தராத்மா சொல்லிக் கொண்டிருந்தது. நான் உணர்ந்தது சரிதான். போலீஸ்காரர் சிரித்தார்.

''எனக்குத்தான் தலையெழுத்து, ஒரு அவரா நிக்கிறேன். இன்னும் ஒரு அவரோ ரெண்டு அவரோ நின்னுதான் ஆகணும். ஒங்களுக்கென்ன சார் தலையெழுத்து? இப்ப ஏஸி வருவார் சார், மூவ் பண்ணுங்க, ப்ளீஸ்.''

நான் அசராமல் ஒரு துருப்புச் சீட்டை எடுத்து விட்டேன். ''ஒங்க ஏஸிய எனக்குத் தெரியும் சார், கவலையே படாதீங்க. என்னப் பாத்தா விஷ் பண்ணிட்டு அவர் போய்க்கினே இருப்பார்.''

இந்த முறை நான் சொன்னதை அவர் ரசித்த மாதிரியிருந்தது. கண்களில் பிரகாசம் தெரிந்தது. “வெயில்ல காயணும்னு ஒங்களுக்கும் இன்னிக்கி விதிச்சிருந்தா யார் என்ன செய்ய முடியும்! நில்லுங்க. ஜீப் ஏதும் கண்ணுல பட்டா மட்டும் கொஞ்சம் நகந்துக்குங்க சார், நல்லாயிருப்பீங்க.”

“ஒங்கள சங்கடப்படுத்த மாட்டேன். ஒண்ணுமில்ல சார், இந்த வழியா ஸ்கூட்டர்ல போய்ட்டிருந்தேனா, நீங்க கண்ணுல பட்டீங்க. தொப்பையில்லாம, மீசையில்லாம கவர்ச்சியா, ஒரு இம்போர்ட்டட் கான்ஸ்டபிள் மாதிரித் தெரிஞ்சீங்க. ஸோ, ஒங்களப் பாக்கணும், பேசணும் போல இருந்தது.”

“எக்ஸஸ்ஸைஸ் பாடி சார் இது. எல்லாக் கான்ஸ்டபிள்களும் ஆரம்பத்துல என்னப் போல ட்ரிம்மாதான் இருப்பாங்க. அப்பறம் ஒடம்ப கவனிக்காம விட்டிர்றாங்க.”

“நம்ம நாட்லதான் சார் இப்படி. பத்திரிகைல போலீஸ்காரங்கப் படம் போடற போதெல்லாம் தொப்பையத் தள்ளிக்கிட்டுத்தான் கிண்டலாப் போடறான். அப்பவும் இவங்களுக்கு ரோஷம் வர்றதில்ல பாருங்க. ஐ.பி.எஸ். அதிகாரிங்களெல்லாம் ஸ்மார்ட்டாத்தான் இருக்காங்க. இன்ஸ்பெக்டருக்குக் கீழ தான் இப்படி. அஸிஸ்ட்டன்ட் கமிஷனர் சைலேந்திரபாபு எங்க ரோட்டரி கிளப்புக்கு வந்தப்ப அவர்ட்டயே நான் இதச் சொன்னேன்.”

“நெஜம்மாவே ஏஸிய ஒங்களுக்குத் தெரியுமா சார்?”

“அட! அத வுடுங்க. இன்னிக்கி ஒரு ஸ்மார்ட்டான கான்ஸ்ட்டபிளப் பாத்தது எனக்கு ரொம்ப சந்தோஷம். இன்னொரு விஷயம், கேட்டாத் தப்பா நெனச்சுக்க மாட்டீங்களே சார். தொப்பையில்லாத வித்யாசமான கான்ஸ்டபிளா இருக்கீங்க சரி. மீசையில்லாம இன்னும் வித்யாசமான கான்ஸ்டபிளா இருக்கீங்களே?”

மீசையைப்பற்றி நான் கேட்டவுடன் அவருடைய முகத்தில் இருந்த பிரகாசம் குன்றிப் போனது.

“ஸாரி சார், நாம ரெண்டு பேரும் கிட்டத்தட்ட ஒரே வயசுதான் இருப்போம். அதனால கொஞ்சம் உரிமை எடுத்துக்கிட்டேன், ஸாரி” என்று சமாளித்தேன்.

“நீங்க கேட்டதுல ஒண்ணும் தப்பேயில்ல சார். மீசையப் பத்திச் சொன்னதும் என் தங்கச்சி ஞாபகம் வந்துருச்சு. இன்னிக்கி அவளுக்கு இஞ்ஜினியரிங் கவுன்ஸிலிங். பத்தர மணிக்கி அண்ணா யுனிவர்ஸிடில இருக்கணும். அதுக்காக இன்னிக்கி பர்மிஷன் போட்டேன். திடீர்னு பர்மிஷன் கான்ஸல் ஆயிருச்சு. போலீஸ்காரன் பொழப்பு எப்படி இருக்கு பாருங்க!”

அவருடைய வருத்தம் என்னையும் பாதித்தது. “ஸிஸ்டரக் கூட்டிட்டுப் போறதுக்கு வீட்ல வேற யாரும் இல்லியா சார்”என்று கேட்டேன். “ஒங்க அப்பா, அண்ணன் யாராவது?”

“அண்ணனெல்லாம் கெடயாது சார். நா ஒரே பையன். அப்பாவால நடமாட முடியாது. அப்பாவுக்குத் தொணையா என் சம்சாரம் வீட்ல இருக்கணும். எங்கப்பா ரயில்வே போர்ட்டரா இருந்தார். அடுத்த தலைமுறை நா போலீஸ் கான்ஸ்ட்டபிள். எனக்கு அடுத்த தலைமுறை என்னோட தங்கச்சி. அவள இஞ்ஜினியராக்கணுங்கறது என்னோட லட்சியம்.”

“ஒங்கத் தங்கச்சியும் நீங்களும் ஒரே தலைமுறைதானே சார்.”

“அப்படி இல்ல சார். சின்ன வயசுலயே அம்மா போய்ட்டாங்க. அப்பாவாயும் அம்மாவாயும் இருந்து வளத்தேன். என் தங்கச்சி எனக்குக் கொழந்த. ஒங்கள மாதிரி எனக்கும் மீசை மேல

ஆசை உண்டு. ஆனா, என் ஸிஸ்டர இஞ்ஜினியர் ஆக்கிட்டுத்தான் மீசை வச்சிக்கிறதுன்னு ஒரு சபதம் எடுத்துருக்கேன். என்ன சபதம் எடுத்து என்ன சார், என் நெலமையப் பாத்திங்களா சார்? ப்ளஸ் ட்டூ வரைக்கும் வெற்றிகரமாய் படிக்க வச்சிட்டுக் கடைசில காலேஜ் லெவல்ல கோட்ட விட்டுட்டேன். ஃபுட் பால் மாட்ச்ல ஒரு ப்ளேயர் கோல் போஸ்ட்லயிருந்து பல தடைகளக் கடந்து பந்தக் கடத்திக்கிட்டு வருவான். எதிரி கோல் போஸ்ட்டுக்குள்ள பந்த அடிக்கப் போற போது கோட்ட விட்டுருவான். அந்த மாதிரிதான் இது.''

''அப்படி இல்ல சார் இது'' என்று மறுப்புத் தெரிவித்தேன், ஒரு உறுதியான முடிவுக்கு வந்திருந்த நான்.''அந்த ப்ளேயர் பந்தக் கோட்ட விட்டுட்டதா நெனச்சிட்டிருக்கறப்ப எங்கேயிருந்தோ பாஞ்சு வருவார் ஒரு பத்தாம் நம்பர் மரடோனா. வந்து, பந்தக் கைப்பத்தி, அல்லது கால்பத்தி, டமால்னு கோல் அடிப்பார். சார், இப்ப நாந்தான் ஒங்களுக்கு மரடோனா. நீங்க சரின்னு சொல்லுங்க. அட்ரஸ் குடுங்க. நா போய் ஸிஸ்டரப் பிக்அப் பண்ணிக்கிட்டு கவுன்ஸிலிங்குக்குக் கூட்டிட்டுப் போறேன். இன்னும் ஒரு மணி நேரம் இருக்கு.''

''சார், நெஜம்மாவா சொல்றீங்க!'' என்று என் கைகளைப் பற்றிக் கொண்டார்.

''நீங்க யார்னு எனக்குத் தெரியாது, நா யார்னு ஒங்களுக்குத் தெரியாது.''

''இனிமே தெரிஞ்சுக்குவோம் சார். டைம் வேஸ்ட் பண்ணாதீங்க, அட்ரஸக் குடுங்க.''

பரபரப்போடு தன்னுடைய டைரியிலிருந்த ஒரு தாளைக் கிழிந்தார். தாளின் ஒரு பக்கத்தில் முகவரியும், மறுபக்கத்தில் தன் தங்கைக்கு ஒரு குறிப்பும் அவசரமாய் எழுதி என் கையில் வைத்துப் பொத்தியபோது அவருடைய கண்கள் ஈரத்தால் பளபளத்தன.

சுறுசுறுப்பாய் செயல்பட்டேன் நான். முகவரியை நெட்டுரு போட்டுக்கொண்டு ஸ்கூட்டரைக் கிளப்பிக் கொண்டு வீட்டைக் கண்டுபிடித்து விஷயத்தைச் சொன்னது, சோர்வாயிருந்த அந்த வீட்டு மூவர் முகத்திலும் மலர்ச்சியைத் தந்தது.

அண்ணனை எந்த நேரத்திலும் எதிர்பார்த்திருந்து, அவர் வராது நேரம் கழியக் கழியக் கலவரத்திலிருந்த தங்கை, அவருடைய குறிப்பைப் படித்துவிட்டு என்னை நோக்கிக் கை கூப்பினாள்.

''தெய்வம் மாதிரி வந்திருக்கீங்க சார். ரொம்ப நன்றி சார்.''

''இந்த சார், மோர் எல்லாம் வேண்டாம். நானும் ஒரு அண்ணன் தான். கெளம்புங்க, டைம் ஆச்சு.''

அவள் ஸ்கூட்டரின் பின்னால் தொற்றிக் கொள்ள, த்ராட்டிலை முறுக்கோ முறுக்கென்று முறுக்கி, சரியான நேரத்தில் பல்கலைக் கழகத்தை அடைந்தோம்.

அங்கே...
இழுஇழுவென்று இழுத்த கவுன்ஸிலிங் ஒரு முடிவுக்கு வர மூணு மணி ஆகிவிட்டது. அங்கே காத்திருந்த மக்களெல்லாம் கான்ட்டீனில் என்னென்னமோ வாங்கித் தின்றார்கள்.
இன்றைக்கு ஒரு புண்ணிய காரியம் பண்ணியிருக்கிறோம் என்கிற இறுமாப்பில் எனக்குப் பசியே தெரியவில்லை.

கவுன்சிலிங் முடிந்து சிரித்த முகத்தோடு வெளியே வந்தவள், ''நா கேட்ட காலேஜ் கெடச்சிருச்சி சார். ஒங்களுக்குத்தான் சார் தாங்ஸ் சொல்லணும்.'' என்று கரங்குவித்தாள்.

“ஐயையோ, எவ்வளவு லேட் ஆயிருச்சு சார். என்ன விட்டுட்டு நீங்க போயிருக்கலாமே சார்.”

“இப்படி வார்த்தக்கி வார்த்த சார் போட்டுப் பேசினீங்கன்னா ஸிஸ்டர், இப்படியே விட்டுட்டு நா போயிருவேன்.”

“ஐ”ம் ஸாரி சார். ஐ மீன், ஐ”ம் ஸாரி அண்ணா.” முகம் மலர்ந்து சிரித்தாள்.

கான்ட்டீனில் ஏதாவது சாப்பிடலாமா என்றால், வேண்டாம் அண்ணியும் அப்பாவும் காத்திருப்பார்கள் வீட்டுக்குப் போய்விடலாம் என்றாள்.

வீட்டில், ஊட்டி விடாத குறையாய் உபசரிப்பு எனக்கு. அடிக்கடி வந்து போக வேண்டுமென்றார்கள். குடும்பத்தோடு வரவேண்டும் என்றார்கள். அட்ரஸும் ஃபோன் நம்பரும் வாங்கிக் கொண்டார்கள். அண்ணனுக்கு ஒய்வு கிடைக்கிற போது எல்லோரும் அண்ணா நகருக்கு, என் வீட்டுக்கு வருவதாய்ச் சொன்னார்கள். நீங்க கோடியில ஒருத்தர் என்று சொல்லி என்னை சங்கடப்படுத்தினார்கள்.

அவர்களிடமிருந்து ஒரு வழியாய் விடுபட்டு, ஸ்கூட்டரைக் கிளப்பினேன். இன்றைய நிகழ்ச்சிகளை நம்ம வீட்டுக்காரம்மாவிடம் சொன்னால், புளகாங்கிதத்தில் திக்குமுக்காடிப் போவாள். வீட்டை அடைந்த போது என்னமோ சம்திங் ராங் என்கிற மாதிரி நெருடியது.

ஸ்கூட்டர் சத்தம் கேட்டதும் வரவேற்க வாசலுக்கு வருகிறவள் இன்றைக்கு மிஸ்ஸிங். கதவு திறப்பது தெரிந்தது. திறந்து விட்டு விட்டு, மெல்ல உள்ளே போய்விட்டாள். மூளை முழுக்கப் புதிர்களோடு உள்ளே பிரவேசித்தேன். என்னமோ கோபமாயிருக்கிறாள். பனிக்கட்டி ஆயுதத்தைப் பிரயோகிக்கலாம்.

“டாளிங்!”

“ம்ம்.”

“வீட்ல இன்னிக்கி என்னமோ விசேஷம் போலத் தெரியுதே?”

“விசேஷந்தான், இன்னிக்கி என்ன நாள்?”

“செவ்வாக் கெழம.”

“தேதி?”

“இருவத்தி நாலு. ஏன்?”

“இன்னிக்கி நீங்க ஆஃபீஸ்க்குப் போகலியா?”

“இன்னிக்கி லீவ் போட்ருக்கேன்ல?”

“எதுக்காக சார் லீவ் போட்டீங்க?”

“எதுக். யேய், இன்னிக்கி நம்ம குட்டிப் பயலுக்கு எல்.கே.ஜி. அட்மிஷன்ல? ஐயையோ டைம் என்ன இப்போ?”

‘‘ம்? ஸ்கூல் மூடற டைம். அட்மிஷன்லாம் முடிஞ்சி போச்சு. ஒங்கள நம்பிட்டிருந்தா அம்போதான். எங்க போய்ட்டு இந்நேரத்துக்கு வர்றீங்க. யார் யாரோ செல்ஃபோன் வச்சிருக்காங்க, நீங்க ஒரு செல்ஃபோன் வாங்கிக்கக் கூடாதா? நா இன்னிக்கி எவ்வளவு தவிச்சிப் போய்ட்டேன் தெரியுமா?’’

‘‘ஐயையோ, ரொம்ப ரொம்ப ஸாரிம்மா. எப்படி நா மறந்தேன்னே தெரியல. ஆனா, நா இன்னிக்கி ஒரு ரொம்ப நல்ல காரியம் பண்ணிட்டு வந்திருக்கேன், கேட்டா நீ ரொம்ப சந்தோஷப்படுவ. அத அப்பறம் சொல்றேன். நீ எப்படி சமாளிச்ச சொல்லு. கோச்சுக்காம சொல்லு.’’

‘‘ஒங்களக் கோச்சுக்க முடியுமா, நீங்க என்னோட ப்ரின்ஸ் ச்சாமிங் இல்லியா! இன்னிக்கி நா ஒரு அட்வெஞ்ச்சர் பண்ணியி ருக்கேன் தெரியுமா?’’

‘‘நீயுமா?’’

‘‘கேட்டா ஆச்சரியப்பட்டுப் போவீங்க.’’

‘‘சொல்லு சொல்லு.’’

‘‘மூணு மணிக்கி ஸ்கூல்ல இருக்கணும். மணி ஒண்ணாச்சு, ஒண்ணரையாச்சு, ரெண்டாச்சு, ரெண்டரையாச்சு, ரெண்டே முக்காலும் ஆயிருச்சு, நீங்க வரல. சரி இனிமே லேட் பண்ண முடியாதுன்னு, இவனயும் கூட்டிக்கிட்டு, வீட்டப் பூட்டிக்கிட்டு கௌம்பிட்டேன். பஸ்ல போக டைம் இல்ல. அவசரத்துக்கு ஒரு ஆட்டோவும் கெடக்கல. என்னடா செய்யறதுன்னு தடுமாறிட்டு ரோட்ல நிக்கிறேன். அப்ப அந்த வழியா வந்தது ஒரு போலீஸ் ஜீப். வர்றது வரட்டும்னு கைய நீட்டினேன். ஜீப் நின்னுச்சு. விஷயத்தச் சொன்னேன். வண்டி அந்த வழியாப் போனா என்னயும் என் ஸன்னயும் டிராப் பண்ண முடியுமான்னு கேட்டேன். ஏறுங்கன்னாங்க. கரெக்ட்டா மூணு மணிக்கி ஸ்கூலுக்குப் போய்ச் சேந்தாச்சு.’’

‘‘ஆச்சர்யமா இருக்கும்மா!’’

‘‘ஆச்சர்யம் இன்னும் இருக்கு, கேளுங்க. வேல முடிஞ்சி நாங்க வெளிய வர்றோம், வாசல்ல அதே ஜீப் நிக்கிது. ஏறிக்குங்க ஸிஸ்டர்ன்னார் அந்த இன்ஸ்பெக்டர். வந்து, நம்ம வீட்டுக்கு வாசல்ல எறக்கி விட்டுட்டுப் போனாங்க. ஒங்கக் குட்டிப் பயலுக்கு ஒரு காட்பரீஸ் சாக்லட் வேற! அந்த இன்ஸ்பெக்டர் ரொம்ப நல்ல டைப்ங்க. நீங்க ஸ்டேஷன்ல போய் அவரக் கட்டாயம் பாருங்க.’’

கண்களை மூடியபடி நான் சோஃபாவில் சரிந்திருந்தேன். நானும் என்னவளும் சம்பந்தப்பட்ட இரு வேறு நிகழ்ச்சி களுக்கிடையே இருக்கிற அதிசயமான தொடர்பினை நினைத்துச் சிலிர்த்துச் சரிந்திருந்தேன். உழைக்கிறவனின் வியர்வை உலரும் முன் கூலியைக் கொடு என்று முஹம்மது நபி சொன்னதாய்ப் படித்திருக்கிறேன். ஆனால், வியர்வை சுரக்க ஆரம்பிக்கு முன்பே பல மடங்காய்க் கூலியைக் கொடுக்க எல்லாம் வல்ல அவனால் மட்டுந்தானே முடியும்!

‘‘என்னங்க தூங்கிட்டீங்களா’’ என்றாள்.

‘‘இல்ல’’ என்றேன்.

‘‘ஒங்க கதை என்ன, சொல்லுங்க’’ என்றாள்.

‘‘ரெண்டும் ஒரே கதை தான்’’ என்றேன்.

(கவிதை உறவு – ஆண்டுமலர், ஜூன் 2006)

ஐம்பத்தேழு வயசுக் கதாநாயகனை மரியாதை யாய் ‘ர்’ போட்டு எழுதுவதுதான் மரபு. ஆனால் நம்ம முருகையன் மரபையோ மரியாதையையோ பற்றிக் கவலைப்படுகிறவரில்லை. அவருடைய ஆஃபீஸில் பெரும்பாலும் எல்லாருமே அவரை ஒருமையிலேதான் குறிப்பிடுகிறார்கள். நாமும் அப்படியே குறிப்பிடலாம். அவர் தப்பாய் எடுத்துக் கொள்ள மாட்டான்.

சின்ன வயசில் முருகையன் ஒரு பக்கா சினிமாப் பைத்தியம். சிவாஜி பைத்தியம். சிவாஜி கணேசன் படங்களை முதல் நாள் முதல் காட்சி பார்த்தாக வேண்டும். டைட்டிலில், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் என்று காட்டுகிற போது விஸிலடித்தாக வேண்டும். படத்தில் முதன் முதலாய் சிவாஜி முகங்காட்டுகிற காட்சியில் கற்பூரம் கொளுத்தியாக வேண்டும். சிவாஜி படத்துக்கு தியேட்டரில் வசூல் குறைகிறபோது, வீட்டில் சாமி உண்டியலிலிருந்து பணம் அம்மாவுக்குத் தெரியாமல் எடுத்துக் கொண்டு வந்து, பத்துப் பதினஞ்சு டிக்கட் ஒரு சேர வாங்கிக் கிழித்துப் போட வேண்டும்.

இளம் விதவையான அம்மா, வீட்டு வேலைகள் செய்து முருகையனைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பினாள். வெகு ப்ரயத்தனப்பட்டு எட்டாங் கிளாஸை எட்டினான். அதன்பிறகு ஏறவில்லை.

தான் வேலை பார்க்கிற வீட்டில், ஓனரிடம் சொல்லி அம்மா இவனை ஒரு நல்ல கம்ப்பெனியில் வாட்ச்மேன் உத்யோகத்தில் அமர்த்தினாள். ஆள் வாட்டசாட்டமாய் இருந்ததனால் வாட்ச்மேன் வேலை பொருத்தமாயிருந்தது.

அம்மா அவனுக்குக் கல்யாணம் செய்ய நாலு பேரிடம் பேச்சுக் கொடுத்த போது கிராக்கி அலை மோதியது. முருகையனின் விருப்பத்துக்கு விடப்பட்டபோது, கண்களை மூடிக் கொண்டு பத்மினியைத் தேர்ந்தெடுத்தான். பத்மினி என்கிற பெயருக்காகவே தேர்ந்தெடுத்தான். பத்மினியின் கையில் இவனைப் பிடித்துக் கொடுத்துவிட்டு அம்மா கண்களை மூடினாள்.

ரெண்டு பெண் குழந்தைகள், நாலு வருஷ இடைவெளியில். தேவிகா என்றும் சரோஜாதேவி என்றும் பெயர் சூட்டி மகிழ்ந்தான். ‘ஒங்க இஷ்டங்க’ என்று ஒத்துப்போன பத்மினி, வசதியாய் மூத்தவளை தேவி என்றும் சின்னவளை சரோ என்றும் சுருக்கினாள்.

முருகையனுக்குப் பொறுப்பைப் புகட்ட பத்மினி எடுத்து வந்த முயற்சிகள், ரெண்டாவது பெண் பிறந்த பிறகுதான் பலன் தர ஆரம்பித்தன. வாழ்க்கையை முருகையன் ஸீரியஸ்ஸாய் எடுத்துக் கொள்ள ஆரம்பித்தான். எதிர்காலத்துக்காக சேமிக்க ஆரம்பித்தான். ரெண்டுக்கு மேல் வேண்டவே வேண்டாம் என்று தீர்மானமாயிருந்தான். குழந்தைகளுக்கு நல்ல கல்வியைத் தந்து, நாட்டின் நல்ல பிரஜைகளாக்க வேண்டும் என்று முயற்சிகளை மேற்கொண்டான்.

கணவன் மனிதனாகிவிட்டான் என்கிற மனநிறைவோடு பத்மினி இவனையும் குழந்தைகளையும் விட்டு விட்டுப் போய்ச் சேர்ந்து விட்டாள். பத்மினி போன பின்னால், முருகையனின் உலகம் குழந்தைகளளவில் சுருங்கிப் போனது. ரெண்டு குழந்தைகளையும் நன்றாய்ப் படிக்க வைத்து இஞ்ஜினியர்களாக்க வேண்டும். பெரீய்ய இடங்களில் கல்யாணம் பண்ணிக் கொடுக்க வேண்டும். அதற்காக உழைக்க வேண்டும். சேமிக்க வேண்டும். பார்வையை அந்தப் பக்கம் இந்தப் பக்கம் திருப்பக் கூடாது. மறுமணம் செய்து கொள்ளும்படி முருகையனுக்கு வந்த வற்புறுத்தல்கள், அவனுடைய லட்சியப் பிடிவாதத்துக்கு முன்னால் எடுபடவில்லை.

ப்ளஸ் ட்டுவில் தேவி எக்கச்சக்கமாய் மார்க் எடுத்து மூகாம்பிகை இஞ்ஜினியரிங் காலேஜில் இடம் பிடித்து, முதல் வகுப்பில் தேறி, மெட்ராஸில் ஒரு பெரிய கம்பெனியில் வேலையில் அமர்ந்து, சக்கரவர்த்தியை அங்கே சந்தித்து, அப்பாவிடம் தன்னுடைய விருப்பத்தைச் சொல்லி, மிஸஸ் சக்கரவர்த்தியாய் சீதம்மா காலனியில் ஒரு நவநாகரீக ஃப்ளாட்டில் வசிக்கப் போய்விட்டாள்.

அக்காவைவிட ஆறு மார்க் அதிகம் வாங்கி, சரோவும் அதே கல்லூரியில் இடம் பிடித்தாள். அவளும் இப்போது ஓர் இஞ்ஜினியர்.

நேற்று சரோவுக்கு ஓர் இன்ட்டர்வ்யூ. காலையில் எழுந்து, டிஃபன் ரெடி பண்ணி, அப்பாவுக்கு லஞ்ச் பாக் செய்து வைத்து விட்டு, குளித்து ரெடியாகி, கடவுளை மனசுக்குள் துதித்துவிட்டு அம்மாவின் படத்தின் முன்னால் ரெண்டு நிமிஷம் மௌனமாய் நின்று, அப்பாவின் காலைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டு, ‘இன்ட்டர்வ்யூக்குப் போய்ட்டு வறேம்ப்பா’ என்று கிளம்பின போதுதான் இவளுக்கும் கல்யாண வயசு வந்து விட்டது என்பது முருகையனுக்கு உறைத்தது.

புத்திசாலிப் பொண்ணு, முதல் வகுப்பில் பி.ஈ. தேறியவள். இந்த வேலை இவளுக்குக் கிடைத்து விடும்.

பிறகு இவளுக்கொரு கல்யாணம் பண்ணி வைக்க வேண்டும். தேவிக்கு செய்து வைத்தது போலவே, பெரீய்ய இடத்தில். குழந்தைகள் படிப்புக்கும், தேவி கல்யாணத்துக்கும் சேமிப்பெல்லாம் செலவாகிவிட்டது. சரோ கல்யாணத்துக்கு ஆஃபீஸில் லோன் போடவேண்டும். பழைய மானேஜருக்கு முருகையன் மேல் ஓர் அபிமானம். போனவாரம் அவர் ரிட்டயர் ஆகிவிட்டார். இப்போது ஒரு ‘சின்னப் பையன்’ புது மானேஜர். பாம்பே ஆஃபீஸிலிருந்து மாற்றலாகி ப்ரமோஷனில் வந்திருக்கிறவன். எம்.பி.ஏ., எம்.ஸி.ஏ. என்று என்னென்னமோ படித்திருக்கிறான். சமீபத்தில் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறான்.

அடடே! இவன் கல்யாணம் செய்து கொள்ளாதவனாயிருந்தால், யார் கண்டது, நமக்கே மருமகனாய்க் கூட வந்திருக்கலாம். சரோ மாதிரி ஒரு அழகான இஞ்ஜினியர்ப் பொண்ணைக் கட்டிக் கொள்ளக் கசக்குமா என்ன! சரி, சரோ கல்யாணமாகிப் புருஷன் வீட்டுக்குப் போன பின்னால், இவனுக்கு டிஃபன் செய்து கொடுப்பது யார், லஞ்ச் பாக் பண்ணிக் கொடுப்பது யார், சாயங்காலம் வேலையி லிருந்து திரும்புகிறபோது காஃபி டம்ளரோடு குட் ஈவ்னிங் டாடி என்று செல்லமாய் வரவேற்பது யார்!

வாழ்நாளில் பெரும்பகுதியைக் குழந்தைகளைப் பராமரிப்பதிலேயே செலவழித்தாகிவிட்டது. ஒரு குழந்தை போய் விட்டாள். இன்னொருத்தியும் போன பின்னால், தன்னைப் பராமரிக்கவென்று வீட்டோடு ஒரு பெண் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

சரோவைக் கட்டிக் கொடுத்த கையோடு, பொருத்தமான ஒரு பெண்ணைப் பார்த்துத் தானும் கல்யாணம் செய்து கொண்டு வாழ்க்கையை சௌகர்யப்படுத்திக் கொண்டால் அதிலென்ன தப்பு? ராத்திரி, சாப்பாடு முடிந்த பின்னால் கல்யாண விஷயத்தை மகளிடம் ஆரம்பித்தான். முதலில் அவளுடைய கல்யாண விஷயத்தை. சந்தோஷத்தை முந்திக் கொண்டு சம்பரதாயமான அந்த பதில் வந்தது.

“எனக்கு என்னப்பா இப்ப அவசரம்?”

அவசரம் உனக்கில்லாமல் இருக்கலாம் மகளே, எனக்குத்தான் இப்ப அவசரம். இன்றைக்குக் காலையில் கல்யாண எண்ணம் வந்ததிலிருந்து மனசு துரிதமாய் ஒரு துணையைத் தேடித் தவிக்க ஆரம்பித்து விட்டது.

முருகையன் தொண்டையைச் செருமிக் கொண்டு மெல்ல மெல்ல தன்னுடைய சுய திருமணத் திட்டத்தை மகளின் முன்னே வைத்தான்.

‘‘எக்ஸலன்ட் ஐடியா டாடி’’ என்று சரோ அப்பாவைக் கட்டிக் கொண்டாள்.

‘‘அப்பா, எப்பவோ நீங்க இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிட்டிருக்கலாம். அக்காவுக்காகவும் எனக்காகவும் ஒங்க சொந்த சந்தோஷங்களைத் தியாகம் பண்ணிட்டீங்களே அப்பா’’ என்று சொல்கிறபோது சரோவின் குரல் உடைந்தது.

இன்றைக்குக் காலையில் ஆஃபீஸுக்குக் கிளம்புகிறபோது ரொம்ப ரொம்ப உற்சாகமாய் இருந்தது. அந்த உற்சாகத்தைச் சிதைக்கப் போகிற சம்பவம் சிறிது நேரத்தில் நடக்கவிருப்பது முருகையனுக்குத் தெரிந்திருக்கக் காரணம் இல்லை.

மானேஜரிடமிருந்து அழைப்பு வந்திருப்பதாய்ச் சொன்னார்கள். போனான். புது மானேஜர். சின்னப்பையன். இவனுக்கு மருமகனாய் வரக் கொடுத்து வைக்காதவன்.

‘‘சார் கூப்ட்டீங்கன்னு சொன்னாங்க.’’

‘‘ஆமா. கூப்ட்டேன். எத்தன வருஷம் சர்வீஸ்ப்பா ஒனக்கு?’’

‘‘ஆச்சு சார். முப்பத்தி மூணு வருஷம் ஓடிப் போயிருச்சு. அடுத்த வருஷம் ரிட்டயர் ஆயிருவேன்.’’

‘‘தட்ஸ் ஒக்கே. இப்ப நம்ம கம்ப்பெனில ஒரு புது ரூல் போட்டிருக்காங்க தெரியுமா? ஸப் ஸ்டாஃப் எல்லாருக்கும் கம்ப்யூட்டர் நாலட்ஜ் இருக்கணுமாம்.’’

‘‘ஆமா சார். சொன்னாங்க. அதுக்கு வாச்மேன் மட்டும் விதிவிலக்குன்னு சொன்னாங்க.’’

‘‘அந்த விதிவிலக்குக்கு நா விதிவிலக்கு வாங்கிட்டேன். நம்ம ப்ராஞ்ச்ல வாச்மேன்கூட கம்ப்யூட்டர் படிச்சிருக்கணும்.’’

முருகையன் மண்டையில் ஒரு குண்டு விழுந்தது. ‘‘வாச்மேனுக்கு என்னத்துக்கு சார் கம்ப்யூட்டர்’’ என்று இழுத்தான்.

மானேஜரின் பதில் கறார் கண்டிப்புடன் வந்தது. ‘‘என்னத்துக்குங்குற கேள்வியெல்லாம் ஒனக்கு வேண்டாம். இது மானேஜ்மென்ட் பாலிஸி. நீ கீழ்ப்படிஞ்சிதான் ஆகணும். மூணு மாசம் டைம். அதுக்குள்ள நீ கம்ப்யூட்டர் பேஸிக்ஸ் படிச்சாகணும்.’’

‘‘சார், ஒரு வேள மூணு மாசத்ல முடியலன்னா?’’

‘‘கூடக் கொஞ்ச நாள் எடுத்துக்க, பரவாயில்ல. அதுக்காக நீ இப்படியே இழுத்துரலாம்னு பாத்தா, நடக்காது. வேல போயிரும். அப்புறம் ரிட்டயர்மென்ட் பெனிஃபிட் எல்லாம் கெடக்யாது.’’

‘‘சார், எனக்கொரு பொண்ணு கல்யாணத்துக்கு நிக்குது சார்.’’

‘‘பொண்ணப் படிக்க வச்சியா?’’

‘‘இஞ்ஜினியர் சார்!’’

“வெரிகுட். அப்ப அவகிட்டயே நீ கம்ப்யூட்டர் கத்துக்கலாம்.”

“நா அந்தக் காலத்து எட்டாங்கிளாஸ் சார். எம் மண்டையில அதெல்லாம் ஏறாது சார்.”

“ரொம்ப நல்லது. அப்ப நீ நாளக்யே ரிஸைன் பண்ணிட்டு வீட்டுக்குப் போயிரலாம். இந்தா பார்ப்பா. ஒன்ன நா டிஸ்க்கரேஜ் பன்றேன்னு நெனக்யாத. எல்லாரும் செய்யும் போது நீயும் செஞ்சிட்டா என்னப்பா? நா என்ன ஒன்ன கம்ப்யூட்டர் ஸயன்ஸ்ல டிகிரியா வாங்கிட்டு வரச் சொல்றேன்? சும்மா ஆனா ஆவன்னா தானப்பா! ஒன்னால முடியும். நீ செஞ்சு காட்டு, ஸென்ட்ரல் ஆஃபீஸ்ல சொல்லி ரெண்டு வருஷம் எக்ஸ்டன்ஷன் வாங்கித் தர்றேன். எனிவே, டிஸைட் பண்ணி நீ நாளக்கிச் சொல்லு. இப்ப நீ போகலாம்.”

நொந்து போனான் முருகையன். காலையில் இருந்த உற்சாகம் எங்கேயோ போய் ஒளிந்து கொண்டது. எப்படா ட்யூட்டி முடியும் என்று காத்திருந்தான். ட்யூட்டி முடிந்ததும் தேவி வீட்டுக்குப் போக வேண்டும். அங்கே போய்ப் பேத்தியை பார்த்தால் அந்த பிஞ்சினுடைய மழலை இந்த மனவேதனையைக் கொஞ்சம் தணிக்கும்.

தன்னுடைய குழந்தைக்கு தேவி, அம்மாவின் நினைவாய் பத்மினி என்று பெயரிட்டிருந்தாள். பீக் அவரில் பஸ்ஸுக்குக் காத்திருந்து, தேவியின் வீட்டை அடைந்தபோது நன்றாய் இருட்டி விட்டிருந்தது.
அப்பாவைப் பார்த்ததும் தேவி முகம் மலர்ந்து வரவேற்றாள்.

“அப்பா... வாங்கப்பா, என்னப்பா திடீர்னு வந்து நிக்கிறீங்க! நீங்க எதுக்கு வந்திருக்கீங்கன்னு தெரியும்ப்பா. சரோ ஃபோன் பண்ணி சொல்லிட்டா. கங்ராட்ஸ்ப்பா! இப்பவாவது தோணிச்சே ஒங்களுக்கு. அவரும் சந்தோஷப் பட்டார்ப்பா. பப்பிட்ட தான் இன்னும் சொல்லல. பப்பி ஓடி வா, யார் வந்துர்க்கான்னு பாரு. தாத்தா டீ! பப்பி, ஒனக்கு ஒரு பாட்டி வரப்போறாங்க தெரியுமா?”

தேவியின் புளகாங்கிதம் பிரவாகமெடுத்து முருகையனைத் திக்குமுக்காட வைத்தது. தாத்தா. தாத்தா என்று ஓடி வந்து பப்பி இவனைக் கட்டிக் கொண்டது. இந்தக் கதகதப்பான சூழலில் தன்னுடைய கம்ப்யூட்டர் பிரச்சனையை எப்படி ஆரம்பிப்பது என்று முருகையனுக்குப் புரியவில்லை.

அவனுடைய முகத்தில் ஓடிய சோக ரேகையைப் பார்த்து தேவியே கேட்டாள், “ஏம்ப்பா ஒரு மாதிரி இருக்கீங்க” என்று.

ஆஃபீஸில் நடந்த கம்ப்யூட்டர் கதையை மகளிடம் ஒப்பித்தான் முருகையன். “கால்க்குலேட்டர் கூட ஒழுங்கா போடத் தெரியாது. நா எந்தக் காலத்துலம்மா கம்ப்யூட்டர் கத்துக்கறது! அந்தப் புது மானேஜர் வீம்புக்கு என்ட்ட வம்பு பண்றாம்மா. ரிட்டயர் ஆறதுக்கு முந்தியே என்ன வீட்டுக்கு அனுப்பிச்சிட்டுக் கம்பெனிக்கி நாலஞ்சு லச்சம் மிச்சப்படுத்திக் குடுத்து நல்லபேர் வாங்கணும்னு பாக்கறான்.”

தேவி யோசனையானாள். பிறகு சொன்னாள்:

“இல்லப்பா. நீங்க நெனக்கிறது தப்பு. ஒங்க மானேஜர் ஒங்க மேல நெறய நம்பிக்க வச்சிருக்கார். ஒங்களுக்கு நல்லது செய்யணும்னுதான் நெனக்கிறார். நீங்க கம்ப்யூட்டர் கத்துக்கிட்டா ஒங்களுக்கு ரெண்டு வருஷம் எக்ஸ்டன்ஷன் தர்றேன்னு சொல்றாரேப்பா, அத ஏன் நீங்க பயன்படுத்திக்கக் கூடாது?”

“அம்மா, நா ஒரு எட்டாங்கிளாஸ்ம்மா. நானாவது கம்ப்யூட்டர் படிக்கிறதாவது! கனவுல கூட நடக்காது.”

‘‘ஏம்ப்பா நடக்காது? இந்த யூ கே ஜிக் குட்டியே கம்ப்யூட்டர் முன்னால ஒக்காந்து பட்டனத் தட்டிட்டிருக்கே, அப்ப எட்டாங்கிளாஸால ஏம்ப்பா முடியாது? ஒங்களால முடியும், இத ஒரு சவாலா ஏத்துக்கிட்டு செஞ்சி காட்டுங்கப்பா.’’

‘‘புரியாமப் பேசாதேம்மா. எனக்கு வயசென்ன தெரியுமா? அம்பத்தேழு.’’

தேவி கொஞ்ச நேரம் மௌனமானாள். பிறகு குரலைத் தணித்துப் பேசினாள். ‘‘அப்பா, நா ஒண்ணு சொன்னா, தப்பா எடுத்துக்க மாட்டீங்களேப்பா?’’

‘‘சொல்லும்மா.’’

‘‘அப்பா... வந்து... அம்பத்தேழு வயசுல கல்யாணம் பண்ணிக்கலாம்ங்கற போது, அம்பத்தேழு வயசுல கம்ப்யூட்டர் ஏம்ப்பா கத்துக்கக்கூடாது?’’

நெத்தியடி. செமத்தியான நெத்தியடி.

மடியிலிருந்த குழந்தையை இறக்கி விட்டுவிட்டு முருகையன் ரெண்டு கைகளாலும் கன்னங்களுக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டு தலை கவிழ்ந்து உட்கார்ந்தான்.

‘‘அப்பா, ஸாரிப்பா. ஒங்க மனச நோகப் பண்ணிட்டேனாப்பா? கொஞ்சம் படுக்கறீங்களாப்பா’’ என்று தந்தையின் தலையை இதமாய் வருடிக் கொடுத்தாள் தேவி.

‘‘கொஞ்ச நேரம் நா தனியா இருக்கேம்மா’’ என்று முருகையன் மகளின் கையை எடுத்து விட்டான்.

தேவி அங்கிருந்து அகன்றாள். ‘‘நா கிச்சன்ல இருக்கேம்ப்பா. நீங்க இருந்து சாப்ட்டுட்டுப் போங்க. பப்பி, தாத்தாகூட சமத்தா வெளயாடிட்டிருக்கணும் என்ன?’’

அந்தக் குழந்தை முருகையனின் கைகளுக்குள்ளே புகுந்து கொண்டு மேவாயைப் பிடித்து தலையை நிமிர்த்தியது.

‘‘ஏந்தாத்தா அழுவுறீங்க?’’

தன்னுடைய கண்ணீரை அந்தச் சின்ன அரும்பு பார்த்து விட்டது முருகையனுக்கு வெட்கமாயிருந்தது.

கைக்குட்டையை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டான். குழந்தை அவனுடைய மடியில் ஏறி உட்கார்ந்து கொண்டது. அவனுடைய கன்னங்களைத் தன்னுடைய பிஞ்சுக் கரங்களால் ஏந்தி அவனுடைய கண்களில் நேராய்ப் பார்த்துச் சொன்னது.

‘‘தாத்தா, அழுவாதீங்க தாத்தா, நா ஒங்களுக்கு கம்ப்யூட்டர் சொல்லித் தாறேன் தாத்தா.’’

முருகையன் ஸ்தம்பித்துப் போனான். கட்டுப்பட்டிருந்த கண்ணீர் திரும்பவும் முட்டிக்கொண்டு வந்தது. கண்களைத் துடைக்கும் பிரக்ஞைகூட இல்லாமல் குழந்தையை வாரியெடுத்து, ரெண்டு கன்னங்களிலும் மாறி மாறி முத்தங்களைப் பொழிந்தான்.

‘‘ஒன்ட்டயே நா கம்ப்யூட்டர் கத்துக்கிறேன் பத்மினி, பத்மினீ என் பத்மினீ!’’ உணர்ச்சிகள் சமனப்பட்ட பின்னால் குழந்தையை மடியில் இருத்திக் கட்டிப் பிடித்துக் கொண்டு சிரித்தான். அவனோடு சேர்ந்து குழந்தையும் சிரித்தது. பிறகு கேட்டது, ‘‘பாட்டி எப்ப வரும் தாத்தா?’’

முருகையன் அழுத்தமாய்ச் சொன்னான், ‘‘ஒனக்குப் போட்டியா இன்னொரு பாட்டியா? நீ தாண்டி பத்மினி எனக்குப் பாட்டி.’’ திரும்பவும் முத்த மழை.

இவனுடைய பத்மினி மேலேயிருந்து பார்த்துப் புன்னகைத்துக் கொண்டிருப்பது போலிருந்தது.

(கவிதை உறவு, 26ம் ஆண்டுமலர், 2008)

மதிய சாப்பாட்டுக்காக டைனிங் டேபிளில் நான் உட்கார்ந்த போது, ஒரு நாற்காலி காலி.

அரை டிக்கட்டுக்கான நாற்காலி.

ஞாயிற்றுக் கிழமை ஒரு நாள்தான் லஞ்ச் டைமில் இவள், நான் மற்றும் நம்ம அரை டிக்கட் அடங்கின குடும்பம் ஒன்று சேர்ந்து உணவு கொள்ள முடியும்.

வழக்கமாய் மட்டன் பிரியாணி இருக்கும். அல்லது குறைந்த பட்சம் வஞ்சிர மீன் குழம்பும் பொரியலும். இன்றைக்கு மட்டன் பிரியாணியோடு சைடு அட்ராக்ஷனாய்ச் சிக்கன் ஃப்ரையும் இருந்தது. தின்பதற்குத் தான் ஆள் பற்றாக்குறை.

“தொரைக்கிப் பசியில்லியாமா?” என்று இவளிடம் கேட்டேன்.
“அவனுக்கு சாப்பாடு வேண்டாமாம்” என்றாள், என் பக்கம் முகத்தைத் திருப்பாமலேயே.
“வேறே என்ன வேணுமாம்?”
“பட்டாசு வேணுமாம்.”
“பட்டாசத் திங்கப் போறானாமா?”

“பட்டாசத் திம்பானாக்கும்? வேங்கிக் குடுத்தீங்கன்னா தெருவுல மத்தப் பசங்களோட சேந்து சந்தோஷமா பட்டாசு கொளுத்துவான். சந்தோஷமா சாப்புடவும் செய்வான். வேங்கியே தரமாட்டேண்டு பிடிவாதம் புடிக்கீகளே எதுக்கு? என்ன, ஒரு ஐநூறு ரூவா ஆயிருமா!”

எல்லா சராசரித் தாயையும் போலப் பிள்ளைக்குப் பரிந்து கொண்டு வந்தாள். சராசரிக்கு மேம்பட்ட தகப்பன் நான் என்கிற உன்னதமான விஷயமெல்லாம் இவளுடைய பெண்புத்திக்கு எட்டாது.

“இந்தா, ஐநூறு ரூவாய்க்கி பயந்துக்கிட்டா அவனுக்கு நா பட்டாசு வேங்கித்தர மாட்டேங்கேன்? சும்மா ஒளராத. அவனக் கூப்புடு, நா புத்திமதி சொல்றேன். சொன்னாக் கேட்டுக்குவான். கூப்புடு.”

“நா கூப்ட்டுப் பாத்தாச்சு. நீங்கதான் கூப்புடுங்க.”

நான் குரல் கொடுத்தேன். நாலைந்து தடவை குரல் கொடுத்த பின்னால் மேற்கொண்டு முரண்டு பிடிக்க இயலாமல், ஸ்லோ மோஷனில் நடந்து வந்து நாற்காலி விளிம்பில் உட்கார்ந்தான், முகத்தை இறுக்கிக் கொண்டு.

அவனுக்கு முன்னாலிருந்த ப்ளேட்டில் இவள் பரிமாறப் போனபோது அதை ஆட்சேபித்தான்.
“எனக்கு வேண்டாம்.”

“அம்மா ஊட்டி விட்டா சாப்புடுவியா” என்று இவள் கேட்டதற்கும் அவன் இடவலமாய்த் தலையாட்டி மறுப்புத் தெரிவித்தது என்னுடைய பொறுமையை உரசிப் பார்த்தது.

“வாப்பா ரெண்டு போட்டா சாப்புடுவான்” என்று நான் குரலில் கடுமையை வெளிப்படுத்தியது அவனை மேலும் காயப்படுத்த, சட்டென்று தலை நிமிர்ந்து, கண்ணீர் முட்ட என்னைப் பார்த்தான்.

இந்த எட்டு வருஷத்தில் ஒரு தடவைக்கூட மகனைக் கை நீட்டியறியாதவன், அராஜகமான அந்த வாக்கியத்தை அவன் மேல் பிரயோகித்திருக்கக் கூடாது என்று நான் உணர்ந்தபோது சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு மகனுக்கு ஆதரவாய் இவள் குரல் கொடுத்தாள்.

“ஆமா, சும்மாவே அவன் உம்ம்னு இருக்கான். நீங்க வேற ரெண்டு போடறேன் நண்டு போடறேண்டு பயங்காட்டுங்க, நல்லா சாப்புடுவான். புள்ள ஆசையாக் கேக்கறானேண்டு வேங்கிக் குடுத்துட்டாத்தான் என்ன, நீ சாப்புடு ராஜா, சாச்சாட்ட சொல்லி பட்டாசு நா வேங்கித்தரச் சொல்லுதேன்.”

சாச்சாவிடம் சொல்லி வாங்கித் தருவாளாமே! நான் மனசுக்குள் சிரித்துக் கொண்டேன். ரெண்டு பேரையும் கொஞ்சம் விட்டுத் தான் பிடிக்க வேண்டும். அம்மா கொடுத்த நம்பிக்கையில் பசி பெருக்கெடுத்துப் பையன் பிரியாணியையும் சிக்கனையும் ஒரு பிடி பிடித்தான்.

லஞ்ச் முடிந்து, மூணு பேரும் ஆறுதலாய் டிவி பார்த்துக் கொண்டிருந்த போது நிலவிய சுமுகமான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு மெல்ல என்னுடைய ப்ரெய்ன் வாஷிங்கை ஆரம்பித்தேன்.

“காலைல மதரசாவுக்குப் போனியா ராஜா?”

“ஆமா போனேன் வாப்பா.”

பயல் குரலில் உற்சாகம் கொப்பளித்தது. பட்டாசுக் கனவுகள் பலித்து விடுகிற புளகாங்கிதத்தில் இருக்கிறான்.

கனவுகளைக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பிய்த்துப் போட வேண்டும்.

“மதரசாவுல இன்னிக்கி என்ன சொல்லிக் குடுத்தாக?”

“ஹதீஸ் சொல்லிக் குடுத்தாங்க.”

“பட்டாசு வெடிக்கிறது ஹராம்னு சொல்லிக் குடுக்கலியா?”

“ஹராமா? ஹராம்னா என்ன வாப்பா?”

“நம்மளெல்லாம் இஸ்லாமானவங்க. நம்ம இஸ்லாம் மார்க்கம் அனுமதிக்காதது எல்லாமே ஹராம்தான். இந்துக்கள் கொண்டாடற பண்டிகையெல்லாம் நாம கொண்டாடப்படாது. அது ஹராம். தீபாவளி இந்துப் பண்டிகை, பட்டாசு இந்துக்கள் வெடிக்கிறது.”

“தீபாவளி இந்துப் பண்டிகை இல்ல வாப்பா, அது இந்தியப் பண்டிகை.”
போட்டானே ஒரு போடு!

போதாததற்குப் பக்கவாத்தியமாய்ச் சரவெடி வெடித்தது மாதிரி படபடவென்று கரவொலி. நம்ம ஆள்தான் கைதட்டி என்னைக் கடுப்பேற்றிக் கொண்டி ருந்தாள். அவளை நோக்கி நான் வெடித்தேன்.

“இந்தா, என்ன பெரிய தத்துவம் அவன் சொல்லிட்டாண்டு நீ ஸ்டாண்டிங் ஒவேஷன் குடுக்கற? நீ தான் இந்த வசனத்த அவனுக்கு சொல்லிக் குடுத்துருப்ப.”

“அப்படித்தான் வச்சுக்கோங்க. நீங்க தோத்துப் போய்ட்டீங்க. தோல்விய ஒப்புக்கிட்டு அவனுக்குப் பட்டாசு வேங்கிக் குடுங்க.”

“ஆமா, இங்க என்ன உலக மஹா யுத்தமா நடக்குது, நா தோத்துப் போறதுக்கு, நா இவனக் கன்வின்ஸ் பண்ணிக்கிறேன். நீ இதுல தலையிடாத.”

அவளை அடக்கிவிட்டு நான் இவன் தோளில் கை போட்டு அணைத்துக் கொண்டேன். “நா ஒன்ன மாதிரி சின்னப் பையனா இருந்தப்ப எங்க வாப்பா எனக்கு தீபாவளிக்கிப் பட்டாசே வேங்கித் தரல, நா அவரக் கேக்கவுமில்ல. ஏன்னா, அது ஹராமான விஷயம்னு அப்பவே எனக்குத் தெரியும்.”

“மண்ணாங்கட்டி. நீங்க காயல் பட்டணத்ல குடியிருந்தீங்க. அந்த ஊர்ல போலீஸ் ஸ்டேஷனும் கெடையாது. பட்டாசுக்கடையும் கெடையாது.”

“ஷ் ஷ். நீ குறுக்கப் பேசாதன்னு சொன்னேன்ல? நீ கேளும்மா கண்ணு. ஒனக்கு நல்லதுக்குத் தானே வாப்பா சொல்வேன்? வாப்பா செய்யாத எதையும் நீ செய்யக் கூடாது. முஸ்லிம்ஸ்க்கு விலக்கப்பட்ட எதையும் நீ செய்யக்கூடாது. அது அல்லாவுக்குப் புடிக்காது. இந்துக்கள் செய்யறத நம்மளும் செஞ்சா அல்லாவுக்குப் புடிக்காது. அல்லாவுக்குப் புடிக்காத காரியத்த நாம செய்யலாமா, நீயே சொல்லு.”

“இந்துக்கள் செய்யறத நாம செஞ்ச அல்லாவுக்குப் புடிக்காதா வாப்பா?”

“புடிக்காது. தீபாவளி கொண்டாடறது, பட்டாசு வெடிக்கிறது எல்லாம் இந்துக்கள் செய்யறது. இந்துக்கள் செய்யறதுலயிருந்து நாம விலகியே இருக்கணும்.”

“இந்துக்கள்ட்டயிருந்து நாம விலகியே இருக்கணுமா வாப்பா?”

“அப்படித்தான் வச்சுக்கோயேன்.”

பையன் ஒரு வழியாய் நம்ம வழிக்கு வந்து விட்டான். இவள்தான் வழியை மறித்துக் கொண்டு நின்றாள்.

“நீங்க பேசறது அல்லாவுக்கே பொறுக்காது. தீபாவளி கொண்டாடறோம்னு நாம கோவிலுக்குப் போகப்போறோமா, வீட்ல பூஜை பண்ணப் போறோமா? புள்ள ஆசையாப் பட்டாசு கேட்டா அதத் தட்டிக் கழிக்கிறதுக்கு ஹராம்ங்கிறீங்க, இந்துக்கள்ட்டயிருந்து விலகியிருக்கணும்ங்கறீங்க. நாம எல்லாம் இஸ்லாமானவங்க மட்டுமில்ல, அதோட இந்தியர்களுங்கூடங்கற உண்மையை மறந்துட்டு சின்னப்புள்ள மனசுல விஷத்த வெதக்கிறீங்க. நீங்க செய்யறது கொஞ்சங்கூட சரியில்ல.”

பொரிந்து தள்ளியவளை நான் பொருட்படுத்தவே இல்லை. இவளைத் திருத்த முடியாது. கொஞ்சம் மட்டந்தட்டியாவது வைக்கலாம்.

“சரி சரி மேடம், நீங்க கொஞ்சம் வாய மூடுங்க. யார் காதிலயாவது விழுந்து தொலச்சா அப்பறம் மத நல்லிணக்க அவார்டு, தேசிய ஒருமைப்பாடு அவார்டுன்னு ஏதாவது குடுத்துரப் போறாங்க. நம்ம மகன் புரிஞ்சிக்கிட்டான். ஒம் மரமண்டக்கிப் புரியாது. நீ அவனக் கெடுத்துராத. நீ ஒன் ரூம்ல போய்த் தூங்குடா ராஜா. ஆறு மணிக்கி எந்திரிச்சாப் போதும். மக்ரிப் தொழுகக்கிப் பள்ளிவாசலுக்குப் போவோம். போய்ப் படுத்துக்க.”

‘‘இந்துக்கள்ட்டயிருந்து நாம விலகியே இருக்கணும்’’ என்கிற மந்திரத்தைக் கபாலத்துக்குள்ளே புதைத்தபடியே பையன் படுக்கப் போனான்.

கொஞ்சம் மிகைப்படுத்தப்பட்ட வாக்கியம்தான். பரவாயில்லை. பையனை வழிக்குக் கொண்டு வர பயன்பட்ட வாக்கியமென்கிற முறையில், மிகையை மன்னித்து விடலாம்.

இருட்டுகிற நேரத்தில் ரெண்டு பேரும் மக்ரிப் தொழுகைக்காக மசூதிக்குக் கிளம்பினோம். தொழுகை முடிந்து வெளியேறுகிற வழியில், வழக்கம் போல தாய்க்குலத்தின் க்யூ. எல்லோர் அணைப்பிலும் பச்சிளங் குழந்தைகள். குழந்தை களுக்கு ஓதிப்பார்க்க, நம்பிக்கையோடு காத்திருக்கிற பெண்கள்.

‘‘கொஞ்சம் இரு, குழந்தைகளுக்கு ஓதிவிட்டு வருகிறேன்’’ என்று செய்கையால் இவனுக்கு உணர்த்திவிட்டு, வரிசையாய் ஒவ்வொரு குழந்தையாய் ஓதிக்கொண்டே வந்து, கடைசிக் குழந்தைக்கு வந்த போது ஓடி வந்து இவன், கையைப் பிடித்து இழுத்து என்னைத் தன்னை நோக்கிக் குனியச் செய்து, என் காதில் கிசுகிசுத்தான் அவசரமாய்.

‘‘வாப்பா, இந்தப் பாப்பாவுக்கு ஓதாதீங்க. இது இந்துப் பாப்பா. என்னோட க்ளாஸ்ல படிக்கிற பரமசிவத்தோட அம்மா இவங்க. இவங்க இந்து வாப்பா.’’

செய்கையால் அவனை அமர்த்திவிட்டு ஓதி முடித்தேன். மசூதி வளாகத்துக்கு வெளியே வந்து நான் பைக்கை ஸ்டார்ட் செய்ய, பின்னால் ஏறிக் கொள்கிற வரைக்கும் இவன் ஒண்ணும் பேசவில்லை. பிறகு வாயைத் திறந்தான்.

‘‘வாப்பா, நம்ம வூட்டுக்கு லெஃப்ட்ல போவணும், நீங்க ரைட்ல போறீங்க?’’

‘‘இப்ப ரைட் டைரக்ஷன்லதான் போறேன் ராஜா நான்’’ என்றேன்.

‘‘எங்க போறீங்க வாப்பா?’’ என்று குறுகுறுப்போடு கேட்டான்.

‘‘பட்டாசுக் கடக்கி ராஜா’’ என்றேன்.

‘‘டபுள் ரைட் டாடி’’ என்று பின்னாலிருந்து இறுக்கிக் கட்டிக் கொண்டான்.

(நன்றி : பாக்யா, அக்டோபர் 2008)

மாட்னி ஷோவுக்குப் போக வேண்டுமென்று தம்பி பிரியப்பட்டான். பைக் ரிப்பேர்டா தம்பி என்று தப்பிக்கப் பார்த்தேன். சைக்கிள்ல போயிருவோம்ண்ணே என்று ஐடியா கொடுத்தான்.

"அண்ணா நகர்லயிருந்து மவுன்ட் ரோடு வரக்யும் சைக்கிள மிதிக்யணுமேடா!"

"நா வேணா மிதிக்கிறேண்ணே."

"ஒண்ணும் வேணாம். நானே மிதிக்கிறேன். கௌம்பு."

கிளம்பினோம். ஜாலியாய்ப் பின்னால் தொற்றிக் கொண்டான்.

ஸிக்னல்களில் சைக்கிள் நிற்கிறபோது தம்பி இறங்கிக் கொள்வதும், பச்சை விளக்கில் வண்டி கிளம்புகிற போது தாவிப் பின்னால் உட்கார்ந்து கொள்வதுமாயிருந்தான்.

ஈகா தியேட்டர் ஸிக்னலில் நான் காலூன்றி நின்றபோது, நம்ம சைக்கிளையடுத்து ஒரு கை வண்டிக்காரன். வேகாத வெயிலில், செருப்பில்லாத கால்களைத் தகிக்கிற தார்ச் சாலையில் பதித்து நிற்க இயலாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

ஒரு காலை ஊன்றி நின்று மறுகாலுக்குத் தற்காலிகமாய்க் கொஞ்சம் ஆறுதலளிப்பதும், பிறகு இந்தக் காலை ஊன்றி அடுத்த காலை உயர்த்திக் கொள்வதுமாய் அவன் அவதிப்பட்டுக் கொண்டிருந்ததை அவதானித்த போது, இவனுக்கு ஒரு ஜோடி செருப்பு வாங்கிக் கொடுக்க முடிந்தால் எவ்வளவு புண்ணியமாயிருக்கும் என்று தோண்டிறியது.

போகிற பாதையில் ப்ளாட்ஃபாம் செருப்புக் கடைகள் இருக்கும். ரப்பர்ச் செருப்பு மிஞ்சிப் போனால் முப்பது ரூபாய் இருக்கும். ரெண்டு பேர் சினிமாவுக்கு செலவழிக்கப் போவதில் நாலில் ஒரு பங்கு.

சேத்துப் பட்டு பாலம் ஏறி இறங்கியதுமே ஒரு செருப்புக் கடை கண்ணில் பட்டது. தம்பி, கொஞ்சம் எறங்குடா என்றேன்.

"ஏண்ணே, வீல்ல காத்து இல்லியா?"

"அதில்லடா, நாம ஸிக்னல்ல நின்னுட்டிருப்ப, பக்கத்துல ஒரு கை வண்டிக்காரன் நின்னுட்டிருந்தானே, கவனிச்சியா!"

"ஆமா, அவனுக்கென்ன?"

"பாவம்டா அவன், கால்ல செருப்பில்லாம, வெயில்ல நிக்ய முடியாமத் துடிச்சிட்டிருந்தான். அவனுக்கு ஒரு ஜோடி செருப்பு வாங்கிக் குடுத்துட்டுப் போவோம்டா."

படத்துக்கு லேட்டாயிருச்சுண்ணே. நேரா வண்டிய வுடு. செருப்பு கிருப்பெல்லாம் இப்ப வாங்க வேண்டாம் என்று பின்னாலிருந்து இடித்தான் தம்பி.

தம்பியின் இரக்கமின்மை எனக்கு ஏமாற்றமாயிருந்தது. கோபமாயும். கோபத்தை ஓரங்கட்டிவிட்டு சைக்கிளை ஓரங்கட்ட முற்பட்டேன்.

“சினிமாவுக்கு ஒரு அஞ்சு நிமிஷம் லேட்டாப் போனா ஃபைன் ஒண்ணும் போட மாட்டாண்டா. கொஞ்சம் எறங்கு.”

“சொன்னாக் கேளுண்ணா, செருப்பெல்லாம் வாங்க வேண்டாம். வண்டிய வுடு.”

என் கோபம் கரை கடக்கப் பார்த்தது. “என்னடா தம்பி நீ, இப்படி மனிதாபிமானமே இல்லாம இருக்கியேடா, கஷ்டப் படறவங்களுக்கு நம்மாலான ஹெல்ப் பண்ணலன்னா நம்மல்லாம் என்னடா மனுஷங்க! சொல்றத கேளுடா. எறங்குடா.”

“நா சொல்றத நீ கேளுண்ணா, வண்டிய நிறுத்தாம ஓட்டு. அவனுக்குப் புதுச் செருப்பு தேவையில்லை.”

அவனுடைய பிடிவாதத்துக்குப் பணிந்து, சைக்கிளை வேண்டா வெறுப்பாய் அழுத்தினேன், “திரும்பத் திரும்ப அதத்தானடா சொல்ற. என்னடா தம்பி நீ இவ்ளோ மோசமாயிருக்க” என்று என்னுடைய வெறுப்புக்கு ஒரு சொல் வடிவம் கொடுத்தபடி.

முதுகுக்குப் பின்னால் தம்பியின் குரல் பொறுமையாய்க் கேட்டது. “ஸிக்னல்ல நிக்கிறப்ப என்னோட செருப்பக் கழட்டி அவனுக்குக் குடுத்துட்டேண்ணே.”

(ஆனந்த விகடன், 30.01.2005)

மாமா குடும்பத்துக்கும் எங்களுக்கும் பொருளாதாரத்தில் எஸ்கலேட்டர் வைத்தாலும் எட்டாது என்கிற உண்மையை மானபங்கம் செய்கிற மாதிரி, மாமா, சிங்கப்பூரிலிருந்து மாமியோடும் தன்னுடைய பதினாறு வயசுப் பாப்பாவுடனும் வந்தவர், எங்களுடைய ட்டு பெட்ரூம் எம்.ஐ.ஜி. ஃப்ளாட்டில் ஒரு வாரம் தங்கிப் போகவென்று வந்திறங்கியது அம்மாவுக்கும் சித்திக்கும் பெரிய புளகாங்கிதமாயிருந்தது.

ரெண்டு படுக்கையறைகளில், பாத் அட்டாச்டும் விசாலமுமாயிருந்தது சிங்கப்பூர்க் குடும்பத்துக்கு ஒதுக்கப்பட்டு, மற்ற சின்ன அறையில் அம்மா, சித்தி, நான் எல்லோரும் படுத்துக் கொள்ள ஏகமனதாய் முடிவெடுக்கப்பட்டது, அம்மாவாலும், சித்தியாலும். அம்மாவும் சித்தியும் முடிவெடுத்தால் அது ஏகமனதுதான்.

அப்பாவின் படுக்கை முன் ஹாலில். அப்பாவுக்கு அதில் கடுப்பு. பெட்ரூமுக்குள் அப்பாவுக்கு இட ஒதுக்கீடு செய்து விட்டு, தியாக சிந்தனையோடு நான் ஹாலில் படுத்துக் கொள்ள முன்வந்த போது சித்தி தடுத்தாட்கொண்டாள்.

‘‘பேசாம உள்ள வந்து படும்மா. அந்தப் பொண்ணு உள்ளயும் வெளியேயும் போய்கிட்டு வந்துக்கிட்டு இருப்பா. மாப்ள நீ, முன்னால படுத்துக் கெடந்தா நல்லாவாயிருக்கும்?’’

‘‘மாப்ளயா, யாரு இந்தப் பயலா!’’ என்று என்னைக் குறித்து அப்பா ஆச்சர்யப்பட்டார்.

‘‘புரியாத மாதிரி பேசறீங்களே அத்தான்’’ என்று சித்தி அப்பாவுக்குப் புரிய வைத்தாள்.

‘‘பையன அங்கயே விட்டுட்டு பொண்ண மட்டும் கூட்டிக்கிட்டு மெனக்கெட்டு அண்ணனும் அண்ணியும் சிங்கப்பூர்லயிருந்து வந்திருக்காங்க, வந்தவங்க சவேராலயோ அம்பாஸடர் பல்லவாலயோ தங்காம நம்ம வீட்ல வந்து ஒண்டிக்கிட்டிருக் காங்கன்னா, அதுக்கு என்ன அர்த்தம்?’’

‘‘என்ன அர்த்தம்?’’

‘‘அவங்க பொண்ண ஒங்ககிட்ட காட்டிட்டுப் போக வந்திருக்காங்கன்னு அர்த்தம்.’’

‘‘என்ட்ட ஏன் காட்டிட்டுப் போகணும்? எனக்குத்தான் ஒங்க அக்கா இருக்காளே. அப்படி ஒங்கக்கா மண்டைய கிண்டையப் போட்டுட்டான்னா, கொழுந்தியா நீ இருக்க...’’

சித்தியைச் சீண்டி விளையாடுவதில் அப்பாவுக்கு ஓர் ஆனந்தம். அப்பாவின் சீண்டுதலில் சில சமயம் சித்தி வாயடைத்துப் போகிறபோது, அம்மாவின் வாய் திறக்கும்.

‘‘ஆமா ஒங்களுக்கு எப்ப வெளையாடணும் எப்ப சீரியஸ்ஸா இருக்கணும்னு தெரியாது. நா மண்டையப் போடறதா இப்ப முக்கியம்?’’

அம்மா வாயைத் திறந்தவுடன் அப்பா ஸீரியஸ்ஸானார்.

‘‘நானா இப்ப வெளையாடிட்டிருக்கேன்? அக்கா தங்கச்சி நீங்க ரெண்டு பேருந்தான் இப்ப கேலிக் கூத்து பண்ணிட்டிருக்கீங்க. செகண்ட் இயர் படிக்கிற பொடிப்பயலுக்கு (நான் தான்) அக்கறையாப் பொண்ணு பாத்துட்டிருக்கீங்க. இவங் கல்யாணத்துக்கு ரொம்ப அவரசமா இப்ப?’’

‘‘ஆமா, என்னமோ இன்னிக்கிப் பொண்ணுபாத்து நாளக்கி நிச்சயதார்த்தம் வச்சி, மக்யாநாள் கல்யாணம் பண்ணிரப் போற மாதிரியில்ல பேசறீங்க! நம்ம கண்ணுல பொண்ணக் காட்டிட்டுப் போறதுக்கு கூட்டிட்டு வந்திருக்கார் அண்ணன். ஒறவு விட்டுப் போயிரக்கூடாதுன்னு நம்ம வீட்ல சம்மந்தம் பண்ண ஆசப்படறார்னு தெரியுது. சம்மதம்னு நாம தலையாட்டி வச்சோம்னா பொண்ணப் பெத்தவங்க நிம்மதியா ஊர்ப்போய்ச் சேருவாங்க. அப்புறம், கல்யாணம் மூணு வருஷமோ நாலு வருஷமோ, நாம எப்ப சொல்றோமோ அப்பத்தான்.’’

‘‘என்னமும் பண்ணிட்டுப் போங்க. எனக்கென்ன போச்சு. மொத்தத்துல நீங்க ரெண்டு பேரு சேந்து அவன் படிப்பக் கெடுத்துறாதீங்க. சும்மாவே நம்ம தவப்புதல்வன் மஹா புத்திசாலி...’’ என்று என்னுடைய சுய கௌரவத்தை நிமிண்டி விட்டு விட்டு வாபஸ் வாங்கிக் கொண்டார் அப்பா.

சின்ன வயசில் அப்பா சிவாஜி ரசிகர். படிக்கிற காலத்தில் க்லாஸ் கட் பண்ணிவிட்டுப் பார்த்த சிவாஜி படங்களின் தாக்கத்தில், படற்கையில் என்னைப்பற்றிக் குறிப்பிடும்போது, தவப்புதல்வன், நான் பெற்ற செல்வம், உத்தம புத்திரன், தெய்வமகன் என்றெல்லாம் பட்டங் கொடுத்துப் பரவசப் பட்டுக் கொள்வார்.

அப்பா புறமுதுகு காட்டிப் பின்வாங்கிய பின்னால் சித்தி திரும்பவும் ஸென்ட்டர் ஸ்டேஜுக்கு வந்தாள்.’’இந்தாம்மா, இப்படியே மசமசன்னு நிக்யாதே. அவ மொட்ட மாடியில இருக்கா. போய் ஒம் மூஞ்சியக் காட்டு. ஏதாவது பேச்சுக் குடு. ஒங்க காலேஜ் ஜோக்ஸ்ல ஒண்ணு ரெண்ட அவுத்து விடு. ஏய், எங்க போற?’’

‘‘மொட்ட மாடிக்கி சித்தி, நீங்க தான சொன்னீங்க?’’

‘‘அதுக்கு இந்த மூஞ்சியோடவா போவ? ஷேவ் பண்ணிக்கலியா இன்னிக்கி?’’

‘ஐயே, ஆம்பளப் பசங்க டெய்லியா ஷேவ் பண்ணிக்குவாங்க? இன்னிக்கித் தமிழ் சினிமா ஹீரோஸ் எல்லாம் இப்படித்தான் சொறசொற மூஞ்சியோட லவ் பண்றானுங்க சித்தி.’’

‘‘இவ சிங்கப்பூர்க்காரிம்மா. அங்க சைனாக்காரப் பசங்க எல்லாம் மொழுமொழுன்னுதான் இருப்பானுங்க. நீயும் அந்த மாதிரி இருந்தாத்தான் இவளுக்குப் புடிக்கும். நீட்டா ஷேவ் பண்ணித் தல வாரிக்கிட்டுப் போ. இதென்ன சட்ட பாக்கெட் கிழிஞ்சி தொங்குது. வேற நல்ல பேன்ட் ஷர்ட் போட்டுட்டுப் போ.’’

மாமாவும் மாமியும் ஷாப்பிங்குக்கு மவுன்ட் ரோடுக்குப் போகிறோம். தி.நகருக்குப் போகிறோம் என்று மகளை வீட்டில் விட்டுவிட்டுக் கிளம்பி விடுவதும், எல்லா ஃபிளாட்டுக்கும் பொதுவான மொட்டை மாடியில் போய் ஒரு நாற்காலி போட்டுக் கொண்டு ஏதாவது ஒரு இங்லீஷ் நாவலை வாசித்தபடி இவள் உட்கார்ந்திருப்பதும் ஒவ்வொரு சாயங்காலமும் நடக்கிற சங்கதி.

ஷேவ் பண்ணிக் கொண்டு, இருக்கிறதில் நல்ல உடுப்பை மாட்டிக் கொண்டு அம்மாவிடமும் சித்தியிடமும் ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு மாடிக்குப் படியேறினேன்.

என்னுடைய அண்மையை உணராமல் புஸ்தகத்தில் ஆழ்ந்திருந்தவளின் கவனத்தை ஈர்க்க, துணிச்சலாய், ஹலோ என்றேன்.

ரியாக்ஷன் இல்லை.

சிங்கப்பூரில் ஹலோ சொல்வார்களா, ஹாய் சொல்வார்களா என்று சித்தியிடம் கேட்டுப் பார்த்திருக்கலாம் என்று யோசித்துக் கொண்டு நான் நின்று கொண்டிருந்தபோது, பக்கத்தைப் புரட்டுகிற விநாடியில் பார்வையைத் திருப்பி என்னைப் பார்த்தவள், தடாலடியாய் முகம் மலர்ந்து சிரித்தாள்.

''இந்த ஷர்ட்டும் பான்ட்டும் ஒனக்கு ரொம்ப அழகாயிருக்கு. பர்ஃபக்ட் ஃபிட்டிங்.''

எனக்குப் பெருமை நிலை கொள்ளவில்லை. ஆடையைப் புகழ்ந்தாலென்ன, ஆளைப் புகழ்ந்தாலென்ன!

''தாங்க்யூ தாங்க்யூ'' என்று நான் உருகிக் கொண்டிருந்தபோது இவள் ஒரு தினுசான கேள்வியொன்றை என்மேல் ஏவினாள்.

''ஆமா, ஆல்ட்டர் பண்ணிப் போட்டுக்கிட்டியா, இல்ல சைஸ் ஒனக்கு சரியாவே ஃபிட் ஆச்சா?''

''ம்?''

''எங்க அண்ணாவோட பழைய பான்ட் ஷர்ட் தானே இது? அவன் டிஸ்கார்டு பண்ணின டிரஸ்ஸையெல்லாம் பண்டல் கட்டி ரெண்டு வருஷம் முந்தி டாடி இந்தியாவுக்கு வந்தபோது நானும் மம்மியுந்தான் குடுத்து விட்டோம். அவர் எங்கேயாவது ஆர்ஃபனேஜ்ல குடுத்திருப்பார்னு பாத்தா, இங்கயே குடுத்துட்டிருக்கார். பரவாயில்ல ஒனக்காவது யூஸ் ஆகுதே.''

என் முகத்துப் புன்னகை ஆவியாகி மறைந்து போய், அவளுடைய ஒவ்வொரு வார்த்தையும் என்னுடைய ஒவ்வொரு ஆடையை அவிழ்த்துப்போட, அவள் முன்னால் நிர்வாணமாகிக் கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

உள்ளாடைகள் இன்னும் பாக்கியிருந்தன. உள்ளாடைகளை உருவிப் போடவும் வார்த்தைகள் கைவசம் (அல்லது வாய் வசம்) வைத்திருந்தாள்.

''ஆமா, நானும் இங்க வந்த நாள்லயிருந்து ஒன்ன நோட் பண்ணிட்டுத்தான் இருக்கேன். எங்கண்ணாவோட டிரஸ்களத்தான் மாத்தி மாத்தி நீ டெய்லி போட்டுக்கிட்டுத் திரியற. ஒனக்குன்னு ஒரிஜினல் டிரஸ் எதுவும் கெடையாதா? தீபாவளிக்கி, தைப்பூசத்துக்குக்கூட ஒங்க டாடி பாவம் ஒனக்குப் புதுத் துணி எடுத்துத் தரமாட்டாங்களா?''

வெளியாடை உள்ளாடை எல்லாம் களைந்து முழு நிர்வாணமாய் நான் கையது கொண்டு மெய்யது பொத்திக் கூனிக் குறுகிச் சுருங்கிப் போய் ஒரு மினியேச்சர் மனிதனாய் இந்த சிங்கப்பூர்க்காரி முன்னால்.....

''இருட்டறதுக்கு முன்னால நா இத வாசிச்சு முடிக்கணும்'' என்று புஸ்தகத்தில் திரும்பவும் பார்வையைப் பதித்தாள்.

''நீ கிளம்பலாமே, சூடு போதாதா?'' என்று அர்த்தம்.

முற்றும் துறந்தவனாய் நான் திரும்பி நடந்தேன். பார்வை மங்கியவனாய், சிரம் தாழ்ந்தவனாய். மாடிப்படியின் மேல்ப்படியில் கால் வைத்தபோது தோளில் ஒரு கை வந்து விழுந்தது. அழுத்தமாய், ஆதரவாய்.

அப்பா.

சிகரெட் புகைக்க மொட்டை மாடிக்கு வந்திருப்பார். சிங்கப்பூர்க் காரியின் குரலைக் கேட்டுப் பின் வாங்கி நின்றிருப்பார். அவளுடைய ஏளன வசனங்களைக் கேட்டிருப்பார்.

தலையை நிமிர்த்த த்ராணியில்லாமல், மௌனமாயிருந்தேன்.

என் கழுத்தில் கை போட்டுத் தன்னை நோக்கி என்னை இழுத்து, வாழ்க்கையில் முதன் முறையாய், ஒரு தந்தையாய் என்னை அணைத்துக் கொண்டார் அப்பா.

(கணையாழி, ஃபிப்ரவரி 2005)

அவளைப் பார்த்ததும் அசடு வழிவதைத் தவிர்க்கப் பிரயத்தனப் பட்டேன். நடிப்பு வரவில்லை.

“யார்ங்க அது” என்றாள்.

“அது, நம்ம செல்வராஜ்.”

“நம்ம செல்வராஜா, அது யார்ங்க நம்ம செல்வராஜ்?”

“நம்ம எக்ஸ் ஸ்டாஃப், நம்ம கடையில வேல பாத்த பையன். அதுக்குள்ள மறந்துட்டியா நீ?”

“என்னமோ கவர் குடுத்துட்டுப் போன மாதிரியிருந்ததே? இன்விடேஷனா? அவனுக்குக் கல்யாணமாமா?”

“ஆமா” என்கிற ஒரே வார்த்தையில் நான் தப்பித்திருக்கலாம். முடியவில்லை.

நடிக்கத்தான் வரவில்லை, இழவு பொய் சொல்லவாவது வருகிறதா!

“என்னன்னு காட்டுங்களேன்” என்று என்னுடைய கையிலிருந்து கவரை வாங்கிப் பிரித்துப் பார்த்தவள், அதிலிருந்த கரன்ஸியைப் பார்த்ததும் முகம் இறுகினாள்.

“அவன்ட்ட கைமாத்து வாங்கினீங்களா?”

எனக்கெதிரே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு என் முகத்தை ஊடுருவினாள். அவளுடைய பார்வையை எதிர்கொள்ளத் தயக்கமாயிருந்தாலும், வார்த்தைகளை எதிர் கொண்டேன்.

“கைமாத்துன்னு சொல்லாத. அது அநாகரிகமான வார்த்த. இது கடன்.”

“ஏங்க, நம்மகிட்ட வேல பாத்த ஒர்த்தன்ட்ட கை நீட்டிக் கடன் வாங்கறதுக்கு ஒங்களுக்கு கேவலமாயில்லியா” என்றவள். சட்டென நான் தலை நிமிர்ந்து அவளைப் பார்த்ததும், சின்ன ஒரு பதற்றத்துடன், “ஸாரி, ஸாரி” என்றாள்.

“நா சொன்னதுல, கேவலமாயில்லியாங்கற கடைசி வார்த்தைய டிலிட் பண்ணிட்டு, சங்கடமாயில்லியாங்கற வார்த்தையப் போட்டுக்கோங்க, ப்ளீஸ்” என்றாள், என் கைகளைப் பற்றியபடி.

நான் சிரித்தேன். அவளுந்தான். தற்காலிக இறுக்கந் தளர்ந்து ரெண்டு பேரும் சிரித்து முடித்தபின், இப்போது உரையாடலைத் தொடர வேண்டியது நீதான் என்று உணர்த்துகிற மாதிரி இவள் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“சங்கடமாத்தான் இருக்கும்மா” என்று ஒப்புக்கொண்டேன்.

“என்ன செய்றதும்மா, ரெண்டாந்தேதியோ மூணாந்தேதியோதான் அக்காட்டயிருந்து டிடி வரும். இன்னிக்கி முப்பத்தொண்ணு.”

“ஒரு மூணு நாள் அட்ஜஸ்ட் பண்ணிக்க முடியாதா? அவன் நம்மளப் பத்தி என்ன நெனப்பான்!”

“ஒண்ணும் நெனக்ய மாட்டான். அவன் ஒரு விஸ்வாசமான ஊழியனாயிருந்தவன். இப்ப வேற ஒரு வேலையில நல்லா சம்பாதிக்கிறான். மூணு நாள்ல நா திருப்பிக் குடுத்துருவேன்னு அவனுக்குத் தெரியும். இது ஒரு எமர்ஜென்ஸின்னும் அவனுக்குத் தெரியும்.”

“அப்படி என்னங்க எமர்ஜன்ஸி?”

“நேத்தே சொன்னேன்ல, இன்னிக்கி சாயங்காலம் க்ளப் மீட்டிங் இருக்கு. இன்னிக்கி மீட்டிங்ல மெம்பர்ஸ் எல்லாம் ஆளுக்கு ஆயிரம் ரூவா குடுக்கணும்னு சொன்னாங்க. ஆர்ஃபனேஜ் ப்ராஜக்ட்க்காக....”

“அது சரி, ஒங்க க்ளப் மெம்பர்ஸெல்லாம் வசதியானவங்க. நமக்கு இது இப்பப் பெரிய தொகையில்லியா! இந்த க்ளப்பே நமக்கு இப்ப லக்ஷரிதானேங்க! நாம நொடிச்சுப் போனவங்கன்னு ஒங்க க்ளப் மெம்பர்ஸ்க்குத் தெரியுந்தானேங்க?”

“தெரியுந்தான். ஆனாலும் என்ன ஓரங்கட்டிராம மரியாத குடுத்து வச்சிருக்காங்க. நொடிச்சிப் போனவன்னு நெத்தியில லேபில் ஒட்டிக்கிட்டு அலஞ்சேன்னா, அப்பறம் க்ளப்ல ஒரு பய நம்மள மதிக்க மாட்டான். அதுவும் போக, மை டார்லிங், இந்தக் கஷ்ட காலம் இன்னும் ரெண்டு மாசமோ மூணு மாசமோ தான். சினிமா ப்ரடியூஸர்ஸ் மூணுபேர்ட்ட கத சொல்லியிருக்கேன். அதுல ஒண்ணு க்ளிக் ஆனாக்கூட போதும், ஐயா எங்கேயோ போயிருவார். ஆகையினால, நீ என்ன செய்ற, எதப்பத்தியும் கவலப்படாம ரிலாக்ஸ் பண்ற. ஈவ்னிங் ரெடியாகி நாம ரெண்டு பேரும் க்ளப் மீட்டிங்க்குப் போறோம். ஒக்கே மேடம்?”

“ஒக்கே பாஸ்” என்று எழுந்து கொண்டவள் செல்லமாய் என் தலைமுடியைச் சிலுப்பி விட்டு விட்டுக் கிச்சனுக்குள் புகுந்து கொண்டாள்.

நொடித்துப் போனவன்! பத்துமாசம் முன்பு வரை, மூவாயிரம் சதுர அடியில், மாசம் எழுபதாயிரம் வாடகையில், அண்ணாநகரில் ஓர் ஏஸி டிப்பார்ட்மென்ட் ஸ்டோரின் உரிமையாளன்.

இன்றைக்கு, நொடித்துப் போனவன்!

வீடு, கார் எல்லாவற்றையும் விற்று, மார்வாடிக் கடன்களை அடைத்துவிட்டு, வருமானமில்லாமல், ஒரு ஸிங்கிள் பெட்ரூம் வாடகை ஃப்ளாட்டில் இப்போது வாசம்.

பம்பாயிலிருக்கிற அக்கா, தன்னுடைய டாக்டர் சம்பாத்தியத்தில், அத்தானுக்குத் தெரியாமல் மாசமாசம் அனுப்புகிற தொகையில் வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த சாபத்திலிருந்து மீண்டு, தம்பி எப்படியும் மேலே வந்து விடுவான் என்பதில் அக்காவுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை.

அன்புள்ள அக்கா. கல்யாணமாகிப் பன்னிரண்டு வருஷங்களாகியும் குழந்தையில்லையென்பது பெரிய மனக்குறையாயிருந்தது. இப்போது அதுவே ஒரு நல்ல விஷயமாய்த் தெரிகிறது.

இவளுக்கு நான் குழந்தை, எனக்கு இவள் குழந்தை. பத்திரிகைகளுக்குக் கதையெழுதுவதில் மாசம் ஐநூறு அருநூறு கிடைக்கும். மூணுமாசமாய் அந்த வருமானமும் இல்லை. ஆறுமாசமாய் சினிமாக் கம்பெனிகளுக்கு அலைச்சல்.மூணு தயாரிப்பாளர்கள் நம்பிக்கை தந்திருக்கிறார்கள்.

சாயங்காலம் ஆட்டோவில் போகிறபோது, நம்ம ஆள் ரொம்ப ஆனந்தமாயிருந்தாள். "இன்னும் ரெண்டு மாசமோ மூணு மாசமோதான், ஐயா எங்கேயோ போயிருவார்" என்று காலையில் நான் சொன்னதில் பூரண விஸ்வாசத்தோடிருக்கிறாள். ஆண்டவனே, இவளுடையவும் என்னுடையவும் நம்பிக்கைகளை நிறைவேற்றி வை.

"மத்யானம் நீங்க குட்டித்தூக்கம் போட்டுட்டிருந்தப்ப, ஒங்க க்ளப் ப்ரஸிடன்ட்டோட மிஸஸ் ஃபோன் பண்ணாங்க" என்று பெருமையாய்ச் சொன்னாள்.

"இன்னிக்கி சாயங்காலம் ஃபாமிலி மீட்டிங், நீங்க கட்டாயம் வரணும்னாங்க. ஏழெட்டு மாசமா நீங்க ஃபாமிலி மீட்டிங்குக்கு என்னக் கூட்டிட்டே போறதில்ல, ஏங்க? இனி ஒவ்வொரு மீட்டிங்குக்கும் நா கட்டாயம் வருவேன், என்ன?"

குரலில் உற்சாகம் கொப்பளித்தது.

பிறகு என் பக்கத்தில் இன்னும் நெருங்கி, என் காதருகில் கேட்டாள், "ஆமா, என்னோட தலைவர் எப்ப ப்ரஸிடென்ட் ஆகப்போறாராம்?"

ப்ரஸிடென்ட்!

ரெண்டு வருஷத்துக்கு முந்தியே என்னைத் தேர்ந்தெடுத்து வைத்திருந்தார்கள். பதவியேற்பதற்கு மூணுமாசங்களுக்கு முந்திதான் வியாபாரத்தில் தொய்வு ஏற்பட்டுக் கொண்டிருப்பது உறைக்க ஆரம்பித்தது. இந்தத் தருணத்தில் சங்கத்தின் தலைவர் பதவியையெல்லாம் எடுத்துக் கொள்வது சரிப்பட்டு வராது என்று, பாபுவிடம் விண்ணப்பம் வைத்து, அவரைத் தலைவராக்கி விட்டேன். அதன் பிறகு சுந்தரம், இந்த வருஷம் மோகன், அடுத்த வருஷம் அனந்த கிருஷ்ணா.

அனந்த கிருஷ்ணாவையடுத்து நான்தான் என்று அதிகாரபூர்வமில்லாத தகவல்கள் தெரிவிக்கின்றன. இனியும் நான் கழண்டு கொண்டிருந்தால் க்ளப்பிலிருந்தே கழட்டி விட்டுவிடுவார்கள்.

ஆனது ஆச்சு, இன்னும் ஒரு மூணு மாசம் மூச்சைப் பிடித்துக் கொண்டிருந்தால், சினிமாவில் முத்திரை பதிக்க ஆரம்பித்து விடுவேன். கதாசிரியனாய் உள்ளே நுழைந்து, பாடலாசிரியனாய் ஓர் அவதாரமெடுக்கவும் திட்டமிருக்கிறது.

இப்பவெல்லாம் சினிமாவில் பாட்டா எழுதுகிறார்கள்? ஐயா எழுத ஆரம்பித்தால் தான் பட்டுக்கோட்டை, கண்ண தாசனுடைய பொற்காலம் திரும்பவும் தமிழ் சினிமாவில் விடியும். இப்படியே கொஞ்சங் கொஞ்சமாய்த் தமிழ் சினிமாவை ஆக்கிரமித்து, யார் கண்டது, நான் இந்த கிளப்புக்கு ப்ரஸிடென்ட்டாய் ஆகிறபோது ஒரு சினிமா டைரக்டராகவும் ஆகியிருப்பேன்! இந்த க்ளப்பின் மற்ற உறுப்பினர்களுக்கு இணையாய்ப் பொருளாதாரத்தில் மீண்டும் உயர்ந்திருப்பேன்.

இதை இவளிடம் சொன்னபோது, ஆட்டோ டிரைவர் எங்களை அவதானிக்க மாட்டார் என்று உறுதி செய்து கொண்டு என்னை இறுக்கிப் பிடித்துக் கன்னத்தில் தன் அதரங்களைப் பதித்தாள். என் தோளில் தலை சாய்த்து, ஹோட்டல் போய்ச் சேரும் வரை மெய்மறந்த சந்தோஷத்திலிருந்தாள்.

நட்சத்திர ஹோட்டல் போர்ட்டிகோவில் ஆட்டோவில் போய் இறங்குவது அழகாயிருக்காது என்று வெளியிலேயே இறங்கிக் கொண்டோம். முன்னரே திட்டமிட்டு, காலத்தோடு வந்து சேர்ந்து விட்டது ரொம்ப நல்லது. காரில் வந்து இறங்குகிற மற்ற அங்கத்தினர்கள் எங்களுடைய வருகையைப் பரிகாசமாய்ப் பார்க்க வாய்ப்பில்லை.

மீட்டிங் முடிவுக்கு வருகிற தருவாயில், சங்கத்தின் பொருளாளர் எழுந்து, ஒவ்வொருவரிடமும் ‘‘அந்த ஆயிரம் ரூபாயை’’ நினைவுபடுத்தியபடி ஆசனம் ஆசனமாய் வந்தார். தயாராய்க் கொண்டு வந்திருந்த செக்கை எடுத்து நீட்டினார்கள் சிலர். வாலட்டிலிருந்து சலவை நோட்டுக்களை எடுத்துக் கொடுத்தார்கள் சிலர். அடுத்த மீட்டிங்ல குடுத்துர்றேன் சார் என்றார் ஒருவர். செக்கை எழுதி மறந்து வச்சிட்டு வந்துட்டேங்க, ஒங்களுக்குக் கூரியர்ல அனுப்பிச்சிர்றேன் என்றார் இன்னொருவர்.

நான் என்னுடைய வாலட்டைத் தொட்டுப் பார்த்துக் கொண்டேன். ஆயிரம் ரூபாய்.இன்றைய நிலையில் ஆயிரம் ரூபாய் ஓர் ஆடம்பரச் செலவுதான். நெஞ்சில் ஒரு நெருடல் ஏற்படுவதைத் தவிர்க்க இயலவில்லை. ஒரு காலத்தில் ரிஸர்வ் பாங்க் ரிலீஸாக ஐயாயிரத்துக்குக் குறையாத புத்தம்புது நோட்டுக்கள் கொலுவிருந்த வாலட்டில் இன்றைக்கு கைமாத்து வாங்கிய ஆயிரம் ரூபாய்! அதுவும் சில நிமிடங்களில் ரிலீஸாகிவிடப் போகிறது.

அட விடப்பா, இது ஒரு டெம்பரரி ஸெட் பேக் தானே! இன்னும் ரெண்டே ரெண்டு அல்லது மூணேமூணு மாசந்தானே. அப்புறம், தமிழ் சினிமாவில் ஒரு கதாசிரியன், கவிஞன், அப்புறம் சில மாதங்களில் ஒரு டைரக்டர். தமிழ்நாடே உன்னைப் பேசப்போகிறது.

வெகு விரைவில், இங்கே உட்கார்ந்திருக்கிற எல்லாருக்கும் சமமாய், அல்லது இவர்களைவிட உயரமாய்ப் பொருளாதாரத்தில் நீ விஸ்வரூபமெடுக்கப் போகிறாய். நெஞ்சை நிமிர்த்து, வாலட்டை வெளியே எடு.

எடுத்தேன்.

பொருளாளர் என் ஆசனத்தை சமீபித்தார்.

‘‘ஹலோ சார்’’ என்றார். ‘‘குட் ஈவ்னிங் மேடம்’’ என்றார்.

‘‘மொதல் ஆளா வந்துட்டீங்க போலயிருக்கு! ப்ரைஸ் ஒண்ணு ஒங்களுக்கு இருக்கு. ப்ரஸிடென்ட் மறந்தாலும் மறந்துருவார், டின்னருக்கு முந்தியே நீங்க ஞாபகப்படுத்தி வாங்கிக்கிருங்க’’ என்று என் கையைப் பற்றிக் குலுக்கிவிட்டு என்னைக் கடந்து போனார், அடுத்த ஸீட்டுக்கு.

‘‘ராஜேந்தர், நீங்க் தவ்ஸண்ட் ருப்பீஸ் தரணும் ஆர்ஃபனேஜ் ப்ராஜக்ட்க்கு. காஷ் தர்றீங்களா, செக்கா?’’ என்றார், அடுத்த ஸீட் காரரிடம்.

‘‘என்ன சார் இது, அவர விட்டுட்டீங்க, என்ட்ட வந்து கேக்கறீங்க!’’ என்ற ராஜேந்தரிடம் பொருளாளர் சொன்னது சுற்று வட்டாரத்தில் துல்லியமாய்க் கேட்டது.

‘‘அவரேப் பாவம் கஷ்டப்பட்டுட்டிருக்கார், அவர்ட்ட கேக்க வேண்டாம், விட்டுருவோம்னு ப்ரஸிடென்ட் சொல்லிட்டார் ராஜேந்தர். ரொம்ப ப்ரஷர் குடுத்தா க்ளப்ப விட்டு ஓடிப் போனாலும் போயிருவார்.’’ சுற்றிலும் சில முகங்கள் சிக்கனமாய் சிரித்தன.

என்னுடைய முகத்தில் சில வினாடிகளுக்கு முன்பு கருக்கொண்டிருந்த புன்னகை இப்போது செத்துக் கொண்டிருந்தது. வாலட் கனத்துக் கிடப்பதாய்ப் பட்டது, என் இதயத்தைப் போல. பான்ட் பாக்கெட்டிலிருந்து வாலட்டை உருவப் பணிக்கப் பட்டிருந்த கை, அதை உள்ளே தள்ளி அழுத்தியது.

என்னுடைய அந்தக் கையின்மேலே இன்னொரு கை படர்ந்து அழுத்தியதை உணர்ந்தேன்.

இவள்.

அந்தப் பக்கம் பார்வையைத் திருப்ப எனக்கு த்ராணியில்லை. மீட்டிங் முடிந்தது.பெண்கள் ஸூப்பின் பக்கமும், ஆண்கள் கோப்பைகளின் பக்கமும் நகர்ந்தார்கள்.

‘‘போகலாமா’’ என்றேன், அவள் பக்கம் திரும்பாமலேயே.

‘‘ம்’’ என்று சம்மதம் தந்தாள், என் புஜத்தைப் பற்றியபடி.

ஆட்டோவில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது, என்னை மிக நெருங்கி உட்கார்ந்தாள். என் தலைமுடியைச் சிலுப்பி விட்டாள்.

பிறகு என்னைத் தன்னோடு சேர்த்துக் கொண்டு கன்னத்தோடு கன்னம் இழைய, ‘‘ச்சியர் அப் ஐ ஸே’’ என்று தேற்றினாள். என் கன்னத்தில் படர்ந்து பிசுபிசுத்தது அவளுடைய கண்களின் ஈரம்.

(கல்கி, 31.12.2006)

ஆள் அரவமில்லாத பாளையங்கோட்டை ரயில்வே ஸ்டேஷனில் ஒரு பெஞ்ச்சில் தன்னந்தனியாய் உட்கார்ந்து நான் பலவித யோசனைகளால் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்த போது, கிட்டத்தட்ட இதே பெஞ்ச்சில், இருபதாம் நூற்றாண்டில், சிவராமனோடு உட்கார்ந்து மணிக்கணக்கில் வெட்டி அரட்டை அடித்துக் கொண்டிருந்த கவலைகளற்ற வசந்த காலம் நினைவுக்கு வந்தது.

ஊருக்கு ஒக்குப்புறமான இந்த ரயில்வே ஸ்டேஷன், கட்டபொம்மன் சிலையடிவாரம், அசோக் டாக்கீஸ், சங்கரம்பிள்ளைக் கடை முக்கு, மூளிக் குளக்கரை, சரோஜினி பார்க், மரியா கான்ட்டீன் என்று பலப்பல சந்திப்பு ஸ்தலங்களில் சேக்காளிகளோடு அரசியல் பற்றி, சினிமா பற்றி, சாராட்டக்கர் காலேஜ் பெண்களைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்த விடலைப் பருவம் அது.

பாளையங்கோட்டையை விட்டால் திருநெல்வேலி ஜங்ஷன், டவுன், தச்சநல்லூர். அவற்றைத் தாண்டி வேறு உலகமே தெரியாது. மூன்று தலைமுறைகளாய் வாழ்ந்து கொண்டிருக்கிற ஊர். இளைய தலைமுறைக்கு ஒத்து வரவில்லை. புலம்பெயர்ந்து சிங்காரச் சென்னையில் குடியேறியே ஆக வேண்டுமென்று மூன்று பிள்ளைகளுமே கொடி பிடிக்கிறார்கள், பெற்றவளின் ஆசீர்வாதத்தோடு.

“என்னப்பா நீங்க இன்னும் சுத்தப் பட்டிக்காடா இருக்கீங்க. ஐட்டில ஒலகம் ஹைட்டெக்காப் போய்ட்டு இருக்கு, அதோட சேந்து நானும், ஐ மீன் நாமளும் முன்னேற வேண்டாமா? மெட்ராஸ்ல போய் இருந்தாத்தான் அது முடியும். யோசிக்காதீங்கப்பா” என்கிறான் பெரிய பையன்.

ஹைட்டெக்காய் ஒரு சென்னை சிநேகிதியை இன்ட்டர்நெட் மூலம் அவன் வசீகரித்து வைத்திருக்கிற ரகசியத்தை நம்ம வீட்டுக்காரி என் காதில் போட்டு வைத்து விட்டாள் என்கிற விவரம் அவனுக்குத் தெரியுமோ தெரியாதோ!

சின்னவன் ஸ்கூல் கிரிக்கெட் டீமில் இருக்கிறான். சென்னைக்குக் குடிபெயர்ந்தால் தான் அவன் ஸ்டேட் லெவலில் ஷைன் பண்ண முடியும் என்று தீவிரமாய் நம்புகிறான்.

“நீ ஷைன் பண்றதுக்கு நா ஃபைன் கட்டணுண்டேய். மெட்ராஸ் ஸ்கூல்கள்ள ப்ளஸ் ஒன்ல சேர்றதுக்கு டொனேஷன் எவ்ளோ குடுக்கணும் தெரியுமா ஒனக்கு?” என்கிற என்னுடைய புலம்பல் அவனிடம் எந்தப் பின்விளைவையும் ஏற்படுத்தவில்லை.

“இந்தப் பாளையங்கோட்ட இக்னேஷியஸ் கான்வென்ட் போரடிக்கிப்பா” என்கிறாள் கடைக்குட்டி.

“மெட்ராஸ்க்குப் போய், ஜெயலலிதா படிச்ச சர்ச் பார்க் கான்வென்ட்ல” படிக்கணுமாம் அவளுக்கு.

இந்த மூணுக்கும் வெளியிலிருந்து ஆதரவு கொடுப்பது அவங்க அம்மா. இலக்கிய ஆர்வம் பீறிட்டு, இப்போ ரெண்டு வருஷமாய்த் தமிழ்ச் சிறுகதைகளும் கவிதைகளும் எழுத ஆரம்பித்திருக்கிற நம்ம சம்சாரம். அவள் வாரப் பத்திரிகைகளுக்கு அனுப்பிய இலக்கியப் படைப்புகள் அத்தனையும் பத்திரமாய்த் திரும்பி வந்து சேர்ந்து விட்டன.

‘‘சே, எவ்ளோ கஷ்டப்பட்டு எழுதினாலும் எல்லாமே திரும்பி வந்துருதே’’ என்று அவள் வருத்தப்பட்டதற்கு நான் சொன்னேன், ‘‘இனி ஸ்டாம்ப் வச்சு அனுப்பாத, அப்பத்தான் திரும்பி வராது’’ என்று.

அவள் எதிரணியில் இணைந்ததற்கு என்னுடைய நக்கலும் ஒரு காரணம். தவிர, மெட்ராஸில் போய் இருந்து கொண்டு, ஒவ்வொரு பத்திரிகை ஆஃபீஸாய்ப் படையடுத்துத் தன் படைப்புகளை எப்படியாவது அச்சில் பார்த்துவிட வேண்டும் என்கிற ஹிடன் அஜண்டாவும் அவளிடம் உண்டு.

யார் எப்படி நெருக்கடி கொடுத்தாலும் பாளையங்கோட்டையை விட்டுப் புலம் பெயர்வதில்லை என்கிற என்னுடைய உறுதி எத்தனை நாள் தாக்குப் பிடிக்கும் என்கிற சந்தேகத்தோடயே தெக்கு பஜார், வடக்கு பஜார் வழியாய்ப் பொடி நடையாய் வீடு வந்து சேர்ந்தேன்.

ராத்திரி திரும்பவும் எனக்கு மூளைச் சலவை ஆரம்பமானது. ‘‘இப்படியே நாட்களத் தள்ளிக்கிட்டே போகாம, புத்திசாலித்தனமா ஒரு முடிவுக்கு வாங்கப்பா’’ என்றான் மூத்தவன்.

‘‘வாழ்க்கையில மேல மேல முன்னேறணும்னா, ஒரு ஸ்டேஜ்க்கு மேல ஸிட்டிக்கி ஷிஃப்ட் பண்ணிரனும்ப்பா. இந்த ஊர்ல எல்லாம் முன்னேற்றத்துக்கு இனி ஸ்கோப்பே இல்ல.’’

சின்னவன் வீட்டுக்குள்ளேயே வெறுங்கையால் மட்டை விளாசிக் கொண்டிருந்தான். இவனுடைய வீச்சுக்கு சென்னையின் விசாலம் தேவையாம். கடைக்குட்டி மூஞ்சியைத் தூக்கி வைத்துக் கொண்டு மூலையில் உட்கார்ந்திருந்தது.

‘‘நாங்க நாலுபேரும் எதிர்க்கட்சியாயும் நீங்க ஆளுங்கட்சியாவும் இருக்கீங்க’’ என்று ஆரம்பித்தாள் என்னவள்.

‘‘நீங்க நாலு பேரும் சரி, நா ஒரு ஆளும் சரி. நா குடும்பத் தலைவனாக்கும்!’’ என்று நான் காலரை உயர்த்தி விட்டுக் கொண்டேன்.

‘‘ஸோ, இப்ப ஸ்டேல்மேட்ங்றீங்க!’’

‘‘அப்படித்தான் வச்சிக்க.’’

‘‘அப்ப, நம்ப குடும்பத்துலயிருக்கிற ஆறாவது ஆளக் கேப்போம். ஆறாவது ஆள் என்ன சொல்லுதோ அதான் ஃபைனல்.’’

இந்த வீட்டுச் செல்லப் பிள்ளையான அந்த ஆறாவது ஆளை இவர்களெல்லாரும் சேர்ந்து எனக்கெதிராய்த் தயார்ப்படுத்தி வைத்திருப்பார்கள் என்கிற நியாயமான சந்தேகம் எனக்கிருந்தாலும், ஜனநாயகக் கோட்பாடுகளுக்குக் கட்டுப்பட வேண்டியவனானேன்.

‘‘குட்டப்பா’’ என்று குரல் கொடுக்கப்பட்டதும் குடுகுடுவென்று ஓடி வந்து எல்லோர் முன்னிலையிலும் பிரசன்னமானான் ‘‘ஆறாவது ஆள்’’.

மூணு வயசுப் பாமரேனியன்.

‘‘குட்டப்பா, நாம மெட்ராஸ்க்கு ஷிஃப்ட் பண்ணனும்னு சொல்லுதியா, வேணாம்னு சொல்லுதியா?’’

வவ் வவ் வென்று குரல் கொடுத்துச் சம்மதத்தையும் சந்தோஷத்தையும் வெளிப்படுத்தினான் குட்டப்பன்.

''ஹை, குட்டப்பன் சரி சொல்லிட்டான்!'' என்றொரு கரகோஷம் எழுந்தது.

சபையோரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு குட்டப்பனிடம் நான் பேசினேன். ''குட்டப்பா, வேண்டாம்னு சொல்லுடா, ஒனக்கு ஐஸ்க்ரீம் வாங்கித் தர்றேண்டா.''

''லஞ்சம் லஞ்சம்'' என்று கோரஸ் எழுந்தது.

ஆனாலும், ஐஸ்க்ரீமுக்குக் குட்டப்பன் மசியவில்லை. தலையைத் தாழ்த்தி ம்ம்ம் மென்று முனகினான். தோல்வியை நான் ஒப்புக் கொண்டே ஆக வேண்டிய நிர்பந்தம்.

அடுத்த கட்டமாய், எமிக்ரேஷன், மற்றும் பயணத் திட்டங்கள் பற்றிய கலந்துரையாடல் நடந்தது.சென்னையில், நிரந்தரமாய்க் குடியேறிவிடப் போவதால், வாடகை வீடெல்லாம் வேண்டாம், மூணு பெட்ரூம் ஃப்ளாட் ஒன்றைக் கிரயம் பண்ணி வாங்கி விடுவது என்று பெரும்பான்மை முடிவு எடுக்கப்பட்டது.

இந்தப் பாளையங்கோட்டை வீட்டை விற்று விடுவது என்கிற தீர்மானத்தை நான் வீட்டோ செய்து தடுத்து விட்டேன். இப்போதைக்கு இந்த வீட்டை விற்பதில்லை, பூட்டி விட்டுப் போய்விடுவது. வாடகைக்கு விடுவதா, விற்று விடுவதா என்பதைப் பிற்பாடு யோசித்துக் கொள்ளலாமென்று ஏகமனதாய் முடிவெடுக்கப்பட்டது.

எப்படியானாலும், இந்த வருஷ தீபாவளிக்கு நாங்கள் சென்னைவாசிகள் என்று தீர்மானமானது.பெரியவனும் நானும் சென்னைக்கு வந்து ஒரு வாரம் தங்கியிருந்து, அண்ணா நகரில் புதிதாய்க் கட்டி முடிக்கப்பட்டிருந்த, நூற்றிச் சொச்சம் ஃப்ளாட்களைக் கொண்ட விசாலமான ஆடம்பரக் காம்ப்ளக்ஸில் மூணாவது தளத்திலொரு மூணு பெட்ரூம் ஃப்ளாட்டை முப்பது லட்சத்துக்கு முடித்தோம்.

பாளையங்கோட்டையைக் காலி செய்கிற துக்க நாளில், ஸ்டேஷனுக்குப் போவதற்குக் குட்டப்பன் உட்பட எல்லோரும் டாக்ஸியில் ஏறிக் குதூகலமாய்க் காத்திருக்க, பனித்த விழிகளோடும் கனத்த இதயத்தோடும் நான் கடைசிப் பூட்டைப் போட்டுப் பூட்டிவிட்டு வண்டியேறினேன்.

புத்தம் புது ஃப்ளாட்டும், காலனியின் சூழ்நிலையும் குட்டப்பன் உட்பட எல்லோருக்கும் பிடித்துப் போனது. சிங்காரச் சென்னையின் சிருங்காரக் கனவுகளோடு எல்லோரும் புளகாங்கிதத்திலிருந்த வேளையில் நிகழ்ந்தது முதல் பின்னடைவு. சர்ச் பார்க்கில் கடைக்குட்டிக்கு ஸீட் கிடைக்கவில்லை.

ஆனால் ஆச்சர்யமென்னவென்றால், சென்னை விஜயம் சர்ச்சையிலிருந்த போது மூஞ்சியைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தவள், சர்ச் பார்க்கில் இடங்கிடைக்காததைப் பெரிய தோல்வியாய்ப் பார்க்கவில்லை.

''அதுக்கென்னப்பா, இதவிட நல்ல ஸ்கூல் மெட்ராஸ்ல இப்ப எத்தனையோ வந்துருச்சாம். என்னோட நல்ல மார்க்குக்கு ஒரு நல்ல ஸ்கூல்ல எனக்கு நிச்சயமா எடம் கிடைக்கும்.''

எங்களுடைய ஃப்ளாட் அமைந்திருக்கிற விசாலமான வளாகம், பார்க், நீச்சல் குளம், ஜிம், டென்னிஸ் கோர்ட் என்று அமர்க்களமாயிருந்தது.

இளையவன் திடுதிடுதிப்பென்று ஒரு நாள் புத்தம் புதிய டென்னிஸ் ராக்கெட்டுடன் வந்து நின்றான்.கேள்விக்குறியாய் நான் அவனைப் பார்த்ததுற்கு, ''அப்பா நா கட்சி மாறிட்டேம்ப்பா'' என்று சிரித்தான்.

க்ரிக்கெட்டிலிருந்து டென்னிஸ்க்குத் தாவிவிட்டானாம். இந்த வளாகத்தில், டென்னிஸ் கற்றுத் தருவதற்கு ஒரு பயிற்சியாளர் வருகிறாராம். அவரிடம் சிஷ்யனாய்ச் சேர்ந்து விட்டானாம்!

இந்த ரெண்டு பிள்ளைகளும் இந்த சென்னை வாழ்க்கையில் எப்படி சர்வ சாதாரணமாய்க் காம்பரமைஸ் பண்ணிக் கொண்டார்கள் என்பதைப் பார்க்க வியப்பாயிருந்தது.

பெரியவன் சமாசாரம் எப்படி என்று நான் அவதானிக்க முனைந்தபோது, வழமைக்கு மாறாக அவன் நாலு நாள் தாடியோடு இருந்ததைப் பார்த்துக் கேட்டேன், ‘‘என்னடேய், ஷேவ் பண்ணிக்காம இந்தக் காலத்துத் தமிழ் சினிமா ஹீரோ மாதிரி இருக்க? சினிமா கினிமாவுலச் சான்ஸ்க்கு ட்ரை பண்ணிட்டிருக்கியா?’’

என் கிண்டலுக்கு அவனுடைய அம்மாவிடமிருந்து பதில் வந்தது, தணிந்த குரலில்.

‘‘அந்தப் பொண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமாயிருச்சாம்.’’

சரி, இந்தப் பயலுக்கும் சிங்காரச் சென்னை ஒரு சரிவைத் தந்து விட்டது. இவனாவது மனம்மாறிப் பாளையங்கோட்டை மேல் பாசங்கொள்கிறானா என்று பார்த்தால், அடுத்த மூணாவது நாளே மழுங்க மழிக்கப்பட்ட தாடையோடு, சந்தோஷமாய்த் தெரிந்தான். இவனுடைய இன்ட்டர்நெட் வலையில் புதுசாய் ஒரு தோழி சிக்கிக் கொண்டாள் என்று தெரிய வந்தது.

எனக்கோ இந்தக் கூவம் நதிக்கரை நாகரீகத்தோடு சுத்தமாய் ஒத்துப் போக முடியாமலேயே இருந்தது. வேக வாகனங்களும் ஏக வசனங்களும் அந்நியமாயிருந்தன. கூவத்தின் உபநதியொன்றின் அண்மையில் அமைந்திருந்த எங்கள் குடியிருப்பு வளாகத்தில் கொசுக்களின் கொடுங்கோலாட்சி வேறே.

இந்தக் குடும்பத்தின் ஒரேயொரு உறுப்பினர் மனந்திருந்தி, சொந்த ஊருக்குத் திரும்பிப் போகிற விருப்பத்தை வெளிப்படுத்தினால் போதும், மூட்டை முடிச்சுகளோடு திரும்பவும் தாமிரவருணித் தென்றலை சுதந்திரமாய் சுவாசிக்கப் போய்விடலாமே என்கிற அற்ப ஆசை என் அடிமனத்தில் அரைத் தூக்கத்திலிருந்தது.

இதற்கிடையில், நம்ம ஆள், ஷேர் ஆட்டோக்களில் ஊர்வலம் போய்ப் பத்திரிகை அலுவலகங்களுக்குப் படையெடுத்துக் கொண்டிருந்தாள், அவளுடைய படைப்புகளோடும் மினரல் வாட்டர் பாட்டில்களோடும்.

ஆனால் இவளுடைய இலக்கிய தாகத்துக்கு ஒரு சொட்டுத் தண்ணீர்கூடத் தரக்கூடாது என்பதில் எல்லாப் பத்திரிகைகளும் கறார் கர்நாடகாவாய் இருந்தன.

சரி, இவளாவது மனம் நொந்துபோய் சொந்த ஊருக்குத் திரும்பிப் போக விரும்புவாளென்கிற என்னுடைய சின்ன எதிர்பார்ப்பும் சிதைந்து போனது. இந்தக் குடியிருப்பு வளாகத்தில் குடியிருக்கிற மேட்டுக்குடிப் பெண்மணிகளெல்லாம் சேர்ந்து புதிதாய் மாதர் சங்கம் ஒன்று ஆரம்பிக்கவிருக்கிறார்களாம். அதில் தன்னை இணைத்துக் கொண்டு சமூக சேவை செய்யப் போகிறாளாம்.

இப்போது நான்தான் நொந்து போனேன். என்னோடு சேர்ந்து, இந்த வீட்டின் நிஜமான கடைக்குட்டியான குட்டப்பனின் அபிமானிகள் எல்லோரும் நொந்து போகிற மாதிரி, குடியிருப்பு மன்றச் செயலாளரிடமிருந்து ஓலையொன்று வந்தது. ஓலையின் வாசகம் முழுக்குடும்பத்தையுமே செயலிழக்கச் செய்துவிட்டது.

"..... கடந்த செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டபடி, நம்முடைய வளாகத்தின் எல்லைக்குள்ளே செல்லப் பிராணிகள் வளர்க்கத் தடை விதிக்கப்படுகிறது. எந்த ஃபிளாட்டிலும் நாய், பூனை, வாத்து, முயல், முதலை முதலிய செல்லப் பிராணிகளை வைத்துப் பராமரிக்கக் கூடாது என்றும், அவற்றை உடனடியாய் அப்புறப்படுத்தி விட வேண்டும் என்றும் இதனால் அறிவுறுத்தப் படுகிறது. எதிர்வரும் தீபாவளி வரை கெடு. அதற்கு முன்னால் செல்லப் பிராணிகள் அப்புறப்படுத்தப்படா விட்டால், பலவந்தமாய் அகற்றப்பட்டு எஸ் பி ஸி ஏ வசம் ஒப்படைக்கப் படும்...."

ஆங்கிலத்தில் வந்த அறிவிப்பு அனைவரையும் ஒரு ஆட்டு ஆட்டிவிட்டது. குட்டப்பனுக்கு ஆங்கிலம் வாசிக்கத் தெரியாது என்பதால் அவன் மட்டும் ஆடிப் போகவில்லை. ஆனாலும் முழுக் குடும்ப சோகம் அவனையும் பாதிக்க, எல்லோர் முகத்தையும் ஏறிட்டுப் பார்த்தபடி விவரம் புரியாமலிருந்தான்.குடும்ப உறுப்பினர்கள் அனைவரிடமிருந்தும் கண்டனக் குரல்கள் எழுந்தன.

"இது அக்கிரமம், அராஜகம் அப்பா. இது என்ன ஹவுஸிங் காம்ப்ளக்ஸா இல்ல ஜெயிலா! இவங்க யார் சட்டம் போடறதுக்கு?"

"நாம இதுக்கு ஒத்துக்கக் கூடாதுங்க. அந்த செக்ரட்டரியப் பாத்துப் பேசுங்க நீங்க."

"பேச்சுவார்த்தை பலனளிக்காவிட்டால் தர்ணாப் போராட்டம் நடத்துவோம்னு ஒரு அறிக்கை விடுங்கப்பா."

"அம்மா, ஒங்க மாதர் சங்கத்துல சொல்லி, செல்லப் பிராணிகளோட பிறப்புரிமையையும் சுதந்திரத்தையும் நிலை நாட்டக் கூடாதா அம்மா, இதுகூட ஒரு சமூக சேவை தானே."

"நம்மள மாதிரி, குட்டப்பன்களை வளக்கிற எல்லா ஃப்ளாட் காரங்களையும் ஒன்று திரட்டி நாம ஒரு போட்டிச் சங்கம் ஆரம்பிச்சிப் போராட்டம் நடத்துவோம்."

இந்தப் புலம்பல்களும் புரட்சிக் குரல்களும் நாலு சுவர்களுக்குள்ளே முடங்கிப் போயின. காரியதரிசியிடம் வைத்த முறையீடு பரிசிலிக்கப்படவில்லை. வேறு ஃப்ளாட் காரர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கவில்லை. மாதர் சங்கத்துக்கு வேறு முக்கியமான டீ பார்ட்டிகள் இருந்தன. தர்ணா என்பதெல்லாம் நடக்கிற காரியமில்லை.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. தீபாவளி நெருங்கிக் கொண்டிருந்தது. இந்த இக்கட்டிலிருந்து எங்கக் குட்டப்பனை எப்படி மீட்பது என்று புரியாத மனக் குழப்பத்தில், ஆளாளுக்கு அவனைத் தூக்கி வைத்துக் கொஞ்சுகிற வேலை மட்டும் முன்னிலும் மும்முரமாயிருந்தது.

அந்தக் கொஞ்சலின் பின்னணியிலிருந்த சோகம் குட்டப்பனையும் எட்டியிருக்க வேண்டும். அவனுடைய முனகல்கள் அதை வெளிப்படுத்தின. குட்டப்பனுக்கு இப்போது வாக்கிங் கிடையாது. ஃப்ளாட்டுக்கு வெளியே விடாமல் அவனைப் பொத்திப் பொத்திப் பராமரித்தோம்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை, வாசலில் மணி ஒலிக்க, கதவைத் திறந்த கடைக்குட்டி, வளாகக் காவலாளியொருவரை எதிர் கொண்டாள்.
"பாப்பா, ஒங்க வூட்ல நாய் வளக்கறீங்க இல்லியாம்மா?"
"நாயா? எங்க வீட்லயா? இல்லியே!"
"பொய் சொல்றியே பாப்பா. நா பாத்திருக்கேனே, வெள்ளையா ஒரு குட்டி நாய் இருக்குல்ல?"
"நாய் இல்லியே, அது எங்கக் குட்டப்பன்."

‘‘குட்டப்பனோ நெட்டப்பனோ, தீபாவளிக்கி இன்னும் ஒரு வாரம்தான் இருக்கு. அக்குள்ள நாயக் காலி பண்ணலன்னா, நாங்க வந்து புச்சிட்டிப் போயிருவோம். அப்பா கைல சொல்லு, என்ன?’’

கதவைச் சாத்திவிட்டு வந்த கடைக்குட்டி, குட்டப்பனை வாரி அணைத்தபடி ஸோஃபாவில் உட்கார்ந்தாள். அவளுடைய கண்களில் திரண்ட கண்ணீர் முத்துக்கள் குட்டப்பனின் உடம்பில் சொட்ட, அவன் உடல் சிலிர்த்து அவளை நிமிர்ந்து பார்த்தான்.

யாருக்குமே பேச்சு வரவில்லை.

கடைக்குட்டி, கண்களைத் துடைத்துக் கொண்டு, ‘‘அப்பா’’ என்றாள். ‘‘நமக்கு இந்த மெட்ராஸ் வேண்டவே வேண்டாம்ப்பா. தீபாவளிக்கி முந்தி நாம எல்லாரும் குட்டப்பனக் கூட்டிக்கிட்டுப் பாளையங்கோட்டக்கிப் போயிரலாம்ப்பா.’’

நான் அவளைப் பார்த்தேன். பிறகு அங்கிருந்த ஒவ்வொரு முகத்தையும் ஒவ்வொன்றாய்ப் பார்த்தேன்.எல்லா முகங்களிலும் கொஞ்சம் கொஞ்சமாய் சோகம் கம்மி ஒரு பிரகாசம் மலர்ந்தது.

இளையவன் சட்டென்று எழுந்தான். கடைக்குட்டியிடமிருந்து குட்டப்பனைக் கைப்பற்றி அணைத்தபடி அவனுக்கு முத்தமழை பொழிந்தான்.அவனைத் தொடர்ந்து, பெரியவன்.

ஆனந்தக் கண்ணீரினூடே என்னவள் என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

இதோ நாங்கள் குட்டப்பனோடும் மூட்டை முடிச்சிகளோடும் தீபாவளிக்குப் பாளையங்கோட்டைப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

(கல்கி, தீபாவளி மலர், 2007)

பல் ஒன்று போய்விட்டது.
பல் விழுகிற வயசில்லை இது.
விபத்தொன்றில் ஒரு பல் போய்விட்டது.
சாலை விபத்தல்ல. காலை விபத்து.

மருமகள் நாஷ்டாவுக்குப் பாசத்தோடு பரிமாறிய பொங்கலில் வேகாமல் கிடந்த கல் ஒன்று பல்லைப் பதம் பார்த்து விட்டது. பொங்கல் என்ற பெயரிலேயே கல்லும் இணைந்திருக்கிறது என்கிற ஞானோதயம், அதைக் கடித்துப் பல்லை உடைத்துக் கொண்ட பின்னால் தான் எனக்கு உதித்தது.

கல் உடைத்தது பாதிப் பல். தள்ளாடிக் கொண்டு ஹிம்சை பண்ணிக் கொண்டிருந்த மீதிப்பல்லை பிடுங்கப் பல் டாக்டரிடம் போனேன். பல்லைச் சுற்றி ஈறுப்பகுதிக்குள் மயக்க ஊசி போட்டு மரத்துப் போகச் செய்து பூப்போல பல்லைப் பிடுங்கி விட்டார். வலியே தெரியவில்லை.
ஃபீஸ் எவ்வளவு என்று டாக்டர் சொல்லும் வரை வலியே தெரியவில்லை!

உடைந்து போன பல்லைப் பிடுங்கியாச்சு. சரி, அந்தக் கணவாயில் ஒரு பொய்ப்பல்லைப் பொருத்த வேண்டுமே! பிடுங்குவதற்கே இவ்வளவு ஃபீஸ் என்றால் பொருத்துவதற்கு இன்னும் அதிகமாயிருக்குமே என்று கிலியெடுத்தாலும், மெதுவாய் மிக மெதுவாய் டாக்டரிடம் கேள்வியை வைத்தேன். பொய்ப்பல் கட்டுகிற நடைமுறைகளைப் பிரஸ்தாபிப்பதற்கு முன், ஒரு உண்மையை டாக்டர் புட்டு வைத்தார்.

ஒரு பல்லை இழந்து விட்ட பல்வரிசை, கோர்வையிழந்து, வேர்கள் ஆட்டங் கண்டு போகுமாம். ஈறுகளும் வலுவிழந்திருக்குமாம். மாற்றுப்பல் பொருத்துமுன் பல்வரிசையை எக்ஸ்ரே எடுக்க வேண்டுமாம். அதற்கொரு இருநூற்றைம்பது ரூபாயாம். லபக்கென்று நான் வாயை மூடிக்கொண்டேன்.

“பயப்படாதீங்க. எக்ஸ்ரே இங்க இல்ல. வெளியதான் எடுக்கணும்” என்று என் காலிப் பல்லுக்கும் காலிப் பர்ஸுக்கும் மூச்சுவிட அவகாசங் கொடுத்தார் டாக்டர்.

“அண்ணா நகர்ல நம்ம ஆத்துக்குப் பக்கத்திலேயே டென்ட்டல் எக்ஸ்ரே லாப் ஒண்ணு இருக்கு டாக்டர்” என்றதற்கு, டாக்டர் பலமாய்த் தலையாட்டி மறுத்தார்.

அவ்வளவு வேகமாய் நான் தலையாட்டிருந்தால், ஆதாரமில்லாமல் அல்லல் பட்டுக் கொண்டிருக்கிற என் மிச்சப் பற்களெல்லாம் கலவரமடைந்திருக்கும்.

சென்னை மாநகரத்தின் வடக்குக் கோடியில், கிட்டத்தட்ட ஆந்திரப் பிரதேசத்தின் பார்டரில் ஓர் இடத்தைச் சொன்னார். அங்கேதான் கலைநயத்தோடு எக்ஸ்ரே எடுப்பார்களாம்! டாக்டருக்குக் கப்பம் கட்டுகிற இடமாயிருக்கும்.

மாநகரப் பேருந்தில் பாதியும், பொடிநடையில் மீதியுமாய் வடசென்னையை அடைந்து, நிழற்பட ஸ்டூடியோவைக் கண்டுபிடித்து, முப்பத்தோரு பற்களையும் படம் பிடித்துக் கொண்டு வந்து டாக்டரிடம் காட்டியபோது அவர் அதை ஆர்வத்தோடு ஆராய்ந்தார்.

ஆராய்ச்சியின் முடிவில் என்மேல் ப்ரயோகிப்பதற்கென்று சில அணுகுண்டுகளை ரெடியாய் வைத்திருந்தார்.

''கம்ஸ் எல்லாம் ரொம்ப வீக்கா இருக்கு சார். கம்ஸையெல்லாம் ஸ்ட்ராங் ஆக்கறதுக்கு சர்ஜரி செய்யணும். தையல் போட வேண்டியிருக்கும். நாலு ஸிட்டிங் தேவைப்படும். ஒவ்வொரு ஸிட்டிங்குக்கும் ஆயிரத்தைநூறு ரூவா ஆகும்.''

''அப்ப நாலு ஸிட்டிங்குக்கு....'' என்று நான் தடுமாறிக் கொண்டிருந்தபோது, ''ஆறாயிரம் ரூவா'' என்று முகம் மலர்ந்தார் டாக்டர்.

கணிதத்திலும் கில்லாடி!

''ஆறாயிரம் ரூவாயா டாக்டர்?'' என்று நான் வாயைப் பிளந்ததற்கு, ''நோ நோ'' என்று என்னை சாந்தப்படுத்தினார். ''இது இனிஷியல் சர்ஜரி தான். அப்புறம் இன்னொரு எக்ஸ்ரே எடுக்கணும்.''

''அதுக்கு இன்னொரு இருநூத்தியம்பது ரூவா!''
''அவ்வளவு தான் சார். அதுக்கப்புறம் பல் கட்டிர வேண்டியது தான்''
''அதுக்கு.... தனி... சார்ஜா.... டாக்டர்?''
''தனி சார்ஜாவா? மெய்ன் ஐட்டமே அதுதானே சார்!''
''மொத்தமா எல்லாத்துக்கும் சேத்து எவ்வளவு ஆகும்னு சொன்னிங்கன்னா....''
''என்ன, மொத்தமா ஒரு பதினஞ்சாயிரம் ஆகும் சார்.''

பட்டப்பகலில் பல் கட்டப் பதினஞ்சாயிரம் என்றதும் எனக்குப் பல்ஸ் விழுந்து விட்டது. ஒரு மாதிரி சமாளித்துக் கொண்டு பல் டாக்டரிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டு கிளம்பினபோது, டாக்டர் இன்னுமொரு முக்கியமான சங்கதியைச் சொன்னார்.

''பல் புடுங்கின எடம் பள்ளமாயிருக்கும். நாக்கை வச்சு அங்க துளவாதீங்க.''

இதை அவர் சொல்லாமலிருந்திருக்கலாம். வைத்தியரிடம் மருந்து வாங்க வந்த வியாதியஸ்தன் ஒருவன், வாயை வைத்துக் கொண்டு சும்மாயிருக்காமல், ''பத்தியம் ஒண்ணும் இல்லியா?'' என்றானாம்.

''பத்தியம்னு எதுவும் இல்ல, ஆனா ஒண்ணே ஒண்ணு, மருந்து சாப்பிடறபோது கருங்கொரங்கை மட்டும் நினைக்கவே கூடாது'' என்றாராம் வைத்தியர்.

அப்புறம் என்ன, மருந்துப் புட்டியைத் திறக்கும் போதெல்லாம் உள்ளேயிருந்து கருங்குரங்கு உர்ர்ர் ரெனத்தானே செய்யும்!

துளையைத் துளாவக் கூடாது என்று டாக்டர் சொன்னதிலிருந்து நாக்கு நமக்கு நமநமக்கத் தொடங்கிவிட்டது. நாக்கின் கவனத்தைத் திசை திருப்ப, நான் ரிட்டயர் ஆன அன்று ஆஃபீஸில் கொடுத்த பார்ட்டியில் டபுள் டபுளாய் சுவைத்த மைசூர்ப்பாகை அதற்கு நினைவூட்டினேன். ரிட்டயர் ஆனபின் கையில் வந்த தொகை நம்ம தவப் புதல்வனை இஞ்சினியரிங் காலேஜில் சேர்க்க வாங்கின கடனை அடைக்கச் சரியாய்ப் போனது.

“அப்பா, நீங்க பென்ஷன் வர்ற ஒரு வேலையாப் பாத்து அந்தக் காலத்துலயே சேந்திருக்கக்கூடாதாப்பா” என்று அடிக்கடி விசனப்படுவான் மகன்.

அடிக்கடி என்றால் ரொம்ப அடிக்கடி இல்லை. நான் ட்ரான்ஸிஸ்டருக்கு பாட்டரி வாங்க, ஜட்டி பனியன் வாங்க, ஷேவிங் க்ரீமுக்கு, பிளேடுக்கு என்று அவனிடம் விண்ணப்பம் வைக்கிறபோது மட்டும்.

“ஒங்க மூஞ்சிக்கு தாடி ரொம்ப அழகா இருக்கும் மாமா. என்னக் கேட்டா, நீங்க டெய்லி ஷேவ் பண்ணிக்கிறது அநாவசியம்” என்று என் முக வசீகரத்துக்கு டிப்ஸ் கொடுப்பாள் மருமகள். அவள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நான் வசீகரன்தான். எக்ஸஸ்ஸைஸ் பாடி வேற.

அறுவத்தி மூணு வயசு என்றால் யாரும் நம்ப மாட்டார்கள். குறிப்பாக ரெயில்வே டிக்கட் பரிசோதகர்.

எதுக்கடா வம்பு என்று, ஸீனியர் ஸிட்டிஸன் மமதையையெல்லாம் ஓரங்கட்டிவிட்டு ஐம்பத்து மூணு வயசு என்று போட்டு முழு டிக்கட்தான் எடுப்பேன்.

ரயில்வேத் துறைக்கு லாலு பிரசாத் கோடி கோடியாய் லாபம் ஈட்டித் தந்திருக்கிறார் என்றால், அதற்கு அடியேனுடைய பங்களிப்பு ஒரு மிக முக்கிய காரணம். என்னுடைய அந்த வசீகரமான முகத் தோற்றத்துக்கு இப்போது ஒரு பங்கம் வந்துவிட்டது.

பிடுங்கப்பட்டது கடவாய்ப் பல்லானதால், இடது கன்னம் உள்வாங்கி, டொக்கு விழுந்து விட்டது போன்ற ஒரு மினி கிழட்டுத் தோற்றம். இந்த இழுக்குக்கு ஒரு முடிவு கட்டி, நான் பழைய அழகைத் திரும்பப் பெற வேண்டுமானால், உடனடியாய்ப் பல்லைக் கட்டியே ஆக வேண்டும். அதற்கு, மகனிடம் பல்லைக் காட்டியே ஆக வேண்டும். காட்டினேன்.

“பதினஞ்சாயிரமா!” என்று பதறிப்போனான்.

“நீங்க ஜி ஹெச்சுக்குப் போயிருந்தீங்கன்னா ஃப்ரீயாவே பண்ணியிருப்பாங்களே அப்பா” என்று ஒரு கண்டு பிடிப்பை என் கவனத்துக்குக் கொண்டு வந்தான்.

“நேத்துக் கூட இலவசப் பல் சிகிச்சை முகாம்னு ஒரு பானர் பாத்தேன். ரோட்டரி க்ளப்ல நடத்தறாங்களாம். அங்க கூட நீங்க போகலாம்....”

“பதினஞ்சாயிரம் ரூவாக்கி இவ்வளோ யோசிக்கிறியேடா, எத்தனை லச்சம் செலவழிச்சி ஒன்ன இஞ்ஜினியரிங் படிக்க வச்சேன்” என்று என் தரப்பு நியாயத்தை அவனுக்கு உணர்த்தத் தலைப்பட்டபோது, அவனுடைய எதிர்வாதத்தால் என் நியாயத்தைத் தவிடுபொடியாக்கினான்.

“அந்த நன்றிக்கித் தானேப்பா, எம் மகனுக்கு, அதாவது ஒங்க பேரனுக்கு ஒங்க பேர வச்சிருக்கேன்!”

“பேர் வச்சாத்தாண்டா பேரன்” என்று நான் முணுமுணுத்தது அரவமில்லாமல் அடங்கிப் போனது,

கணவனின் பேச்சு சாதுர்யத்துக்கு சபாஷ் போட்ட என் அருமை மருமகள் எழுப்பிய கரவொலியில்.

தாய் கைதட்டுவதைப் பார்த்து என் பேரனும் கை கொட்டிச் சிரித்தான், பொக்கை வாயைப் பிளந்தபடி.

அவன் பக்கம் திரும்பிய மருமகள் முன்னிலும் அதிகமாய்க் குதூகலித்தாள். ‘‘என்னாங்க, என்னாங்க, இங்க வந்து பாருங்களேன். இவனுக்கு ஒரு பல் மொளைச்சிருக்குங்க!’’

பெற்றவர்கள் ரெண்டு பேரும் குழந்தைக்குப் பல் முளைத்திருக்கிற விசேஷத்தைப் பார்த்துப் புளகாங்கிதப்பட்டுக் கொண்டிருக்கிறபோதே, மருமகள் மீண்டும் திருவாய் மலர்ந்தருளினாள்.

‘‘இது மாமாவோட பல் தாங்க! அதே பல் தான்! மாமாவுக்கு விழுந்த பல், அவரோட பேரனுக்கு மொளைக்கிது! என்ன அதிசயம் பாருங்க!’’

அந்த ‘‘அதிசயம்’’ என்னைச் சுருக்கென்று தைக்க, ‘‘எல்லாம் அவன் செயல்டீ’’ என்று விட்டத்தை சுட்டிக்காட்டி என் மகன் அதிசயத்துக்குப் புதுப்பரிமாணம் கொடுத்தான்.

மொத்தத்தில் என்னிடம் இறந்து போன பல், என் பேரனிடம் மறுபிறவி எடுத்து விட்டது என்பது சந்தேகத்துக்கிடமின்றி ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது.

ஆகவே, இதனால் அறியப்படுவது என்னவென்றால், எனக்குப் பல் கட்டக் காத்துக் கொண்டிருக்கிற டாக்டருக்கு ஒரு வேலை மிச்சம். பதினஞ்சாயிரம் நஷ்டம். பல் இருந்த இடத்தில் ஒரு பள்ளம் எனக்கு நிரந்தரம். டொக்கு விழுந்த கன்னத்தைத் தடவிப்பார்த்த போது, மனசு வேதனைப்பட்டது. என் கையாலாகாத்தனத்தை நினைத்துக் கண்கள் பனிக்கப் பார்த்தன.

வேதனைப்பட்டோ, கண்ணீர் விட்டோ என்ன செய்ய? எல்லாம் அவன் செயல்!

நாக்கு நமநமத்தது.

நாக்கை நாப்பத்தஞ்சு டிகிரி வளைத்து, பல்லிருந்த பொந்தை ஆசைதீரத் துளாவினேன்.

(கல்கி, ‘‘வாய் மாறிய பல்’’, 08.07.2007)

ரொம்ப அழகாயிருந்தாள் அந்தப் பெண். இளமையாயும்!

அந்த ரெண்டு சிறப்பம்சங்களையும் ஏழ்மை என்கிற திரை மறைக்க முயன்று, தோற்றுக் கொண்டிருந்தது.

என்னுடைய ரெண்டு உத்தம புத்திரன்களும் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

“ஒக்காரும்மா” என்றேன்.

“பராவாயில்லை சார், நிக்கிறேன்” என்றாள், பணிவாய். “சார், ஒங்களுக்குக் கார் டிரைவர் வேணும்னு பேப்பர்ல விளம்பரம் பார்த்தேன்.”

“ஆமா. வேல யாருக்கும்மா? ஒங்கப்பாவுக்கா, அண்ணனுக்கா? அவங்களே நேர்ல வரலாமே?”

“எனக்கு அப்பாவுங் கெடையாது. அண்ணனுங் கெடையாது சார். வேல எனக்குத்தான்.”

என் கண்கள் ஆச்சர்யத்தால் அகல விரிந்தன.

அவளுடைய அழகைப் பகிரங்கமாய்ப் பருகிக் கொண்டிருந்த இந்த ரெண்டு பசங்களின் கண்களும் இன்னும் அகலமாய் விரிந்தன.

தகப்பனுடைய நிழலில், மேலே வெயில் படாமல் வளர்ந்த பயல்கள். பொழுது போக்குக்குக் காலேஜ் போய் வந்து கொண்டிருப்பவர்கள்.

“கார் டிரைவர் வேலைக்கி ஒரு பொண்ணா!” என்று நான் ஆச்சர்யப்பட்டதற்கு அந்தப் பெண் ஒரு பதில் வைத்திருந்தாள்.

“ஏன் சார், பெண்கள் ஆட்டோ ஓட்டறாங்க, பஸ் ஓட்டறாங்க, ப்ளேன் கூட ஓட்டறாங்க. டிரைவராக் கார் மட்டும் ஓட்டக் கூடாதா?”

“ஓட்டலாம், ஓட்டலாம்” என்று நம்ம பசங்களை ஓரக் கண்ணால் பார்த்தேன்.

“ஆனா, நம்ம வீட்ல வயசுப் பசங்க இருக்கானுங்களேம்மா. பொல்லாத பசங்க!”

“அதெல்லாம் நா சமாளிச்சுக்குவேன் சார். கடவுள் என்னக் காப்பாத்துவார்.”

“காப்பாத்துவார்தான். ஆனா.. கடவுளை நம்பு, ஒட்டகத்தைக் கட்டிப் போடுன்னு நபிகள் நாயகம் சொல்லியிருக்கார் தெரியுமோ?”

“அதெல்லாம் எனக்குத் தெரியாது சார். எனக்கு வேல குடுங்க சார். கஷ்டப்பட்டு ரெண்டாயிரம் ரூபா செலவழிச்சி டிரைவிங் படிச்சிருக்கேன் சார்.”

நான் என்னுடைய கைப்பையைத் திறந்து ஐயாயிரம் ரூபாய்க் கட்டு ஒன்றை எடுத்து அவளிடம் நீட்டினேன்.

"அதே மாதிரி, இன்னுங் கொஞ்சம் கஷ்டப்பட்டு கராத்தே கத்துக்கிட்டு வாம்மா. நீ எப்ப வந்தாலும் இந்த வேல ஒனக்காகக் காத்திருக்கும்."

(" பொம்பளை டிரைவர்", ஆனந்த விகடன், 12.12.2004)

வாரத்தில் ஏழு நாள் உழைக்க சபிக்கப்பட்டிருக்கிற என்னைப் போன்ற மிடில் க்ளாஸ் பிஸினஸ்மேனுக்கு பொண்டாட்டியைக் கூட்டிக் கொண்டு சினிமாவுக்குக் கிளம்புவதென்பது மஹாக் கஷ்டமான காரியம். காலைக் காட்சி, பகல் காட்சி, மாலைக் காட்சியெல்லாம் அந்நியம். போனால் பின்னிரவுக் காட்சிதான்.

ராத்திரி தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு தியேட்டரில் போய்க் கொட்டக் கொட்ட முழித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதில் உடன்பாடே இல்லை எனக்கு. ஆனால், வருஷம் முழுக்க வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கிற என்னவள், மாசத்துக்கொருதரம் சினிமாக் கோரிக்கையை முன் வைக்கிறபோது அதை மறுப்பது மனிதாபிமானமாகாது என்கிற மனு தர்மத்துக்குக் கட்டுப்பட்டு, இவளை அழைத்துக் கொண்டு ராத்திரி ஷோவுக்குப் போயே ஆக வேண்டிய நிர்பந்தம்.

அப்படியொரு சினிமா இரவாய் விடிந்தது இன்றைய ராத்திரி. எந்தப் படத்துக்குப் போவது என்று அலசி ஆராய்ந்து முடிவெடுத்து முடிக்கும்போது ஒன்பதே கால். என்றைக்குமில்லாத அதிசயமாய் இவள் இருபத்தஞ்சே நிமிஷத்தில் உடை மாற்றி, மேக்அப் போட்டு ரெடியாகி விட்டாள். தியேட்டரில் கொறிப்பதற்கு முறுக்குகளைக் கர்ச்சீஃபில் பொதிந்து கொண்டு கிளம்பி, ஸ்கூட்டரைக் கிளப்புகிறபோது ஒன்பது நாற்பத்தஞ்சு பி.எம்.

எழும்பூர் பாலத்தின் மேல் ஸ்கூட்டர் ஊர்ந்து கொண்டிருந்த போது, நிறுத்தக் கை காட்டினான் ஓர் இளைஞன். அவனை உரசுகிற மாதிரி ஸ்கூட்டரை நிறுத்தினேன். ஒதுக்குப் புறமாய் அவனுடைய ஸ்கூட்டர் நின்றிருந்தது.

‘சார், ஒரு ஹெல்ப் வேணும் சார். டயர் பங்ச்சர் சார். கொஞ்சம் வீல் ஸ்பானர் குடுத்திங்கன்னா பத்து நிமிஷத்துல வீல் சேய்ஞ்ஜ் பண்ணிட்டுக் குடுத்துர்றேன் சார், ப்ளீஸ்’ என்று கெஞ்சினான் அந்த இளைஞன்.

பின்னாலிருந்து இவள் இடித்தாள். “என்னங்க, பொறப்பட்டதே லேட். டிக்கட் ரிஸர்வ் பண்ணவும் இல்ல. இன்னிக்கி நாம சினிமா பாத்த மாதிரி தான்.”

“மேடம், நா அடையார் வரக்யும் போகணும் மேடம். ப்ளீஸ், தயவு பண்ணுங்க மேடம்.” அந்த இளைஞன் நேரடியாய் இவளிடமே உதவி கோரினான்.

தனியாய் வந்திருந்தால், பத்து நிமிஷம் என்ன, அதற்கு மேல் அரைமணி நேரத்தைக் கூட இந்த ஆளுக்காக ஒதுக்கியிருக்கலாம், சினிமாவையும் தியாகம் செய்துவிட்டு. ஆனால் இப்போது என்னோடு இவள் இருக்கிறாளே! இன்றைக்கு சினிமா பார்க்காமல் வீடு திரும்ப நேர்ந்தால், பயங்கரமாய் அப்ஸெட் ஆகிவிடுவாள். பிறகு, திரும்பவும் இவள் மூடுக்கு வருவதற்கு முழுசாய் மூணு நாள் காத்திருக்க வேண்டும். முக்கால் கிலோ திருநெல்வேலி ஹல்வா மற்றும் முப்பது முழம் மல்லிகைப் பூ செலவாகும்.

யோசித்த போது, மண்டையோட்டுக்குள் மத்தாப்பு. ஸ்பானர்தானே கேட்கிறான். கொடுத்து விடுவோம். கொடுத்து விட்டுக் கிளம்புவோம். அவன் சாவகாசமாய் சக்கரத்தை மாற்றிவிட்டு தியேட்டரில் வந்து என் ஸ்கூட்டரைக் கண்டுபிடித்து ஸ்பானரை சேர்த்து விடட்டும்.

“இந்தாங்க ஸ்பானர். ஸ்டெப்னிய நீங்களே சேய்ஞ்ஜ் பண்ணிரு வீங்கள்ள? நாங்க தேவி காம்ப்ளக்ஸ் போறோம். ஒங்க வேல முடிஞ்சப்பறம், நீங்க ஒங்க ரூட்டக் கொஞ்சம் மாத்தி தேவி வந்தீங்கன்னா, ட்டு வீலர் பார்க்ல என் வண்டி நிக்கும். இந்த முன்பக்க பாக்ஸ் ஓப்பனாத்தான் இருக்கு. இதுக்குள்ள ஸ்பானரப் போட்டுட்டுப் போயிருங்க. வண்டி நம்பர நோட் பண்ணிக்கிறீங்களா?”

“ரொம்ப ரொம்ப தாங்ஸ் சார். இந்த உதவிய மறக்கவே மாட்டேன்.” நன்றியோடும் நெகிழ்ச்சியோடும் கை கூப்பினான் அவன்.

அங்கிருந்து நகர்ந்தபோது, இவள் சந்தேகப்பட்டாள். “ஸ்பானர் திரும்ப வரும்னு நெனைக்கிறீங்களா?”

“வரும்.” நான் நம்பிக்கையோடு சொன்னேன்.

படம் முடிந்து வந்து, குறுகுறுப்போடு ஸ்கூட்டரை அணுகி, பாக்ஸைத் திறந்து பார்த்தால்.....

ஏமாற்றம் இருந்தது; ஸ்பானர் இல்லை.

இவள் ஸ்க்ரூ ஏற்றினாள்.

“பாத்தீங்களா? இது ஒங்களுக்கு இன்னொரு பாடம். இதுதாங்க ஒலகம்! காரியம் ஆனவொடனே உதவியையும் உதவி செஞ்சவங்களையும் மறந்துருவாங்க. நம்ம சவுகரியத்தக் கொறைச்சிக்கிட்டு மத்தவங்களுக்கு உதவி செய்யற ஒங்க பழக்கத்த இன்னியோட விட்ருங்க.”

“பாவம் அந்த ஆள் என்ன அவசரத்துல இருந்தானோ! அவன் இங்க வந்து, இந்தக் கூட்டத்துல நம்ம ஸ்கூட்டரக் கண்டுபிடிக்க முடியாமப் போனாலும் போயிருக்கலாம்.....” நான் சமாதானப்படுத்தினேன், இவளையும் என்னையும்.

இவள் எனக்கு நற்சான்றிதழ் வழங்கினாள். “ஒங்களத் திருத்தவே முடியாதுங்க”.

புன்னகையுடன் ஸ்கூட்டரைக் கிளப்பினேன். பூந்தமல்லி நெடுஞ்சாலையில் போய்க் கொண்டிருந்த போது, டஸ்ஸ்ஸ்ஸென்று ஓர் இரைச்சல். வண்டி தடுமாறியது. போச்சுடா, பின் டயர் பஞ்ச்சர்.
சக்கரத்தைக் கழட்டி மாற்ற ஸ்பானர் இல்லை.

நிராதரவான ஒண்ணரை மணி ராத்திரி.

இவள் சின்னதாய் ஒரு பெருமூச்சை வெளிப்படுத்தினாள். “என் பேச்சைக் கேட்டிருந்தா இந்த கதி ஏற்பட்டிருக்குமா?”
...ம்.... இப்ப என்ன செய்யப் போறீங்க?’ என்று அந்தப் பெருமூச்சுக்கு அர்த்தம்.

கடந்துபோன ரெண்டு ஆட்டோக்களைக் கை காட்டினேன். நிற்கவில்லை. அடுத்து வந்த ஆட்டோவை வெறுப்போடு முறைத்தேன்.

ஆச்சர்யம்! ஆட்டோ ஓரங்கட்டியது. டிரைவர் இறங்கினார். “இன்னா சார் ப்ராப்ளம்?”

“பங்ச்சர்ங்க. கொஞ்சம் ஸ்பானர் குடுத்திங்கன்னா....”

“நம்ப கைல வுடுங்க சார், நீங்க ஒத்துங்க.”

ஒத்தினேன்.

‘ஒரு அஞ்சு நிமிஷம் வெய்ட் பண்ணுங்க சார். நமக்கு வேண்டியவர் சார் இவர். வண்டி பஞ்ஜர் ஆய்க்கினுச்சாம். வீல மாத்திக் குடுத்துட்டு வந்துர்றேன்’ என்று ஆட்டோவிலிருந்த பயணியிடம் அனுமதி பெற்றுக் கொண்டு, ஒரு கைதேர்ந்த மெக்கானிக்குரிய லாவகத்தோடு வேலையை ஆரம்பித்தார்.

“நமக்கு ரொம்ப வேண்டியவர் சார் இவர்” என்று சொன்னதை நான் ஆச்சர்யத்தோடு அசைபோட்டுக் கொண்டு நிற்க, மளமளவென்று வேலை நடந்தது. நாலு நிமிஷத்தில் வண்டி ரெடி.

“ரொம்ப நன்றிங்க” என்று நன்றியோடு ஒரு இருபது ரூபாய்த் தாளை நீட்டினேன். மறுத்தார்.

“நம்பள மறந்துட்டீங்களே சார்!’ என்று சிரித்தார்.

“மூணு மாசம் முந்தி சார். இதே ரோட் தான். நம்ப வண்டில ஒரு பிரசவக் கேஸ். பெட்ரோல் அவுட். அன்னக்கி பந்த். பங்க் கெடையாது. ஒரு மணி வெயில். நா நடுரோட்ல தவிக்கிறேன். உள்ளாற அந்தப் பொண்ணு துடிக்குது. நம்ப ஆட்டோ தோஸ்த்துங்க யாரும் ஹெல்ப்புக்கு வரல. இந்த வழியா வந்த ஒங்களக் கை காட்டினேன். வண்டிய ஓரங்கட்டி இன்னா மேட்டர்னீங்க. சொன்னேன். ஒடனே ஒங்க வண்டிலேந்து பெட்ரோல் எடுத்துக் குடுத்து என்னயும் அந்தப் பொண்ணயும் காப்பாத்துனீங்க. நா கை கொடுத்துக் கும்புட்டு ஒரு இருவது ரூவாத்தாள எடுத்து நீட்டினேன். பிரசவத்துக்கு இலவசம்னு நீ உன் வண்டியில எழுதியிருக்க, நா மட்டும் கொஞ்சம் பெட்ரோல் பிரசவத்துக்கு இலவசமாக் குடுக்கக் கூடாதாப்பா? ஒம்புண்ணியத்துல எனக்கும் கொஞ்சம் பங்கு கெடைக்கட்டு மேன்னு சிரிச்சிட்டுப் போனீங்க. ஒங்க மொகமும் வண்டி நம்பரும் பெர்மனண்டா எம் மனசுல பதிஞ்சிருச்சு சார்.”

ஆட்டோ டிரைவர் போய்விட்ட பிறகும் இந்த ராத்திரியின் ஆச்சர்யம் என்மேல் படிந்தேயிருக்கிறது.

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும் என்பது இன்னாவுக்கு மட்டுமில்லாமல் நற்செயலுக்கும் பொருந்துகிற இனிமையான அனுபவத்தில் மனம் சிலிர்த்தபடி இவளைப் பார்க்கிறேன்.

இவள் சம்மதமாய்ப் புன்னகைக்கிறாள்.

(கவிதை உறவு, ஜூலை 2008)

அம்மாவின் அன்புத் தொல்லை தாளாமல் வேகாத வெயிலில் மவுன்ட் ரோடை நோக்கிக் கிளம்பினேன்.

ஸ்பென்ஸருக்கு எதிரில் ஒரு ட்ராவல் ஏஜென்ட் பெயர்ப் பலகை கண்ணில் பட்டது. பிஸ்மில்லா சொல்லிப் படியேறினேன்.

சின்ன ஆஃபீஸ் என்றாலும் கச்சிதமாய் இருந்தது. ஜில்லென்று ஏஸி, வெயிலில் வந்த உடம்பைக் குளிர்விக்கிற மாதிரி. மனசைக் குளிர்விக்கிற மாதிரி ஒரு முகம் கண்ணில் பட்டது.

ஜான்ஸன்.

திருச்சி ஜமால் முஹம்மது காரேஜில் என்னோடு படித்தவன். இவன் மெட்ராஸுக்கு வந்ததும் தெரியாது. டிராவல் ஏஜென்ட் ஆனதும் தெரியாது. கிட்டத்தட்ட அஞ்சு வருஷத்துக்குப் பிறகு சிநேகிதனைப் பார்க்கிற சந்தோஷம் முகத்தில் பிரதிபலிக்க, மெல்ல அவனுடைய ஆசனத்துக்கருகில் போய் நின்று, அவனுடைய சிப்பந்திகளுக்குக் கேட்கக் கூடாத தாழ்வான குரலில், “டேய் ஜான்ஸா” என்றதும் நிமிர்ந்து பார்த்து முகம் மலர்ந்தான்.

“டேய் நீயா, நீயும் மெட்ராஸ்லதான் இருக்கியா? எத்தன வருஷம் ஆச்சுடா நாம மீட் பண்ணி! ஒக்காரு ஒக்காரு. என்னோட ஆஃபீஸ்னு தெரிஞ்சுதான் வந்தியா?”

“எனக்கு இப்ப ஒரு ட்ராவல் ஏஜன்ட் தேவை. போர்டப் பாத்துட்டு உள்ள நொழஞ்சேன். வந்து பாத்தா, நீ இருக்க. வாட் ய லக்.”

“வெரிகுட் வெரிகுட். என்ன விஷயமா ட்ராவல் ஏஜன்ட்டத் தேடற?”

“ட்ராவல் பண்ணத்தான்.”

“அபுதாபியா, அமெரிக்காவா?”

“அதெல்லாம் இல்ல ஜான்ஸா. பக்கத்துலதான். பாக்கிஸ்தான். எங்கம்மா ஒரே நச்சரிப்பு, பாக்கிஸ்தானுக்குப் போய் அங்க உள்ள தர்காக்களயெல்லாம் பாத்துட்டு ப்ரார்த்தனை பண்ணிட்டு வரணும்னு. எங்கம்மாவ நாந்தானேடா கூட்டிட்டுப் போகணும். தெரிஞ்ச ட்ராவல் ஏஜென்ட் யாரும் இல்ல. சரி எவனாவது ஒர்த்தனப் புடிப்போம்னு மவுன்ட் ரோடுக்கு வந்தா, வசம்மா நீ மாட்ன. நீ தாண்டா ஜான்ஸா டிக்கட், விஸா எல்லாம் ஏற்பாடு பண்ணனும். எவ்ளோ சீக்கிரம் முடியுமோ அவ்ளோ சீக்கிரம்.”

“பண்ணிட்டாப் போச்சு. நம்ம தொழில் அதானேடா. நீ முஸ்லிம்ங்கறதுனால பாக்கிஸ்தான் விஸா ஈஸியாக் கெடச்சுரும். வெவரமெல்லாம் எழுதிக் குடு.”

எழுதிக் கொடுத்தேன்.

நான் எழுதித் தந்ததை வாசித்துக் கொண்டிருக்கும் போதே ஒர் ஐட்டத்தில் தலை நிமிர்ந்தான்.

“என்னடா, உர்து ஸ்பீக்கிங் முஸ்லிம்னு எழுதியிருக்க, நீ தமிழ் ஸ்பீக்கிங் ஆச்சே?”

“அப்படியே போடு ஜான்ஸா, உர்து ஸ்பீக்கிங்னா ஒரு வெய்ட் இருக்கும்ல? நாந்தான் உர்து நல்லா பேசுவேனே!”

“அதான் நல்லா பேசுவியே, இங்லீஷ் தான ஒனக்குத் தகராறு! இருந்தாலும், பொய் சொல்லக் கூடாதுல்ல பாய்.”

“ஆயிரம் பொய்யச் சொல்லியாவது ஒரு கல்யாணத்தப் பண்ணனுங்கற மாதிரி, புனிதப் பயணம் போகும் போதும் பொய் சொன்னாத் தப்பில்லடா. நீ ஆக வேண்டியதப் பாரு. கொஞ்சம் சீக்கிரம்.”

“இன்னிக்கு தேதி ரெண்டு. எட்டாந் தேதி பாம்பே கராச்சி ஃப்ளைட்ல ரெண்டே ரெண்டு ஸீட் இருக்கு. அத பிளாக் பண்ணிர்றேன். அத விட்டா மூணு வாரத்துக்கு ஃப்ளைட் எல்லாம் ஃபுல்.”

“எப்படிடா ஃப்ளைட் இன்ஃபர்மேஷன் எல்லாம் விரல் நுனியில வச்சிருக்க?”

“எல்லாம் இன்னொரு பார்ட்டிக்காக சேகரிச்ச தகவல். அந்த அம்மா வரல. வந்திருந்தா, அதுக்கு ஒரு ஸீட் போயிருக்கும். அப்புறம் ஒங்கம்மாவ விட்டுட்டு நீ தனியாத்தான் புனிதப் பயணம் போகணும்.”

“வாட் ய லக்” என்று என்னுடைய அதிர்ஷடத்தை நான் திரும்பவும் வியந்து கொண்டிருந்தபோது, “தம்பி, நா திருச்சிலயிருந்து வர்றேன்” என்று பக்கவாட்டில் ஒரு குரல் கேட்டது. குரலுக்கு சொந்தக்காரி எழுபதைக் கடந்த ஓர் எளிமையான பெண்மணி.

அந்தத் தாயை ஏறெடுத்துப் பார்த்த ஜான்ஸன், பிறகு என்னைப் பார்த்தான், உதட்டைப் பிதுக்கியபடி.

“தம்பி, நா பாக்யலச்சுமி, ஒங்க கூட ஃபோன்ல பேசினேன்...”

பாக்கியலட்சுமியைப் பொருட்படுத்தாமல் ஜான்ஸன், என்னிடம் குசுகுசுத்தான். “நா சொன்னேனே பாக்கிஸ்தான் பார்ட்டி, அது இது தான்.”

பிறகு அவநம்பிக்கையோடு அந்த அம்மாவைப் பார்த்தான். “ஒக்காருங்க பெரியம்மா. நீங்க ரொம்ப லேட் பன்னிட்டீங்களே. பனிரெண்டு மணிக்கி வர்றதாச் சொன்னீங்க. இப்ப மணி ரெண்டு.'

“மன்னிச்சிக்கிருங்க தம்பி, இப்பத்தான் மொதோ தடவையா மெட்ராஸ்க்கு வாறேன். தொணக்கி யாரும் கெடையாது....”

“நீங்க பாம்பே போய் கராச்சி ப்ளேன்ல ஏறணும். தொணை இல்லாம எப்படிப் போவீங்க?'

“போயிருவேன் தம்பி. நீங்க ஏற்பாடு மட்டும் பண்ணிக் குடுத்துருங்க.”

“அப்ப நீங்க திருச்சிக்கிப் போய்ட்டு சாவகாசமா வாங்க. மூணு வாரத்துக்கப்புறந்தான் ப்ளேன்ல ஸீட் இருக்கு.”

“எட்டாந்தேதி இருக்குன்னு சொன்னீகளே ராசா.”

‘‘இருந்துச்சு பெரியம்மா, ரெண்டு ஸீட் இருந்துச்சு. நீங்க வராததுனால வேற பாஸஞ்சருக்குப் போட்டாச்சு.’’

‘‘அப்படியெல்லாம் சொல்லாதீக ராசா’’ என்று அந்த அம்மா எழுந்து ஜான்ஸனின் கரங்களைப் பற்றிக் கொண்டாள்.

‘‘முப்பத்தாறு வருஷமாக் காத்திருக்கேன்யா. இப்பத்தான் பாக்கிஸ்தான் அரசாங்கம் அனுமதி குடுத்துருக்கு. அதயும் லேட் பண்ணிராதீங்கய்யா. நா சீக்கிரமாப் போகணும்யா’’ என்றபோது அந்தத் தாயின் குரல் உடைந்தது.

‘‘ஒக்காருங்க பெரியம்மா, ஒக்காருங்க’’ என்று ஜான்ஸன் அந்தத் தாயை உட்கார்த்தி வைத்தான்.

‘‘முப்பத்தாறு வருஷம் காத்திருந்தவங்க இப்ப ஒடனே போணும்ங்கறீங்க! பாக்கிஸ்தான்ல யாரப் பாக்கப் போறீங்க, ஒங்களுக்கு யார் இருக்கா அங்க?’’

ஜான்ஸனின் இந்தக் கேள்விக்கு பாக்யலட்சுமி அம்மாவிடமிருந்து வந்த பதில், ஜான்ஸனை மட்டுமல்லாது என்னையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது.

‘‘பாக்கிஸ்தான்ல எம்புருஷன் இருக்கார் தம்பி.’’

ஜான்ஸனும் நானும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம்.

பிறகு ஜான்ஸன், ஆச்சர்யத்துக்கு சொல் வடிவம் கொடுத்தான்.

‘‘ஒங்கள திருச்சில விட்டுட்டு கராச்சீல ஒங்க புருஷன் முப்பத்தாறு வருஷமா என்ன பண்ணிட்டிருக்கார் பெரியம்மா?’’

‘‘அவர் கராச்சில தான் இருக்காரோ வேற எந்த ஊர்ல இருக்காரோ, நா போய்த்தான் தேடணும் தம்பி’’ என்று ஆச்சர்யத்தின் நீள அகலங்களை இன்னுங் கொஞ்சம் பெரிதாக்கினாள் பாக்யலட்சுமியம்மா.

‘‘ஹ்ம், அது ஒரு பெரிய சோகக் கத தம்பி’’ என்று தொடர்ந்து அந்த அம்மா சொன்னதையடுத்து, நாங்கள் ரெண்டு பேரும் கதை கேட்க சுவாரஸ்யமானோம்.

‘‘அவர் மிலிட்டரில இருந்தார் தம்பி’’ என்று கதை ஆரம்பமானது.

‘‘எழுபத்தியொண்ணாம் வருஷம் பங்களாதேச வெவகாரத்துல இந்தியா பாக்கிஸ்தான் சண்ட வந்துச்சே, அப்பத்தான் கடைசியா நா அவரப் பாத்தது. சண்டையில பாக்கிஸ்தான் காரங்க இவரக் கைதியாக் கொண்டு போய்ட்டாங்கன்னு சொன்னாங்க. இவரோட கைது பண்ணிட்டுப் போன பல பேர் விடுதலையாகி வந்துட்டாங்க. ஆனா இவர் மட்டும் வரவேயில்ல.’’

கண்ணீரில் தோய்ந்த ஓர் ஆழமான பெருமூச்சுக்குப் பின்னால், சோகக்கதை தொடர்ந்தது.

‘‘நம்ம டில்லி அரசாங்கத்துக்கு நா லெட்டர் மேல லெட்டர் போட்டேன். ஒம் புருஷன் எந்த ஊர் ஜெயில்ல இருக்கார்ன்னு விசாரிச்சிட்டிருக்கோம்னுதான் பதில் வந்துச்சு. முப்பத்தாறு வருஷமா விசாரிக்கிறாங்க! அப்பறம், துணிஞ்சி பாக்கிஸ்தான் கவர்மெண்ட்டுக்கே எழுதிப் போட்டேன். பத்து நாளக்கி முன்னால தான் பதில் வந்துச்சு. நீயே வந்து தேடிப்பாத்துக் கன்னு பதில் வந்துருக்கு. அதோட, அவங்க நாட்டுக்கு வர்றதுக்கு அனுமதிக் கடிதமும் அனுப்பியிருக்காங்க. நா போய் அவர்

எந்த ஊர்ல இருந்தாலும் தேடிப்புடிச்சிக் கையோட கூட்டிக்கிட்டு வந்துருவேன். தம்பி, நீங்க மட்டும் எனக்கு ஒத்தாச பண்ணுங்க தம்பி. பெரிய மனசு பண்ணுங்க தம்பி.''

ஜான்ஸன் தலையைச் சொறிந்தான். ‘‘இந்த சமாச்சாரமெல்லாம் நீங்க ஃபோன்ல சொல்லவேயில்லியே பெரியம்மா.... இப்ப டிக்கட் கையவுட்டுப் போயிருச்சே....''

‘‘அப்படிச் சொல்லாதீங்க தம்பி. அந்த டிக்கட் எடுத்தவங்க விலாசத்தக் குடுங்க. இந்தியாவுல அவங்க எங்க இருந்தாலும் தேடிப்புடிச்சி அவங்க கால்ல விழுந்து டிக்கட்ட நா மாத்தி வாங்கிக்கிறேன். விலாசத்தக் குடுங்க தம்பி.''

ஜான்ஸன் சங்கடமாய் என்னைப் பார்த்தான். அந்தத் தாயின் சோகக்கதையில் அவன் நெகிழ்ந்து போனதும், எப்படி உதவுவது என்று புரியாமல் தவிப்பதும் தெரிந்தது.

‘‘ஜான்ஸன், இந்த அம்மாட்ட நா ஒரு கேள்வி கேக்கட்டுமா'' என்று அவனிடம் அனுமதி வாங்கிக் கொண்டு, கொஞ்சம் தயக்கத்தோடு என் கேள்வியை முன் வைத்தேன்.

‘‘பெரியம்மா... வந்து... முப்பத்தாறு வருஷம் ஆயிருச்சே, ஒங்க புருஷன் பாக்கிஸ்தான்ல உயிரோட இருப்பார்னு நம்பிக்கை இருக்கா?''

‘‘அப்படியெல்லாம் அசம்பாவிதமாப் பேசாதீங்க தம்பி'' என்று திரும்பவும் கண்ணீர் முட்டிக் கொண்டு நின்றது.

‘‘என்ன வுட்டுட்டு அவர் போகவே மாட்டார். நாந்தான் அவருக்கு முந்தி பூவும் பொட்டுமா போய்ச் சேருவேன். அவர் கட்ன தாலி என் கழுத்துல கெடக்கு. அந்தத் தாலியோட பெலம் ஒங்களுக்குத் தெரியாது தம்பி. ஒங்கள மாதிரியே தான் எங்க ஊர்ல ரெண்டு மூணு பேர் சந்தேகப்பட்டாங்க. சாமிக்கு முன்னால பூப்போட்டுப் பாக்கச் சொன்னாங்க. அதையும் பாத்தாச்சு. அவர் மகாராசனா இருக்கார். நாம் போய்த்தான் அவரக் கூட்டிக்கிட்டு வரணும்.''

‘‘போர்க் கைதியாப் போன ஒருத்தர, வெளிநாட்ல போய் என்னமாத் தேடிக் கண்டுபிடிப்பீங்க பெரியம்மா?''

‘‘கண்டு பிடிச்சிருவேன் ராசா, கண்டு பிடிச்சிருவேன். சாமி தொணையோட கண்டு பிடிச்சிருவேன்.''

அந்தத் தாயின் நம்பிக்கையும் உறுதியும் எனக்குள்ளேயும் ஒரு உறுதிக்கு வித்திடுவதை உணர்ந்தேன்.

‘‘சாமி மட்டுமில்ல பெரியம்மா. நானும் ஒங்களுக்குத் தொணையா இருக்கேன்'' என்றேன்.

நான் என்ன சொல்கிறேன் என்று புரியாமல் அந்தத் தாயும், ஏதோ அரைகுறையாய்ப் புரிந்த குழப்பத்தில் ஜான்ஸனும் என்னைப் புதிராய்ப் பார்க்க, நான் புதிரை அவிழ்த்தேன்.

‘‘ஜான்ஸன், எங்க அம்மாவுக்கு டிக்கட் எடுக்க வேண்டாம்.''

‘‘அப்ப.... நீ.... புனிதப் பயணம் போகலியா?''

‘‘போறேன். எங்க அம்மாவோட இல்ல. இந்த அம்மாவோட. இது கூட ஒரு புனிதப் பயணம்தான்.''

“யூ ஆர் கிரேட் டா” என்று நெகிழ்ந்து போன ஜான்ஸன், என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று புரியாமல் விழித்துக் கொண்டிருந்த பாக்யலட்சுமியம்மாவுக்கு விளக்கினான்.

“பெரியம்மா, இவன் என்னோட ஃப்ரண்ட். ஒங்க டிக்கட்டுக்கு வேற பாஸஞ்சர் வந்தாச்சுன்னு சொன்னேனே, அது இவனும் இவங்கம்மாவுந்தான். இவங்கம்மாவ இங்கேயே விட்டுட்டு, ஒங்களுக்குத் தொணையா பாக்கிஸ்தான் வர்றேன்னு சொல்றான்.”

“அப்படியா, ரொம்ப சந்தோஷம் தம்பி. ரொம்ப ரொம்ப சந்தோஷம்” என்று பூரித்துப் போன பாக்யலட்சுமியம்மா என்னிடம் ஒரு சந்தேகங் கேட்டாள்.

“ஆனா தம்பி, ஒங்கம்மா இதுக்கு ஒத்துக்குவாங்களா?”

ஒரு புன்னகையோடு அந்த சந்தேகத்தை நான் போக்கினேன். “நிச்சயமா ஒத்துக்குவாங்க பெரியம்மா. உலகம் பூரா அம்மாக்கள் ஒரே மாதிரிதான் இருக்காங்க பெரியம்மா.”

ஜான்ஸன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“இந்தப் பெரியம்மாவ நா எங்க வூட்டுக்குக் கூட்டிட்டுப் போறேண்டா” என்றேன் அவனிடம்.

“அம்மா பாத்தா சந்தோஷப்படுவாங்க. எங்க ரெண்டு பேருக்கும் டிக்கட், விஸா ஃபீஸ் எல்லாம் எவ்வளவு ஆகுதுன்னு பாத்துச் சொல்லு, பணம் தர்றேன்.'

நான் பான்ட் பாக்கெட்டிலிருந்து வெளியே எடுத்த என்னுடைய வாலட்டைப் பிடுங்கி, ஜான்ஸன் என்னுடைய சட்டைப் பையில் திணித்தபடி, “நீ பெரிய சுயநலக்காரண்டா” என்றான்.

“இந்தப் புனிதப் பயணத்துல எல்லா புண்ணியத்தையும் நீ ஒருத்தனே தட்டிட்டுப் போயிரலாம்னு பாக்கற. அத நா அலவ் பண்ண மாட்டேன். ஒங்க ரெண்டு பேருக்கும் டிக்கட் செலவு, விஸா ஃபீஸ் எல்லாம் என்னுது.”

ஜான்ஸன் அடித்த அதிரடியில் அசந்து போய், அவன் என்னைக் குறித்துச் சொன்ன வார்த்தைகளை மெருகூட்டித் திருப்பிச் சொன்னேன்.

“ஜான்சன், யூ ஆர் தி கிரேட்டஸ்ட்.”

எங்கள் ரெண்டு பேரையும் நோக்கிக் கரங்கூப்பினாள் பாக்கியலட்சுமியம்மா. “நீங்க ரெண்டு பேரும் எனக்குப் புள்ளைங்க மாதிரியிருக்கீங்க ராசா. எனக்குப் புள்ளை இல்லங்கற கொறை இன்னியோட தீந்து போச்சு. நீங்க நல்லாயிருக்கணும்யா. ஆமா தம்பி, ஒங்களுக்குப் பாக்கிஸ்தான் பாஷை தெரியுமா?”

“என்ன அப்படிக் கேட்டுட்டீங்க பெரியம்மா. இவன் ஒரு உர்து ஸ்பீக்கிங் முஸ்லிமாக்கும்!”
“பெரியம்மாட்ட பொய் சொல்லாத ஜான்ஸா.”
“புனிதப் பயணத்துக்காகப் பொய் சொன்னா தப்பில்லடா.”
ரெண்டு பேரும் சிரித்தோம்.

பாக்யலட்சுமியம்மா சிரிக்கவில்லை. அவள் தன்னுடைய சிரிப்பைப் பத்திரப்படுத்தி வைத்திருந்தாள், கணவனுடன் பகிர்ந்து கொள்வதற்காக. நம்பிக்கைகளோடும், கனவுகளோடும்.

(கல்கி, 19.08.2007)

நரி மொகத்துல முழிச்சா நமக்கு அதிர்ஷ்டம். புலி மொகத்துல முழிச்சா?

புலிக்கு அதிர்ஷ்டம்.

எப்போதோ ஒரு பழைய கருப்பு வெள்ளைப் படத்தில் வந்த இந்த ஜோக் செந்திலுக்கு ரொம்பப் பிடித்துப்போன ஒன்று.

நரி மொகமும் புலி மொகமும் சரி, எருமை மாட்டு மொகத்துல முழிச்சா? என்று செந்தில் தனக்குத்தானே கேட்டுக் கொண்டான். இவன் தினமும் முழிப்பது எருமை மாட்டின் முகத்தில்தான். இதுவரை இவனுக்கோ அல்லது அந்த எருமை மாட்டுக்கோ அதிர்ஷ்டம் அடிக்கவில்ல. இதுவரை என்றால், நேற்றுவரை.

இன்றைக்குக் காலையில், அலுமினியச் சொம்பில் தண்ணி மொண்டு கொண்டு, குடிசை வாசலில் வைத்துப் பல்லு விளக்கிக் கொண்டிருந்தபோது, மேலே, ரோடிலிருந்து யாரோ இவனைக் கை தட்டிக் கூப்பிடுகிற மாதிரி இருந்தது.

கூவம் மகாநதியின் உபநதிகளில் ஒன்றின் கரையோரப் பள்ளத்தாக்கிலிருந்தது செந்திலுடைய குடிசை. அந்தச் சேரிப் பகுதியில் இந்தக் குடிசைக்குப் பல தனித்தன்மைகள் உண்டு. செந்திலுடைய நயினா ஆறு வருஷங்களுக்கு முன்பு வடிவமைத்த இந்தக் குடிசைதான் அந்தப் பகுதியிலேயே ஒரே பாத் அட்டாச்டு குடிசை. கேபிள் டி.வி. கனக்ஷன் உள்ள ஒரே குடிசை.

இதையெல்லாம் விட முக்கியமான சிறப்பு, பள்ளிக்கூடத்தை எட்டியே பார்க்காத பிள்ளைகள் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிற இந்தச் சேரியில், ப்ளஸ் ட்டு முடித்து, காலேஜுக்குப் போய்க் கொண்டிருக்கிற ஒரு சுரிதார்ப் பொண்ணு வசிக்கிறது இந்தக் குடிசயில்தான்.

மீனாட்சி. செந்திலுடைய ஒரே செல்லத் தங்கச்சி.

ஐயயோ மறந்தே போனேனே, மேலே ரோடிலிருந்து ஒரு ஆள் செந்திலைக் கை தட்டிக் கூப்பிட்டானில்லயா?

ஆமாம் கூப்பிட்டான்.

வாயிலிருந்த தண்ணியக் கொப்பளித்துவிட்டு செந்தில் அவனைத் திரும்பிப் பார்த்தான். அந்த ஆள் செந்திலை மேலே வரச்சொல்லி செய்கை செய்யவும், செந்தில் போனான்.

"ஏம்ப்பா, இந்த எருமை மாடெல்லாம் யாருது?"

"எங்கள்துதான் ஏன், பால் வேணுமா?"

"பால் வேணாம்ப்பா, எருமையே வேணும்."

"அதுக்கு எங்க நயினாவைக் கேக்கணும். நயினா ஊர்ல இல்ல."

“வெலைக்கி இல்லப்பா. வாடகைக்கித்தான் வேணும்.”

“வாடகைக்கா? அப்படியெல்லாம் தர்றதில்லீங்க.”

டீலை முறித்துக்கொண்டு செந்தில் திரும்பி நடக்க முற்பட்டபோது அந்த ஆள் அவசரமாய்த் தடுத்தான்.

“தம்பி தம்பி, கொஞ்சம் நில்லு. என்ன ஏன்னு வெவரங் கேக்காம போய்க்கினே இருந்தா எப்படி? நா ஒரு சினிமா அஸிஸ்ட்டன்ட் டைரக்டர் தம்பி. இன்னிக்கி ஷூட்டிங்க்கு ஒரு எருமை மாடு வேணும். ஏற்கனவே ஏற்பாடு பண்ணி வச்சிருந்த சப்ளையர் திடீர்னு ஸ்ட்ரைக் பண்ணிட்டான். எருமை மாடு இருந்தாத்தான் இன்னிக்கி ஷூட்டிங். ஒம் மாட்டக் கொஞ்சம் கொண்டு வா தம்பி. மூணு அவர்தான் கால்ஷீட்.”

“நம்ம மாடு ரொம்ப பிசியாக் கீது சார், ஒரு பத்து நாளக்கிக் கால்சீட் கெடைக்காது.”

“ஐயோ, அப்படிச் சொன்னா எப்படி தம்பி. பொங்கலுக்கு படத்த ரிலீஸ் பண்ணனும்.”

“அப்ப இப்படி வச்சுக்கலாம்.”

“எப்படி வச்சிக்கலாம் சொல்லு. நீ சொல்ற மாதிரியே செஞ்சிருவோம். சொல்லு”

“படத்த மாட்டுப் பொங்கலுக்கு ரிலீஸ் பண்ணுவோம். அப்பத்தான் நம்ம மாடு சந்தோசமா நடிக்கும்.”

“ஆஹா, சூப்பர் ஐடியால்ல! ஒம்மாடு மட்டுமா சந்தோஷப் படும்? மாட்டுப் பொங்கலுக்குப் படம் ரிலீஸாச்சுன்னா தமிழ்நாட்டு மாடுகள்ளாம் கூட்டங் கூட்டமாப் படம் பாக்க வருமே! ஒனக்கும் எனக்கும் இது புரியுது தம்பி, ஆனா இந்த ப்ரடியூஸர் ஒரு மோசமான மனித நேயர். மனுஷ ஜென்மங்களுக்காக மட்டுமே படமெடுக்கறவர். அதனால பொங்கலுக்குத்தான் ரிலீஸ் பண்ணனும்னு பிடிவாதம் பிடிப்பார். ஆனா, ஒன்னோட மாடு கலைக்கு சேவை செய்யப் போகுதே, அத நெனச்சுப் பார். நூறு ரூவா வாங்கித் தாறேன். ப்ளீஸ். ஓக்கே சொல்லு தம்பி.”

செந்தில் சில விநாடிகள் யோசித்துவிட்டு ஓக்கே என்றான். எருமையைக் கூட்டிக்கொண்டு எங்கே வர வேண்டுமென்று கேட்டதற்கு அஸிஸ்ட்டன்ட் டைரக்டர் ஒரு கல்லூரியின் பெயரைச் சொன்னார். காலேஜ் கதை, கல்லூரி வளாகத்தில் படப்பிடிப்பு என்றார். பத்து மணிக்கு லொகேஷனில் இருக்க வேண்டுமென்றார்.

காலேஜ் கதை என்றதும் செந்திலுக்கு மீனாட்சியின் நினைப்பு வந்தது. இன்றைக்கு ஞாயிற்றுக் கிழமை. காலேஜ் கிடையாது. ஷூட்டிங் பார்க்க மீனாவைக் கூட்டிக் கொண்டு போனாலென்ன?

தங்கையை எழுப்பி, விஷயத்தைச் சொன்னவுடன், அந்தக் காலேஜா? வேணாண்ணா, எங்க காலேஜுக்கும் அந்தக் காலேஜுக்கும் புடிக்காது என்று திரும்பவும் படுத்துக் கொண்டாள்.

அவளை சமாதானப் படுத்தி, தயார்ப்படுத்தி, பஸ்ஸில் ஏற்றி அனுப்பிவிட்டு செந்தில் எருமை மாட்டோடு நடந்தான்.

ஷூட்டிங் லொகேஷனில் எருமை மாட்டுக்கு எக்கச்சக்க வரவேற்பு. ப்ரடியூசர், டைரக்டர், உதவி டைரக்டர்கள், கேமராமேன், கதாநாயகன், எக்ஸ்ட்ராக்கள் எல்லாரும் மாட்டைப் பார்த்து முகம் மலர்ந்தார்கள்.

கதாநாயகி மட்டும் சலித்துக் கொண்டாள். ‘‘இந்த எருமை மேல ஏறி நா ரைடு பண்ணனுமாக்கும்? என்ன கஷ்ட காலம்டா சாமி!’’

டைரக்டர் அவளை அநாயாசமாய் மடக்கினார். ‘‘இந்த ஷாட்டுக்கு நீங்க ஒத்துக்கிட்டதனாலதான் மேடம், ஒங்களை இந்தப் படத்துல புக்கே பண்ணியிருக்கோம்.’’

கதாநாயகி டைரக்டர ஒரு சிணுங்கல் பார்வை பார்த்தாள். பிறகு சிணுங்கினாள்.

‘‘இந்த மாட்டைக் குளுப்பாட்டியாவது விடுங்க சார், ஸச் ய டர்ட்டி திங்!’’

டைரக்டர் செந்திலைப் பார்த்துக் கண்ணடித்தார். ‘‘தம்பி, மாட்டக் குளுப்பாட்டித்தானேப்பா கூட்டிட்டு வந்திருக்க?’’

‘‘ஓ, ஜோராக் குளிப்பாட்டி பவுடர் போட்டு இட்டாந்திருக்கேன் சார்’’ என்று குறிப்பறிந்து ஒத்து ஓதினான் செந்தில்.

தன்னைப் பார்த்து சிநேகபூர்வமாய்க் கண்ணடித்த டைரக்டரோடு ஓர் அந்நியோன்யம் ஏற்பட்டு விட்டதை உணர்ந்த செந்தில், அவரை நெருங்கிப் பேச்சுக் கொடுத்தான்.

‘‘நம்ம மாட்டுக்கு நல்லா நடிப்பு சொல்லிக் குடுங்க சார்.’’

‘‘ஜமாச்சிருவோம் தம்பி, கவலயேப்படாத.’’

‘‘அதோ அங்க நின்னுக்கினுக்கீறது நம்ம ஸிஷ்டர் சார்.’’

‘‘ஷூட்டிங் பாக்கக் கூட்டிக்கிட்டு வந்தியா? வெரிகுட்.’’

‘‘சார், படம் ரிலீஸ் அன்னிக்கி நமக்கு ப்ரீ டிக்கட் குடுப்பீங்களா சார்?’’

‘‘ஒனக்குக் குடுக்காம யாருக்குக் குடுக்கப் போறேன் தம்பி! பொங்கலண்ணிக்கி ஜோராப் படம் பாக்கலாம். ரெண்டு டிக்கட் தரச் சொல்றேன்.’’

‘‘மூணு டிக்கட்டா குடுங்க சார். நம்ம ஸிஷ்டரும் படம் பாக்க ஆசைப்படும்.’’

மூணாவது டிக்கட் ஸிஷ்டருக்கு என்றால், ரெண்டாவது யாருக்கு என்பது உறைத்தபோது டைரக்டருக்கு சிரிப்போ சிரிப்பு. சிரிப்புடனேயே குதூகலமான மூடில் வேலையை ஆரம்பித்தார் டைரக்டர்.

கல்லூரி மாணவர்களின் ராகிங் ஸீன் அது. கதாநாயகனும் அவனுடைய நண்பர்களும், காரில் வந்து இறங்குகிற பணக்கார மாணவியான கதாநாயகியை ராகிங் செய்கிறார்கள். ராகிங்கின் ஒரு அம்சம், இந்த எருமை மாட்டுச் சவாரி. கல்லூரியின் முன்புறத் திறந்தவெளிதான் களம்.

துணை நடிக நடிகைகளுக்கெல்லாம் அவர்களுடைய ரோல் சொல்லித் தரப்பட்டு, அவரவருடைய இடத்தில் உட்கார்த்தி, நிறுத்தி வைக்கப்பட்டது. அந்தத் துணை நடிகைகளைப் பார்க்கையில்

செந்திலுக்குத் தோன்றியது, இந்த மூஞ்சிகளவிட நம்மத் தங்கச்சி மூஞ்சி எவ்வளவோ பரவாயில்லயே என்று. ஏன், மேக்கப் போட்டால் மீனா, இந்தக் கதாநாயகியவிடக் கூட ஒரு ஆங்கிளில் அழகாயிருப்பாள்.

டைரக்டர் பிஸியாகிவிட்டார். இப்போது அவரை இடை மறிப்பது நாகரீகமில்ல என்பது செந்திலுக்குப் புரிந்தது. காலையில் வந்த உதவி டைரக்டரிடம் செந்தில் போனான்.

சார் நம்ம ஸிஷ்டர் ஷூட்டிங் பாக்க வந்துக்கீது சார் என்றான். அதுக்கென்ன என்றார் உடனே.

"நம்ம ஸிஷ்டர் காலேஜ்ல படிக்கிது சார்."

"சரிப்பா, அதுக்கென்ன இப்ப?"

"இந்த எக்ஷ்ட்ராவோட எக்ஷ்ட்ராவா நம்ம ஸிஷ்டருக்கும் ஒரு சான்ஸ் குடுங்க சார்."

"அது சரி, ஒன் எருமை மாட்டுக்குச் சான்ஸ் கெடச்சதே பெரிசு. இப்ப ஒன் ஸிஷ்டருக்கு வேற சான்ஸ் குடுக்கணுமாக்கும்!"

தங்கைக்கு சினிமா வாய்ப்பு மறுக்கப்பட்டது செந்திலுக்கு ரொம்ப ஏமாற்றமாய்ப் போய்விட்டது. தன்னுடய ஏமாற்றத்தை ஒரு முணுமுணுப்பாய் வெளிப்படுத்தினான்.

"அது சரி, காத்தால எருமை மாட்டைத் தேடிக்கினு நீ வந்த. இப்ப வேல ஆய்ப்போச்சுல்ல. நீ தெனாவட்டாத்தாம் பேசுவ."

செந்திலின் முணுமுணுப்பு இன்னொரு உதவி டைரக்டரின் காதில் விழ, அவர் என்னவென்று விசாரிக்க, எருமை மாட்டின் கேமரா கோணத்த ரசித்துக் கொண்டிருந்த கேமராமேன் செந்திலின் சிபாரிசுக்கு வர, விஷயம் டைரக்டரின் காதுக்குப் போக, செந்திலைப் பக்கத்தில் கூப்பிட்டு, "ஒன் ஸிஷ்டருக்கு சைக்கிள் ஓட்டத் தெரியுமாப்பா" என்று கேட்டார் டைரக்டர்.

"சைக்கிள் இன்னா சார் சைக்கிள், நம்ப ஸிஷ்டர் எருமை மாடே ஓட்டும் சார்."

"எருமை மாடு ஓட்றது சரி தம்பி, இன்னிக்கி எருமை மாடு ஓட்றதுக்கு நம்ம ஹீரோயின் இருக்காங்க. ஒன் ஸிஸ்டருக்கு சைக்கிள் ஓட்டத் தெரியுமா, அதச் சொல்லு."

"தெரியும் சார்."

மீனாட்சியின் வசம் ஒரு லேடீஸ் பைக் ஒப்படைக்கப்பட்டது.

"இந்தாம்மா, நீ சைக்கிள்ள ஏறி அந்தக் கடேசிலயிருந்து வர்ற. இங்க ஹீரோயின் எரும மாட்டு மேலே வருவாங்க. எரும மாடு க்ராஸ் பண்றச்ச நீ சைக்கிள்ள பிரேக் புடிச்சி, கால ஊணி நின்னுக்கற. அவ்ளோதான்."

மீனாட்சி சந்தோஷமாய் சைக்கிளை வாங்கிக் கொண்டாள். மீனாட்சியைவிட செந்திலுக்குத்தான் அதிக சந்தோஷம். தன்னுடய தங்கை பாதி நட்சத்திரம் ஆகிவிட்டாள் என்று புளகாங்கிதமடைந்தான்.

கதாநாயகி காரில் வந்து இறங்குகிற காட்சி படமாக்கப்பட்டது. பின்னால், எருமை மாட்டுச் சவாரிக் காட்சிக்கு ஒத்திகை பார்க்கப்பட்டது. செந்தில் மற்றும் எருமை மாட்டின் ஒத்துழைப்புடன் ஒத்திகை ஒக்கே. பிறகு உண்மையான டேக்.

கதாநாயகனும் மூன்று நண்பர்களும் கேமராவின் ஒரு மூலயில் சிரித்துக் கொண்டு நிற்க, துண நடிக நடிகைகள் தங்கள் ரோலுக்குத் தயாராயிருக்க, புத்தம்புது துண நடிகை மீனா, சைக்கிளோடு காத்திருக்க, காட்சிக்கான க்ளாப் அடிக்கப்பட்டது.

ஒத்திகையின் போது எருமையாய் ஒத்துழைத்த அருமைக்கு... மன்னிக்க... ஒத்திகையின் போது அருமையாய் ஒத்துழைத்த எருமைக்கு, க்ளாப் அடிக்கப்பட்டதும் மூடு கிளம்பிவிட்டது.

கதாநாயகியைச் சுமந்து கொண்டு எருமை வேகத்தில் கிளம்பின மாடு, திடீரென்று வேகமெடுத்துச் சீட்டா வேகத்தில் சிட்டாய்ப் பறந்தது. கிலி பிடித்துக் கதாநாயகி அலற, படப்பிடிப்புக்குழு பரபரப்படைய, எருமை க்ராஸிங்கிற்கு சைக்கிளில் காலூன்றி நின்ற மீனாட்சி, சுதாரித்துக் கொண்டு ஆக்க்ஷனில் இறங்கினாள்.

சைக்கிளை செம அழுத்து அழுத்தி, எருமை மாட்டைத் துரத்தினாள். கல்லூரி வளாகத்தை விட்டு வெளியேறித் தலதெறிக்கத் தெருவில் ஓடிய எருமை மாட்டை, முக்கால் கிலோ மீட்டர் விரட்டிச் சென்று மடக்கிய மீனாட்சி, வெற்றிகரமாய்க் கதாநாயகியை மீட்டுக் கொண்டு வந்தாள்.

கதாநாயகி ஆரோகணித்துப் போன எருமையில் மீனாட்சியும், மீனாட்சியின் சைக்கிளில் கதாநாயகியுமாய், ஒரு ரசிகர் பட்டாளம் புடைசூழ ஒரு வழியாய் வந்து சேர்ந்தார்கள். முழுசாய்த் திரும்பி வந்த கதாநாயகியை எல்லோரும் மொய்த்துக்கொண்டு குசலம் விசாரித்தார்களேயொழிய, அவளை மீட்டு வருவதில் சாகசம் புரிந்த தன்னுடய தங்கையை யாருமே கண்டு கொள்ளவில்லை என்பது செந்திலுக்கு ரொம்ப வருத்தமாயிருந்தது.

எருமை மாடு ஒழுங்கீனமாய் நடந்து கொண்டதற்கு தன்னை யாரும் கடிந்து கொள்வார்களோ என்று யோசனயாயிருந்த செந்திலின் பக்கத்தில் வந்த கேமராமேன் தட்டிக் கொடுத்தார்.

“ஷாட் ஒக்கே தம்பி, ரொம்ப ரியலிஸ்ட்டிக்கா வந்திருக்கு. வீட்டுக்குப் போய் மாட்டுக்கு திருஷ்டி சுத்திப் போடு.”

ஷூட்டிங் முடிந்து, அங்கேயே எல்லாருக்கும் மதிய உணவு பரிமாறப்பட்டது. மட்டன் சிக்கன் வகையறாக்களை நெற்றி வரைக்கும் ஒரு பிடி பிடித்தான் செந்தில். அஞ்சு நட்சத்திர சாப்பாட்டை ருசித்து சாப்பிட்டுக் கொண்டிருந்த தங்கையைப் பார்க்க செந்திலுக்குப் பெருமையாயிருந்தது. என்ன மாதிரியொரு சாதனையை இன்றைக்கு நிகழ்த்தியிருக்கிறாள்!

ஒரு சினிமா நட்சத்திரத்துக்கு வேண்டிய எந்தத் தகுதி இவளிடம் இல்ல? இவளை ஒரு நட்சத்திரமாக்கிவிட முயற்சி செய்தால் என்ன? நம்ம ஸிஷ்டரை ஒரு இஷ்டார் ஆக்கிவிட முயற்சி மேற்கொண்டாலென்ன?

சாப்பிட்டு முடித்துவிட்டு, ஒரு மரத்தடியில் நாற்காலிகள் போட்டு உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த ப்ரடியூசர், டைரக்டர், கதாநாயகி, கதாநாயகியின் அம்மா அடங்கிய குழுவை மெதுவாய் சமீபித்தான் செந்தில்.

சார் என்றான் டைரக்டரை நெருங்கி. தலையை உயர்த்திப் பார்த்தார் டைரக்டர்.

“என்னப்பா, ஒன் எருமை மாட்டுக்கு ஷாட் முடிஞ்சிப் போச்சுப்பா. சாப்ட்டியா? பணந்தரச் சொல்றேன். வாங்கிட்டு நீ கௌம்பலாம். மேடம் தான் பாவம் பயந்துட்டாங்க.”

“சார் நம்ம ஸிஷ்டர்...” என்று இழுத்தான் செந்தில். அந்த இழுப்புக்கு டைரக்டர் ஒரு பதில் வைத்திருந்தார்.

“ஒன் ஸிஸ்டருக்கு எக்ஸ்ட்ரா ஒரு நூறு ரூவா தரச் சொல்லியிருக்கேம்ப்பா. மொத்தம் முன்னூறு ரூவா தருவாங்க. அஸிஸ்ட்டன்ட் டைரகடர்ட்ட வாங்கிக்க.”

“அதில்ல சார், நம்ம ஸிஸ்டருக்கு ஒரு சினிமா சான்ஸ்...”

“அதான் குடுத்தாச்சில்லப்பா.”

“அந்த சான்ஸ் இல்ல சார். ஈரோயின் சான்ஸ் சார்.”

செந்தில் சொல்லி வாயை மூடவும் கோரஸாய் அங்கேயொரு குபீர்ச் சிரிப்பலை எழுந்தது. அலையில் தூக்கலாய்த் தெரிந்தது கதாநாயகி நடிகையின் சிரிப்பு. செந்திலுக்கு அந்தக் கிண்டல்ச் சிரிப்பு சங்கடத்தைக் கொடுத்தாலும், அவன் மனந் தளர்ந்துவிடவில்ல.

தன்னுடய கோரிக்கையிலிருக்கிற நியாயத்தை அவன் டைரக்டரின் முன் வைத்தான். “சார், எங்க சேரிலயே காலேஜ்க்குப் போய்ப் படிக்கிறது நம்ம ஸிஷ்டர் ஒண்டிதான் சார்.”

“அது சரிப்பா, காலேஜ்க்குப் போய்ப் படிக்கிறது நடிகையாறதுக்கு ஒரு தகுதியா தம்பி? பாக்க செகப்பா, லட்சணமா இருந்தாத்தான மார்க்கெட்ல எடுபடும்!”

“இப்ப இருக்கற நடிகங்கள்ளாம் செகப்பாவா சார் இருக்காங்க?”

“நடிகன் ஆம்பள தம்பி. ஆம்பள கருப்பா இருக்கலாம், அசிங்கமா இருக்கலாம், தாடி வளத்துட்டு இருக்கலாம் அதையெல்லாம் ஜனங்க இப்ப ஏத்துக்கிட்டாங்க. ஆனா நடிகைன்னா செக்கச் செவேல்னு இருக்கணும், பளிச்னு இருக்கணும், சுண்டியிழுக்கறமாதிரி அழகா இருக்கணும்னுதான் இன்னும் ஜனங்க எதிர் பார்க்கறாங்க” என்று செந்திலுக்கு விளக்கிக் கொண்டே போன டைரக்டரை இடை மறித்தாள் கதாநாயகி.

“நீங்க என்ன சார் ரொம்ப ஸீரியஸ்ஸா இவனுக்கு எக்ஸ்ப்ளெய்ன் பண்ணிட்டிருக்கீங்க” என்றவள், செந்திலை நோக்கி, “ஏம்ப்பா ஒம்ப்பேர் என்ன?” என்று அலட்சியமாய்க் கேட்டாள்.

அந்த நடிகை மேலே இவனுக்கு மரியாதை ஏதும் இல்லையானாலும், வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அவளிடமும் ரெண்டு வார்த்தை சொல்லி வைப்போமே என்று நினைப்பு ஓடியது.

“எம்ப்பேர் செந்தில் மேடம். நம்ம ஸிஷ்டர் பேர் மீனாச்சி. அதாவது மீனா. இப்ப மீனாங்கற பேர்ல மெய்யாலுமே ஒரு நடிகை இருக்கங்காட்டி, நம்ம ஸிஷ்டர் பேர மைனான்னு மாத்திக்கலாம் மேடம். ரசிகங்களுக்கு கன்பூசன் வேணாம்.”

திரும்பவும் ஒரு ஏளனச் சிரிப்பு சிரித்தாள் நடிகை. பிறகு இவனிடம் கேட்டாள், “செந்தில், நீ பசின்னு ஒரு படம் பாத்திருக்கியா?”

“ஓ, பாத்திருக்கேனே! சோபா நடிச்ச படம். மூணு தபா பாத்திருக்கேன்.” செந்தில் உற்சாகமாய்ச் சொன்னான்.

அந்த உற்சாகத்தின் உச்சி மண்டையில் நறுக்கென்று ஒரு குட்டு வைக்கிற மாதிரி அந்த நடிகை சொன்னாள். "அந்த பசி மாதிரி ஒரு சேரிக்கதையைப் படமா எடுக்கறச்ச ஒன் ஸிஷ்டருக்குச் சொல்லி விடுவாங்க, இப்ப நீ ஒன் ஸிஷ்டரையும் ஒன் எருமை மாட்டையும் இட்டுக்கினு ஒன் சேரிக்கிப் போய்ச் சேரு."

செந்திலுக்கு மூஞ்சி செத்து விட்டது. இந்த நேரம் பார்த்தா மீனாட்சி அங்கே வந்து சேர வேண்டும்! மீனாட்சியின் முன்னிலையில் இந்த நடிகை இப்படி அவமானகரமாய்ப் பேசி விட்டாளே என்று துயரமாயிருந்தது. இவர்கள் கொடுக்கிற முன்னூறு ரூபாயக் கூட நிராகரித்து விடலாமா என்று யோசித்தான்.

வேண்டாம். இந்த நடிகையைத் தவிர மற்றவர்களெல்லாம் இங்கே நல்லவர்களாய்த்தான் தெரிகிறார்கள். டைரக்டர் நல்லவராய்த்தான் இருக்கிறார். அந்தக் கேமரா மேன் கூட.

இந்த நடிகை இவளிடம் அநாகரிகமாய் நடந்து கொண்டதற்காக இவன் மற்றவர்களிடம் நாகரீகக் குறைவாய் நடந்து கொள்ளக் கூடாது. பணத்தைப் பெற்றுக் கொண்டு நடந்தான், மீனாட்சி யோடும் எருமை மாட்டோடும்.

தங்கையின் முகத்தைப் பார்க்கக் கூச்சமாயிருந்தது. அவளின் கண்களை சந்திக்காமலேயே அவளிடம் சொன்னான், பஸ்ஸில் வீட்டுக்குப் போய்விடும்படியும், தான் மாட்டோடு நடந்து வருவதாயும்.

வேணாண்ணா, நானும் நடந்தே வறேன். பேசிக்கினே போவலாம் என்று அவள் அவனுக்கு இணயாய் நடந்தாள்.

சில நிமிஷங்கள் கழித்து அண்ணனிடம் கேட்டாள். "என்னண்ணா, பேசிக்கினே போவலாம்னுதான ஒன்னோட வாறேன். நீ என்னத்தயோ தொலச்சிட்ட மாதிரி தல குனிஞ்சிக்கினே வாறியே?"

தங்கையை செந்தில் ஏறெடுத்துப் பார்த்தான். பிறகு மனசிலிருந்த பாரத்த இறக்கி வைத்தான். "அந்தத் திமிர்ப்புடிச்ச சினிமாக்காரி இன்னா ராங்கா பேசிப்புட்டா ஸிஷ்டர்! எனக்கு வாற கோவத்துக்கு..."

"என்ன, என்ன செய்யப் போற ஒங் கோவத்துக்கு?"

"நீ வேணா பார் ஸிஷ்டர், அந்த டைரக்டர் நல்ல மனுஷன்தான், அந்த ஆள நா திரும்பவும் போய்ப் பாக்கத் தான் போறேன்."

"பாத்து? திரும்பவும் எனக்கு சினிமா சான்ஸ் கேக்கப் போறியாக்கும்? என்ன சினிமாவுல சேத்துவுடுண்ணான்னு நா ஒன்னக் கேட்டனா? ஒனக்கு எதுக்கு வேண்டாத வேலை?"

"இந்த தபா ஒனக்கு சான்ஸ் கேக்கப் போறதில்ல ஸிஷ்டர். சான்ஸ் எனக்கு."

"ஹ! ஒனக்கா!"

"ஆமா எனக்குத்தான். கதாநாயகன் சான்ஸ் இல்ல. வில்லன் சான்ஸ். கதாநாயகியா இந்த திமிர்ப் புடிச்ச நடிகையையே போடச் சொல்லுவேன். படத்துல கற்பழிக்கிற சீன் ஒண்ணு வைக்கச்

சொல்லுவேன். கற்பழிக்கிற சீன்ல இந்தத் திமிர்ப்புடிச்சவளைக் கதறக் கதறக் கற்பழிப்பேன். அவ அலற அலறக் கற்பழிப்பேன். அவ திமிரு அடங்கற வரைக்கும் கற்பழிப்பேன்."

செந்தில் உணர்ச்சி வசப்பட்டுப் பேசப் பேச மீனாட்சிக்குச் சிரிப்பு பொங்கிக் கொண்டு வந்தது.

வீதியென்றும் பாராமல் விழுந்து விழுந்து சிரித்தாள். அண்ணனின் தோள்களைப் பற்றிக் கொண்டு குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள். சுதந்திரமாய்ச் சத்தம் போட்டுச் சிரித்தாள்.

என்னமோ ஏதோ என்று திரும்பிப் பார்த்தது எருமை மாடு.

(க்ருஹஷோபா, ஜனவரி 2005)

அஹ்மத் வழக்கம் போல அம்மாவுக்குக் கால் அமுக்கிக் கொண்டிருந்த போது அந்த அறைக்குள்ளே வந்தாள் சாபிரா.

அம்மாவுக்கு இன்சுலின் போட்டாச்சா தம்பி என்கிற வழக்கமான கேள்வியை இன்றைக்கு அவள் கேட்கவில்லை. முகத்தில் வருத்தம் தெரிந்தது. கேள்வி மாறி வந்தது.

“இப்பத்தான் எந்திரிச்சியாக்கும் தம்பி?”

அஹ்மத் அவளை ஏறெடுத்துப் பார்த்தான். “எட்டு மணிக்கெல்லாம் எந்திரிச்சிட்டேனே அக்கா, ஏன்?”

கண்களை மூடிப் படுத்திருந்த அம்மா, இமைகளைப் பிரித்து, என்ன விஷயம் மகளே என்று சாபிராவைப் பார்த்தாள்.

“இவன் காலைல எட்டு எட்டரை வரைக்கும் தூங்கறானம்மா. அவர் டெய்லி எங்கிட்டப் பொலம்பிட்டுப் போறார். விடிஞ்சப்புறம் இப்படிப் படுத்துத் தூங்கறானே, நம்மளுக்குத்தானே தரித்திரம்னு சதா கரைச்சல் பண்றார்மா, நான் என்ன செய்ய?”

மெல்லிய குரலில் அம்மா சாபிராவுக்கு பதில் சொன்னாள். “ஒனக்குத் தெரியாதாம்மா சாபிரா?, ராத்திரி பூரா முழிச்சிருந்து எனக்குக் கால் புடிச்சி விடறான். விடியற நேரந்தான் எனக்குத் தூக்கம் பிடிக்கிது. அப்புறந்தான் அவன் படுக்கறான்.”

“எனக்குப் புரியுதும்மா. ஒங்க மருமகனுக்குப் புரியவைக்க முடியலியே?. சும்மாவே தண்டச்சோறுன்னு இவனைக் கரிச்சிக் கொட்டிட்டிருக்கார். இப்பப் புதுசா இது ஒண்ணு.”

எம்புள்ளையைத் தண்டச்சோறுன்னு சொல்லாதீங்கம்மா என்று ஆரம்பிக்கும்போதே அம்மாவுக்குக் குரல் உடைந்தது.

“இவன் மட்டும் இல்லைன்னா, ஒங்க வாப்பா பின்னாலேயே நானும் போய்ச் சேந்திருப்பேன். இவந்தானேம்மா இப்ப ராப்பகலாப் பக்கத்துலயேயிருந்து என்னப் பாத்துக்கறான்! இந்த சீக்காளிக்கி ஒரு நர்ஸ் அமத்தற செலவு ஒங்களுக்கு மிச்சந்தானே மகளே. இருவத்தி நாலு மணி நேரமும் எனக்கு ஒரு ஆள் தேவப்படுது. இவன் ஒரு வேலைன்னு போய்ட்டான்ன¡ என்னை யாரம்மா பாத்துக்குவா? இவனால ஒரு எடத்துல வேலையில் இருக்கவும் ஏலாது. வெவரந்தெரியாத புள்ளயா வளந்துட்டான். நா இன்னிக்கோ நாளக்கோ எண்டு கெடக்கேன். எங்காலத்துக்குப் பிறகு நீதாம்மா சாபிரா உன் புருஷனுக்கு நல்ல வார்த்தை சொல்லித் தம்பியை கவனமாய்ப் பாத்துக்கணும். இவனத் தெருவுல வுட்ராத மகளே.”

சாபிரா ஓர் இருதலைக் கொள்ளி எறும்பு. ஒருபுறம் பாசத்தோடு அம்மாவையும் தம்பியையும் பராமரிக்க வேண்டிய கடமை. மறுபுறம், முரண்டு பிடிக்கிற புருஷனை அனுசரித்துப் போக வேண்டிய கட்டாயம்.

சாபிராவுக்குப் பிறகு பத்து வருஷ இடைவெளியில் பிறந்த ஒரே மகன் என்பதால் அஹ்மதுக்கு அநியாத்துக்குச் செல்லம். அளவுக்கு மீறிய அந்தச் செல்லம், அஹ்மதை ஒழுங்காய்ப் பள்ளிக்கூடம் போக விடாமல் செய்தது; மண்டையில் படிப்பு ஏறாமல் செய்தது.

ஏழாம் வகுப்பு வரைக்கும் தட்டுத் தடுமாறி முன்னேறியவன், அதற்குமேலே ஸ்கூலுக்குப் போக முடியாதென்று ஸ்ட்ரைக் செய்துவிட்டான். இருபது வயசுக்குமேலே, கடைசி முயற்சியாய் அவனை ஒரு கம்ப்யூட்டர் கோர்ஸில் சேர்த்து விட சாபிரா முயற்சியெடுத்தாள். அதுவும் சரிவரவில்லை.

மகளை நன்றாய்ப் படிக்க வைத்து டாக்டராக்கி, ஓர் இஞ்சினியர் மாப்பிள்ளைக்கு மணமுடித்துக் கொடுத்து, அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துத்தர முடிந்த தன்னால், தன்னுடைய ஒரே மகனுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை அமைத்துத் தர இயலாமற்போன வருத்தத்திலேயே வாப்பா போய்ச் சேர்ந்து விட்டார். அம்மா படுத்த படுக்கையாகி விட்டாள்.

அம்மாவும் அஹ்மதும் சாபிராவின் புருஷனுடைய பராமரிப்பில் காலந்தள்ள வேண்டி நேர்ந்த பின்னால் பிரச்சனைகள் தலை தூக்கின.

வாப்பா இறந்த பின்னால்தான், எதிரேயிருந்த சூன்யம் அஹ்மதுக்குப் புலப்பட்டது. அதோடு, அக்கா புருஷனுக்கு இவன் மேலேயிருந்த வெறுப்பும் உறுத்த ஆரம்பித்தது. வயது இருபத்துமூணு ஆகியும் சுயசம்பாத்யம் இல்லாமல் வீட்டுக்குப் பாரமாய் உதவாக்க¨ரயாய் இவன் இருப்பது அடிக்கடி சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனாலும், இத்தனை நாள் உடம்பில் வெயில் படாமல் வளர்ந்துவிட்டவன், எந்த வேலையென்று போய் அலைய முடியும் என்கிற பயத்தினாலும், நோய்வாய்ப்பட்டிருக்கிற அன்பான அம்மாவை விட்டு விலகியிருக்க சம்மதமில்லாததாலும் அஹ்மத் அசைந்து கொடுக்காமலிருந்தான். அம்மாவின் அறைக்குள்ளேதான் அவனது வாசம்.

அம்மாவுக்குத் தினமும் காலையில் இன்சுலின் இஞ்ஜக்ஷன் போட வேண்டும். காலையில் புருஷனைக் கிளப்பி வேலைக்கு அனுப்பி விட்டு ஆஸ்பத்திரிக்குக் கிளம்பவேண்டிய அவசரத்தில், அம்மாவுக்கு ஊசி போட நேரம் ஒதுக்குவது சாபிராவுக்கு அசௌகர்யமாயிருந்தது. மேலோட்டமான ஸப் க்யூட்டோனியஸ் இன்ஜக்ஷன்தான் இது, பொதுவான ஊசிகளைப்போல ஆழமாய்க் குத்த வேண்டியதில்லை, ரொம்ப ஈஸி என்று தம்பியைச் சரிக்கட்டி, இன்சுலின் செலுத்தும் கலையை அவனுக்கு சாபிரா கற்றுக் கொடுத்தாள். அம்மா சம்பந்தப்பட்டது இது என்பதால் அஹ்மத் ஆர்வமும் அக்கறையும் காட்டினான்.

அக்கா எதிர்பார்த்ததையும்விட விரைவாய் இன்சுலின் இன்ஜக்ஷன் போடக் கற்றுக் கொண்டுவிட்டான். அம்மாவுக்கு ஊசி போடுவது இப்போது அஹ்மதுடைய காலைக்கடன்களில் முதன்மையானது. அம்மாவுக்கு ரெண்டு கால்களிலும் நிரந்தர உளைச்சல். நீலகிரித்தைலம், தென்னைமரக்குடி எண்ணை, ஆலிவ் ஆயில், டைகர் பாம் என்று மாற்றி மாற்றித் தடவிக், கால்களை நீவி விட வேண்டும். அம்மா கண்ணயர்கிற வரைக்கும் கால்களைப் பிடித்துவிட வேண்டும். அம்மாவுக்கு இப்படிப் பணிவிடை செய்வதில் அஹ்மதுக்கு சந்தோஷம் கிடைத்தது.

நபிகள் நாயகத்தின் ஹதீஸ் என்று வெள்ளிக்கிழமை ஜும் ஆத் தொழுகையில் பிரசங்கம் செய்த பேஷ் இமாம் சொன்னார்:

மாதாவின் காலடியில் சொர்க்கம் இருக்கிறது.

இந்த நபி மொழியைக் கேட்ட பிறகு, அம்மாவின் காலடியே கதி என்று கிடப்பது அஹ்மதுக்கு இன்னும் பிரியமானதாக ஆகிவிட்டிருந்தது. அம்மா இன்னும் ரொம்ப நாளைக்கு உயிரோடிருக்க மாட்டார்கள் என்று அஹ்மத் உணர ஆரம்பித்தபோது, பயமாயிருந்தது. அம்மாவின்

காலத்துக்குப்பிறகு இவன் ஜீவித்திருப்பது எவ்வாறு? அது சாத்தியமா என்றே தெரியவில்லை. அம்மாவை உன்னிடம் அழைத்துக் கொள்கிற போது, என்னையும் அழைத்துக்கொள் அல்லா என்று இறைவனை வேண்டிக் கொண்டிருந்தான். அம்மா உறங்கின பிறகு, அந்த நிர்மலமான முகத்தைப் பார்த்தபடியே உட்கார்ந்திருப்பான். கண்கள் பனிக்கும்.

.... அம்மா, என்ன வுட்டுட்டுப் போயிராதீங்க அம்மா, நானும் ஒங்க கூட வந்திர்றேன் அம்மா...

அம்மாவின் சேவையில் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தவனின் ஓட்டத்தைத் தடை செய்கிற ஒரு துர்சம்பவம் அன்றைக்கு நிகழ்ந்தது. அன்றைக்குக் காலை, கண் மூடிப் படுத்திருந்த அம்மா, புஜத்தில் சுருக்கெனவும், ஸ்ஸ்ஸென்று கண் திறந்தாள். தனக்கு ஊசி போட்டுக் கொண்டிருந்த சாபிராவைப் பார்க்க அம்மாவுக்கு ஆச்சர்யம்.

‘‘அஹ்மத் எங்கம்மா?’’ என்று மகளிடம் விசாரித்தாள்.

‘‘அவன்னா வலிக்காம பூப்போல ஊசி போடுவான். நீ குத்தறது வலிக்குதும்மா.’’

‘‘அதுசரி. நா டாட்டர் கம் டாக்டர். நா இன்ஜக்ஷன் போட்டா வலிக்குது, ஒங்க செல்ல மகன் போட்டா மட்டும் பூப்போல இருக்குதாக்கும்’’ என்று சாபிரா சிரிக்க முயற்சி செய்தாள். அவளால் சிரிக்க இயலவில்லை. அம்மாவின் அடுத்த கேள்வியை எதிர்கொள்ள ஆயத்தமானாள். கேள்வி வந்தது.

‘‘அஹ்மத் எங்கம்மா? புள்ளய விடிஞ்சதுலயிருந்து காணல? என்னை வுட்டு நகரமாட்டானே?’’

‘‘பக்கத்துல எங்கயாவது போயிருப்பான். வந்துருவான்மா.’’

‘‘கடைக்கி எங்கயாவது அனுப்பிச்சிருக்கியா.?’’

‘‘அ... ஆமாம்மா, வந்துருவான். நா கௌம்பறேன். சமயல்கார அம்மா கிச்சன்ல இருக்காங்க, ஏதாச்சும் வேணும்னா கொரல் குடுங்க.’’

மேற்கொண்டு அம்மா ஏதும் கேட்கும் முன் சாபிரா கிளம்பி விட்டாள். ஆஸ்பத்திரியில் சாபிராவுக்கு இருப்புக்கொள்ளவில்லை. ஒரு மணி நேரத்துக்கொருதரம் வீட்டுக்கு போன் செய்து சமையல்கார அம்மாவைத் தொந்தரவு பண்ணிக் கொண்டிருந்தாள், அஹ்மத் வந்துட்டானா, அஹ்மத் வந்துட்டானா என்று.

சாயங்காலம் சீக்கிரமாய் வீட்டுக்கு வந்து விட்டாள். வந்தவள், நேராய் அம்மாவிடந்தான் போனாள். அம்மாவின் கவலையையும் கேள்விக்கணைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்குமென்று தெரியும். பரவாயில்லை, எதிர்கொள்ளுவோம். இவளைப் பார்த்த மாத்திரத்தில் அம்மா அங்கலாய்க்க ஆரம்பித்துவிட்டாள்.

‘‘என்ன சாபிரா இது? எங்கம்மா அனுப்பிச்சிட்டீங்க எம்புள்ளய? விடிஞ்சதுலயிருந்து அவனைப் பாக்கவேயில்லையேம்மா? எங்கம்மா போய்ட்டான் எம் மகன்? இந்த மெட்ராஸ்ல அவனுக்கு பாதை கூடச் சரியாத் தெரியாதே! ஒலகந் தெரியாத புள்ளயாச்சேம்மா? எங்க போய் அம்புட்டுக்கிட்டு அவஸ்தப்படறானோ தெரியலயே. ஒம் புருஷனுக்கு போன் போட்டுச் சொல்லி போய்த் தேடிப்பாக்கச் சொல்லேன் மகளே.’’

...எம்புருஷனைப் போய்த் தேடிப்பார்க்கச் சொல்லவா! தம்பி காணாமப் போனதுக்குக் காரணமே அந்த மனுஷன்தானே! அந்தக் கதையை எப்படி அம்மாவிடம் சொல்லுவது! சொல்லத்தானே வேண்டும்...

திடீரென்று அஹ்மத் வந்து நின்றானென்றால், அவன் அழுகையும் கேவலுமாய் அம்மாவிடம் விஷயத்தைச் சொல்லுமுன், தானே சொல்லிவிடுவதுதான் உசிதம். சாபிரா மெல்ல வாயைத் திறந்தாள்.

''அம்மா, காலைல அவர் தம்பிய அடிச்சிட்டார்மா.''

அம்மா அதிர்ந்து போனாள். பதற்றத்துடன், படுக்கையில் கைகளையூன்றி எழ முயன்று, முடியாமல் திரும்ப சரிந்து விழுந்தாள். வார்த்தைகள் பதறியபடி வெளிவந்தன.

''என்னது, எம்புள்ளய ஒம்புருஷன் அடிச்சிட்டாரா? எம்புள்ள என்ன செஞ்சான்னு அடிச்சார்! ஒரு ஈ எறும்புக்குக்கூட பாவம் பாக்கறவனாச்சேம்மா? என்ன பாவத்துக்கு அவனப் போட்டு அடிச்சீங்க?''

என்னமோ ஏதோ என்று சமையல்கார அம்மா ஓடி வந்து எட்டிப் பார்த்தாள். ஒண்ணுமில்ல சரஸ்வதியம்மா, நீங்க போங்க என்று அவளை அனுப்பிவைத்துவிட்டுச் சாபிரா தாயை சாந்தப்படுத்தினாள்.

''ஒண்ணுமில்லம்மா, அவர் ஷர்ட் பாக்கெட்ல ஐநூறு ரூபா நோட்டு நாலு நோட்டு வச்சிருந்தாராம். அதைக் காணலியாம். தம்பிதான் எடுத்துட்டான்னு சாதிக்கிறார். இவர் வேற எங்கயாவது வச்சிருப்பார். பொறுமையாத் தேடிப்பாத்தா கிடைக்கும். இவருக்கு அந்தப் பொறுமை இல்ல. அஹ்மத்னா எப்பவுமே இவருக்கு ஆகறதில்ல....''

''அவர் அடிச்சத நீ வேடிக்கை பாத்துட்டு நின்னியாக்கும்? யா அல்லா, சூதுவாது தெரியாத புள்ளய அடிச்சி வெரட்டி வுட்டுட்டீங்களே, எம்புள்ள எங்க போனானோ, என்ன ஆனானோ, ஒனக்குத் தெரிஞ்சவங்க கிட்ட சொல்லித் தேடச் சொல்லேம்மா. அதோட போலீஸ்லயும் எழுதி வையி. நா உசிரோட இருக்கப்பவே எம்புள்ளய இந்தப்பாடு படுத்திறியளே, நா போய்ச் சேந்த பெறகு அவன என்னவெல்லாஞ் செய்வீகளோ, நீதான் ஆண்டவனே எம்புள்ளயக் காப்பாத்தணும்.''

அம்மாவின் கண்களில் கண்ணீர்க்குளம். அம்மாவின் மேல் கவிழ்ந்து கொண்டு கண்ணீர் விடத்தான் சாபிராவால் முடிந்தது. அன்றைக்கு ராத்திரி எவ்வளவோ வற்புறுத்தியும் அம்மா சாப்பிட மறுத்து விட்டாள். தேத்தண்ணி கூட குடிக்கவில்லை. மருந்து மாத்திரை எதுவும் உள்ளே செல்லவில்லை.

அடுத்த நாள் காலையில் இன்சுலின் ஸிரிஞ்சோடு சாபிரா, அம்மாவின் படுக்கையை நெருங்கின போது அந்த விபரீத மாற்றம் உறுத்தியது. தன்னுடைய கடைசிப் பயணத்தின் முதல் அத்தியாயத்தை அம்மா தொடங்கிவிட்டிருந்தாள்.

கோமா.

வாழ்க்கைக்கும் மரணத்துக்கும் இடைப்பட்ட அந்தர லோகத்தை அம்மா அடைந்து விட்டிருந்தாள். அந்த தினமே உயிர் பிரிந்து விடலாம். அல்லது சில நாட்கள் கோமா நீடிக்கலாம். இழுத்துக் கொண்டு கிடக்காமல் விரைவாய் ஒரு முடிவு வந்து விட்டால் அம்மாவுக்கு அவஸ்தை குறையும். ஆனால், அம்மாவின் மூச்சு நின்று போவதற்கு முன்னால் அஹ்மத் வந்து சேர்ந்தாக வேண்டுமே!

எப்படியும் அவன் வந்து சேர்ந்து விடுவான் என்று சாபிராவின் உள்ளுணர்வு சொல்லிக் கொண்டிருந்தது. அம்மாவுக்கும் அஹ்மதுக்குமிடையே நிலவுகிற பாசப் பிணைப்பில் சாபிராவுக்கு

நம்பிக்கை இருந்தது. தம்பி இந்த உலகத்தில் எந்த மூலையிலிருந்தாலும் அம்மாவின் கடைசிக் கணங்கள் அவனுக்கு மானசீகமாய் உணர்த்தப்பட்டுவிட்டிருக்கும்.

சாபிரா, அமைதியடைந்த அம்மாவின் முகத்தைப் பார்த்தபடியே நின்றாள். பிறகு, அவசரமாய் ஒலுச் செய்து விட்டு வந்து புனித குர்ஆனின் சில ஆயத்துகளை அம்மாவின் தலைமாட்டில் ஓதினாள். ஆஸ்பத்திரியில் இன்றைக்கு ஆப்பரேஷன் டே. வேதனையும் குழப்பமும் கலந்த இந்த மனநிலையில் இவளால் உபகரணங்களைக் கையாள முடியாது. போய், ஏதாவது மாற்று ஏற்பாடு செய்துவிட்டு வீட்டுக்கு வந்து விடலாம். புருஷனுக்கு போன் செய்ய வேண்டுமா? வேண்டாம். அந்த ஆளுக்குச் சொல்லி ஆகப்போவது ஒண்ணுமில்லை. சாயங்காலம் சாவகாசமாய்ச் சொல்லிக்கொள்ளலாம்.

பன்னிரெண்டு மணிபோல வந்து விடுவதாய் சரஸ்வதியம்மாவிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினாள். இன்னொன்றையும் சரஸ்வதியம்மாவிடம் சொல்ல வேண்டுமென்று ஏனோ தோன்றியது.

‘‘சரஸ்வதியம்மா, வெளிக்கதவை உள்ளார லாக் பண்ண வேண்டாம். சும்மா சாத்தியிருக்கட்டும், என்ன?’’

ஆஸ்பத்திரியில் மாற்று ஏற்பாடு செய்துவிட்டுக் கிளம்பி பதினொண்ணேகாலுக்கெல்லாம் வீடு வந்து சேர்ந்து விட்டாள். ஓசைப்படாமல் கதவைத் திறந்து கொண்டு உள்ளே பிரவேசித்தபோது, இங்கே என்னமோ நடந்திருக்கிறது என்று மனசு குறுகுறுத்தது.

சரஸ்வதியம்மா கிச்சனில் வேலையாயிருந்தாள். அவளுடைய கவனத்தை ஈர்த்துவிடாமல் சாபிரா நுனிக் காலில் நடந்து அம்மாவின் அறையை சமீபித்து உள்ளே பார்வையைச் செலுத்தினாள். நினைத்தது சரிதான்.

அம்மாவின் கால்மாட்டில் அஹ்மத்!

அம்மாவுடைய மரண நெருக்கத்தின் இறுக்கத்தினூடே இது ஒரு ஆறுதல். அம்மாவின் அருமை மகன் வந்துவிட்டான். இனி அம்மாவின் ஆத்மா அமைதியாய் அடங்கும்.

அருகாமையில் அம்மாவை அவதானித்தபோதுதான் அவளுக்குப் புரிந்தது. அம்மாவுக்கு அமைதி ஏற்கனவே கிடைத்துவிட்டிருந்தது என்பது. உணர்ச்சிகளை ஓரங்கட்டிவிட்டு, டாட்டராயில்லாமல் ஒரு டாக்டராய் அம்மாவுக்குப் பல்ஸ் பார்த்தாள். அது அடங்கிப் போய் அரை மணி நேரமிருக்கும் என்று தெரிந்தது. அம்மாவின் கால்களைக் கட்டியபடி அஹ்மத் கவிழ்ந்திருந்தான். அவன் ஸ்பரிசித்திருப்பது அம்மாவின் உயிரற்ற உடலைத்தான் என்பது தம்பிக்குத் தெரிந்திருக்காது. அன்னையையல்லாது வேறொரு உலகத்தை அறியாதவன், எப்படி இந்த இடியையும் இழப்பையும் தாங்கிக் கொள்ளப்போகிறான்!

தம்பியின் தலையைச் சாபிரா வாஞ்சையுடன் வருடிக் கொடுத்தாள். அவன் சலனமற்றிருந்தான். ஒரு விபரீதமான சந்தேகத்தோடு அம்மாவின் கால்களைக் கட்டிக் கொண்டிருந்த தம்பியின் கைகளை விலக்க முற்பட்டாள்.

அந்தக் கைகளில் உயிரில்லை. அம்மா தனியாய்ப் போகவில்லை என்பது சாபிராவுக்குப் புரிந்தது. மாதாவின் காலடி சொர்க்கத்தைத் தேடி அஹ்மத் போய்விட்டிருந்தான். இனிமேலும் உணர்ச்சிகளைப் போட்டு அமுக்கிக் கொண்டிருப்பதற்கு நியாயமில்லை. சாபிரா தரையில் உட்கார்ந்தாள். தம்பியின் உடலை இழுத்து மடியில் போட்டுக் கொண்டு வெடித்து அழுதாள்.

(நன்றி : கணையாழி, ஃபிப்ரவரி 2005)

உறக்கம் தடைபட்டுக் கண்விழித்துப் பார்த்தான் ரமணன். புன்னகையுடன் பக்கத்திலே வேணி.

“என்ன வேணி, சுகமான நித்திரையிலிருந்தனான், கலைச்சிப் போட்டீர்’ என்று செல்லமாய்க் கோபித்துக் கொண்டான்.

“துப்பாக்கிச் சத்தத்திலையும், பொம்மர்களின் இரைச்சலிலையும், ஷெல் பயத்திலையும் வடிவா உறங்கிக் கன காலமாச்சுதுதானே! இண்டைக்கித்தான் ஹெலிக்கொப்ரர் சத்தங்கூட இல்லை, வரப்பிலை கொஞ்சம் படுக்கலாமெண்டா....”

வேணி சட்டென்று எழுந்து கொண்டாள்.”அப்ப நீங்க படுங்கோ, நான் போறன்.”

“எங்கை போறீராம்?”

“அம்மாவும் அப்பாவும் இந்தியாவுக்குப் போகினம். உங்களுக்குப் பிடிக்கலையெண்டா நான் மட்டும் எதுக்கு இங்கை யாழ்ப்பாணத்திலை நிக்க வேணும்? நானும் போறன். பின்நேரம் தோணி.”

“பகிடி பண்ண வேண்டாம் வேணி. நீர் போய்ட்டீரெண்டா நான் இங்கை உயிரோடிக்கேலுமே? இந்தக் காணிக்காகவும் எண்ட வேணிக்காகவுந்தானே, நான் இன்னும் இன்னும் இலங்கையிலை நிக்கிறன்! இப்படி வாருமன்.”

எட்டி அவளுடைய கையை இவன் பிடிக்க முயல, அவள் விலகினாள்.

“ம்ம், கல்யாணத்துக்கு முந்தி என்னைத் தொடவே மாட்டேனெண்டு சொன்னதெல்லாம் மச்சானுக்கு மறந்து போச்சு போலை!”

“ஓமப்பா, சொன்னனான், ஆனா, இனியும் தாங்கேலாது. அடுத்த கிழமை நல்லூர் முருகன் கோவிலடியிலை எங்களுக்குக் கல்யாணம்.”

“அடுத்த கிழமையே? சமாதானம் வந்த பிறகுதான் கல்யாணம் எண்டு சொன்னனீங்கள்?”

“நீரும் நானும் உயிரோடிருக்கிற காலத்திலை சமாதானம் வராது போலைத் தெரியுது வேணி. கல்யாணம் முடிஞ்சு ரெண்டு பேரும் ஒருக்கா கதிர்காமம் போய் வருவம்.”

“இதென்ன விசர்க் கதை மச்சான்! இங்கை இயக்கத்துப் பொடியன்களைத் தாண்டி வெளிக்கிட்டாலும் அங்கை ஆமிக்காரனைத் தாண்டிப் போகேலுமே?”

“முருகன் மனசு வைச்சானெண்டா ஏலும். மாலையும் கழுத்துமாய்க் கதிர் காமத்திலை போய் நிண்டு, எங்கட நாட்டுக்கு சமாதானமும், நிம்மதியும் குடு ஆண்டவா எண்டு நீரும் நானும் வேண்டினாத்தான் இந்த நாட்டுக்கு விமோசனம் கிடைக்கும் போலைக் கிடக்குது. அங்கை என்ன பாக்குறீர் வேணி?, நான் உம்மிட்ட தான் கதைக்கிறன்.”

“உது என்ன மச்சான், வடக்காலை ஒரு சத்தம்!”

வேணி சுட்டிக் காட்டிய திக்கில் ரமணன் கவனம் செலுத்தினான். பிறகு, தீவிரமடைந்து வேகமாய் அவளுடைய கையைப் பற்றினான்.

‘மச்சான் என்ன இது, கல்யாணத்துக்கு முந்தி....!’ என்று ஆட்சேபித்த வேணியை இழுத்து இறுக்கமாய் அணைத்துப் பிடித்தான்.

“பொம்மர் ஒண்டு வருகுது வேணி, என்னைக் கெட்டியாய்ப் பிடிச்சிக் கொள்ளும்.”

பொம்மர் நெருங்கி வந்தது. ஒருவரோடொருவர் பின்னியபடி ரெண்டு பேரும் வரப்பிலிருந்து வயலுக்குள் உருண்டார்கள்.

தாழப்பறந்து வந்த பொம்மர், சில குண்டுகளை அனாயாசமாய்த் தூவிச் சென்றது. கண் மூடித் திறப்பதற்குள் காணி கருகி உருக்குலைந்து போனது. அதோடு, மென்மையான ஒரு காதலும்!

(ஆனந்த விகடன், தீபாவளி மலர், 2006 )

கடைசிப் பூட்டைப் போட்டுக் கடையைப் பூட்டி விட்டுக் குலுங்கிக் குலுங்கி அழுதேன்.கடை ஊழியர்கள் எல்லாரும் கண்ணைக் கசக்கிக் கொண்டு நின்றிருந்தார்கள். எல்லாருக்கும் ரெண்டு மாசச் சம்பளத்தை ஒரே தவணையில் கொடுத்து கணக்குத் தீர்த்தாகி விட்டது.ஒரு பத்து நிமிஷம் சோகம் கொண்டாடின பிறகு, ஒவ்வொருவராய்க் கை கூப்பியும், கை குலுக்கியும் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினார்கள்.

பஷீர் மட்டும் போகாமலிருந்தான். தயங்கித் தயங்கி என்னிடம் ஒரு கோரிக்கை வைத்தான்.

"அண்ணே, அவங்க எல்லாம் மெட்ராஸ்க்காரங்க. லோக்கல் பசங்க. நா திருநவேலிக்காரன். ஊருக்குப் போக முடியாது. போனா, பொழப்புக்கு வழியிருக்காது. விட்டுப் போறதுக்கு மனசும் கேக்கல அண்ணே. ஒங்க கூடவே வூட்டோட இருந்துர்றேன் அண்ணே."

"வூட்ட விக்யப் போறேம்பா, புரோக்கர்ட்ட பேசியாச்சு. வூட்ட வித்துத்தான் கடனயெல்லாம் அடக்யணும். அப்புறம் ஒரு வாடக வூட்டப் பாத்து ஷிஃப்ட் பண்ணனும்."

"அதுக்கென்னண்ணே, வாடக வூடு பாக்கவும், ஷிஃப்ட் பண்ணவும் ஒங்களுக்கு ஒத்தாசையா இருக்கேன். அதுவும் போக, பெரியம்மாவயும் பெரிய வாப்பாவயும் பாத்துக்கறதுக்கு ஒங்களுக்கு ஒரு ஆள் தேவப்படுந்தானே? அவங்கள நா பாத்துக்கிருதேன். கடையில குடுத்த சம்பளம் வேண்டாம். ஏதோ ஒங்களால ஏந்ததக் குடுங்க. என்னப் போக மட்டும் சொல்லிராதீங்கண்ணே."

நாத் தழுதழுக்க அவன் வைத்த கோரிக்கை எனக்கும் ஏற்புடையதாயிருக்கவே, பஷீர் நம்ம சின்னஞ்சிறிய குடும்பத்தின் ஓர் அங்கமானான்.

நஷ்டங்களை சரிக்கட்ட முடியாமல், மார்வாடிக் கடன்களை சந்திக்க முடியாமல், பத்து வருஷ பிஸினஸ், ஒரேயடியாய் அஸ்தமித்துப் போனதில் வாழ்க்கை ஸ்தம்பித்துப் போனது. மூவாயிரம் சதுரடியில் அட்டகாசமாய் அமைந்திருந்த டிபார்ட்மெண்ட் ஸ்டோருக்கு மூடுவிழா நடத்த நேர்ந்த பேரிடி, பெற்றோரையும் தாக்க, ஏற்கனவே ஆரோக்யம் குன்றியவர்களாயிருந்த அம்மாவும் வாப்பாவும் மேலும் மன உளைச்சலுக்கு உள்ளாகிப் படுக்கையில் விழுந்து விட்டார்கள்.

அவர்களைத் தன்னந்தனியாய் நான் கவனித்துக் கொள்வது சிரமமான காரியம். பஷீர் வீட்டோடு இருக்க முன் வந்தது ஓர் அனுகூலம் தான். வீட்டை விற்றுப் பெரும் பெரும் கடன்களையெல்லாம் அடைத்த தோடு கஜானா காலி. மினி பங்களா மாதிரியான தனி வீட்டிலி ருந்து, ஒரு டபுள் பெட்ரூம் ஃப்ளாட்டுக்குக் குடிபெயர்ந்தாச்சு.

இந்த அபார்ட்மென்ட்டின் மொட்டை மாடியில் ஒவ்வொரு ஃப்ளாட்டுக்கும் தன்னந்தனியாய் ஓவர்ஹெட் டாங்க் உண்டு. ஆனால் தண்ணீர்தான் கிடையாது. ரெண்டு நாளைக்கொருதரம் வருகை தருகிற கார்ப்பரேஷன் டாங்க்கரில் தண்ணீர் பிடித்து பாத்ரூம்களை நிரப்ப வேண்டும்.

டாங்க்கர் அதிகாலையில் வரும், மத்யான வெயிலில் வரும், நடுச்சாமத்தில் கூட வரும். எப்போது வந்தாலும், நானும் பஷீரும் போர்க்கால வேகத்தில் இயங்கி, ரெண்டு பாத்ரூம்களையும் நிரப்பிவிட்டு, இருபத்தி மூணு மாடிப்படிகள் ஏறி மொட்டை மாடிக்குப் போய் ஓவர்ஹெட் டாங்க்கையும் வழிய வழிய நிரப்பி விடுவோம்.

உடம்புக்கு முடியாமலிருந்தாலும், அஞ்சு நேரம் மசூதிக்குப் போய்த் தொழுகையில் கலந்து கொள்ள வேண்டுமென்கிற ஆன்மீகப் பிடிவாதம் வாப்பாவுக்கு. பஷீர்தான் அவரை ஸ்கூட்டரில் கூட்டிக் கொண்டு போய் வருவான். சுபுஹ் தொழுகைக்கு அதிகாலை அஞ்சு மணிக்கு அவனை எழுப்பி விடுவதுதான் சிரமமான காரியம்.

கடைகளுக்குப் போய் வருவதற்கு, கரன்ட் பில், டெலிஃபோன் பில் கட்டுவதற்கு சமையல்கார அம்மாவுக்கு ஒத்தாசை செய்வதற்கு என்று மட்டுமல்லாமல், பாத்ரூம் கழுவி விடுவதற்குக் கூட பஷீர்தான் என்று ஆகிப் போனது. ரெண்டாயிரம் ரூபாய் சம்பளத்துக்கு அவனுடைய உழைப்பு கொஞ்சம் தாராள மயம்தான்.

''பெரியம்மாவுக்கு இன்ஸூலின் இஞ்ஜக்ஷன் போடறதுக்கு நர்ஸ் எதுக்குண்ணே அநாவசியமா, இன்ஸூலின் நானே போடறேன். நர்ஸ நிப்பாட்டிரலாமே'' என்றான்.

''நீ எப்படிப்பா இஞ்ஜக்ஷன் போடுவ?'' என்றதற்கு, ''நர்ஸட்ட கேட்டுப் படிச்சிக்கிட்டேன். அண்ணே, நர்ஸ்க்கு முன்னால நானே ரெண்டு வாட்டி இஞ்ஜக்ஷன் போட்டும் இருக்கேன். ரொம்ப ஈஸி'' என்று புன்னகைத்தான்.

ஈஸிதான். நர்ஸை நிறுத்தி விட்டு அம்மாவுக்கு நானே டெய்லி இன்ஸூலின் போடலாம் என்ற நினைத்தவன்தான் நான். ஆனால் அம்மாவின் கையில் ஊசி குத்த எனக்குக் கை வராது என்கிற சந்தேகம் இருந்தது.

இப்போது நர்ஸை நிறுத்தியாச்சு. இதிலொரு ஆயிரம் ரூபாய் மிச்சம். ரொம்பத் தாங்ஸ்ப்பா பஷீர்.

மிச்சம் பிடித்துக் கோட்டையெதுவும் கட்டுகிறதாயில்லை. கடையைக் காலி பண்ணின பிறகு, வாப்பாவுடைய பனிரெண்டாயிரத்துச் சொச்சம் பென்ஷனில்தான் ஜீவனம் நடந்து கொண்டிருக்கிறது.

ஒண்ணாந் தேதி ஒண்ணாந் தேதி, பாங்க்குக்குப் போய், பென்ஷன் பணத்தைத் துடைத்து எடுத்துக் கொண்டு வருவது பஷீரின் இன்னொரு முக்கியமான வேலை.

''நம்ம ஃப்ளாட்டுக்கு எதுத்த பலசரக்குக் கடையில அந்த ஓனர்ட்ட கேட்டு நம்ம இன்ஸூலின் மருந்த ஃப்ரிஜ்ல வச்சிருக்கோம்ல அண்ணே?''

''ஆமா அதுக்கென்ன?''

''நேத்து அந்த ஓனர் ஒரு மாதிரிப் பேசிப்புட்டார் அண்ணே. அவரோட ஃப்ரிஜ்ஜ மட்டும் யூஸ் பண்ணிக்கிறோமாம். அவர்ட்ட சரக்கு வாங்கறதில்லயாம்.''

''அப்படி என்னப்பா நம்ம வீட்டுக்கு சரக்கு வாங்கறோம். பரவாயில்ல, நம்மளால அவருக்குக் கஷ்டம் வேணாம். இன்ஸூலின் மருந்த எடுத்துட்டு வந்துரு. இப்ப வின்ட்டர் தான், மருந்து ஒண்ணும் ஸ்ப்பாய்ல் ஆயிராது.''

வாப்பா அம்மாவுடைய மருந்துச் செலவுக்கென்று அக்கா தங்கச்சிகள் அவ்வப்போது பணம் அனுப்புவார்கள். தொட்டுக்கோ தொடச்சிக்கோ என்று வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறது.

''எங்கேயாவது ஒரு வேலக்கி ட்ரை பண்ணலாம்ல மகனே'' என்று ஒரு யோசனையை வைத்துப் பார்த்தார் வாப்பா.

“நா வேணா என்னோட பழைய ஃப்ரண்ஸ் யார்ட்டயாவது ஃபோன் பண்ணிப் பேசிப் பாக்கட்டுமா?”

ம்ஹூம். இருபத்தஞ்சு சிப்பந்திகளுக்கு சம்பளம் கொடுத்து, தினசரி அம்பதாயிரம் ரூபாய் டர்ண் ஓவர் பண்ணிக் கொண்டிருந்த ஏஸி டிபார்ட்மென்ட் ஸ்டோர் ஒன்றின் மாஜி முதலாளி, யாரோ ஒரு சாமான்யனிடம் சம்பளத்துக்கு வேலைக்குப் போவதா? ஹ.

அந்த ஹ வுக்கும் ஒரு சோதனை வந்தது.

மங்களூரிலிருந்து வந்திருந்த டாக்டர் மச்சான் என்னுடைய மனவுறுதியை அசைத்துப் பார்க்க முற்பட்டார்.

“பள்ளி வாசலுக்கு எதுத்தாப்ல ஒரு பெரீய்ய டிபார்ட்மென்ட் ஸ்டோர் இருக்கே?”

“ஆமா, இருக்கு.”

“அதோட ஓனர்தானே பள்ளிவாசல் கமிட்டிக்கி செக்ரட்டரியாம்?”

“இருக்கலாம்.”

“பள்ளி வாசல்ல வச்சி அவர்ட்ட பேசிப் பாத்தேன். ஒங்கக் கடையப் பத்தி அவருக்குத் தெரிஞ்சிருக்கே?”

தெரிஞ்சிருக்காதா பின்னே? நம்ம கடைக்குப் போட்டிக் கடை என்று சில மாதங்களுக்கு முன்பு வரை இறுமாந்து நான் விரோதம் கொண்டிருந்த கடையின் உரிமையாளரல்லவா!

“நீ இப்ப சும்மாதான் இருக்கன்னு நைஸா அவர் காதுல போட்டு வச்சேன். அந்த மனுஷன் ஒண்ணும் சொல்லல. அப்பறம் நானே கேட்டேன், தம்பிய ஒங்கள வந்து பாக்கச் சொல்லவான்னு. சரி வரச் சொல்லுங்கன்னார். அவருக்கும் ஒன்னப்போல ஒரு எக்ஸ்ப்பீரியன்ஸ்ட் ஆள் தேவப்படுவான். நாளக்யே போய் அவரப்பாரு. மாசம் பத்தோ பதினஞ்சோ தருவார்ல்ல?”

போனேன். ஸ்கூட்டரையெடுத்துக் கொண்டு போனேன்.
அந்தக் கடையையொட்டி ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு, ஹெல்மெட்டைக் கழட்டி ஸ்கூட்டரிலேயே வைத்து விட்டு, ஹெல்மெட்டோடு என்னுடைய சுய கௌரவம், மமதை, ஈகோ எல்லாவற்றையும் கழட்டி வைத்து விட்டுக் கடைக்குள்ளே பிரவேசித்து, அந்த முதலாளிக்கு சலாம் சொன்னால், என் சலாமுக்கு பதில் சலாம் சொல்லக் கூட மனசிறங்கவில்லை அந்த ஆள்.

டாக்டர் மச்சானிடம் இதைச் சொன்ன போது, “அப்ப அந்த எடம் வேண்டாம்” என்று மங்களூர் மெய்லில் ஏறிவிட்டார்.

மச்சான் கிளம்பிப்போன மறுநாள் பஷீர் மெல்ல நெருங்கி வந்து, “அண்ணே” என்று ஆரம்பித்தான்.

“இது..... வந்து.... நா ஒண்ணு சொன்னாக் கோச்சுக்கக் மாட்டீங்களே....”

“சொல்லுப்பா.”

“திருநெல்வேலியிருந்து லெட்டர் வந்திருக்கு. வாப்பா எழுதியிருக்காக.”

“ஊருக்குப் போய்ட்டு வரேங்கியா, போய்ட்டு வா. அம்மாக்கு இன்ஸுலின் போடறது தான் ப்ராப்ளம். போய்ட்டு ரெண்டு நாள்ல வந்துருவியா?”

“அதில்லண்ணே, வாப்பா துபாய்ல ஒரு ஆள்ட்ட எனக்காகச் சொல்லி வச்சிருந்தாகளாம். அந்த ஆள் விசா அனுப்பியிருக்காராம். இன்னும் ஒரு வாரம், பத்து நாள்ல கௌம்பணுமாம்.”

திடுக்கென்றது. இந்தப் பையன் போய்விட்டால் ஒரு கை ஒடிந்தது போல ஆகிவிடுமே. இன்னும் ரெண்டு மாசம் அவகாசமிருந்தால் ஒரு மாற்று ஏற்பாட்டுக்கு முயற்சிக்கலாம். கொஞ்சம் தாமதித்துப் போக முடியுமா என்று கேட்டுப் பார்க்கலாமா?

“விஸா சரி, பாஸ்போர்ட்?” அவனிடமே கேட்டேன்.

“பாஸ்போட்டெல்லாம் ரெடியா எடுத்து வச்சிருக்கேண்ணே” என்று தலையைச் சொறிந்தான்.

“எனக்குத் தெரியாம எப்ப எடுத்தப்பா?”

“நம்ம கட இருக்கும்போதே எடுத்துட்டேண்ணே.”

புத்திசாலித்தனமாய்த்தான் செயல்பட்டிருக்கிறான். அட, நான் தான் மடையன்.

பஷீர் போய்விட்டான்.

அவன் போவதற்கு முன்னால், அம்மாவுக்கு இன்ஸுலின் போடுவதற்கு அவனிடமே பயிற்சி எடுத்துக் கொண்டேன். அம்மாவின் புஜத்தில் ஊசியைச் செலுத்துவதற்கு ஆரம்பத்திலிருந்த மறுப்பு சில நாட்களில் சரியாய்ப் போனது.

வாப்பாவின் உடல் நலம் முன்னிலும் மோசமாகி, நடமாட சங்கடமாய்ப் போனதால், பள்ளிவாசல் போக வேண்டிய நிர்பந்தம் இல்லை இப்போது. மாற்று ஏற்பாட்டுக்கு அவசியமில்லாமற் போனது.

வாப்பாவின் பென்ஷனில் ஒரு ரெண்டாயிரம் மிச்சம். பஷீர் போய் ஒரு மூணு மாசத்தில் அம்மாவுக்கு இன்ஸுலின் போடுகிற வேலையும் நின்று விட்டது. இந்த அவஸ்தையிலிருந்தெல்லாம் விடுதலை பெற்று அம்மா அல்லாவிடம் போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

அம்மாவுக்கு முந்தி வாப்பா போயிருந்தால் பென்ஷன் கட் ஆகி, பிழைப்பே நாறிப் போயிருக்குமே, நல்ல வேளை அம்மா முந்திக் கொண்டார்கள் என்று குரூரமாய் ஒரு நினைப்பு வருவதைத் தவிர்க்க இயலவில்லை.

ஆனால், வாப்பாவாலும் எத்தனை நாள் நோயாளியாய்ப் படுத்துக் கிடக்க முடியும்! அம்மாவின் மறைவும் அவர்மேல் ஒரு பெருந்துயரமாய் இறங்க, சோகத்தின் பாரத்தைத் தாங்க முடியாமல் துவண்டு போய்க் கிடந்தார்.

அதுவும், ரொம்ப நாள் கிடக்கவில்லை. ரெண்டே மாசத்தில் அவரும் போய்ச் சேர்ந்து விட்டார், அல்லாவிடம் அம்மாவிடமும்.

பொன்முட்டை போட்டுக் கொண்டிருந்த வாத்து.

வயசான காலத்தில் தகப்பனாரை வைத்துப் பராமரித்திருக்க வேண்டிய மகனை, தகப்பனார் தன்னுடைய பென்ஷன் மூலம் பராமரித்துக் கொண்டிருந்தார் என்கிற மோசமான உண்மையை அசைபோட்டுப் பார்க்கக்கூட அவகாசந்தராமல் எதிர்காலம் கோரமானதொரு கேள்விக்குறியாய்த் தலைக்கு மேலே தொங்கிக் கொண்டிருந்தது. எந்த நேரமும் மண்டையில் விழுந்து என்னை சின்னா பின்னமாக்கி விடலாம்.

சமையல்க்கார அம்மாவை ஸெட்டில் பண்ணி அனுப்பிவிட்டுத் தன்னந்தனி ஆளானேன். கையேந்தி பவன்களில் ரெண்டு வேளை அல்லது ஒரு வேளை உணவில் உடம்பில் உயிரைப் பிடித்து வைத்திருக்க வேண்டிய நிலை.

டெலிஃபோனை ஸரண்டர் பண்ண வேண்டும். ஆடம்பர வஸ்துக்களையெல்லாம் ஒவ்வொன்றாய்க் கழட்டிவிட்டு சுமைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். டெலிஃபோன் இலாகாவுக்குக் கடிதம் எழுதி வைத்துக் கொண்டு வெளியே கிளம்ப ரெடியாயிருந்த போது டெலிஃபோன் ரீங்கரித்தது.

அணையப்போகிற மெழுகுவர்த்தி.

“அண்ணே, துபாய்லயிருந்து பேசறேன்” என்றது டெலிஃபோன் ரிஸீவர்.

பஷீர்.

“அண்ணே, பெரியம்மா பெரியப்பா ரெண்டு பேருமே மவுத்தாய்ட்டாங்களாமே?”

“ஆமாம்ப்பா.”

“போன வாரந்தாண்ணே எனக்கு தகவல் தெரிஞ்சது. ரெண்டு பேருக்காகவும் அல்லாட்ட துஆக் கேட்டேண்ணே.”

“ரொம்பத் தாங்க்ஸ்ப்பா.”

“சமையல்க்கார அம்மா இருக்காங்களாண்ணே?”

“இல்ல, போய்ட்டாங்க.”

“அப்ப ஒங்க சாப்பாட்டுக்கு?”

“சமையல்க்கார அம்மா இருந்தா மட்டும் என்ன, சாப்பாடு வானத்துலயிருந்தா கொட்டும்!”

“இது.... வந்து.... அண்ணே.... நா ஒண்ணு சொன்னாக் கோச்சுக்க மாட்டீங்களே....”

“சொல்லுப்பா.”

“இங்க துபாய்ல நா இப்ப வேல பாக்கற டிபார்ட்மென்ட் ஸ்டோர், நம்ம மெட்ராஸ் கடையப் போல நாலு பங்கு பெரிசுண்ணே.”

“ரொம்ப சந்தோஷம்.”

“ஓனர் ரொம்ப நல்லவர்ண்ணே.”

“சரி.”

“இங்க, கடையில வேலக்கி ஆள் தேவப்படுது... வந்து... ஓனர்ட்ட ஒங்களப்பத்தி சொல்லிக் கேட்டுப் பாக்கவாண்ணே?”

(யுகமாயினி, செப்டம்பர் 2008)

நம்ம வீட்டு மேல்தளத்தை செப்பனிட்டுப் புதுப்பித்து, ரெண்டு பெட்ரூம் தளத்தை மூணு பெட்ரூமாய் விஸ்தாரப்படுத்தி முடித்த போது பெண்டு கழண்டு விட்டது. இப்போது அடுத்த பிரச்சனை, அதில் குடி வருவதற்கு ஒரு குடும்பத்தை இனங்காண வேண்டுமே என்பது.

ட்டு லெட் போர்டு மாட்டி விட்டு, அண்ணாநகர் டைம்ஸிலும் விளம்பரம் கொடுத்து விட்டால் வாடகைக்கு வந்து மொய்த்து விடுவார்கள். ஆனால், நாகரீகமான, தகராறு சச்சரவு பண்ணாத அடக்கவொடுக்கமான பார்ட்டியாய் அமைய வேண்டுமே என்பதுதான் பெரிய கவலை.

இந்த சிந்தனையில் ஆழ்ந்திருந்த போதுதான் வீடு கேட்டு வந்தான் ஹீரா. நம்ம சொந்த சாச்சா மகன் ஹீரா. இப்போது அவன் குடியிருக்கிற ரெண்டு பெட்ரூம், கீழ் வீடாயிருந்த போதும், வீடு வசதிக் குறைவாயிருக்கிறது. இந்த மாதிரியொரு மூணு பெட்ரூம் முதல்மாடி வசதியாயிருக்கும் என்றான். உறவுக்காரன் என்பதற்காக வாடகையில் சலுகை ஏதும் வேண்டாம், பத்தாயிரம் தர ரெடி என்றான்.

அல்லா, ஒரு பெரிய பிரச்சனை தீர்ந்தது என்று ஹீராவுக்கு உடனடியாய் ஒக்கே சொல்லி அனுப்பி வைத்தேன். அதுதான் நான் செய்த தப்பு.

அடுத்த மாசத்திலிருந்து மாசாமாசம் சுளையாய்ப் பத்தாயிரம் ரூபாய் வந்துவிடப் போகிறது என்று நான் உணர்ச்சி வசப்பட்டுவிட்டதில், இந்த வீட்டில் என்னை மீறிய சக்தியொன்று இருக்கிறது என்பதை மறந்து போனேன்.

மாடியில் குடியிருக்க பார்ட்டியைப் பிடித்து விட்ட, அதிலும் நம்ம சொந்தத்திலேயே பிடித்துவிட்ட நல்ல சமாசாரத்தை நம்ம சம்சாரத்தோடு பகிர்ந்து கொண்டபோது என்னுடைய சந்தோஷமோ நிம்மதியோ அவளுடைய வதனத்தில் பிரதிபலிக்கவில்லை.

“நல்லா யோசிச்சித்தான் ஒங்க சாச்சா மகனுக்கு சம்மதஞ் சொன்னீகளா?” என்று ஒரு கொக்கியைப் போட்டாள்.

“ஆமா.... வந்து... ஒன்னயும் ஒரு வார்த்த கேட்டுப்புட்டு ஒக்கே சொல்லியிருக்கலாம். ஆனாலும் சொந்தக் காரனாச்சே, ப்ரச்சனையில்லாத பார்ட்டியாச்சேன்னு....” என்று நான் நீட்டி முழக்கினதை தயவு தாட்சணயமில்லாமல் இடைமறித்தாள்.

“ப்ரச்சனையில்லாத பார்ட்டின்னு எப்படிச் சொல்றீக? அந்த ஹீராவோட அம்மா, ஒங்க சாச்சி, சீக்காளியா படுத்துக் கெடக்கறது ஒங்களுக்குத் தெரியாதா?”

“தெரியாம என்ன, ஹீரா பெரிய வூடாப் பாக்கறதே நம்ம சாச்சிக்காகத்தானே? அவனே சொன்னானே, உம்மா படுத்துக் கெடக்கிற ரூம்பு வசதியாயில்ல, டாக்டர்ங்க வந்து போறதுக்குத் தோதா இல்லன்னு சொன்னான். கடைசிக் காலத்துல பெத்த தாயை எவ்ளோ அக்கறையாப் பாத்துக்கறான் பாத்தியா?”

“கடைசிக் காலம்னு தெரியிதுல்ல, அப்பறம் எப்படி அந்த மனுசனுக்கு வீடு தர்றேண்டு சொன்னீக?”

‘‘ஃபாத்திமா, நீ என்ன சொல்ற?’’

‘‘என்ன சொல்லிப்புட்டேண்டு இப்படி ஷைத்தான் புடிச்சமாதிரி முளிக்கிறீக! ஒங்களுக்கும் எனக்கும் நல்லதுக்குத்தான் சொல்லுதேன். நாலு லச்சம் செலவு பண்ணி வூட்ல மராமத்து வேல பாத்திருக்கோம், பெரிசாக்கிக் கட்டியிருக்கோம். அதுல மொத மொதலா ஒரு சீக்காளியக் கொண்டாந்து குடி வக்யணுண்டு சொல்லுதியளே, அது இன்னிக்யோ நாளக் யோண்டு ஊசலாட்டிருக்கற உசிரு. பொசுக்குண்டு அது போவணும், நம்ம வூடு சாவு வூடா ஆவணும்ங்கியளா? வாடகக்கி ஆள் வந்த கையோட வூட்ல ஷாமியானா கட்டிர ணும்ங்கியளா? அப்பறம் வீடு வெளங்குமா? இது நமக்குத் தேவையா? ஒடனே போய்ச் சொல்லிப்புட்டு வாங்க, வூடு விடறதுக்கில்லண்டு.’’

‘‘எனக்கு மனசு கேக்கல ஃபாத்திமா. நீ கொஞ்சம் பெரிய மனசு பண்ணப்படாதா?’’

‘‘பெரிய மனசு தானே, பண்ணிட்டாப் போச்சு. வீட்ட நீங்க ஆருக்குக் குடுக்கீகளோ குடுங்க. பால்காச்சுன கையோட ஒரு மவுத்து விழட்டும், வீடு வெளங்காமப் போவட்டும்.’’

‘‘டபக்னு கோச்சுக்கறியே. சரி ஒம் பிரியம் போலவே செஞ்சிருவோம். ஹீராட்ட இல்லண்டு சொல்லிப்புடறேன். காரணம் என்னாண்டு சொல்றது, எனக்குத் தெரியாம நீ ஏற்கனவே வேற ஒரு பார்ட்டிகிட்ட அட்வான்ஸ் வாங்கிட்டண்டு சொல்லுவமா?’’

‘‘ஒடன எந்தலமேல பழியப் போட்டுருவீகளே! சரி என்னத்தயாச்சும் சொல்லுங்க. கெளம்புங்க. அவன் அட்வான்ஸோட வந்து நிக்யப் போறான்.’’

‘‘அவன் நாள நிண்டு தான் அட்வான்ஸ் தாறதாச் சொன்னான், நா நாளக்கி விஷயத்தச் சொல்லிப்புடுதேன் ஃபாத்திமா, ஒரு நா டைம் குடு.’’

‘‘நாளக்கி நீங்கப் போய்ச் சொல்லலண்டா நானே ஃபோன் போட்டுச் சொல்லிப்புடுவேன்.’’

ஒரு அச்சுறுத்தலோடு ஃபாத்திமா தன்னுடைய உருவிய வாளை உறையில் போட்டாள்.

மறுநாள் அதிகாலை, ஸுபுஹ் தொழுகையை முடித்த கையோடு, ‘‘என்ன கெளம்பலியா’’ என்று ஆரம்பித்து விட்டாள்.

‘‘ஒங்களுக்கு சங்கடமாயிருந்தா சொல்லுங்க நா ஃபோன் போட்டுச் சொல்லிருதேன்.’’

நீ செஞ்சாலும் செய்வே என்று வேறு வழியில்லாமல் நான் ஹீராவின் வீட்டுக்குக் கிளம்ப ஆயத்தமான போது, ஃபோன் மணி ஒலித்தது. ரிஸீவரை எடுத்து ஹலோ சொன்ன ஃபாத்திமா, ‘‘இந்தாங்க, கொஞ்சம் இரிங்க’’ என்றாள் என்னை.

பிறகு போனில் வந்த செய்தியைத் தெரிவித்தாள். ‘‘ஒங்க சாச்சி ராத்திரி மவுத்தாய்ட்டாகளாம். சாயங்காலம் அசருக்குப் பெறவு அஞ்சுமணிபோல எடுக்காகளாம்.’’

இறுதிக் காலத்தில் தாயைப் பரிவோடு பார்த்துக் கொண்ட அன்பு மகனைப் பிரிந்து சென்று விட்ட அந்த ஆத்மாவுக்காக சில விநாடிகள் ப்ரார்த்தித்தேன். சரி, கிளம்பின கையோடு போய்ப் பார்த்து விட்டு வந்து விடுகிறேன் என்றதற்கு அனுமதி கிடைக்கவில்லை.

‘‘இப்பப்போய் என்ன செய்யப் போறீக, மத்யானம் லொஹருக்கப்புறம் போவலாம், நானும் வரணும்ல?’’ என்றாள்.

மத்யானம் புறப்பட்டுப் போனோம். ஹீராவின் வீட்டுப் பகுதியில் ஆளரவமே இல்லாதது ஆச்சர்யமாயிருந்தது. வீட்டை நெருங்கியபோது, உள்ளேயிருந்து வெள்ளை வேட்டி சட்டை, நெற்றியில் விபூதியணிந்த ஒரு நபர் அவசரமாய் வீட்டுக்குள்ளேயிருந்து வெளியே வந்தார். விலாசம் மாறி வந்து விட்டோமா என்கிற சந்தேகத்தில் நானிருந்த போது, ''ஹீரா பாய் வீட்டுக்குத்தானே வந்தீங்க, இதான் சார் வீடு'' என்று புதிரைப் பெரிதாக்கினார்.

''என் பேர் கணேசனுங்க, ஹீரா பாயோட ஃப்ரண்ட். வீடு சின்ன வீடாச்சே ஜனம் நெறைய வருமே எப்படிச் சமாளிக்கிறதுன்னு தடுமாறிட்டிருந்தான். அடப் பைத்தியக்காரா, அரண்மன மாதிரி நம்ம வீடு இருக்கு, எதுக்கு யோசிக்கிற, நம்ம வீட்ல கொண்டு போய் வச்சிருவோம்னு, பாடிய நம்ம வீட்டுக்கு ஷிஃப்ட் பண்ணிட்டோம். காரியமெல்லாம் நம்ம வீட்லதான் நடக்குது. கஃபன் துணியாமே, வெள்ளத் துணியொண்ணு டேபிள் மேல வச்சிருக்கேன், கொஞ்சம் எடுத்துட்டு வந்துரு கணேசான்னான். அதான் எடுத்துட்டு வீட்டப் பூட்டிட்டுக் கௌம்பறேன். இங்க வர்றவங்களுக்குத் தகவல் சொல்ல ஒரு பையனப் போட்டிருந்தோம். சோம்பேறி, எங்கயாவது டீ சாப்புடப் போயிருப்பான். நீங்க வண்டிய இங்கயே விட்டுட்டு எம்ப் பின்னாடி வாங்க சார். அடுத்த தெருதான் நம்ம வீடு. அடுத்த தெரு திரும்புனவொடன மூணாவது வீடு. வாசல்ல ஷாமியானா போட்டிருக்கும்.''

கணேசன் வேகமாய் நடக்க, நாங்கள் ஓட்டமும் நடையுமாய்ப் பின் தொடர்ந்தோம். அடுத்தத் தெருமுனை திரும்பினவுடன் ஷாமியானா கண்ணில் பட்டது. சட்டென்று இவள் என் கையைப் பற்றித் தன்னை நோக்கி இழுத்தாள். நான் முகத்தைத் திருப்பி அவளைக் கூர்மையாய்ப் பார்த்தேன்.

''அப்படிப் பாக்காதீக ப்ளீஸ்'' என்றாள்.

''புத்தி கெட்டுப் போய்ட்டேங்க, அல்லாவுக்காக என்ன மன்னிச்சிருங்க'' என்றாள், கண்கள் பனிக்க.

(கல்கி, 19.11.2006)

மூணாந்தேதி.

“டாளிங், பேப்பர்லாம் கொண்டு வந்து போடு.”

“எதுக்கு?”

“பழைய பேப்பர்க்காரன் வந்திருக்கான்.”

“பழைய பேப்பர்க்காரன யார் கூப்ட்டா?”

“நாந்தான்.”

“பேப்பர் இப்பப் போட வேண்டாம். பேப்பர்காரனப் போகச் சொல்லுங்க.”

“பேப்பர் நெறைய சேந்துருச்சேம்மா?”

“இப்ப வேண்டாம்னா வேண்டாம்தான். அவனத் திருப்பியனுப்புங்க.”

முறைப்பும் முனகலுமாய்ப் பேப்பர்க்காரன் திரும்பிப் போனான்.

‘அடி சர்வாதிகாரீ’ என்று சபித்து, அவளுக்கு டூ விட்டு விட்டு ஆஃபீஸுக்குக் கிளம்பிப் போனேன்.

முப்பதாந் தேதி.
பாக்கெட்டும் காலி, வாலட்டும் காலி.

“இன்னிக்கி சீக்கிரமா ஆஃபீஸ்க்குக் கிளம்பணும்.”

“எதுக்கு?”

“ஆஃபீஸ்க்கு நடந்துதான் போகணும். பைக்ல பெட்ரோல் இல்ல, பெட்ரோல் போடப் பைசா இல்ல.”

“அட, இவ்வளவுதானா, நீங்க எப்பவும் போல பைக்லயே போகலாம்.”

ஜாக்கெட்டின் அந்தரங்கத்திலிருந்து ஒரு நூற்றியிருபது ரூபாயை எடுத்து என்னிடம் நீட்டினாள்.
மாசக்கடைசியில் நூற்றியிருபது ரூபாயா என்று வாயைப் பிளந்து கொண்டு நின்றவனுக்கு விஷயத்தை விளக்கினாள்.

“பழைய பேப்பர்க்காரன்ட்ட நேத்து பேப்பரெல்லாம் எடுத்துப் போட்டேங்க. அதே பேப்பர்க்காரன்தான்.”

“நா போடும்போது வேண்டாம்ன?”

“அது மூணாந்தேதி. மாச ஆரம்பம். கை நிறைய காசு புழங்கற நேரம். இந்தப் பேப்பர்க் காசு அன்னிக்கி வந்திருந்தா, கடல்ல கரச்ச பெருங்காயம் மாதிரி காணாமப் போயிருக்கும். இப்ப மாசக் கடேசில இந்தக் காசு எவ்வளவு விசேஷமாத் தெரியுது பாருங்க. எப்படி நமக்குக் கை குடுக்குது பாருங்க! நூறு ரூபாய்க்கிப் பெட்ரோல் போட்டுக்கிட்டு, சாயங்காலம் வரும்போது இருபது ரூபாய்க்கிக் காய்கறி வாங்கிட்டு வாங்க.”

‘என் டார்லிங், எப்பவும் நீ சர்வாதிகாரியாவே இருடீ’ என்று அவளுக்கு ஓர் அடல்ஸ் ஒன்லி கொடுத்து விட்டு ஆஃபீஸுக்குக் கிளம்பிப் போனேன்.

(ஆனந்த விகடன், 12.09.2004)